மூன்றில் ஒன்று

[mOnRil onRu]

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிய
ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தின் சுருக்கம்

An introduction to Swami Desika's
Srimad Rahasya Traya Saaram

Version 2.3

அடியேன் ஸ்ரீராமாநுஜதாஸன்
ஸார்வபௌமம் அய்யம்பேட்டை
ஸ்ரீநிவாஸ ராஜகோபாலன்
(A.S. Rajagopalan)

Disclaimer

Please note that this companion notes is written to supplement the lectures and is targeted towards the readers who have very little or no knowledge on Sriviashnavam, like younger generations living in U.S. Here, the rules are relaxed, concepts are approximated, explanations are simplified, to make an easier grasp of the principles.

The main objective of the lectures and this companion notes is to instil and incubate interest in prapatti and by no means this book is is void of errors or inaccuracy.

Those who have keen interest but have less time are the primary audience for this ongoing lecture and companion notes and those who have more time, keen interest and knowledege should approach their AchAryAn and learn leisurely through proper study (kAlakshebam).

CONTENTS

Section 0
முன்னுரை
Introduction

ஆசார்யர்களின் அவசியம்
The importance of gurus
0 ஸ்ரீகுரு பரம்பராஸாரம் (The lineage of Gurus)

Section 1.
அர்த்தாநுசாஸந பாகம்
(Meaning of the fundamentals)

ஏன் இந்த கிரந்தம், எது முக்யம்?
Why this book? and what is important.
1 உபோத்காதாதிகாரம்
2 ஸார நிஷ்கர்ஷாதிகாரம்

தத்வம் (Realities)
3 ப்ரதாந ப்ரதி தந்த்ராதிகாரம்
4 அர்த்த பஞ்சகாதிகாரம்
5 தத்வத்ரய சிந்தநாதிகாரம்
6 பரதேவதா பராமார்த்யாதிகாரம்

உபாயம் (Means)
7 முமுக்ஷுத்வாதிகாரம்
8 அதிகாரி விபாகாதிகாரம்
9 உபாய விபாகாதிகாரம்
10 ப்ரபத்தி யோக்யதாதிகாரம்
11 பரிகரவிபாகாதிகாரம்
12 ஸாங்க ப்ரபதநாதிகாரம்

பலன் (Ends or Rewards)

13 க்ருத க்ருத்யாதிகாரம்
14 ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநாதிகாரம்
15 உத்தரக்ருத்யாதிகாரம்
16 புருஷார்த்த காஷ்டாதிகாரம்
17 சாஸ்திரீய நியமநாதிகாரம்
18 அபராத பரிஹாராதிகாரம்
19 ஸ்தாந விசேஷாதிகாரம்
20 நிர்யாணாதிகாரம்
21 கதிவிசேஷாதிகாரம்
22 பரிபூர்ண ப்ரஹ்மாநுபவாதிகாரம்

Section 2
ஸ்த்திரீகரண பாகம்

சந்தேகங்கள் தீர்ப்பு (Clearing the doubts)

23 ஸித்தோபாய சோதநாதிகாரம்
24 ஸாத்யோபாய சோதநாதிகாரம்
25 ப்ரபாவ வ்யவஸ்தாதிகாரம்
26 ப்ரபாவ ரக்ஷாதிகாரம்

Section 3
பதவாக்யயோஜநா பாகம்

ரஹஸ்யங்கள் விளக்கம் (explanation of the secrets)

27 மூல மந்த்ராதிகாரம்
28 த்வயாதிகாரம்
29 சரம ஸ்லோகாதிகாரம்

Section 4
ஸம்ப்ரதாய ப்ரக்ரியா பாகம்

ஆசாரிய, சிஷ்ய நடத்தையும், முடிவும்

30 ஆசார்ய க்ருத்யாதிகாரம்

31 *சிஷ்ய க்ருத்யாதிகாரம்*
32 *நிகமநாதிகாரம்*

Appendix – A

ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய ஸாரம் - ஆங்கில பாடல்கள்
Srimad Rahasya Thraya Saaram - English poem

Appendix – B

எட்டின் கட்டு (அஷ்டாக்ஷரத்தின் வலிமை)
Ettin kattu (The strength of Ashtaaksharam)

Appendix – C

உகத்தின் சுகம் (த்வயம் திவ்யம்)
Ukattin sukam (Dvayam Divyam)

Appendix – D

இறுதியின் சுருதி (சரம ஸ்லோகம்)
Iruthyin sruthi (Charama slokam)

Appendix – E

நெஞ்சில் அஞ்சு (அர்த்த பஞ்சகம்)
Nenjil Anju (Artha pancagam)

முன்னுரை (Preface)

"மானிடராய் பிறப்பது அரிது" என்பது முதுமொழி. அந்த மனிதப் பிறவியிலும் பகவானுடைய சிந்தனை வருவது அரிது. கிடைத்த வாழ்க்கையை வீண் செய்யாது, அதைக் கொண்டு உயர்ந்த பலனை அடையும் முறையை இங்கு காண்போம்.

It is a very rare chance to be born as a human. Amongst human beings, it is very rare to think and contemplate about the Bhagavan. One has to use this rare birth (janma) towards achieving the highest goal (purushaartham).

உயர்ந்த பொருளின் மேல் எல்லோருக்கும் ஆசை. எது உயர்ந்தது? கிடைக்கும் பொருளின் இன்பம் என்றும் குறையாமல் இருக்க வேண்டும். அது உயர்ந்த பொருளாய் இருக்கணும். அந்த பொருளோ ரொம்ப சுலபமாக கிடைக்க வேண்டும். இதுதான் எல்லாருடைய விருப்பம். சாஸ்திரங்கள் காட்டுவது தர்ம, அர்த்த, காம, மோஷம் என்கிற அறம் பொருள் இன்பம் வீடு. இந்த நான்கிலும் வீடு எனும் மோஷம்தான் உயர்ந்தது. அனந்தமான ஆனந்தம் தருவது. மற்றவை எல்லாம் அல்ப அஸ்திர பலன்கள்.

Everyone loves to get the supermost product. Question is which is "the best"? Most would answer that enjoyment of that product should never decrease. It should always be brimming. It has to be highest level and nothing else can claim tobe higher than that. Also it needs to be easily reachable/obtainable. This is what everyone wishes for. Our sciptures (saastras) classifies four types of happiness. Righteousness, Wealth, lust and eternal bliss (Dharma, artha, kaama and moksham). Among these four, the las one eternal bliss is only at a place called Srivaikuntam or Moksham. It is where the happiness never shrinks or ends. All other happiness are temporary and of low level.

அடுத்து, அந்த வீட்டை அடையும் உபாயம் என்ன என்ற கேள்வி. செய்யும் முயற்சியோ மிக எளிதாய் இருக்க வேண்டும். ஒரு முறை செய்து எப்போதும் அனுபவித்துக் கொண்டே இருக்க வேண்டும். இதுதான் எல்லோருக்கும் விருப்பமானது. செய்ய முடிந்தது. வேதங்கள், ஸ்மிருதிகள், இதிகாசங்கள், புராணங்கள் எல்லாம் கர்ம ஞான பக்தி என்று பலவகையாய் சொன்னாலும், சாதரண மக்களுக்கு, அதுவும் இந்த கலி காலத்தில் பின் பற்றி மோஷம் அடைவது என்பது ஸாத்யமாகாது. கடைசியாய் சொல்லும் ப்ரப்த்தி என்னும் சரணாகதியே மோக்ஷத்தை அடைவதற்கு உயர்ந்த ஸாதனம். பண்டிதனிலிருந்து

பாமரன் வரை, அந்தணனனிலிருந்து அந்தியர் வரை எல்லோரும் சுலபமாய் செய்து அடையும் வழி.

Next, the question arises, how to reach that place? One wishes for an easier means to achieve that; it has to be single attempt only not a recurring task; but the rewards has to last for ever. This is what everyone wishes for and most likely that's all they can do. Though our scriptures like Vedas, Smrithis and Ithihasa puraanas detail about various methods like duties, knowledge (karma, gnjana), at present time (Kali yuga), the common people like us those methods are relatively difficult to bear the fruit. The last method outlined Bhgavad Gita, called toota lsurrender (Saranagathy or prapaati) is the easiest means for everyone – from scholar to illitrate, highest to lowest caste). It is the only plausible means.

உயர்ந்த வீடாகிய மோஷம், அதை அடைவதற்கான உபாயமான சரணாகதி, அதைச் செய்யும் மனிதனின் ஸ்வரூபம் போன்றவற்றை தெள்ளத் தெளிவாக காட்டுபவை வைஷ்ணவ ஸித்தாந்தத்தில் சிறப்பித்து சொல்லப்படும் மூன்று ரஹஸ்யங்கள். அவற்றின் ஸாரத்தையே தொகுத்து ஸ்வாமி தேசிகன் மணி ப்ரவாள நடையில் அருளியவை ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம். அதன் கருத்தை மேலேழுந்தவாரியாய், அடியேனுடைய சிற்றறிவுக்கு எட்டியவரை எழுதியுள்ளேன். அறிந்தவர்கள் இதனுடைய குற்றம், குறை, பிழைகளை பொறுத்து அடியேனை திருத்தி பணி கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

Details about the highest objective called eternal bliss, the means to achieve that, the innate nature (Svaroopa) of the human who executes that method are all explained in crystal clear fashion by Swami Vedanta Desikar in his magnum opus "Srimad Rashsya Threya Saaram" (The essence of the three secrets). I have embarked to write a cursory look on the essence of SRTS, with my little knowledge. On any mistakes, errors and omissions in this document I pray at the feet of all the elders and scholars to excuse my ignorance and correct me appropriately.

ஸ்ரீ:

யஸ்யாப$_4$வத் ப$_4$க்$_3$தி ஜநார்த்திஹந்து:
பித்ருத்வமந்யேஷு அவிசார்ய தூர்ணம் |
ஸ்தம்பே$_4$ அவதார ஶ்தமநந்யலப்$_4$யம்
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்$_3$யே ||

அஹோபி$_3$லே க$_3$ாருட$_3$ஶைலமத்$_4$யே
க்ருபாவஶாத் கல்பிதஸந்நித$_4$ாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கி$_3$த வாமப$_4$ாக$_3$ம்
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்$_3$யே ||

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீரங்கநாத ஶடகோப யதீ ந்த்ர த்ருஷ்டம்
லக்ஷ்மிந்ருஸிம்ம ஶடஜித் கருணைக பாத்ரம்
ஸ்ரீரங்க வீ ர ரகுராட் ஶடகோப ஹ்ருத்யம்
வேதாந்த தேசிக யதீ ந்த்ர மஹம் ப்ரபத்யே

ஸ்ரீமதே ஸ்ரீவண் ஶட கோப
ஸ்ரீவேதாந்த தேசிக யதீந்த்ர மஹா தேசிகாய நம:

ஸ்ரீமத்$_3$ ரங்க ஶடாரி ஸம்ய விவராத் லப்$_3$தாக$_3$ மாந்த த்வயம்
ஸ்ரீமத்$_3$ வீ ர ரகூத்$_3$வ ஹாத்$_3$ய ஶடஜித் பாதாரவிந்த$_3$ா ஶ்ரயம் |
ஸ்ரீமத்$_3$ வேத$_3$ வதம்ஸ தே$_3$ஶிகயதே: காருண்ய வீ க்ஷா ஸ்பத$_3$ம்
ஸேவே ரங்க$_3$துரீ ண ஶாஸந வஶம் நாராயணம் யோகி$_3$நம். ||

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ம திவ்ய பாதுகா ஸேவக
ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீநாராயண யதீந்த்ர மஹா தேசிகாய நம:

யோநித்ய மச்யுத பத3ாம்புஜ யுக்ம ருக்ம-
வ்யாமோஹதஸ் ததி தராணி த்ருணாய மேநே |
அஸ்மத்3 கு3ரோர் ப4க3வதோSஸ்ய தயைகஸிந்தே4ா:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் பரபத்3யே ||

ஸ்ரீமாந் வேங்கட நாத2ார்ய கவிதார்கிககேஸரீ !
வேத3ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித4த்தாம் ஸத3ா ஹ்ருதி3 !!

ப்ரபத்யே நிரவத்யாநாம் நிஷித்யாம் குண ஸம்பதாம்
ஶரணம் பவபீ தாநம் ஶடகோப முநீ ஶ்வரம்.

ஜ்ஞாநா நந்த3 மயம் தே3வம் நிர்மல ஸ்ப2டிகா க்ருதிம் |
ஆத4ாரம் ஸர்வ வித்3யாநாம் ஹயக்3ரீவம் உபாஸ்மஹே ||

கு3ருப்4ய: தத்3 கு3ருப்4யஶ்ச நமோவாகம் அதீ 4மஹே |
வருணீமஹே ச தத்ர ஆத்3யௌ த3ம்பதீ ஜகதாம் பதீ ||

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள்
ஓர் ஒன்று தான் அமையாதோ தாரணியில்
வாழ்வார்க்கு வான் ஏறப் போமளவும் வாழ்வு

என்னுயிர் தந்து அளித்தவரைச் சரணம் புக்கி
யான் அடைவே அவர் குருக்கள் நிரை வணங்கிப்
பின் அருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்
பெரிய நம்பி ஆளவந்தார் மணக்கால் நம்பி
நன்னெறியை அவர்க்கு உரைத்த உய்யக் கொண்டார்
நாத முனி சடகோபன் சேனை நாதன்
இன் அமுதத் திருமகள் என்று இவரை முன்னிட்டு
எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே

நின் அருளாம் கதியின்றி மற்று ஒன்று இலேன்
நெடுங்காலம் பிழை செய்து நிலை கழிந்தேன்
உன் அருளுக்கு இனிதான நிலை உகந்தேன்
உன் சரணே சரண் என்னும் துணிவு பூண்டேன்
மன் இருளாய் நின்ற நிலை எனக்குத் தீர்த்து
வானவர் தம் வாழ்ச்சி தர வரித்தேன் உன்னை
இன் அருளால் இனி எனக்கு ஓர் பரம் ஏற்றாமல்

என் திருமால் அடைக்கலம் கொள் என்னை நீயே

கிரந்தத்தின் அமைப்பு (Structure of the Book)

Ch. 0	குருபரம்பராஸாரம் (Acharya Lineage)
Ch. 1 - 22	அர்த்தானுசாஸந பாகம் (Meanings of Tattva, hitha, purshaartam)
Ch 23 - 26	ஸ்திரீகரண பாகம் (Resolves the doubts arises from the previous chapters)
Ch 27 - 29	பத வாக்ய யோஜனா பாகம் (Meanings of the words and sentences of the three rahasyas)
Ch 30 - 32	ஸம்ப்ரதாய பரிக்ரியா பாகம் (Duties of the acharyan and disciple and conclusion)

மூன்று ரஹஸ்யங்கள் (The three secrets)

1. திருமந்திரம் (Tirumantram)

- ஓம் நமோ நாராயணாய:

  Ohm namoo Naaraayanaaya

2. த்வயம் (Dvayam)

- ஸ்ரீமந் நாராயண சரணௌ ஶரணம் ப்ரபத்யே
  ஸ்ரீமதே நாராயணாய நம:

  Srimun Naarayana charanau saranam prapathyae
  Srimathe Naaraayanaaya namah:

3. சரம ஸ்லோகம் (Charama Slokam)

- ஸர்வ த4ர்மாந் பரித்யஜ்ய மாம் ஏகம் ஶரணம் வ்ரஜ: |
  அஹம் த்வா ஸர்வ பாபே4ப்யோ மோஷயிஷ்யாமி மா ஶுச: ||

  Sarva dharmaan parthiyajya maam ekam saranama vrjaa
  Aham thuva sarava paapepbhyo moksha yishayaami maa sucha:

Chapter - 0
குருபரம்பரா ஸாரம் Gurua parambara Acharya Lineage

1-0 **ஆசாரியனே மோக்ஷோபாயம். இதை க்ஷத்திரபந்து, புண்டரீகன் விஷ்யத்தில் கண்டு கொள்வது.**

Acharya is the means for moksham, the ultimate bliss and this can be confirmed from the case of Kshathirabhandu and Pundarikan.

ஜீவன் மோஷத்தை அடைய முதலில் ஆசார்யனை அடைய வேணும். புண்யம் மட்டும் மோக்ஷத்தை தராது. புண்டரீகன், க்ஷத்திர பந்து விஷயத்தில் இது பிரஸித்தம்

Sentient things attain moksha only through acharya. This is illustrated in the case of Pundarika and kshethrabandhu

மொய்த்த வல்வினையுள் நின்று மூன்று எழுத்துடைய பேரால்
கத்திர பந்தும் அன்றே பராங்கதி கண்டு கொண்டான்

பாபிஷ்ட: க்ஷத்ரபந்துஸ்ச புண்டரீகஸ்ச புண்யக்ருத்
ஆசார்யவத்தயா முக்தௌ தஸ்மாத் ஆசார்யைவான் பவேத்

மிகவும் பாபமே செயத் க்ஷத்திரபந்துவும், புண்யமே செய்த புண்டரீகனும் கடைசியில் ஆசாரியன் வழியாய்தான் மோக்ஷம் அடைந்தனர். ஆகவே மோக்ஷத்தில் இச்சை உடையவன் முதலில் தன் ஆசாரியன் முதல் பகவான் வரை உள்ள பரம்பரையை அனுசந்திக்க வேண்டும்.

kshathrabandhu who did only sins (papas) and Pundarika who has accumulated only merits (punyas), eventually got moksham only due to the compassion of the acharyas. So, the one is aspiring for moksham has to go to an acharya first. He has to meditate the acharya lineage starting from his acharya all the way through Lord Srimun Narayana.

0-2 **ஆசார்ய நினைவும், பக்தியும் ஆயுள் முழுதும் அவசியம்.**

Constant remeberance and paying homage to the acharya is essential thorughout the life.

0-3 **ஸ்ரீமந் நாராயணனே முதல் ஆசாரியன். அவனுக்கு ஆசாரியன் கிடையாது. பிரம்மா, ஸநாகாதி ரிஷிகள், ஆழ்வார்கள், ஆசார்யர்கள் படைத்து அவர்கள் மூலமாய், ஜீவன்கள் நல்ல கதி அடைய சாஸ்திரங்களை தந்து அருளினான்.**

Srimun Narayana is the first and foremost acharyan. There is no acharya for Him. He then created Brahmma, Sanakathi rishis, azhwars and acharyas to spread the sastras so that chetanas can be liberated and attain moksham.

கு3ருப்4ய: தத்3 கு3ருப்4யஶ்ச நமோவாகம் அதீ4மஹே |
வருணீமஹே ச தத்ர ஆத்3யௌ த3ம்பதீ ஜகதாம் பதீ ||

0-4 **ஆசார்ய பரம்பரை என்பது**

- **ஸ்ரீமந் நாராயணன், பெரிய பிராட்டியார், விஷ்வக்ஸேனர்**
- **நம்மாழ்வார்**
- **நாதமுனிகள், உய்யக் கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரிய நம்பி, ராமானுஜர்.**

Preceptor Lineage - Srimun Narayana, Lakshmi, Vishvaksaynar, Nammaazhvar, Naathamunigal, uyyakkondaar, Manakkaal Nambi, Aalavandaar, Periya Nambi, Ramanuja.

பொய்கைமுனி பூதத்தார் பேயாழ்வார்
தண் பொருந்ல் வரும் குருகேசன் விட்டு சித்தன்
துய்ய குலசேகரன் நம் பாண நாதன்
தொண்டரடிப்பொடி மழிசை வந்த சோதி
வையம் எலாம் மறை விளங்க வாள் வேல் ஏந்தும்
மங்கையர்கோன் என்று இவர்கள் மகிழ்ந்து பாடும்
செய்ய தமிழ் மாலைகள் நாம் தேளிய ஓதித்
தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே

என் உயிர் தந்து அளித்தவரைச் சரணம் புக்கி
யான் அடைவே அவர் குருக்கள் நிரை வணங்கிப்
பின் அருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்
பெரிய நம்பி ஆளவந்தார் மணக்கால்நம்பி
நன்னெறியை அவர்க்கு உரைத்த உய்யக்கொண்டார்
நாத முனி சடகோபன் சேனைநாதன்
இன் அமுதத் திருமகள் என்று இவரை முன்னிட்டு
எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே

0-5 இதில் நாத, யாமுன, ராமனுஜ முநி என்னும் முநித்ரயம் விசேஷம்

Acharyas like Nathamuni, Yamuna muni (sage) and Ramanuja muni are highly significant in our sampradayam.

*ஆரண நூல் வழிச்செவ்வை * அழித்திடும் ஐதுகர்க்கு * ஓர்*
*வாரணமாய் * அவர் வாதக் கதலிகள் மாய்த்த பிரான் /*
*ஏரணை கீர்த்தி * இரமாநுசமுனி இன்னுரை சேர்*
*சீரணி சிந்தையினோம் * சிந்தியோம் இனித் தீவினையே.*

*நீள வந்து இன்று விதிவகையால் * நினைவு ஒன்றியவனாம் **
*மீள வந்து இன்னும் வினை உடம்பு ஒன்றி * விழுந்து உழலாது /*
*ஆளவந்தார் எனவென்று * அருள் தந்து விளங்கிய சீர் **
*ஆளவந்தார் அடியோம் * படியோம் இனி அல்வழக்கே.*

*காளம் வலம்புரியன்ன * நற்காதல் அடியவர்க்குத் **
*தாளம் வழங்கித் * தமிழ் மறை இன்னிசை தந்த வள்ளல்*
மூளும் தவநெறி மூட்டிய நாதமுனி கழலே
நாளும் தொழுது எழுவோம் நமக்கார் நிகர் நானிலத்தே

0-6 ஆசாரியனை

- **பகவானைப்போல் கொண்டாட வேண்டும்.**
- **அவர் உபதேசித்த மந்த்ரார்த்தங்களை காப்பற்ற வேண்டும்.**
- **எப்போதும் தியானம் செய்ய வேணும்.**
- **மந்திரங்களை தகுதி அல்லாருக்கு உபதேசிக்ககூடாது.**

One should consider Acharyan equivalent to Bhagavan. He has to retai nand save the explanations of all the mantras. One should pray to his Acharyan at all times. He should not reveal the mantras to unqualifed people.

0-7 ஆசார்யன் புகழைப் பரப்பி அவரை பிரகாசிக்க செய்ய வேண்டியது சிஷ்யனது ப்ரதான கடமை.

The primary duty of any sishya is to the spread the fame of the acharya and glorify him.

போற்றி உகப்பதும் புந்தியில் கொள்வதும் பொங்கு புகழ்
சாற்றி வளர்ப்பதும் சற்று அல்லவோ முன்னம் பெற்றதற்கே

0-8 ஆசார்ய அனுஸந்தானம் என்பது

- நித்ய கர்மா - வேதத்தில் விதிக்கப்பட்டதால்
- நைமித்ய கர்மா - ப்ராயச்சித்தமாய் செய்வதால்
- காம்ய கர்மா - ஞானத்தை வளர்ப்பதால்

Constant meditation about Acharya is a

- nithya karma since it has been prescribed in Vedas
- naimthya karma since it is perofrmed for atonement.
- kamya since it helps to flourish one's knwoledge.

PART - I

அர்த்தாநுசாஸந பாகம் (arthaanusaasana bhagam)

அறிய வேண்டிய விஷயங்களைச் சொல்லும் பாகம் இது.
இதில் 22 அதிகாரங்கள் அடக்கம்

This part of the book deals with the fundamentals, one needs to know.
There are 22 chapters here.

Chapter - 1
உபோத்காதாதிகாரம் முன்னுரை
Ubodhkaadam - Preface

1-1 **விண்ணகம் புகுவது மண்ணவர் உரிமையே. அதைக் காட்டுவது இந்த கிரந்தம்.**

Attaining the moksham is the right for every sentient beings. This book shows how it can be achieved.

மோஷலோகம் அடைந்து அங்கே ஸ்ரீமந் நாராயணனை நிரந்தரமாய், பரிபூர்ணமாய், நித்ய முக்தர்களைப்போல அனுபவிக்கும் உரிமை எல்லா ஜீவனுக்கும் உண்டு. பகவான் திருவடிகளை அடைந்து, மோஷத்தில் பணி செய்யும் பேற்றைச் சொல்கிறது இக்கிரந்தம்

It is the inherent right of each jeevan to attain moksham and enjoy the permananet bliss of kaimkaryam to the Lord Srimun Narayana. This book deals with the essence of how a jeevan can surrender to Lord's feet and perform kaimkaryam to Him

1-2 **வைகுந்தத்தில் உரிமை இருப்பினும் சேதனன் வினைப்பயனால் விலகி நிற்கிறான்.**

Though the chetana has the right for the moksham, he is isolated due to his karma

வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே என்று உரிமை இருப்பினும், கர்ம வசத்தால் பிறப்பு இழப்பு என்னும் சுழலில் சிக்கி அந்த கைங்கர்யத்தை இழந்து நிற்கிறான்.

Due to karma chetanas are drowned in the birth/death ocean and lost their truthful right to perform kaimkaryamam to the Lord.

1-3 **யாத்ருச்சிக ஸுஹ்ருதத்தால் (எதிர்பாராத நற்செயலால்) ஆசார்ய ஸம்பந்தம் ஏற்பட்டு அவர் மூலமாய் மோக்ஷ ப்ரரப்தி.**

By some accidental good deed. acharya relation is obtained and through which he achieves moksham.

அறியாமல் என்றோ செய்த புண்யத்தின் பலனாய், ஆசார்ய சம்பந்தம் ஏற்பட்டு அவர் திருவடிகளை அடைந்து அதன் மூலம் ஸம்ஸார பந்தத்தை விலக்கி மோக்ஷ ப்ராப்தி பெறுகிறான் சேதனன்.

Sometime in the past, without his own knowledge the chetana has done some good deed. Lord remembers that and directs him to the Acharyan. By surrendering to the acharyan's feet this chetan get rid of birth/detah cycle and reaches moksham.

1-4 **தவறிப்போய், தகாத இடத்தில் வளர்ந்த ராஜகுமாரனிடம், அவனுடைய பூர்வீகத்தை நினைவுபடுத்த, பழக்கி கொண்ட குணங்களையும் குலத்தையும் விட்டு ராஜாவான தந்தையின் அரசாட்சியை அடையுமாப்போலே.**

Baby prince once got lost and was brought up by hunters. After many years, When he was revealed of his true heritage, he gives up all the acquired qualities and surroundings and rushes immediately to the King to reclaim his position and wealth.

1-5 **ஸதாசாரியனை அடைவதற்கு ஆறு காரணங்கள்.**

1 **பகவானின் காரணமிலாக் கருணை** - *நிர்ஹேதுக க்ருபை*
2 **சேதனன் அறியாமல் செய்த புண்யம்** - *யாத்ருச்சிக புண்யம்*
3 **கருவிலே எம்பெருமானின் கடாக்ஷம்** - *ஜ்யாமாந கடாக்ஷம்*
4 **சேதனன் பகவானிடம் பகைமை பாராமை** – *த்வேஷம் கொள்ளாமை*
5 **எம்பெருமானின் அருளை நோக்கி இருத்தல்** – *"நின் அருளே புரிந்து இருந்தேன் இனி என் திருக் குறிப்பே"*
6 **நல்லவர்களோடு சேர்க்கை.** - *ஸத் ஸங்கம்*

A chetana to reach the acharya, six reasons are highlighted.

1 Bhagavan's natural grace
2 Good deeds performed unknowingly by chetana.
3 Bhagavan's blessing while he is still in the womb.
4 Chetana's no hatred attitude towards the Lord.
5 Willingness to qualify himself for Bhagan's blessing
6 Association wth people of good virtues.

ஈச்வரஸ்ய ச ஸௌஹார்த்தம் யத்ருச்சா ஸ்ம்ருதம் ததா
விஷ்ணோ: கடாக்ஷமத்வேஷம் ஆபிமுக்யம் ச ஸாத்த்விகை:
ஸம்பாஷணம் ஷடேதாநி ஹி ஆசார்ய ப்ராப்திஹேதவ:

1-6 **இறைவன் ஸேவை இன்பம். உகப்பான விஷயத்தில் அடிமைத்தனமும் ஆனந்தம்.**

Kaimkaryam to the Lord is the ultimate pleasure. Slavery to the Lord is ecstatic because it is what is desired.

1-7 **ஆக மோஷம் அடைய உபாய ஞானம் தேவை. அதனால் இக்கிரந்தம் அவசியம்.**

One has to understand the proper means to reach the goal of moksha. That's why this book has been written to explain them.

திருவுடன் வந்த செழுமணிபோல் * திருமால் இதயம் *
மருவு இடம் என்ன மலரடி சூடும் * வகை பெறும் நாம் /
கருவுடன் வந்த கடுவினை ஆற்றில் * விழுந்து ஒழுகாது *
அருவுடன் ஐந்து அறிவார் * அருள் செய்ய அமைந்தனரே

Chapter 2.

ஸார நிஷ்கர்ஷாதிகாரம் (Saara Nishkarshaadhikaaram)

Establishing the essential

2-1 **மோக்ஷத்தில் இச்சை உடையவன் முமுக்ஷு. முக்தி அடைய யோகம், வேதங்களின் பூர்வ பாகம் போன்றவை இருக்க ரஹஸ்ய த்ரயம் என்னும் திருமந்திரம், த்வயம், சரம ஸ்லோகம் என்ற மூன்றும் எதற்கு?**

One who aspires for moksha is called Mumukshu. For liberation, many instruments like yoga and poorava kanda of Vedas are available. Then what is the necessity of this rahasyathrya (Thirumantram, dvayam, charama slokam) ?

2-2 **அறிய வேண்டியவை கடல்போலே. வாழ்நாளோ கடுகுபோலே. நடுவே தடை மலைபோலே. அதனால் ஸார ஸாமர்த்யம் அவசியம்.**

The knowledge on has to acquire is immense like an ocean. But his life span is so miniscule like an atom. Hence one needs to acquire discriminative intelligence.

2-3 **வேதங்கள்தாம் உயர்ந்த ப்ரமாணம் அதற்கு மாறானவை ஜைன, புத்த போன்ற மற்றைய மதங்கள். அவை அஸாரங்கள். கடலைக் கடையும்போது உண்டான விஷங்கள் போலே.**

Vedas are the true utimate means that show the reality. Buddha, jaina and other religions conflict with vedas. What they teach are not the essence.

2-4 **வேதத்தின் பூர்வ கண்டம் சுகத்தைத் தரும். அது அழியக்கூடியது. கைவல்யம் என்பது தன் ஆத்மாவையே அனுபவிப்பது. அதுவும் கீழ்த்தரமான சுகம். இவை துக்கத்தையே தரும் அல்ப ஸாரங்கள்.**

Earlier portions of vedas deal with karmas. They reward only lower level pleasure and it is always mixed with grief. Enjoying one's own athma is called kaivalyam. These reward only temporary pleasures.

2-5 **பரமாத்மாவை அனுபவிப்பது ஒன்றுதான் நித்யமான ஆனந்தம். அதுவே உயர்ந்த புருஷார்த்தம். அது ஸார தமம்.**

Performing kaimkaryam and enjoying the Lord is the highest form of pleasure. That is eternal. It is called Saara dhamam.

2-6 **வேதத்தில் ஞான காண்டம் என்னும் பிற்பகுதி, பரமாத்மா, அவனை அடையும் உபாயம், அவனை அனுபவிக்கும் பலன் இவற்றை வெளியிடுவதால், நமக்கு முக்கியம். அதனுள்ளும் இந்த ரஹஸ்ய த்ரயம் மட்டுமே தத்தவ, ஹித புருஷார்த்தங்களை தெளிவாக காட்டுபவை. அதனால் இந்த மூன்றும் உயர்ந்த ஸாரம்.**

Latter parts of veda makes deals with the Lord, means to access Him, and how to enjoy Him. And that is why they are important to us. Among that, rahasya therya very lucidly and transparenty reveals the Tattva, hitha, purshaartham. That's why these three are called the essence.

2-7 **எம்பெருமானை கல்வி கேள்விகளால் அறிவது துர்லபம். ஆகவே ரஹஸ்யங்கள்தாம் முக்கியம் என நம் ஆசாரியர்கள் இதை உபதேசித்தனர்.**

Mere education and yogas alone will not reveal the Bhagavan. Because the rahasyathreya reveals the Lord, our acharyas instructed only this three.

2-8 **முக்திக்கு வழி மூன்று ரஹஸ்யங்களே என்பது பூர்வாசாரியர்கள் வாக்கு.**

Our acharyas claim that the three rahasyas are the sole means for the attainment of moksha.

Chapter 3
ப்ரதாந ப்ரதிதந்த்ராதிகாரம்
Prathana pratitantram - Primary distinctive doctorine

3-1 **ப்ரதான ப்ரதிதந்தர கருத்து**

- **எல்லா வஸ்துக்களும் எம்பெருமானின் உடல்.**
- **அவன்தான் உயிர்.**
- **இது பிரிக்க முடியாத உறவு (அப்ருதக்ஸித்தி).**
- **இதுதான் சரீர ஆத்ம பாவம்**
- **சேதன அசேதனங்கள் பகவானின் சரீரம் எனும் சாரீரக சாஸ்திரமே விசிஷ்டாத்வைத மதத்தின் உயிர் நாடி.**

All sentient and nonsetient things form the eternal, inseparable body for the Lord. He is the soul inside. This is called sareera-sariri bhavam. This saareeraka saastra is the important central pillar of Visishtadvata philosophy.

3-2 **விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கே தனிப்பட்ட முக்யமான கருத்து இது. மற்ற மதங்களில் கிடையாது. அதனால் ப்ரதான ப்ரதி தந்த்ரம்.**

This primary idea is unique only to Visishtadvaita philosophy and that's why it is called "Pradhaana pratitantram"

3-3 **பகவான்**

- **ஆதாரம். சேதனா சேதனங்களை தாங்குகிறான்.**
- **நியாமகன். அவற்றை ஏவுகிறான்.**
- **ஸேஷி. அவற்றின் பலன்களை அனுபவிக்கிறான்.**
- **ஆகவே அவன் ஆத்மா.**

சேதனா சேதனங்கள்

- **ஆதேயம். பகவனால் தாங்கப்படுகின்றன.**
- **நியாமியன். அவனால் ஏவப்படுகின்றன.**
- **ஸேஷன். அவனுக்கே அடிமையாய் உள்ளன.**
- **ஆகவே இவை சரீரம்.**

Bhagavan supports, controls and owns all the sentient and nonsentients things. He is the athma (soul). They are all being supported, controlled and exist to serve Him. They form body for Him.

3-4 **பகவானே எல்லா பொருள்களின்**
- **ஸ்வரூபம் - உண்டு என்னும் தன்மையும்**
- **ஸ்திதி - அது சிறிது காலம் நீடித்து இருக்கவும் காரணம்.**
- **இது ஆதேயத்வம். பகவானின் தரிக்கும்/தாங்கும் தன்மை.**

Because of Lord all things in this universe get their inhenerent nature and existance. That's what we call Bhagavan supports everything.

3-5 **எல்லா பொருள்களுக்கும்**
- **ஸ்ருஷ்டி - ஆக்கல் (ஸ்ருஷ்டி)**
- **ஸ்திதி - நீடித்து இருத்தல்,**
- **ப்ரவ்ருத்தி மாறுதல் போன்றவைக்கு**
- **பகவானின் எண்ணமே (ஸங்கல்பம்) காரணம்.**
- **இது விதேயத்வம்.**

Bhagavan Is the only reason for creation. existance and changes of all things in the universe.

3-6 **எல்லாப் பொருள்களும்**
- **பகவானின் பலனையே எல்லாப் பொருளும் தமக்கு பலனாக கொண்டன.**
- **இது ஸேஷத்வம்.**

All things in the universe exist for the purpose of Bhagavan.

3-7 **ஆதேயத்வம், விதேயத்வம், ஸேஷத்வங்கள் சரீர லக்ஷணங்கள் என்றது ஸ்ரீபாஷ்யம்.**

Sri Bashyam defines that supportiveness, existance and servitude are the qualities of the body.

3-8 **பகவான் தாங்குபவன். நாம் தாங்கப்படுபவர்.**
எனவே அவனை விட்டு பிரிக்க முடியாத தத்துவம் நாம்.
- **அவன் நியமிப்பவன், நாம் அதன்படி நடப்பவர்**
- **அவன் ஸேஷி, நாம் ஸேஷ பூதர்கள்**
- **என்பதால் நமக்கு ஒரு ப்ரயோஜனமும் கிடையாது**
- **கைங்கர்ய பலனும் அதற்கு உபாயமான சரணாகதியும் புரியும்.**

Bhgavan is the supporter. We are all supported by Him. Our existance is inseparable from Him. He is the commander. We follow His orders. He is the enjoyer. We perofrm service to Him. Since we are all slaves to Him there is no exclusive benefit for us on anything. Understanding this will lead us to Complete surrender to Him whch is he measn for the eternal kaimkaryam.

3-9 **ஜீவன் அநந்யதாரன்**
நாராணாம் + அயனம் என்பதில் சேதன அசேதன பொருள்களுக்கு எல்லாம் அவன் ஆதாரம் என விளங்கும்.

Jeevan is not supported by anything other than the Lord. The word Naarayana in Ashtaaksharam can be broken into Naaraanaam + ayanam. Here, the term ayanam means that the Bhagavan is the suppor for all the entities.

3-10 **ஜீவன் அநந்ய ப்ரயோஜனன்**
ஓம் என்பது அ, உ, ம. அகாரமாகிய எம்பெருமான் ஒருவனுக்கே மகாரமாகிய ஜீவன் அடிமை.

Jeevan exists for the sole benefit of the Lord and nothing else. Pranava consists of A, U and M. A means the Lord, M meeans the Jeevan who is the slave to Him. U indicates the exclusive service only to the Lod.

3-11 **ஜீவன் அநந்ய சரணன்**

நம: என்பதில் ஜீவனுக்கு ஒன்றுமில்லை. பரமாத்மாவிற்கு அதீனமானவன் என்பதால் அவனையே உபாயமாக கொள்வது.

Jeevan has no other means than the Lord. Nama: word indicates that the Jeevan owns nothing. Since he is the slave to the Lord, he looks at Him as the sole mean.

3-12 **ப்ரணவத்தின் அர்த்தத்தை அர்ஜீனனின் ரதத்திலும், நம: பதத்தை பரதனின் பாரதந்திரியத்திலும் காணலாம்**

The meaning of pranava is obvious if one looks at the picture of Arjuna's chariot. Similarly the meaning for Nama: is explicit in the actions fo Bharatha.

3-13 **ஆக, பகவானே நிலை தந்த தாரகன். நியமிக்கும் இறைவன். எல்லாம் தனது என்னும் நம் தந்தை. அவனுக்கு சமமோ உயர்வோ இல்லை. அவனது சரீரமான நாம் அவனுக்கு விலையிலா கைங்கர்யம் செய்து மகிழ்கிறோம்.**

So Bhagavan is the one who supports us. Who controls us. Who is our Master. We are all His inseparable body. There is nothing equal or greter than Him. We take pleasure in doing service to Him without expectign any returns.

3-14 **ஈச்வரனும் ஜீவனும் ஒன்று (அபேத ஸ்ருதி), வெவ்வேறு (பேத ஸ்ருதி), சில விதங்களில் ஒன்று (கடக ஸ்ருதி) என்று பல வகையாக வேதங்கள் சொல்கிறது. மேலெழுந்த முரண்பாடுகளை இந்த சாரீரக சாஸ்திரம் ஸாமர்த்தியமாக விலக்குகிறது.**

Vedas in some places say Eswaran and Jeevan are the one (Abedha Sruthi), and in some places claim they are different (Bheda Sruthi) and yet in other places claim it is the same in some aspects (kataka sruthi). Allthese apparent conflicts can be resolved if one understand clearly the saareraka saastram.

Chapter 4
அர்த்த பஞ்சகாதிகாரம்
Artha pancagam - Five things to be understood

4-1 **அறிய வேண்டிய ஸ்வரூபம் ஐந்து. அவை அர்த்த பஞ்சகம்.**
1. ப்ராப்யன் - பகவத் ஸ்வரூபம் 2. ப்ராப்தா - ஜீவாத்ம ஸ்வரூபம் 3. ப்ராப்த்யுபாயம் - உபாய ஸ்வரூபம் 4. ப்ராப்த்விரோதி - விரோதி ஸ்வரூபம், 5. பலன் - பல ஸ்வரூபம்.

Artha panchagam is about five essentail meanings one needs to understand for salvation. Bhagavan-Supreme soul, chetana-individual soul, the means for the jeevatham to reach the Lord, Hurdles to that means and finally eternal enjoyment.
YAHOO (You, Access, Him, with the Objective and without any Obstacles)

4-2 **ஈச்வரனை அறிந்து கொள்வது**
- **அகாரத்தில் - திருமந்திரத்தில் உள்ள ப்ரவணத்தில்**
- **நாராயண என்னும் த்வய பதத்தில்.**
- **மாம், ஏகம் என்ற சரம ஸ்லோக பதத்தில்**

The Characateristics of the supreme soul can be derived from the first letter A in pranaavam in Thirumantram; the word Narayana in dvayam and the words "Maam and Ekam" in Charama sloka.

4-3 **ஈச்வரன் என்பது - லஷ்மியுடன் எப்போதும் கூடியவன். ஜ்ஞானந்த மயன், விபு. அநந்த கல்யாண குணாகரன். அப்ராக்ருத திவ்ய மங்கள விக்ரஹம் உடையவன். லீலா விபூதி, நித்ய விபூதியை தனக்கு சரீரமாகக் கொண்டவன். ஜகத் வ்யாபாரங்களைச் செய்பவன் மோக்ஷத்தில் ஜீவனால் பரிபூர்ணமாக அனுபவிக்கப்படுபவன்**

Bhagavan - Always with the consort of Lakshmi, infinitely knowledgeable. Pervades everywhere, possess infinte superior qualities,

4-4 **சேதனன் மூவகை**

- **நித்யர், ஸம்ஸார பந்தம் என்றும் இல்லாதவர்.**
- **முக்தர், ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை அடைந்தவர்**
- **பக்தர், ஸம்ஸாரத்திலேயே மூழ்கி கிடப்பவர்.**

Chetanas are classfied as 1. Nithyas or eternals, who never gets int obirth/death cycle. 2. Muktas or liberated souls. Who once were in the birth/death cycle but liberated. 3. Bhakthas or the rest of the jeevas.

4-5 **சேதனன் - எல்லோருக்கும் அமலம், ஞானம், ஆநந்தம், ஸேஷத்வம் உண்டு. ஆனால் எல்லாம் அணுத்வம். ஈச்வரன் ஒருவனுக்கே இவை விபு.**

All chetanas have some common characteristics. Flawlessness, knowledge, Happiness, Servitude to the Lord. But they are atomic only. Bhagavan is the only one who has these as pervasive.

4-6 **சேதனனை அறிந்து கொள்வது**

- **மகாரத்தில் திருமந்திரத்தில் உள்ள ப்ரணவம்**
- **'ம' வில். நம: பதம் திருமந்திரத்தில்.**
- **நார, ப்ரபத்யே என்றவிடத்தும் த்வயத்தில்**
- **வ்ரஜ:, த்வா என்ற சரம ஸ்லோக பதத்திலும்**

Chetnas can be understood in the letter M in pranavam in Thirumantram, Nara part of Narayana in Dvyam and the words "vraja" and "thvaa" in Charamaslokam.

4-7 **உபாயம். பக்தி, ப்ரபத்தி இந்த இரண்டு மட்டும்தான் பகவானை அடைந்து நித்ய கைங்கர்யம் செய்வதற்கு உபாயம். கர்ம, ஞான யோகங்கள் நேர் காரணம் இல்லை. மேலே இதைக் காணலாம்.**

To reach the Bhagavan and perfoom eternal kaimkaryam to Him, there are only two known methods - Bhkathi or prapatti. Karma and gnana yoga are not direct means. These will be explained in detail in the coming chapters.

4-8 **உபாயத்தை அறிந்து கொள்வது**

- **நம:, அயநம் என்ற திருமந்திர பத்தத்திலும்**
- **முதல் வரி, த்வயத்திலும்**
- **சரணம் வ்ரஜ: என்ற சரம ஸ்லோகத்திலும்**

Means to reach the Lord can be understood in namah: and in ayanam in Thirumandram; first sentence of Dvyam; saranam vraja: phrase in Charama sloka.

4-9 **பலன் ஜீவாத்மாவின் ஸ்வரூபமே "நித்ய கிங்கரோ பவ:" என்று ப்ரமாத்மாவவை அடைந்து அவன் திருவடிகளில் கைங்கர்யம் செய்து நித்யமான, அனந்தமான, ஆனந்தம் அடைவதுதான். இதை மேலே பரிபூர்ண ப்ரம்மானுபவத்தில் (Ch. 22) காணலாம்**

The ultimate purpose of jeevathma's existence is to serve at the feet of the Paramaatma (daasathvam). This is explained in detail in the chapter "Paripoorna Brahmmanubhavam"

4-10 **பலனை அறிந்து கொள்வது**

- **நாராயணா என்ற திருமந்திர பதத்திலும்**
- **மதே நாராயணாய நம: என்ற த்வயத்திலும்**
- **பாபேப்யோ மோஷயிஷ்யாமி என்ற சரம ஸ்லோகத்திலும்**

4-11 **தடை - பகவானை அடைவதற்கு தடையாய் உள்ளது அவித்யா, கர்மா, வாஸனை, ருசி, தேஹ ஸம்பந்தம் என்னும் சுழல்.**

The impediments to reach the God. Avidya (Ignorance), karma, Vaasana (latent impressions of the past deeds), ruchi (the taste of bad deeds), deha sambandan (body connection). This is a vicious circle.

4-12 **தடையை அறிந்து கொள்வது**

- **நம: என்னும் திருமந்திர பதத்திலும்**
- **நம: என்ற த்வயத்திலும்**
- **சரம் ஸ்லோகத்தில் ஸரணம் வ்ரஜ: எனபதிலும்.**

Impediments can be understood in namah: in Thirumantram and in dvyam. "Saranam Vraja:" phrase in Charama sloka.

4-13 **தடை என்பது**

- **பகவானை அடைய விடாமல் தடுக்கும் விரோதி.**
- **இது வேறு ஒருவர் அல்ல. நாமே.**
- **நம்முடைய இந்திரியங்களே நமக்கு விரோதி.**
- **இந்திரியங்களின் தூண்டதலால் பாபங்கள் செய்கிறோம்**
- **அநாதியான வேதத்தில் நியமிக்கப்பட்ட நித்ய, நைமித்ய கர்மாவை தவறி எம்பெருமானின் சீற்றத்திற்கு ஆளாகிறோம்.**
- **அது நம்மை ஸம்ஸாரத்தில் முழுக்குகிறது.**
- **புண்யம், பாபம் இரண்டும் மோக்ஷத்திற்கு தடையே.**

Hurdles prevent us from reaching the God. This enemey is not some other person. It is only us. Our own organs act as enemies. They induce to indulge in the wrong things. Ageless vedas commad us to perform nithya, maimithya karmas. We fail to do so and that makes Bhagavan angry. As a punishment He pushes us into this birth/death cycle. Once we are here, the prakriti blunts our intellect, we continue to do more sins and this cycle never ends. Both good and bad deeds takes away from the goal of reaching the moksham.

4-14 (tag)

Chapter 5
தத்வத்ரயசிந்தநாதிகாரம்
Tattvathreyam - The three realities

5-1 **தத்துவங்கள் மூன்று - சித், அசித், ஈச்வரன்.**
1.அசேதன வஸ்துவிற்கு ஞானம், ஆனந்தம், அமலத்வம் இல்லை. தனித்து இருக்கக் கூடியது. எண்ணம், உணர்ச்சி கிடையாது.
2.சைதன்யம் உடையது சேதனன்.
3.உயர்ந்த, பர தத்துவம் ஈச்வரன்.

Tattva means "that-ness". The three realties are ACE (Achit, Chit, Eswaran). Sentient, nonesentient and the Lord. Achetanas don't have knowledge and they can exist independently. They can't think or express feelings.Chetanas have knowledge. Eswaran is the ultimate Tattvam.

5-2 **ஸ்ரீயப்பதியான நாராயணனே ஈச்வரன். ஸ்வ அதீ4ந த்ரிவித சேதந அசேதந ஸ்வரூப ஸ்தி2தி ப்ரவ்ருத்தி பே4த4ம் எல்லா வஸ்துக்களும் எம்பெருமான் வசம். அவனது திருமேனி.**

- **மூன்று வித சேதனம் - நித்யர், முக்தர், பக்தர்.**
- **மூன்று வித அசேதனம் - மிச்ர தத்வம், ஸத்வ சூன்யம், சுத்த தத்வம். ப்ரகிருதி, காலம், சுத்த தத்வம்**
- **மூன்று வித வேறுபாடுகள் (பேதம்) - ஸ்வரூபம், ஸ்திதி, ப்ரவ்ருத்தி**

Srimun Narayana is the one and only Eswaran. Everything else is His body.
Three types of chetanas. Nithys, Mukthas, Bhakthas. Eternals, emancipated, Bounded souls.
Three types of Achetans. Misra tattvam, tattva soonyam, suddha thattvam. Prakrit or gross matter, kaalam or Time, Sudda tattvam or pristine purity
Three types of distinctions. nature, subsistence, and actions.

5-3 **பகவான் ஸ்வதந்த்ரன். விபு. ஸத்யம், ஞானம், அநந்தம், ஆனந்தம், அமலத்வம், ஸ்ரீயப் பதித்வம் உடையவன். எவருக்கும் அதீனம் இல்லை. எல்லாவற்றிற்கும் ஸ்வாமி.**

சேதனன் அணு. எம்பெருமானின் வசம். அவனுக்கு ஸேஷன். சேதனனுக்கு ஞானம், அமலம் இருந்தாலும் அது அணுத்வமே.

Bhagavan is independent. Expansive. He has the qualities of truthfulness, Omniscience, omnipresence, bliss, blemishlessness, consort of Sri. He is not bound to anything. He is the master of everything. Chetana is atomic. He is bounded by Bhagavan. Even though chetana has knwoledge and blemishelessness, it is atomic only.

5-4 **சேதனன்**

நித்யர். ஸ்வரூப ஆவிர்பாவம், பகவத் கைங்கர்யம் அநாதி.

முக்தர். பக்தி அல்லது ப்ரபத்தி மூலம் ஸம்ஸார பந்தம் கழிந்து ஸ்வரூப ஆவிர்பாவம் அடைந்தவர்.

பத்தர். ப்ரம்மா முதல் புழு பூச்சி வரை சுக, துக்க, ஞானங்களை அனுபவிப்பவர். மோஷம் அடையும் வரை ஸம்ஸாரம் தொடர்ச்சி. இவர்கள் ப்ரவ்ருத்தி புண்ய பாபங்கள்.

The innate nature of the soul is obvious to Eternals all the time. Bhagavath kaimkaryam is also endless without any start or end.
Emancipated are the ones who liberate their soul and understand the innate nature thorugh Bhkathi or praptti. They get rid of the birth/death cycle.
Anything from bacteria to Brahma is classifed as Bhakthas. They dwell in birth/death cycle, till they receive moksham. Their good deeds andsins are the seeds for the continuation of the bondage.

5-5 **ஜீவனிடம் இருப்பது தன் ஆத்மஸ்வரூப ஞானம், தர்மபூத ஞானம். டுரண்டும் ஸ்வயம் ப்ரகாசம்**

- **தர்ம பூத ஞானத்தால் விஷயங்களை அறிகிறோம்**
- **ஜீவாத்மா தன்னை அறிந்து கொள்ள இது அவசியமில்லை**
  - **ஏன் என்றால் அவரவர் ஆத்மா தனக்கு "தான் தான்" தோன்றிக் கொண்டே இருக்கும்**
  - **இது தன் ஆத்ம ஸவரூப ஞானம்**
- **விஷயங்களை அறிந்து, உடலை ஏவி, சுக துக்க பலனை அனுபவிக்கும்**
- **அளவில் எல்லோருக்கும் மாறி இருக்கும்.**

Both jeevan and Bhagavan has the (Dharma buta gnanam) extrinsic perceptive knowledge. This makes a person to be aware of things. It is self-luminescent. It appears as "I" to the chetana. It understands the information, commands the body and enjoys the happiness and sorrow. This varies from jeevan to jeevan.

5-6 **பிரகிருதி**

- **மூலப்பொருள். அக்ஷரம், ப்ரதமா, அவ்யக்தம், த்ரிகுணம் என்று பெயர்.**
- **ஜடம். ஸ்வயம் ப்ரகாசம் இல்லாதது**
- **இதன் ஸ்வரூபம் ஸத்வ, ரஜோ, தாமஸ குணங்கள்.**
- **முக்குணங்கள் சமமானால் ப்ரளயம்**
- **முக்குணக்கள் வேறுபட்டால் ஸ்ருஷ்டி போன்றவை**

Prakriti

- is the primal matter. Also called by akshara, avyaktha, triguna.
- Is not self-luminiscent.
- has three gunas - Satva, rajo, thaamasa. (Lucid, dynamic, entropy)
- When the three gunas are equal it is the universal destruction.

5-7 **ப்ரகிருதி 24 தத்துவங்களாக மாறுகிறது, எம்பெருமானின் ஸங்கல்பத்தால்.**

- **3 ப்ரகிருதி, மஹத், அஹங்காரம்**
- **5 கர்ம இந்திரியங்கள் (வாக், பாதம், பாணி, பாயு, உபஸ்தம்)**
- **5 ஞான இந்திரியங்கள் (ஸ்ரோத்தம், ஸஷீஸ், க்ராணம், ரஸனம், த்வக்)**
- **1 மனஸ்**
- **5 பூதங்கள் (ஆகாஸம், வாயு, தேஜஸ், ஆப, ப்ருத்வி)**
- **5 தன்மாத்ரைகள் (சப்தம், ஸ்பர்ஸம், ரூபம், ரஸம், கந்தம்)**

- 3 Prkariti, mahat, ahangaram. primal matter, universal mind and egoisim
- 5 motors organs. Tongue, legs, arms, excreative and procreative organs.
- 5 sensory organs. Ear, eye, nose, mouth, skin.
- 5 gross elements Akaasa, vaayu, tejas, apah, pritvi. Sky, air, fire, water and earth.

- 5 Tanmatras. subtle elements. sabda, sparsa, rupa, rasa, gandha. Sound, touch, form, taste and smell.
- 1 mind.

5-8 **ஈச்வரன். பகவானின் திருமேனி ஐந்து விதம்.**

- **பரம் என்பது ஸ்ரீவைகுண்ட்டத்தில் இருக்கும் பர வாசுதேவனின் திருமேனி.**
- **வ்யூஹம் என்பது பர வாசுதேவனிடமிருந்து தோன்றும் நான்கு திருமேனிகள். பாற்கடலில் ஸயனித்த வ்யூஹ வாசுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன். மேலும் கேசவ முதலியவைகள் கூட.**
- **விபவம். பத்மநாபன் முதலிய 36 அவதாரங்கள்**
- **ஹார்தம் எல்லோர் இத்யத்திலும் ஸூக்ஷமமாய் இருப்பவன் அந்தர்யாமி.**
- **அர்ச்சை. எல்லொரும் ஸேவிக்கும்படி கோவில்களிலும், வீடுகளிலும் சிலாரூபாமாய், சாளக்கிரமாய் இருப்பவன்**

Bhagavan has 5 different abodes.

- Param (Tra nscendental) is the one in Moksha.
- Vyuha (emanations) is on the milk ocean. It is divided into vyuha Vasudevan, Sankarshanan, prathyumnam, Aniruddan.
- Vibhava (Incarnations) is the one responsible for the avataras
- Haartham or Antharyami (indwelling). Inside everyone's heart intrinsiclly
- Archai (Iconic). The idols in temples and salagrammas in houses etc.

5-9 **எம்பெருமானின் அவதார ரஹஸ்யங்களை கண்ணனே கீதையில் சொல்லி உள்ளான். பக்தி யோகம் விரைந்து செயல்படவும், ப்ரபத்தியில் மஹாவிஸ்வாஸம் நிலைத்திருக்கவும் இதை சிந்தனை செய்ய வேண்டும்.**

பகவானின் அவதாரங்கள்

- **உண்மையானவை. மாயாஜாலங்கள் இல்லை.**
- **பரிபூர்ணமானவை. இயல்பான குணங்கள் நிறைந்தவை.**
- **அப்ராகிருதமானவை. ஸூத்த தத்வம்**
- **அவனுடைய ஸங்கல்பத்தாலேயே வந்தது**
- **ஸாது ரக்ஷணத்திற்காக ஏற்பட்டது.**
- **தர்மத்தை ஸதாபிப்பதற்காகவே உண்டானது.**

Lord Krishan has explaines the secrets of Bhagavan's incaranations in Bhgavat Gitta. One needs to constantly think about this. For those who perform Bhkathi yoga this would help to quicken the process. For prapatti yoga, this would reinforce the mahavisvasam or unshakeable faith.

Bhagavan's aavathaaras are (PRINCE)

- Protect the good
- Rsurrect the vedas
- Immortal
- Not fake
- Complete with all gunas
- Ego centric. Came out of His will.

5-10 (tag)

Chapter 6
பரதேவதா பாரமார்த்த்யாதிகாரம்
(Paradevada Paaramartyam)
The true ultimate Lord

ஆத்மைக்யம் தேவதைக்யம் த்ரிக ஸமதிகதா துல்யதைக்யம் த்ரயாணாம்
அந்யத்ர: ஈச்வர்யமிதி ஆத்ய நிபுண பணிதீராத் ஆத்ரியந்தே ந ஸந்த:
த்ரய்யந்தை: ஏக கண்டை: ததுநுகுண மநு வ்யாஸ முக்யோக்திபிஶ்ச
ஶ்ரீமாந் நாராயணோ ந: பதி: அகில தநு: முக்திதோ முக்தபோக்ய:

- *ஒரே ஆத்மா, ஒரே தேவதை, த்ரி மூர்த்திகள் சமம், அவர்கள் ஆத்மா ஒன்று, அவர்களைவிட வேறான இன்னொருவன் ஈச்வரன் போன்றவை அறிவில்லாத பேச்சு. விவேகிகளான பெரியோர்கள் இதை ஏற்பதில்லை.*
- *ஒரே விதமாய் சொல்லும் உபனிஷத்துக்களாலும் அவற்றுடன் ஒத்திருக்கும் வ்யாஸர், மனு போன்றவர்களின் சூக்தியாலும், அனத்தையும் சரீரமாக கொண்டவனும், மோக்ஷத்தை அளிப்பவனும், முக்தர்களால் அனுபவிக்கப்படுபவனும், பிராட்டியை பிரியாத நாராயணனே என்றும் நமக்கு ஸ்வாமி, சேஷி.*

- Union of souls, union of devas, equality among the trinity, union of the souls of the trinity, there is one all powerful beyond these - Stupid arguments like this, our elders won't even consider.
- What they approve is the consensus of the upansihads and its parallel which are the words of Vyasa and Manu and the likes. It confirms that the one who holds universe as His body, the one who grants moksha, the one who is enjoyed by the emancipated, the one who is always with the consort of Lakshmi, is the our Master.

6-1 **ஞானம் எவ்வளவு இருந்தாலும், அது மட்டும் போதாது. பரதேவதை யார் என்பதை திடமாக அறிந்தால்தான் அவனிடம் தகுந்த உபாயத்தின் மூலம், கால தாமதமின்றி மோஷ பலனைப் பெற முடியும். பர தேவதை யார் என்று நிச்சயித்து காட்டுவது இந்த அதிகாரம்.**

However knowledge one has, still it is not enough. One has to be clearly confident on who is the "Para davada - Ultimate final Lord". Then only

through proper means one can can attain the moksham. This chapter confirms who is the ultimate final Lord.

6-2 **முதல் 24 தத்துவங்கள் அசித் சேர்ந்தவை. அறிவற்றதலால் அவை ப்ரம்மம் இல்லை.**

The first 24 tattvas are achit, nonsenitent things. Since they lack intelligence, they can't be the brahammam.

6-3 **25ம் தத்துவம் அறிவுடைய ஜீவன். இவற்றின் எண்ணிக்கை அளவிடமுடியாது. இவற்றின் சுக துக்கங்கள் மாறிக் கொண்டே இருக்கும். அதனால் இதுவும் ப்ரம்மம் இல்லை. ஆக, ப்ரம்மம் என்பது அசித், சித்தைவிட வேறானது.**

25th Tattva is Jeevan, sentient. The numbe of jeevans is countless. Since each jeevan has its own happiness/sadness different from others, they can't be brahmam. So the Brahmam is unique and is different from the achit and chits.

6-4 **கடைசியான 26ம் தத்துவம் ஈச்வரன். இவன் ஒருவனே. பகவான் ஒருவன்தான் காரணம். மற்றவை எல்லாம் காரியங்கள்.**

The last and 26th tattva is Esawran. This is only one person. Understanding the nature of Eswaran is very important. He alone is the the root cause. Everything else is the effect.

6-5 **ப்ரம்மா, சிவன், இந்திரன், சந்திரன் இவர்கள் ப்ரம்மமில்லை. இவர்கள் எல்லோரும் ஜீவன்கள். கர்ம வச்யர்கள். அவர்கள் வகிப்பது ஒரு பதவி. அதுவும் எம்பெருமானிடம் வேண்டிப் பெற்றதே.**

Brahmma, Siva, Indran, Chandran are all not Brahmam. They are all jeevans. They are all bound by karma (actions and their rewards). They merely hold the titles for a while. They pray to the Brahmam and attain that position.

6-6 **எம்பெருமானைத் தவிர மற்றவர்கள் அவனுடைய மாயைக்கு வசப்பட்டு முக்குணங்களால் கட்டுப்பட்டவர்கள். ஞானத்தில் விரிவும் சுருக்கமும் உண்டு. இவர்கள் எம்பெருமானை வேண்டி அவனுக்கு அடிமைப் பணி செய்பவர்கள்.**

Everyone, except the Lord himself, are bounded by the "Maya". All of them are driven by the three gunas. Their knowledge level expands and shrinks and is not constant. They too pray to the Lord to perform kaimkaryam or service to Him.

6-7 **எனவே மும்மூர்த்திகளும் சமம் என்பது சரியாகாது. பிரம்மா, சிவன் என்ற இருவரும் படைக்கப் பட்டவர்கள். ஆதி காரணமில்லை.**

The argument that the three Gods (Brahmaa, Vishnu, Siva) are all equal is not valid. Brahma and Siva are created products only. They are not the root cause for everything.

6-8 **திரி மூர்த்திகளுக்கு மேல் ஒருவன் ப்ரம்மம் என்பதும் ப்ரமாணங்களில் சேராது.**

The idea of there could be someone beyond these three, who can be called as Brahmam is also not validated by Vedas, our primary "pramaana".

6-9 **ஆக, லஷ்மீபதியே பர தேவதை. இது பல ஸ்ருதி, இதிஹாச, புராணங்கள், ஆழ்வார் ஆசார்யர் ஸ்ரீசூக்தியிலும் நிருபிக்கப் பட்டுள்ளது.**

So, Lord Narayana who is always with the consort of Lakshmi is the only one, who is the ultimate Lord. This proven in Vedas, smruthis, ithihasa and puranaas in many instances. The divine works of Azhvar and acharya also echos this.

6-10 **ப்ரம்மா, சிவன் உட்பட எல்லா வஸ்துக்களும் எம்பெருமானின் சரீரமே. மற்றைய தேவதைகளுக்கு மோசஷம் அளிக்க அதிகாரமில்லை. எந்த**

பலன்களையும் அவர்களால் நேரிடையாக தர முடியாது. அந்த பலன் எம்பெருமானால் அளிக்கப்பட வேண்டும்.

All the things, including the jeevas like Brahma ans siva are the body for the Lord Narayana. They have no power to grant the moksham. Even the small rewards they confer, that too is derived only from Lord Narayana.

6-11 **எல்லா பொருள்களையும் தனக்கு சரீரமாய் கொண்டு மோஷத்தை அளிக்கும் ஸ்ரீயப்பதியே பரதேவதை என்று நிருபிக்கப்பட்டது.**

The one has the entire universe as His body is Srimun Narayana. He is the one and only ultimate Lord, which has been proven here.

6-12 **இங்கு பரதேவதை என்பது பிராட்டி பெருமாள் சேர்ந்த மிதுனம். சதுஸ்லோகி வ்யாக்யனத்தில் பிராட்டியைப் பற்றி 5 கட்சிகள் கூறி இதில் ஒன்றே ப்ரமாணத்தின்படி சரியானது என்றார்.**

- **லச்ஷமி அணுத்வம். ஜீவன். முக்த நித்யர்களைப் போல் இவளின் தர்மபூத ஞானம் மட்டுமே விபு.**
- **விபு ஆனால் ஜீவ வர்கம்.**
- **பகவானுக்கு அடங்கியதால் ஈச்வரி இல்லை. விபு ஸ்வரூபத்தால் மற்றைய அணு ஸ்வரூப ஜீவனும் இல்லை.**
- **பகவான் ஸர்வேச்வரன். அவனைத் தவிர மற்றவைகளுக்கு இவள் ஈச்வரி. ஜகத் காரணம் இவள் இல்லை. பிராட்டி பெருமை எம்பெருமானின் அருள்.**
- **பகவானைப்போல் இவளும் ஈச்வர தத்துவம். ஞானம் போன்ற குணங்கள் பொது. புருஷ குணங்கள் அவனுக்கு. பெண் குணங்கள் இவளுக்கு. இது இவர்களுடைய ஒப்பந்தம். இவளும் ஜகத் காரணமே. ஈச்வரத்வம், ஸரண்யத்வம், ப்ராப்யத்வம் மூன்றும் இவளுடைய ஆகாரங்கள்.**

நம்முடைய ஆசாரியர்கள் கடைசி பக்ஷமே சரியானது என்று உபதேசித்தனர்.

When we say the ultimate Lord, Paradevadai, it means the gemini of Bhagavan and Piratti together. In the explanatory comments of Chathusloki,

Swami has eluded five types of where Lakshmi fits in and said only one of them is correct according to the sastras.

1. Lakshmi is atomic. She is not the Eswari. She is confined under Bhgavan. Her intelligence is expansive just like Muktha and Nithya. That too is given be the Lord.
2. She is expansive. But belongs to the sentient, chetana group.
3. She is neither chetana nor Eswari. Since she is confined under Bhgavan, She is not Eswari. Since her nature is expansive she is not a chetana.
4. Bhgavan rules everything. She rules everythign except Bhgavan. She is not jaagat kaaranam, that is the she is not part of creation, sustenance and destruction.
5. She is Eswari just like how Bhgavan is Eswaran. Though, all the noble characters are common to both, He retained the male qualities and she kept the female qualities. This is their agreement. She is also the reason for the creation etc. of the universe. She is Eswari, means and ends.

Our acharyas have confirmed and instructed that the last classification is correct.

6-13 **எம்பெருமான் புருஷனுக்குரிய கடினமான தண்டதரத்வம், ஸ்வாதந்த்ர்யம், ஸ்திரத்வம் போன்ற குணங்களைக் கொண்டான். பிராட்டியோ பெண்களுக்குரிய புருஷகாரத்வம், மிருதுவான தன்மை, பதிக்கு அடங்கி இருத்தல் போன்றவற்றைக் கொண்டாள்**

Bhagavan assumed the male qualities like judging and punishing, Independence, Stability etc. Piratti assumed qualities like mediator, softness in heart and body, obeys the command of the husband

As the Nammazvar says, Bhagavn and Piraatti both in a single minded way does everything in this universe. Both are the reasons for - all the universe action, means for moksham, rewards of the moksham. This Swami Desikan's opinion is just a reflection of all the pramanaas like Vedas and Smruthis.

6-14 **ஆசாரியனின் அருளால் அஞ்ஞானம் விலகப் பெற்று ஶ்ரீயப் பதியான எம்பெருமானே உபாயமும் பலனும் எனத் தெளிந்து, கலக்கமிலாது**

எம்பெருமானை, ஏதேனும் ஒருவன் வரிப்பானாகில் அத்தாலே இக்கிரந்தம் பயனடைகிறது.

With the blessings of the Acharya, if at least one person clears the impediments to his knowledge and gains the faith that Lord Srimun Narayana is the only one who is the means and ends for all the rewards, and performs complete surrender to His lotus feet, then the purpose of this book can be considered has been fulfilled.

6-15 **(tag)**

Chapter 7
முமுக்ஷுத்வம்
Mumukshutvam – Liberation Aspiration

7-1 **முமுக்ஷாகிய சேதனனுக்கு மோக்ஷத்தில் இச்சை உண்டாவதைச் சொல்வது இந்த அதிகாரம்.**

How a chetana becomes interested in attaining moksha is described in this chapter.

7-2 **மோக்ஷம் பெற அதில் ஆசை வேண்டும். சரீரமே ஆத்மா என எண்ணி மகிழும் சரீர ஆத்ம ப்ரமம் முதலில் விலக வேண்டும்.**

Aspiration is an essential requirement to attain moksha. For that one needs to get rid of the illusion of body and soul are the same.

7-3 **உடல் அழியும். ஆத்மா அழியாது. கர்மா விடாது. இதை அறிந்தவன் சரீர ஆத்ம ப்ரமம் தெளிந்தவன். பின் ஒருகால் அனுபவிக்க வேண்டிய பலனுக்கு பயந்து பாபமான காரியங்களை விலக்குகிறான்.**

Body dies. Athma has no death. Karma continues. One who realizes this is gets rid of Sareera-Athma bramam. Being afraid of the repercussions in the next birth, he restrains himself doing sinful activities.

7-4 **சரீர ஆத்ம ப்ரமம் கழிந்தவன் இம்மை மறுமைக்கென செய்வதும் துச்சம் என அறிகிறான். உடல் அனுபவம் அல்பம். அஸ்திரம். என்று உயர்ந்த, நிலையான ஆத்மானுபவத்தை தேடுவான்.**

One who realizes the distinction between body and soul will forgo the temporary bodily pleasures and will aspire for the eternal pleasure which is derived from the soul. Bodily enjoyment are temporary and lower level of happiness. The nature of enjoyment through soul is superior and permanent.

7-5 **ஸ்வதந்த்ர ஆத்ம ப்ரமம் என்பது அசேதனத்தைவிட ஆத்மா உயர்ந்தது என அறிந்து தன் ஆத்மாவே பரம போக்யம் என நினைத்து மகிழ்வது. தானே அதிகாரி என இறுமாந்திருப்பது. இந்த கைவல்யமும் அல்பமே.**

Assuming one's soul is independent and powerful by itself is the Svatantra athma bramam. Here their ego is controlling and they enjoy their own soul as the final ends. This is called kaivalyam and it is also lower class of pleasure.

7-6 **அகலா உறவை அறிந்து தன் ஆத்ம ஸ்வரூபத்திற்கு தகுந்த பகவத் கைங்கர்யமே பரம புருஷார்த்தம் எனத் தெளிந்தவன் ஸ்வதந்த்ர ஆத்ம ப்ரமம் விலகியவன். இத்தால் பகவத் கைங்கர்யத்தை ஆசையுடன் வேண்டும் தகுதி உண்டாகிறது.**

Chetan's soul is not independent. When gets rid of that illusion, he will realize the eternal relation between his soul and Bhagavan. He will be convinced that Bhagavath kaimkaryam is the final and ultimate goal. He will yearn to attain that kaimkaryam and he will make himself eligible for that.

7-7 **திருமந்திர அர்த்தானுஸந்தானம் அகங்கார மமகாரங்களை நசிக்கும். பகவத் கைங்கர்யத்தில் ஆசை உருவாக்கும்.**

Contemplating the meanings of Tirumantra helps pne to get rid of "I" and "mine" kind of selfish attitude. It helps to indulge in Bhgavat kaimkaryam.

7-8 **அகாரம் ப்ரணவத்தில் முதல் எழுத்து. அது ஜகத்காரணகனான எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனைச் சொல்லும்.**

Akaaram is the first letter in Pranavam. It refers to the Bhagawan who is the root cause for everything.

7-9 **உகாரம் அநந்யார்ஹ ஸேஷத்வத்தை காட்டும். ஏ என்று தமிழிலும், ஏவ என்று வடமொழியிலும் சொல்லும் ஏவகாரத்தைக் காட்டுகிறது.**

எம்பெருமான் ஒருவனுக்கு(ஏ) நான் ஸேஷபூதன். மற்ற யாருக்கும் அல்ல என்று அந்ய ஸேஷத்வத்தை மறுக்கிறது. எனக்கு யாரும் ஸேஷ பூதர் இல்லை என்பது தெளியும்.

Ukaaram indicates "eva" in Sanskrit and "a" in Tamil. It emphasizes the exclusive nature of of service to the Lord only and noone else.

7-10 **அகாரத்தில் மறைந்து கிடப்பது நாலாம் வேற்றுமை உருபு "கு". அது சேஷியான எம்பெருமானை பெருமை படுத்தும் ஸேஷத்வம். ஜீவன் தான் ஸ்வதந்த்ரன் இல்லை என்பதை அறிவதால் அவனது அகங்காரம் அழியும்.**

The fourth case is implicit in Akaram in Pranavam. That idicates the servitude to the Lord. Realization of this will remove the illusion of the "I" attitude (eogism)

7-11 **மகாரம் சேதனனைச் சொல்லும். அது ஞானத்தை குறிக்கும் "மந" என்ற தாதுவிலிருந்து வந்தது. அகாரத்தில் சொல்லப்பட்ட சேஷத்வதை செய்யும் ஜீவனைச் சொல்கிறது. அது எம்பெருமானுக்கே கைங்கர்யம் செய்வதற்கே உள்ளது.**

"M" is the last word in pranvam. It comes from the root "Mana" which denotes knowledge. It signifies that the chetana is capable of knowledge. That chetana's mere existance is to perform kaimkaryam to the Lord as denoted by Akaram.

7-12 **நம: என்பது ந ம: இதில் ம: என்பது "ம்" என்று சொல்லும் அத்மாவின் ஆறாம் வேற்றுமை "அது". ஆத்மாவினுடையது என்று பொருள். ந: என்பது அதை மறுக்கிறது. ஆத்மாவிற்கு சொந்தமனவை என்பது ஒன்றுமில்லை. அத்தால் மமகாரங்கள் கழிகிறது.**

Namaha: is na + mamah. Ma refers to ownership. Na means the negation. Namah: means there is nothing belongs to the soul. The attitude of "mine" is removed by this word namah:

7-13 **நம: பதத்தால் ஜீவனுக்கு ஸ்வாமித்வம், ஸ்வாதந்த்ர்யம், ரக்ஷகத்வம் இல்லை என்பது புலனாகும்.**

The word nama: indicates that the chetana is void of any Lordship, any independence and any self-protective power.

7-14 **நான் சுதந்திரமாய், என் விருப்பால் செய்கிறேன், எனக்காவே செய்கிறேன், நான் ஸ்வாதீனமாய் அனுபவிக்கிறேன், எனக்காகவே அனுபவிக்கிறேன் என்ற அஹங்கார மமகாரங்கள் கழியும்.**

I do anything on my own will, I do it for my own sake. I enjoy at my own discretion and I enjoy for myself. These are all egoosim related misconcepts. Understanding Tirumantram helps to get rid of those.

7-15 **அசேதன சுகங்களும், கைவல்யமும் அல்பமானவை, அஸ்திரமானவை. துக்கத்தில் தோன்றி, துக்கத்துடன் கூடி, துக்க பலனையே கொடுப்பவை. ஜீவனின் இயற்கையான ஞானத்துடன் அனுபவிக்கும் சுகத்திற்கு எதிராய், விபரீத ஞானத்தால் வந்தவை. இவற்றை அறிந்து அவற்றை விலக்குவர்.**

Pleasures arise from nonsentient items and enjoying one's own soul is always 1. Small, 2. Temporary, 3. arise from sadness, 4. mixed with sadness, 5. rewards only sadness, 6. enemy for jeeva's natural pleasure, 7. came through delusion

7-16 **உலக சுகங்களின் குற்றம் குறைகளை அறிந்தவன் ப்ரம்ம லோகம் வரை உள்ள ஐச்வர்யத்திலும், அனுபவத்திலும் உள்ள ஆசைகளை விலக்குவான்.**

Worldly pleasures are lower level and of temporary nature. The chetna realizes the shortcomings of the pleasures available all the way to the Bramma loka.

7-17 **இதை அறிந்தவன், இம்மை மறுமை பயனை வெறுத்து, திரு மாதுடன் நின்ற புராணன் அடி இணை ஏந்தும் நெடும் பயனே பரம புருஷார்த்தம் எனக் கருதி அத்ற்கான உபாயத்தில் இசைவான். ஸம்ஸாரத்தை**

வெறுத்து அனந்தமான ஆனந்தம் அடைய விரும்புவான். அவனே முமுக்ஷு.

Understanding this, makes one to discard all the means that fetches only worldly pleasures. Instead he will he will explore the means to achieve a permaent bliss which is to reach the Lord and perfrom nithya kaimkaryam to Him. He is called mumukshu.

7-18 **திருமந்திரத்தில் பிறந்து, த்வயத்தில் வளர்ந்து, த்வய நிஷ்டராகவே இருக்க வேண்டும்.**

One is born through Tirumantra and gown up with Dvaya and spend the rest of the life on meditating Dvaya.

7-19 **ஆத்மாவைவிட வேறான வஸ்துக்களை விஷம் கலந்த தேனைப் போலே ஒதுக்கி, கைவல்ய அசையை விட்டு, ப்ரம்மானுபவத்தில் மிகுந்த இச்சை கொண்டு, ஸம்ஸாரத்தை தொலைக்க வேண்டும் என்கிற முடிவுடன், கலங்காத, திடமான மனதை இவ்வுலகில் ஒரு சேதனன் எம்பெருமானின் அருளால் அடைவான்.**

Things which are different from athma is like the honey mixed with poison. Enjoying one's own athma is lower class satisfaction. A chetana realizes these and discard them and yearn for the Brammanamdam and wishes to put an end to the birth/death cycle. He achieves a stable mind and the above aspiration only thorugh the blessings of the Bhgavan in this world.

7-20 (tag)

Chapter 8
அதிகாரி விபாகம்
Eligibility categories

8-1 **வேண்டும் பெரும்பயன் வீடு என மோஷத்தில் இச்சை உண்டான பின் அதை அடைய வேண்டிய ஸாதனத்தை அனுஷ்டிக்கும் முமுக்ஷுவின் பிரிவைச் சொல்வது இந்த அதிகாரம்.**

In the last chapter we saw about liberation aspiration. Once the aspiration is kindled, qualified candidacy for moksha is discussed in this chapter. The ones who perofrms the required means to attain that moksha as the ends is dealt here.

8-2 **மோஷோபாயத்தை அனுஷ்டிக்கும் அதிகாரிகள் இரு வகை (தகுதி உடையவர்கள்).**

- **பக்தி யோகத்தை செய்பவன் பக்தன்**
- **ப்ரபத்தியைச் செய்பவர் ப்ரபன்னர்**

Those who aspire for Srivaikunta and perform the required means are under two types. Bhakthi yogi performs bhakthi as the means and prapannan adopts prapatti as the means. The end result for both is the same, moksha.

8-3 **பக்தி யோகத்தை மோஷத்திற்கு உபாயமாய் செய்பவன் பக்தன். அது தடையின்றி நிறைவேற அவன் செய்யக் கூடிய ப்ரபத்தி அங்க ப்ரபத்தி. இது ஸத்வாரகம். அதன் பலனாய் பக்தி யோகம் நிறைவேறி மோக்ஷம் ஸித்திக்கும். இவனுடைய மோக்ஷத்திற்கு காரணம் பக்தியே.**

Bhakthars are the one who adopt bhakthi yoga as the means for moksham. At times they also do prapatti called sathvaaraka prapatti. This is surrender to Lord and request His blessings to remove the hurdles to complete the Bhakthi yoga. As a result of this, their Bhakthi yoga will be fruitful. Still they achieve moksham through Bhkathi yoga only.

8-4 **ப்ரபத்தியை மோஷத்திற்கு உபாயமாய் செய்பவன் ப்ரபன்னன். இது ஸ்வதந்த்ர ப்ரபத்தி, அத்வாரகம். வேறொன்றும் நாடாது, அப் ப்ரபத்தியாலேயே இவனுக்கு மோக்ஷம். தன்னுடைய ஆகிஞ்சன்ய அநந்யகதித்வத்தை முன்னிட்டு பகவானே கதி என்று செய்யும் ப்ரபத்தி.**

Here, the chetana performs complete surrender to the Lord as the only means to the moksham, without even considering any other means. He laments on his inability to perform any other means. He is convinced that the Lord is the only real means and attains moksham through this surrender.

8-5 **ப்ராரப்த கர்மங்கள் கழிந்த பின்தான் பக்தி நிஷ்டனுக்கு மோக்ஷம். அது எப்போது என சொல்ல முடியாது. அது வரையில் விடாது பக்தி யோகம் செய்தே ஆக வேண்டும். ப்ரபத்தி நிஷ்டனோ ப்ராரப்த கர்மாக்களை ஒழித்து மோக்ஷத்தை விரைவாக அருள வேணும் என ப்ராத்திப்பவன்.**

Bhakthi yogi gets moksha only after he clears out the praraptha karmas. Noone knows in which birth that attainment of moksha will come. Till then, he needs to perform bhakthi yoga without any flinch. Conversely, Prapannan requests the Lord to clear out the praraptha karmas and grant him moksha, the earliest.

8-6 **பக்தி யோகம் நீண்டது. மோஷ காலம் வரை பக்தியை ஆனந்தமாக இங்கேயே அனுபவிப்பான். பகவத் ஸாக்ஷாத்காரமும் கூடலாம். ப்ரபத்தியோ குறுகியது. இப்பிறவிக்கு என ஒதுக்கப்பட்ட வினைப் பயனை மட்டுமே ப்ரபன்னன் அனுபவிக்கிறான்.**

Bhakthi yogi enjoys Bhagavan till he receives moksham, here itself. In many instances he gets the direct experience of the Bhagavan Himself. On the other hand, prapannan needs to go through the karmas that has been allocated only for the duration of this janma.

8-7 **தகுதிக்கு ஏற்ப இவ்விருவர் அனுஷ்டிப்பது ஏதாவது ஒரு உபாயம். உபாயம் வேறே தவிர பலன் ஒன்றே.**

Chetanas perform any one of these two means based on their eligibility criterion. But the final reward is the same. No distinction in that.

8-8 **ஸ்நாநம் ஏழு வகை. தண்ணீரில் செய்யும் ஜல ஸ்நானம் போல மந்த்ர ஸ்நானம், மாநஸ ஸ்நானம் என்று வேதம் சொல்லியது. ப்ரபத்தியும் நாலு வகை. ஸ்வ, உக்தி, ஆசார்ய, பாகவத நிஷ்டை என்று.**

Seven types of bathing is mentioned in vedas. Using water alone is not bathing. Others like using mantras, using the mind etc. are prescribed for the incapacitated. Similarly in prapatti, several types of performance also mentioned.

8-9 **பகவானிடம் தாமாகவே நேரிடையாக ப்ரபத்தி செய்பவர் ஸ்வனிஷ்டர்.**

Svanisthas perform prapatti directly to Bhgavan by themselves.

8-10 **உக்தி நிஷ்டர். இவர்கள் தாம் அநந்யகதியர் என்பதை அறிந்து மஹா விச்வாசம் பூண்டு, ஆனால் ப்ரப்த்தியின் அங்க அங்கிகளைப் பற்றிய ஞானமற்றவர். ஆசார்யன் சொல்லும் ப்ரபத்தி வாக்யங்களை (அர்த்தம் புரியாமலும்) அப்படியே தானும் சொல்லி தன் பரத்தை பகவானிடத்து ஸமர்பிப்பர்.**

Ukthinishtai is the one where the chetanas realize that they don't have any refuge other than Bhagavan, have a firm faith on Him, but does not know the intricacies of praptti procedure. They repeat (even without knowing the meanings) the prapatti sentences uttered by Acharya and take off the their load and submit to the Bhagavan.

8-11 **ஆசார்ய நிஷ்டை என்பது ஆசார்யன் தனக்காகவும், தன்னை சேர்ந்தவருக்கும் செய்த ப்ரபத்தியில் அடங்கியிருத்தல். ஆசார்யன் இவனுக்காக செய்யும் சரணாகதி.**

Acharya nishtai is implicit when the acharya performs the praptti for himself and his disciples. Chetana does not require to do anything. Acharya does the comple surrender for him.

8-12 **பாகவத நிஷ்டை என்பது ஒரு ப்ரபன்னனை அணுகி அவன் மூலமாய் ப்ரபத்தி செய்வது. இது நிர்பந்தத்தால் ஏற்படலாம்.**

Bhagavatha nishtai is the one wherein a prapannan does the prapatti for the chetana. This usually arises only during emergency.

8-13 **மோஷம் அளிக்கும் முகுந்தன், ப்ரபன்னனைத் தவிர மற்றவனுக்கு தன் திருவடிகளையோ, பரமபத்தையோ அளிப்பதில்லை. அந்த ப்ரபன்னனும் ஸத்வாரக ப்ரபத்தி நிஷ்டன் (பக்தன்), அத்வாரக ப்ரப்த்தி நிஷ்டன் (ப்ரபன்னன்) என இரு வகை, அவரவர் வினைப் பயனால். பக்தனுக்கு ப்ரம்மானுபவம் தாமதம். ப்ரபன்னனுக்கு சீக்கிரம். அத்தாலே ப்ரபன்னனுக்கு உயிர் தரிக்கும் காலம் வரை சுகத்தில் குறைவு.**

Lord Mukunda shows His lotus feet and grants moksha only to those who do prapatti. These prapannas are two types based on their karma. One who does it as a part (Bhaktha) and one who does it as a whole (Prapanna). Bhaktha's moksha is delayed. Prappannan gets it faster. And that's why prapanna's enjoyment till death is somewhat shrunk.

8-14 (tag)

Chapter 9
உபாய விபாகாதிகாரம்
Means Classfication

9-1 **மோஷ சாதனங்களின் பிரிவைச் சொல்கிறது இந்த அதிகாரம்.**

This chappter shows the distinction amongst the different means undertaken to attain moksham.

9-2 **பகவானை அடைவதற்கு அவனே உபாயம் என்றது உபனிஷத். சேதனனுடைய மஹா புண்ய விசேஷத்தாலே அவனுக்கு பக்தி, ப்ரபத்தி போன்ற ஞானத்தை தந்து, அதை உபாயங்களாய் அனுஷ்டிப்பதற்கும் பகவானது அருளே ஆதி காரணம்.**

To reach Bhagavan He is the only means. As a result of some great good karma, a chetana receives the knowedge on Bhakthi and prapatti through Bhgavan's blessings. Bhgavan is the primary cause for the chetana to execute them as a means for moksha.

9-3 **உபனிஷத்துக்கள் பகவான் ஒருவனே மோஷத்திற்கு நேர் காரணம் என்கையில் இந்த பக்தி ப்ரபத்தி எதற்கு? அந்த எம்பெருமான் நம்மேல் கருணை பொழிய, அவன் சீற்றம் தணிய, அவனை ப்ரஸன்னாக்குவது பக்தி, ப்ரபத்தி.**

When upanishads claim that Bhagawan is the sole, direct means to achieve moksham, then why do we need Bhakthi or prapatti? It is to get rid of the Bhagavan's anger and cool him off.

9-4 **இங்கே பகவான் சீற்றம் என்பது சேதனன் செய்த அளவற்ற பாபங்கள். ஆனந்தம் என்பது சேதனன் செய்த புண்ய கர்மாக்கள்.**

To set the records straight, Bhgavan is never angry. It is actually the immense sins accumulated sins by the chetana is called anger. The happiness of Bhagavan is really al lthe good deeds perofrmed by the chetana.

9-5 **பகவானை அடைய கர்ம, ஞான, பக்தி ப்ரபத்தி என நாலு வழிகள். அதில் கர்ம, ஞானம் என்பது கடைசியில் பக்தி அல்லது ப்ரபத்தியில் போய் சேர்க்கும். பக்தியோ அல்லது ப்ரபத்தியோதான் மோஷத்திற்கான சாதனம்.**

Four different paths described to reach the Lord. Karma, gnana, bhakthi and prapatti. Amongs these, karma and gnana yougas lead one to bhakthi or prapatti. Either bhakthi or prapatti is the means for moksham.

9-6 **கர்ம யோகம். முதலில், தான், தனது என்றில்லாது விதிக்கப்பட்ட நித்ய, நைமித்ய கர்மாக்களை செய்வது. பலனில் ஆசையின்றி இருப்பது. அத்துடன் சேர்த்து அனுஷ்டிக்க வேண்டிய விசேஷ கர்மம். இது பகவத் ஆராதநம், தபஸ், தாநம், யாகம் என பல வகைப்படும்.**

Karma yoga starts with wherein the performer has no ego of any kind like "I" and "mine". He performs the duties without any expectation on return. He does all the daily (nithya) rituals and reason-based (namithya) duties as prescribed by vedas. With that as base, he does other required rituals like bhagavad aaraadhananm, charity, constant contemplation, yagas etc.

9-7 **ஞான யோகம் என்பது சரீர ஆத்ம ப்ரமம் கழிந்து பகவானுக்கு விதேயனாய் இருக்கும் தன் ஜீவஸ்வரூபத்தை இடைவிடாது நினைத்தல்**

Gnana yoga is the one where the body-soul illusion is removed first. The chetana realizes that his soul is subservient to the Lord and then enjoys that soul as a body t othe bhagavan.

9-8 **பக்தியோகம் - பகவன் ஸ்வதந்த்ரன், ஸர்வ ஸேஷி என்று அவனை ஆசையுடன் இடைவிடாது, தைல தாரயாய் நினைப்பவன். வர்ண ஆச்ரம தர்மங்கள் இதன் அங்கங்கள்.**

Bhakthi yogi is convinced that Lord is the only one who is independent. Everything else depends on Him. They Perform service to Him. With that attitude always imprinted in his mind, he continuosuly contemplates about

Bhgavan without any interruption. He needs adhere to varna aasrama dharma.

9-9 **பக்தி செய்வர்கள் நான்கு வகை. இழந்த செல்வத்தை வேண்டுபவர். புதியதான செல்வம் வேண்டுபவர், கைவல்யம் வேண்டுபவர். பகவானையே வேண்டுபவர்.**

Four types of bhakti - One who wants to relcaim the lost wealth, one who pleads for new wealth, one wants to enjoy their own soul and finally the one who wants to perofrm kaimkaryam to the Lord.

9-10 **பக்தியோகம் என்பது எம்பெருமானை இடைவிடாமல் உயிர் பிரியும் வரை தியானம் செய்வது. இது மோக்ஷத்திற்கு நேர்உபாயம்**

Bhakthi yoga involve constant contemplation about the Lord till his death. This is direct means for moksham.

9-11 **ஸத் ஸங்கம் ஏற்பட்டு, பகவானிடத்து அன்பு பிறந்து, சாஸ்திரங்களை கற்று அறிந்து, தத்துவங்களை உணர்ந்து, கர்ம , ஞான யோகத்தை செய்து, அதன் பலனாய் தன் ஆத்மாவைக் காணப் பெற்றவன், மேலும் நித்யமான பகவத் அநுபவம் வேண்டி செய்வது பக்தி யோகம்.**

One gets acquainted with leanred scholars and those who follow rigorous rituals. Because ofthat he gets affectio ntowards the Lord. He elarns the scripts (saastras), understand the realities (tattva), perofrms karma and gnjana yogas and realizes about his own soul. Now he yearns to have enjoyment of the Lord permaently. Bhakthi yogam is for that purpose.

9-12 **இப்படி பக்தி யோகம் செய்பவன், பரம புருஷனாகிய எம்பெருமானை மோஷத்திற்காக வேண்டுவது பரபக்தி**

Bhagavan is the superior to anything. Requesting that Bhagavan to grant moksham is Parabhakthi.

9-13 **ஒரு நாள் காண வாராயே என ஏங்கி கிடக்க, பகவான் ஸாசஷாத்காரம் கொடுக்கையில் பரஞானம்**

When he crave for Bhgavan's direct appearance, one day Bhagavan will give him dharshan. That stage is paragnam.

9-14 **அவனனைக் கண்ட பிறகு ஆசை அதிகமாகி அவனன்றி ஒருசஷணமும் இருக்க முடியாது என்னும் துடிப்பு பரம பக்தி**

When Bhgavan appears in front of the Bhakthan, he disappears within a fraction of a second. After having that ecstatic experience, bhaktha becoems more restless and yearns further to see Him contantly. That stage is Parama bhakthi.

9-15 **பக்தி யோகம் என்பது முதல் மூன்று வர்ணத்தாருக்கு மட்டுமே. 4ம் வர்ணத்திற்கு இல்லை**

Bhakthi yoga can be done only by the first three varnas. Fourth varna is not qualified for this means.

9-16 **பொறுமை, ஞானம், ஜாதி, சக்தி - என இந்த நான்கில் ஏதேனும் ஒன்றும் இல்லாவிட்டால் அவன் பக்தி யோகம் செய்ய முடியாது.**

Patience on time to reach the moksham, required knowledge, caste I nwhich he is born, energy to complete the means are four criterions that determine who can do bhakthi yoga. TICE (Time, Intelligence, Caste, Energy)

9-17 **பக்தி யோகம் செய்பவன், இடையில் தன்னால் செய்ய முடியாத அம்சம் இருக்குமாகில் அதற்காக பகவானிடம் ப்ரபத்தி செய்கிறான். அந்த அம்சத்தில் பகவானே நின்று பக்தி யோகத்தை முடித்து தருகிறான்.**

If any of the required item can't be done by the Bhakthi yogi, he surrenders to the Lord. The Lord completes that item for him and thus his bhakthi yoga is completed.

9-18 **ப்ரபத்தி யோகம் செய்பவன் தன்னால் செய்ய முடியாத பக்தி யோகத்தில், பகவானே நீயே நின்று எனக்கு அதன் பலனைத் தர வேண்டும் என ப்ராத்திக்கிறான். பக்தி யோக ஸ்தானத்தில் பகவான் இருப்பதால் பகவானே உபாயம் ஆகிறான்.**

Prapanna who does the praptti understands his incapability to do bhakthi yoga and so requests the Lord to stand in that position in lieu of bhakthi yoga. Since Bhgavan completes that instead of bhkathi yoga, Bhgavan becomes the means in this approach.

9-19 **கர்ம, ஞான, பக்தி, ப்ரபத்தி என நாலு வகை மோஷ சாதனங்களை விதிக்கும் சாஸ்திரங்களில் பல வகையாய் சொல்லி இருப்பினும், இதன் ஸாரஸாரங்களை அறிந்தவன், கீதாசாரியனின் சரம ஸ்லோக உபதேசத்தின்படி, ப்ரபத்தியில் ஒன்றியிருப்பான்.**

There are four types of means to achieve moksham, namely karma, gnana, bhakthi and prapatti and sastras extensively deal with merits amongst them. But those who understand the essence of the essences, will have their mind fixated with the Charama sloka words uttered by Lord Krishna in the Bhagavad Gita and will be desire prapatti only.

9-20 (tag)

Chapter 10
ப்ரபத்தி யோக்யதா அதிகாரம்
Eligibility for Prapatti

10-1 **ப்ரபத்தி உபாயத்தை செய்பவனின் தகுதியைச் சொல்வது இந்த அதிகாரம்.**

This chapter discusses the eligibility criterion of a chetana who performs the means called Saranagathi.

10-2 **பக்தி, ப்ரபத்தி இரண்டிற்கும் பொதுவான தகுதிகள் சில - பலனில் ஆசை, சாஸ்த்திர அர்த்தங்களை அறிதல், அதை அனுஷ்டித்தல், அதில் விதிக்கப்பட்ட ஜாதி, குணம் இவற்றை பின்பற்றுதல்.**

First, there are some common requirements for both bhakthi and prapatti yogas - Desire on the reward, understand the meaning of the sastras, follow the sastras, adhere to the code prescribed in sastras about caste and character.

10-3 **இந்த இரண்டிலும் இச்சைதான் முக்யம். பலனில் ஆசை இருந்தால்தான் வழியைத் தேடுவான்.**

Primary eligibility criterion mentioned above is the desire on the reward. One needs to be desirious of a goal. Thenonly he will work on a means towards that goal.

10-4 **சரணாகதி எந்த பலனுக்காகவும் செய்யலாம். இங்கே பரம புருஷார்த்தமாகிய மோஷத்தை வேண்டிச் செய்வது.**

Complete surrneder can be done for any purpose. But here, we are interested in the surrender that is done to attain the eternal bliss of moksham.

10-5 **முமுக்ஷுவானவன் ஏதேனும் ஓர் உபாயத்தால் மோஷம் பெற விழைகிறான். அதற்கு உபாயம் பக்தியோ அல்லது ப்ரபத்தியோ. பக்தி யோகத்தில் தனக்கு தகுதியில்லாமையை அறிகிறான்.**

Mumukshu, the one who aspires for moksham is determined to get to moksham by some means. It is already stated that bhakthi or prapaat is the only means to aatain moksham. But, he understands his inabilities to perform bhakthi yoga.

10-6 **பக்தி யோக அதிகாரிக்கு தேவையானவை - பொறுமை, ஞானம், வர்ணாச்ரமம், சக்தி. இதில் ஏதேனும் ஒன்று இல்லாதவன் ப்ரபத்திக்கு அதிகாரி ஆவான்.**

Four criterions are mentioned to perform Bhakthi yoga. Time, Intelligence, Caste, and Energy (TICE). If an individual soul (chetana) fails in at least one of these qualifications, he is eligible for prapatti.

10-7 **மோஷத்திற்காக ப்ரபத்தி செய்பவனுக்கு மட்டும் உள்ள தனித்த அதிகாரம் ஆகிஞ்சன்யம், அநந்யகதித்வம்.**

So, the special criterion required for moksha prapatti is (Aakinchanyam) inability in other means and (Ananyagathithvam) strong dislike on other means or rewards.

10-8 **அநந்யகதித்வம் என்பது மறந்தும் புறம் தொழா மாந்தர் என பகவானைத் தவிர வேறு தெய்வங்களை நாடாமை. வேறு பலனை நோக்காமை. தான் வேண்டும் பலனும் அதற்கு உபாயமும் பகவானே என்று இருத்தல்.**

Ananyakgathithvam is when one prays only to Srimun Narayana and doesn't approach any other demi-Gods. He is convinced that Lord is the only means and ends for him. He is not interested in any other rewards.

10-9 **ஆகிஞ்சன்யம் என்பது வேறு உபாயம் செய்ய இயலாமை என நொந்தவரே. மேலே சொன்ன பக்தி யோகத்தின் நாலு அதிகாரங்களில்**

குறைந்த பக்ஷம் ஏதாவது ஒன்றாவது இல்லாமல் இருப்பது. இது 15 வகை.

Aakinchanyam, the inability to do anything is primarily inability to perform bhakthi yoga. As said earlier, any one deficiency of the possible sixteen combination of TICE.

10-10 **ப்ரபத்திக்கு காலம், ஜாதி போன்ற வரம்பு இல்லை. எல்லார்க்கும் எளிதானதால் ப்ரபத்திக்கு ஏற்றம். இனி உரைக்கை மிகை என்று ஒரு முறைக்கு மேல் அவசியமில்லை. பக்தியோ மோக்ஷ காலம் வரை விடாது செய்ய வேண்டும்.**

Prapatti has no restriction on which time to be done, and which caste etc. It is far superior because it allows everyone to participate. Prapaati is done only once unlike bhakthi yoga, where it has to be done continuously till moksham is granted.

10-11 **சக்தி இல்லாமை, ஞானம் இல்லாமை, சாஸ்திரத்தால் விலக்கல், கால தாமதம் பொறுக்காமை என்ற நான்கிலும் அதிர்ஷ்டத்தால் ஒன்றோ, இரண்டோ, முன்றோ, இல்லை நான்குமே ஒரு சேதனனுக்கு இருக்குமாகில், தனக்கு உள்ள அதிகாரங்களால் லக்ஷ்மீபதியை ஸ்வதந்த்ர ப்ரபத்தியாலே, மோக்ஷ பலனுக்காக, சந்தேகமின்றி ஆஸ்ரயிக்கிறான்.**

Among the four criterions - No energy, no knowledge, excluded by vedas, and intolerance of the delayed benefit - if by great luck, when a chetana satisfies one, two, three or four, then he can do prapatti as a means for moksha to the Lakshmipathi.

10-12 (tag)

Chapter 11
பரிகர விபாகாதிகாரம்
Accessories (angas) for prapatti

11-1 **பரபத்தியின் அங்கங்களை பிரித்து விளக்கும் அதிகாரம் இது.**

This chappter discusses the accessories (angas) of prapatti.

11-2 **ப்ரபத்திக்கு அங்கங்கள் ஐந்து. ஆநுகூல்ய ஸங்கல்பம், ப்ராதிகூல்ய வர்ஜநம், மஹாவிச்வாசம், கோப்த்ருத்வ வரணம், கார்ப்பண்யம்**

The five accessories are – Dresolve to act to the likings of the God and refrain from others, enormous faith that Bhgavan will protect, realization of the inability on other means and removal of ego and finally a formal expression to Lord to grant the salvation.

11-3 **இந்த ஐந்தும் எந்த சரணாகதிக்கும் பொது. மோஷத்திற்காக செய்யும் சரணாகதியில் இத்துடன் பல த்யாகம் என்ற ஆறாவதான அங்கமும் அவசியம். அதனால் மோஷ ப்ரபத்தி ஷடாங்க யோகம்.**

The above mentioned are common for any type of surrender. For the total surrender for Moksha, one needs to do the sixth accessory called surrendering the soul. That is why prapatti is called six component yoga.

11-4 **ஆநுகூல்ய ஸங்கல்பம் என்பது உன் அருளுக்கு இனிதான் நிலை உகந்தேன் என எம்பெருமான் திருவுள்ளத்திற்கு உகப்பாய் இருப்பதாய் தீர்மானம்.**

Aanukoolya sanklapam is the determination in heart that the prapannan from that moment onwards will do things that pleases the Lord.

11-5 **ப்ராதிகூல்ய வர்ஜனம் என்பது நெடுங்காலம் பிழை செய்து நிலை கழிந்தேன் என்று உணர்ந்து இனிமேல் எம்பெருமான் திருவுள்ளத்திற்கு மாறாய் நடக்காதிருத்தல் என எண்ணுவது.**

Praatikoolya varjanam is where the prapannan resolves that he will not do anything to displease the Bhgavan.

11-6 **இந்த இரண்டாலும் அபாய பரிஹாரம். ப்ரபத்தி வரைக்கும் முன் செய்த பாபங்களை பகவான் மன்னித்து தீயினில் தூசாகும் என பொசுக்குகிறான். பக்குவத்தை தந்து சேதனன் மேலே பாபங்கள் செய்ய விடாமல் தடுக்கிறான்.**

By the above two, the prapannan is avoiding the future dangers. All the sins from many janmas upto this point is burnt completely by the grace of the Lord. In the future, Bhgavan gives a proper mind so that prapannan will not do any more sinfu lactivites.

11-7 **கார்ப்பண்யம் என்பது பக்தி யோகம் செய்ய இயலாமையும், வேறு கதியின்மையும் அனுஸந்தித்து, அதனால் தன் கர்வம் நீங்கி, வருந்தி, தாழ்ந்து கண்ணீர் மல்கி, இழிந்த நிலையுடன் பகவானிடம் நின் அருளாம் கதியின்றி மற்று ஒன்று இலேன் என வேண்டுதல்.**

Kaarpanyam is where the prapannan expresses his utter inability to perform other means and realizes he does not have any other alternate other than surrendering to the Lord. By this self-effacing act his ego and pride are completely removed. With tears in his eyes, he makes a pleading request to the Lord expressing his pathetic situation.

11-8 **கார்ப்பண்யம் பகவானின் கருணையை தூண்டுகிறது. தவிர, சேதனன் தன் நிலையை உணர்ந்ததால், ப்ரபத்திக்கு பின் வேறு உபாயங்களை அணுக மாட்டான்**

Kaarpanyam induces the sympathy in Bhgavan's heart. Besides, the prapannan is now a realized soul. He will never seek other routes.

11-9 **மஹா விச்வாசம் என்பது உன் சரணே சரண் என்னும் துணிவு பூண்டேன் என்று எம்பெருமான் திருவடிகளை அடைந்த எனக்கு எம்பெருமான் மோக்ஷம் நிச்சயம் அளிப்பான் என்ற திடமான நம்பிக்கை.**

The great faith is when the prapannan has the unshakeable confidence that the Lord definitely will grant him the moksham.

11-10 **மஹாவிச்வாசம் ப்ரபத்தியில் உள்ள சந்தேகங்களை போக்கி, ப்ரபத்தியை நிறைவேறச் செய்கிறது. நிஸ்ஸம்ஸயா சுகமாஸ்வா என்று இருப்பான்.**

This faith removes all the doubts and fulfills the prapatti process. Rest of his life he will ive happily without even an iota of doubt.

11-11 **கோப்த்ருத்வ வரணம் என்பது மன்னிருளாய் நின்ற நிலை என்று பக்தி யோகம் போன்றவற்றை தாம் செய்ய இயலாதலால், பகவானே நீயே ரக்ஷகனாய், அந்த பக்தி யோக ஸ்தானத்தில் நின்று எமக்கு தீர்த்து, வானவர் தம் வாழ்ச்சி தர வரித்தேன் உன்னை என்று பலனைத் தருமாறு ப்ராத்தித்தல்.**

Goopthruthva Varanam is where the prapannan accepts his inability to perform other means like bhakthi yoga. He requests the Lord to be his protector and accept his praptti in lieu of bhakthi yoga and grant hime the moksham through his grace.

11-12 **கோப்த்ருத்வ வரணம் என்பதில் பகவானை வேண்டி பெறுதல். வேண்டாவிடில் பலன் தர மாட்டான். புருஷார்த்தம் என்பதே புருஷனை அர்த்திப்பது. உயர்ந்த புருஷார்த்தமாகிய மோஷத்தை அர்த்திப்பது இங்கே.**

Gothruthva Varanam is making a request for the mos=ksham. Sastras say one need to expressexplictly to receive the benefit. The word purushaartham itself means requesting the Lord.

11-13 **இந்த ஐந்து அங்கங்களை விபீஷணன், திரிசடை இவர் செய்த சரணாகதியில் காணலாம்.**

All the five accessories one can note in sarangathy (total surrender) performed by Vibheeshana and Thrijadai.

11-14 **ப்ரபத்திக்கு அங்கங்கள் ஐந்தும் உபயுக்தங்கள். இந்த ஐந்து அங்கங்களும் ஒன்று விடாமல் அவசியம். ஏதாவது ஒன்று குறைந்தாலும் ஆறாவதான ப்ரபத்தி எனும் அங்கி நிறைவேறாது.**

For prapatti all the five accessories are a must. Even lack of one of these will not bear the fruit of prapatti.

11-15 **மோஷ ப்ரபத்தியில் ஐந்து அங்கங்களுடன் சேர்த்து ஆத்ம நிஷேபம் என்னும் ப்ரபத்தி செய்ய வேண்டும்.**

Prapatti with an objective of moksha requires the sixth accessory called surrender of soul in addtion to the above mentioned five accessories.

11-16 **ஐந்து அங்கங்களிலும் மஹா விச்வாசம் நிலைப்பது அரிது. கீழ்கண்ட ஐந்து விஷயங்கள் அது நிலைப்பதற்கு உதவும்.**

Of the five required accessories, mahavisvasam or unshakeable fiath is rare. Following five truth will help the prapannan to stabilize his confidence.

11-17 **மறுக்கமுடியாமை. பகவான் உயர்ந்தவன். ஆயினும், பிராட்டி பரிவுரையாலே தாழ்ந்தவனாகிய ப்ரபன்னின் குற்றங்களை மன்னிப்பான். அதனால் சேதனன் அவனை நெருங்க முடியும்.**

Can't say no. Bhagavan is in the hghest status and the prapannan is full of sins coming from several births. Still with the recommendation of Maha Lakshmi he can approach Him and be confident that all sins will be wiped out.

11-18 **ஒழிக்க முடியாமை. ப்ரபன்னிடம் உள்ள ஒழிக்க முடியாத உறவால், ப்ரபத்திக்கு வசப்பட்டு பகவான் மோஷம் அளிக்கிறான்**

Can't get rid of. The relation between the Lord and the prapannan is eternal and can't be disconnected. Because of this, Bhgavan is pleased with the prapatti and grants moksham.

11-19 **பொங்கும் பரிவு. எம்பெருமான் விரும்பியதை எல்லாம் அடையும் சக்தி உடையவன் (அவாப்த ஸமஸ்த காமன்). வேறு ஒருவன் உபகாரத்தையும் எதிர் பார்ப்பதில்லை. தன் இயற்கை கருணையால் ப்ரபன்னனின் ப்ரபத்திக்கு பலன் அளிக்கிறான்.**

Erupting Compassion. Bhgavan has the ability to attain anything, at any time at any place. He does not require anyone's help on anything. Still, with His grace, he is pleased with such a small action of praptti and grants moksham.

11-20 **துணை பாராமை. எம்பெருமான் சாதரணமாய் சீக்கிரம் பலன் தராவிடினும், ப்ரபன்னனுக்கு வேறு துணை எதிர் பாராது அவன் வேண்டிய காலத்திலேயே தன் ஸங்கல்பத்தாலே பலன் தருகிறான்.**

No companion required. Bhagavan doe not require any other means in addition to praptti. Though, He has a reputation for granting dealyed rewards, in this case He grants moksham to prapannan as he wish.

11-21 **சேதனன் பேறே தன் பேறு பகவான் ஒத்தாரும் மிக்காரும் இல்லாதவன். ஆனால் ப்ரபன்னின் தரம் காணாது தன் ஸ்வாதந்த்ர்யம் போன்ற குணங்களால் பலனைத் தந்து அதையே தனக்கு பலனாக கொள்கிறான்.**

Bhagavan intrinsically thinks that any reward or benefit for the prapanna is actually the benefit to Him. Prapanna's qualification is not a standard, here. Bhgavan is the only one independent in the whole universe and with that power he rewards the prapannan. He thinks that reward is actually to Him.

11-22 **இந்த ப்ரபத்தி ஐந்தும், ஆறும் அங்கங்கள் உடையது, ஒரே முறை செய்யும் காரியம் என பாஞ்சராத்ரம் போன்றதில் உள்ளது. அதில் ஆநுகூல்ய ஸங்கல்பம், ப்ராதி கூல்ய வர்ஜனம் என்பது எம்பெருமானின் கட்டளையை மீறுவதால் ஒழிவு. மஹா விச்வாத்தால் பகவான் நிச்ச்யம் காப்பான் என்ற உறுதியான எண்ணமும், கார்ப்பண்யத்தில் மற்ற உபாயங்களை கைவிடுதலும். கோப்த்ருத்வ வரணத்தில் ப்ரபன்னன் வேண்டும் பலனைத் தானே தர வேண்டும் என்ற எம்பெருமான் எண்ணமும் உண்டாகிறது. இதை எல்லாம் எம்பெருமானே செய்துவிக்கிறான் என்பது சாஸ்த்ரத்தால் வந்த ஞானம். மோஷ பரப்த்திக்கு மட்டும் ஆறாவதான பலனில் பற்றின்மை (ஸாத்விக த்யாகம்) அவசியம்.**

This prapatti is told in Pancaratra saastram etc. as comprised of five and six accessories. In that Aanukoolya sankalpam and Praatikoolya Varjanam refers to the disaster when disobeys Bhgavan's commands. Mahaviswasam shows enormous faith that the Lord will defintely save us. Kaarpanyam shows the giving up of other means. Goopthruthva varanam is the formal request to grant the liberation. Because of all these compassion and sympathy occurs in Bhgavan's heart. The knwoledge acquired from sastras makes one to realize that all these are done by, through and for Bhgavan. For the moksha prapatti, the sixth accessory called "saatvika Thyagam" or detachement from benefits is essential.

11-23 (tag)

Chapter 12
ஸாங்க பிரபதநம்
Act of performing prapatti

12-1 **அங்கங்களை அறிந்தபின் இங்கே அங்கியைப் பற்றிய விவரம். ப்ரபத்தியின் அங்கி ஸ்வரூபம் ஆத்ம ஸமர்ப்பணம்.**

After discussing the various limbs (angas) of prapatti, the act of performing prapatti is elaborated here. The core of prapatti process is returning one's soul, the stolen property

12-2 **மோக்ஷ ப்ரபத்தியை அங்கங்களுடன் அனுஸந்திப்பதை நடாதூர் அம்மாள் அருளிச் செய்தது.**

- **எம்பெருமானே! உமக்கு உகவாவற்றை நெடுங்காலமாய் செய்தேன். அதனால் எனக்கு ஸம்ஸாரம்.**
- **இனி அவற்றை விலக்கி உமக்கு உகப்பானவற்றை செய்வேன்.**
- **உம்மை அடைய எனக்கு ஒரு கைம்முதல் ஒன்றும் இல்லை**
- **உம்மையே உபாயமாய் கொண்டேன்**
- **நீரே எமக்கு உபாயமாக வேணும்.**
- **அநிஷ்ட நிவ்ருத்தி, இஷ்ட ப்ராப்தி அடைவதிலும் எனக்கு ஒரு பொறுப்பும் இல்லை.**

Swami Nadadur Ammal has described the prapatti process along with all the required accessories. Oh! Lord, I have been all along doing things which contradicts to your wishes. I have determined to scrupulously eliminate those and will perfor mthings that are pleasurable to you. I am the lowest of low and don't have anything but to confess on your lotus feet on my inability. I am clarified now that you are the only means and request you to be that and grant me the moksha. I understand that I have no responsibility of my own future.

12-2 **இந்த அங்கியில் முன்று விஷயங்கள்.**

- **ஸ்வரூப ஸமர்ப்பணம். அஹம் ந மம: பகவானே நான் என்னும் இந்த ஆத்மாவும், என்னுடையவை என்பவையும் எல்லாம் உம்முடையது.**

- **ஆத்ம ரக்ஷா பர ஸமர்ப்பணம் மத் ரக்ஷண பரம் ந மம: உமக்கு உரிமையான இந்த ஆத்மாவை காக்கும் பொறுப்பும் உன்னுடையது".**
- **பல ஸமர்ப்பணம் மத் ரக்ஷண பலம் நம: இதனால் வரும் பலன்கள் எல்லாம் உன்னுடையது.**

In this act of prapatti, three main points are emphasized. First one is to surrender one's soul. Oh! Lord, Whatever I call as " I and me" and things to which I cliam to be the owner, in fact are your belongings. Secondly, since you are the owner, I entrust the responsibility of the protecting them to you. And lastly, I dedicate the results of all actions to you, Lord.

12-3 **இம்மூன்றில் ஆத்ம ரக்ஷா பர ஸமர்ப்பணம் மோக்ஷ ப்ரபத்திக்கு அவசியம். மோக்ஷ பக்திக்கு மற்ற இரண்டும் மட்டுமே.**

Amongst the three, Athma raksha bhara samarpaanan, dedicatign the responsibility of protection is applicable only for prapatti done for moksha. For the bhakthi route, the other two alone are sufficient.

12-4 **காக்கும் பொறுப்பை ஸமர்பிப்பது என்பது எந்த பலனை வேண்டி செய்யும் ப்ரபத்திக்கும் பொது. ஆனால் மோக்ஷ ப்ரபத்திக்கு அத்துடன் ஸ்வரூப, பல ஸமர்ப்பணம் அவசியம்.**

Entrusting the responsibility of protection is essential for any type of prapatti. But for prapatti done for moksha, it requires addtionally surrendering one's soul and the results of all actions.

12-5 **இந்த அங்கியை அனுஸந்திக்கும் முறை.**

- **ஸ்வதந்த்ரனான, ஸேஷியான பகவான் தன் பலனாய், தானே தன் ஸங்கல்பத்தாலே என்னை காக்கிறான்**
- **நான் அவன் வசம். அவனுக்கு ஸேஷன். மற்ற ஒருவனுக்கும் இல்லை. எனக்கும் இல்லை.**
- **இயற்கையில் எனக்கு உரிமை என்பது ஒன்றுமில்லை**
- **என்னுடையவை என நினைப்பவற்றை சுதந்திரமாய் காக்கும் திறமையோ, தகுதியோ எனக்கு இல்லை.**

- **என் ஆத்மாவும், என்னுடையவை என்பவையும், அதை காக்கும் பொறுப்பும், அத்தால் வரும் பயனும் எல்லாம் அவனதே**

The act of prapatti is done like this

- Oh! Lord you are the only one independent and master for everything.
- You protect me according to your own free will and for you're your own benefit.
- I belong to only to you and I serve only you and noone else.
- In fact, I am not the owner of anything.
- I can't even protect by myslef indepdently the things which I imagine to be the owner.
- My soul, the protection of it and the results of the its deeds are all yours and yours only.
-

12-6 **ஐந்து அங்கங்களுடன், ஆசாரிய பரம்பரையை த்யானித்து, த்வயம் அல்லது மற்ற மந்திரத்தை கொண்டு ஸ்வரூப, பர, பல ஸமர்ப்பணம் செய்வதே மோஷ ப்ரபத்தி.**

With the above mentioned five parts, with the meditation of the acharya lineage, and with the Dwayam or any appropriate mantra, one surredenders soul, responsibility and results durign the process of prapaatti.

12-7 **இதை அனுஸந்திக்கும்போது ஸாத்விக த்யாகம் அவசியம். அது கர்த்ருத்வ த்யாகம், மமதாதியாகம், பல தியாகம், பல உபாயத்வ தியாகம் என்ற நாலு.**

While performing prapatti, one needs to be aware of Saatvika Thyagam, humble sacrifice. Four parts in this. Ownership Sacrifice of the action, performer sacrifice, results sacrifice and the sacrifice of the means for the objective.

12-8 **நான் செய்கிறேன் என்னும் கர்த்ருத்வம்,**
எனக்காகவே செய்கிறேன் என்னும் மமதா,

**இத்தால் அடைவது எல்லாம் எனக்கே எனும் பலன்,
அதற்கு நேர் உபாயம் என் செயலே என்னும் பல உபாயம்,
என்ற நான்கையும் விட வேண்டும்.**

(Karthruthvam) ownership ego. When one thinks he is actually performing the action.
(Mamatha) Performer ego. When he thinks that "I do it for my own purpose".
(Phalan) Result-oriented ego. When he thinks that the effect of the action is going to benefit only him.
(Phala upaaya) Ego of the means to fetch the results. Finally when he thinks that his action is the direct cause for the result.

12-9 **வில்லைக் கொண்டு அம்பை எய்பவன் செய்யும் காரியம் க்ஷணகாலமே ஆயினும் அதன் ஆயத்தம் பெரிது என்றது வேதம்.**

When an archer shoots an arrow, it is only a task of fraction of a second. But the preliminaries like threading, aiming, holding tight, focusing etc. are require enormous detail and concentration.

12-10 **இப்படி ப்ரபத்தி செய்யுங்கால், சரீரம் கழியும்போது மோஷமும், மீதி நாட்களில் அபராதமிலா கைங்கர்யமும் வேண்டுவர் நிபுணர்.**

When the experts do prapatti as described above, they request the Lord to grant him moksham at the end of this life and also request to guide him to so that he can perform error-free service.

12-11 **ப்ரபத்தி முறை நாலு. அளவு உடையார் ஸ்வநிஷ்டர். அதன் உரையே கொண்டவர் உக்தி நிஷ்டர். வளவு உரை தந்தவன் அருளே மன்னிய மா தவத்தோர் ஆசாரிய நிஷ்டர். களவு ஒழிவார் எமர் என்ன, இசைந்தவர் பாகவத நிஷ்டர்.**

Four types of Prapatti procedure - directly self-requested (svanishtai), repeating the words of the acharyan during the process (ukthi nishtai), Acharyan performing the prapatti on his behalf (aacharya nishtai), and

finally a pure and blessed prapannan does the prapatti (bhagavatha nishtai) for the aspirant.

12-12 **இந்த நாலில் ஏதாவது ஒன்றை முமுக்ஷு செய்தே ஆக வேண்டும்.**

The aspirant (mumukshu) must have to perform any one of this.

12-13 **குதிரை, தேர், தேரோட்டி என வேதங்களில் சொன்ன தம் ஸ்வாபாவங்களையும் அதற்கு தகுந்த செயல்களையும் உடைய தத்துவங்கள் மூன்று. அதில் முயற்சி என்பது இரண்டிற்கு. அதிலும் எவருக்கும் உட்படாத ஸ்வதந்த்ரன் என்பது ஒன்று. சோம்பேறியான இந்த ப்ரப்ந்நன் எம்பெருமானால் ஒப்புக் கொள்ளப்பட்ட பொறுப்பு, பயன் இவற்றில் தனக்கு ஏதும் ஒரு பொறுப்பிலாது ஆகிறான்.**

Vedas describe the principles as ACE (Achit, Chit and Eswaran -sentient, nonsentient and the Lord) and give example of chariot, horse and the driver. They have their own intricate nature and actions. Among those, only two can exert the action called effort. And only one of the three is independent. The liberated soul (prapannan) has no responsibility or burden whatsoever of things which he has already surrenderd to the Lotus feet of the Lord and accepted by Him.

12-14 **எம்பெருமான் சோம்பரை உகத்தி போலும்.**

It seems the Lord loves only the lazy people (idlers).

12-15 **(tag)**

Chapter 13
க்ருத க்ருத்யாதிகாரம்
One who has Completed all the "must do" tasks

13-1 **கடமை முடிந்ததாலே கவலை கழிந்தது. அதைச் சொல்வது இந்த அதிகாரம்.**

As the requirements are completed, so the worries are flown away. This chapter deals with that.

ப்ரபத்தி செய்தபின் ஒரு சேதனன் செய்ய வேண்டிய கடமைகள் எல்லாம் செய்து முடித்ததால் கவலையற்று களிக்கும் நிலையை விவரிப்பது.

After the prapatti, the liberated soul feels unworried since all the required duties expected from him have been successfully accomplished.

13-2 **கடமை செய்து முடித்தவன் க்ருத க்ருத்யன்/க்ருதார்த்தன்.**

One who has executed all the mandatory duties is called an accomplished person (the kruthakrythyan).

செய்ய வேண்டியவற்றை செவ்வன செய்து முடித்தவன் க்ருத க்ருத்யன்.

13-3 **க்ருதார்த்தனுக்கு மோக்ஷோபாய பூர்த்தி.**

Kruthakrithyan has fullfilled the means for the moksha.

எம்பெருமானிடம் உமதடிகள் அடைகின்றேன் என்று ஒரு கால் உரைத்ததால் எம்பெருமானும் இனி உரைக்கை மிகையான இரக்கத்தாலும் என்று இதுவே போதும் என்கிறான்.

Completion of the required means has been done. Since it is required to perofrm prapatti only once and the Lord, out of his magnanimous mercy is very kind to grant the moksha for a single utterance, the parapannan need not require to do anything else.

13-4 **க்ருதார்த்தனுக்கு சுகம் சுமை நீங்கியதாலே.**

Kruthakrithyan is peaceful and happy because he is relieved from all the load.

மோஷத்திற்காக சரணாகதி செய்தவன் இனி மோஷ உபாயமாய் செய்ய வேண்டியது ஒன்றும் இல்லை என கவலை இல்லாமல் நிர்பரமாய் இருப்பது. அந்திம ஸ்ம்ருதி, ப்ரம்மநாடி ப்ரவேசம் எல்லாம் பகவான் ஸங்கல்பம்.

One who has surrendered to the Lord with moksham as the ultimate objective (Prapannan) has no need to perform anything else for the same result. He doesn't fret but enjoys the rest of the life. Last minute prayer (Anthima smruthi), soul getting out through bramma nadi (Brahmanaadi pravesam) are all Bhagavan's discretion.

13-5 **"ஸர்வ பாபேப்யோ" என்பதால் க்ருதார்த்தனுக்கு நிர்பயம்.**

Kruthakrithyan has no fear because of Lord's words "Remove all of the sins from you"

கண்ணனின் அநிஷ்ட நிவ்ருத்தி சரம ஸ்லோக வார்த்தை கொண்டு நிர்பயமாய், நிர்பரமாய், சந்தேகமின்றி இருப்பது.

Lord Krisha has mentioned in His charama Sloka in Bhgavad Gita that whoever surrends on His feet, he will burn away all the sins and will award him with the ultimate bliss. Relying on those words, a surrenderer can lead a life which is worry-free, burden-free and finally result-free.

13-6 **"மோஷயிஷ்யாமி மாசுச" என்பதால் க்ருதார்த்தனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. முயற்சி ஒன்றுமின்றி புதையல் கண்டாற்போலே.**

Prapannan is incredibly happy on the Lord's words "Will reward you with moksha, don't despair". Just like a treasure found acidentally.

ஒரு முயற்சியும் இல்லாமல் புதையல் கிடைத்தாற்போலே மோஷயிஷ்யாமி மாசுச என்று இஷ்ட ப்ராப்த்தியான கைங்கர்ய பலனை பகவான் நிச்சயம் தருவான் என்ற மகிழ்ச்சி.

Prapannan need not be scared. He should rejoice just like finding a huge treasure incidentally without requiring any effort on his part. Lord Krisha in His Geetha said, that he will burn away all the sins and in addition that He will award the moksha, the ultimate bliss of performing permanent service (kaimkaryam) to Srimun Narayana

13-7 **தேவ, ரிஷி, பித்ரு கடன்கள், இவனுக்கு இல்லை**.

He has no ritual burden for angels (deva), sages (rishi) and forefathers (pitru).

ரிஷிகள், தேவர்கள், பித்ருக்கள் கடன்கள் வேதாத்யனத்தாலும், யாகத்தாலும், புத்திரனாலும் கழியும் என்றாலும் ப்ரபன்னனுக்கு அவை பாதிக்காமல் ப்ரபத்தியாலேயே கழிந்தன. ஆகவே சரணாகதனை யாகம் செய்தவன், விண்ணோர், ராஜா என்று கொண்டாடுவர்.

A person is born on this earth along with loads of debts. He is indebted to sages (rishis), angels (Devas) and forefathers (pithrus). He pays them off by studying vedas, performing rituals and becoming father of a son.
That is why - prapannan is called as the one who performed great rituals, Celestial person and the king.

13-8 **ஆஞ்ஞா கர்மாவில் அந்ய தேவதையைச் சொன்னாலும் ப்ரபன்னனின் பரமைகாந்தியத்திற்கு பழுதில்லை. எம்பெருமான் ஆணையான நித்ய**

நைமித்ய கர்மாக்கள் இவனுக்கு புருஷார்த்த பலனைச் சேர்ந்தவை. மோஷத்திற்கு உபாயமில்லை.

Even when the prapannan utters the names of demi-Gods during the mandated rituals (aagjna karma), he is still flawless. Performing those mandated rituals are final fruit for the prapannan and not the means for moksham.

நித்ய நைமித்ய கர்மாக்களை தவறாமல் அதற்குரியவர் செய்தே ஆக வேணும். இது பகவான் ஆணை. ஆனால் அது மோக்ஷத்தை தரும் உபாயமில்லை. ப்ரபத்திக்குபின் செய்யும் ஆஞ்ஞா கர்மா பகவத் கைங்கர்யம். பிற தேவதைகளைச் சொன்னாலும் அவற்றிம் அந்தராத்மாவவன பகவானையே குறிப்பதால் அதைச் சொல்வதில் இவனுக்கு தோஷம் இல்லை.

The daily rituals (nithya Karma), which are mandated by vedas are all done by prapannan, merely to please the Lord. They don't reward him directly in any way. Question may arise on the consequence of when a prapannan may have to utter and bow to the different demi-gods during the daily rituals. Since all of them finally goes back to Srimun Narayana, it is not a flaw.

13-9 **முறையான கைங்கர்யங்களால் ப்ரபன்னனுக்கு பூலோகத்திலேயே` புருஷார்த்த ப்ராப்தி.**

Prapanna achieves eternal bliss on earth through executing proper service.

ப்ரபன்னன் வர்ணாச்ரமாத்திற்கு உட்பட்ட எல்லா கைங்கர்யங்களை செய்து மகிழ்கிறான். அத்தால், புருஷார்த்த ப்ராப்த்தியை பூலோகத்திலேயே அனுபவிக்கிறான்.

By performing all the rituals according to the caste (varna) and the chosen life-style (aasrama) and enjoying them, one attains the ecstasy of moskha on the earth itself.

13-10 **ஆகிஞ்சன்யத்தால் முன்னே சோகித்து ப்ரபத்தி காரியம் முடிந்தது. பின்னே "சோகம் தவிர்" என்பதால் வருந்தாது அது பூர்த்தியாயிற்று.**

Due to his inability, he was sad earlier and that caused him to do prapatti. Now, that prapatti is completed because he is not sad strengthened by Lord Krishan's words "don't despair".

ப்ரபத்திக்கு முன் இருந்த தன் இழிவான நிலையை எண்ணி வருந்தினான். அந்த நினைவே ப்ரபத்தி செய்யும் எண்ணத்தை தந்தது. ப்ரபத்திக்குபின் மனம் வருந்தலாகாது. அப்படி வருந்தினால், வருத்தம் போவதற்கு செய்த ப்ரபத்தில் பூர்ணமில்லை. எம்பெருமான் வாக்கில் நம்பிக்கை இல்லை என்று ஆகும். அத்தால் ப்ரபத்தி நிறைவேறாது.

Prapannan should never forget his pathetic and sad status before surrendering to the Lord. After surrender, he should never despair for anything. Otherwise, it will be construed as his distrust on the words of the Lord. In summary, sadness before praptti and happiness after the surrender is the symptom of the liberated soul who has completed all the required tasks.

13-11 **எம்பெருமான் வாக்கு "நிஸ்ஸம்ஶய: ஸுகமாஸ்வ" என்பதை எம்பெருமானார் கத்யத்தில் அருளியபடி இவன் இருக்க வேணும்.**

"Without any doubt, live happy" are the words of the Lord as described by Swami Ramanuja. Kruthakrithyan has to follow that.

பகவத் ராமானுஜர் சரணாகதி கத்யத்தின் கடைசியில் ஸ்ரீரங்கநாதன் சொல்வதை விவரிக்கிறார். மற்ற உபாயங்களை விட்டு, பொறுப்பு ஒன்றும் இல்லாது, கவலையின்றி, மகிழ்ச்சியுடன் ப்ரபன்னன் வாழக்கடவன்.

Swami Ramanuja in his Saranagathy Gadyam reiterates the words of Lord Sri Ranganatha. Discarding all other means, without any iota of responsibility, without any shadow of doubt, without any worries, the prapannan should live the rest of the life.

13-12 **பகவான் சோம்பரை உகத்தி போலும். சோம்பர் என்பது உபாயாந்தரங்களில் ஈடுபடாதவன்.**

It seems the Lord loves only the lazy people. Lazy, here means the prapannan's detached attitude on other means.

"காம்பு அற தலை சிரைத்து உன் தலைக் கடை இருந்து வாழும் சோம்பரை உகத்தி போலும்" (*திருமாலை -38*) *என்று உபாயந்தரங்களில் பற்று விலகும்படி தலயில் உள்ள சுமைகளைப் போக்கி வாழ்கின்ற ப்ரபன்னர்களை உகப்பவன் என்றார். தனக்கே வாழாமல் எம்பெருமானுக்கே வாழ்பவர் சோம்பர்.*

In Thirumaalai, Azhvar says "Bhagavan loves those lazy prapannas who completely avert all other means like a lazy person and stay steadfast on prapatti alone ". Lazy are the ones who don't live for themselves but for Bhgavan.

13-13 **ப்ரபன்னர்கள் அல்ப, அஸ்திர பலனை நோக்காது எஞ்சிய நாள் கர்மாவின் பலனே என்ற நினைவுடன் சாஸ்திரத்தை உணர்ந்து, அதனை காப்பர்.**

Prapannas, without caring much for the temporary low level pleasures, live out the rest of the life with an understanding that it is a payback to their previous karma and thus protect the sastras by following it.

பிறவிக்கடலை கடக்க பகவானிடம் பரந்யாஸம் செய்து, அழிகின்ற சுகத்தைத் தரும் காம்யார்த்த காரியங்களைத் தகாதவை போல் விலக்கி, எஞ்சிய வாழ்நாள் முன் வினை வரிசைப்படி நடக்கும் என நன்கு உணர்ந்த ப்ரபன்னர்கள் பகவத் கட்டளை என்கிற அணையை இந்த ஸம்ஸார லோகத்தில் காப்பர்,

To cross the ocean of birth/death cycle, one surrenders to the Lord. Prapannan will eliminate low level pleasures as the actions that are outlawed. Instead, he understands that the rest of his life is dictated by his past good deeds/sins (karma). Those liberated souls like a dam will protect Lord's commands in this world.

13-14 (filler)

Chapter 14
ஸ்வநிஷ்டாபிஞ்ஞானம்
Traits that indicates the proper mind of the surrenderer

14-1 **பிரபன்னன் தன் மன உறுதியை அறியும் அடையாளங்களைச் சொல்வது இந்த அதிகாரம்.**

This chapter deals with the symptoms through which a prapannan can confirm his mental resolve.

பிரபன்னனின் சந்தேஹம், பயம் இவை நீங்கி மகிழ்ச்சியுடன் க்ருத கருத்யனாய் இருக்கும் நிலையை கீழே சொன்னது. நிஷ்டை என்பது ஆழ்ந்த அறிவு, ஸ்திரமான நிலை, நிச்சயமான ஞானம். ப்ரபன்னன் தனக்கு ஏற்படும் அடையாளங்களால் அதை அறிந்து கொள்வதைச் சொல்வது இந்த அதிகாரம்.

In the last chappter the unwavering, unscared status of the kruthakrythyan was discussed. The word nishtai means of a stable state of mind, definite knowledge. The clues through which a surrendered can be ascertained of this this is dealt in this chapter.

14-2 **க்ருதக்ருத்யனாய் இருக்கும் ப்ரபன்னன் ஸ்வநிஷ்டனாயும் இருப்பான். ஸ்வநிஷ்டை என்பது தன் ஸ்வரூபம், உபாயம், பலன் இவற்றின் தெளிவு. அது மோக்ஷத்தைவிட இனிமையானது.**

Prapannan who isa kruthakrythyan will also understands clearly about himself (be a svanishtan). Understanding self means stable and focused state on self nature (svarupa), means (upaya) and the results (pala). This fixed knowledge will be even sweeter than moksham itself.

ப்ரபன்னன் தன் ஸ்வரூபம், உபாயம், பலன் இவற்றில் மனம் ஒன்றி, திடமான அறிவுடன் இருக்க வேண்டும். தன்னிடம் அது உள்ளதை அறிந்து கொள்வது மோக்ஷத்தைவிட இனிமையானது.

A Prapannan keeps his focussed and stable mind on the knowledge of innate nature, means and the results. Confirming that has them is sweeter than the moksham itself.

14-3 **அந்நிஷ்டைக்கு ஆகாயத்தைப்போல் மறைக்க முடியாத பாபக் குவியல்களை பொசுக்கும் பெருமை**

That eminent state can burn out sins which are widespread like the sky.

அந்நிஷ்டையின் பெருமையால் நிறைக்க முடியாத, மறைக்க முடியாத ஆகாயம் போன்ற தோஷங்களின் கூட்டங்களை விலக்கி திருந்துகிறான்.

Space is large which can't be filled or hidden. So is our sins. A prapannan eliminates all those flaws and comes out as a redeemed soul.

14-4 **ஸ்வரூப நிஷ்டை என்பது தேஹாத்ம ப்ரமம் தெளிந்து, பகவானின் சரீரமான அனைத்து வஸ்துக்களும் அநுகூலம் என்று உணர்ந்து, தான் அகிஞ்சனன், பாரதந்திரயன், ஸர்வமும் அவன் அளித்தது என்ற உண்மை அறிவது.**

A prapnnan who is free of body-soul illusion, understands every single thing is the body for the Lord, is always beneficial, understands his inability, depdence, and knows all the rewards are blessed by Him. Perceptive of this fact is mental assurance of nature (Svarupa nishtai).

ப்ரபன்னன் தன் ஆத்ம ஸ்வரூபத்தை புரிந்து கொண்டவன்.

1. *சரீர ஆத்ம ப்ரமம் தெளிந்தவன். ஆத்மா என்பது உடம்பைவிட வேறானது.*
2. *எல்லா வஸ்துக்களும் பகவானின் சரீரம். அவை எல்லாம் நமக்கு சாதகமே என்கிற நினைப்பு*
3. *ஜீவனின் லக்ஷணம் ஸேஷத்வ பாரத்ந்திரியம் என்று புரிந்து கொண்டவன்.*
4. *ஸர்வமும் பகவானின் வசம். எல்லாம் அவன் அளித்தது*

A surrendered claims a firm knowledge on the innate nature (Svaroopa nishtai) is when he understands the reality of his soul. He has conquered

the illusionary knowledge of body-soul. He is convinced that soul is different from body. Soul is atomic. It is flawless. It is there only to serve the Lord.

14-5 **ஸ்வரூப நிஷ்டையின் அடையாளங்கள். உடலிகழ்ச்சியில் உதாசீனம், ஆத்ம தோஷம் கண்டவனிடத்து அளவிலா கருணையும் நன்றியும் காட்டுவது, மனம் மாறாது, மகிழ்வது.**

Disregard to any mockery of the body, displaying unlimited mercy and appreciation to those who find faults on the soul, maintaining a stable mind and being happy are the symptoms of mental assurance.

ஸ்வரூப நிஷ்டை தனக்கு உள்ளதை அறிய உதவும் அடையாளங்கள்

1. *உடலில் குறை சொன்னால் அது தனக்கு சம்பந்தமில்லாத ஏதோ ஒரு அசித்தை சொல்வதாக அப்புறப்படுத்துவது.*
2. *தன் ஆத்மாவை குறை சொல்பவன், தன் பாபத்தை வாங்கிக் கொள்கிறானே என வருந்தி அவனிடம் அளவிலா கருணை காட்டுவது*
3. *தன் ஆத்மாவின் குறைகளை சொன்னவனிடம், அதை ஞாபகப்படுத்தியதற்கு நன்றி தெரிவிப்பது*
4. *பிறர் தனக்கு தீங்கு செய்வது, அவரவர் வினைக்கேற்ப எம்பெருமானால் அளித்த பலனே என மனம் கோணாது இருப்பது*
5. *தன் குறைகளை பிறர் சொல்வதால் தன் பாபங்களை பகவான் கழிக்கிறான் என பநினைத்து மகிழ்வது*

Clues for the firm mind on the innate nature of the soul (Svaroopa nishtai)

- When someone insults the prapannan's body, he brushes off since it is about an inanimate object not related to him.
- He feels very regretful and compassionate to those who harm him. Because in turn the sins are passed to the doer.
- When someone points out his defects, the prapannan feels very grateful for reminding them, which he forgot.
- Any harm done to him won't borther him since he realizes that it is the divine action due to everyone's karma.
- When someone talks about his shortcomings, he feels that some of his sins are off loaded.

14-6 **உபாய நிஷ்டை என்பது எம்பெருமானே முக்யமான உபாயம், செய்த ப்ரபத்தி வ்யாஜம், இது தவிர கடமை ஒன்றுமில்லை. பகவானிடம் விசுவாசத்துடன் எதிர்பாராது இருப்பது.**

Mental assurance of the means (Upaya nishtai) is – Understanding that Bhagavan is the primary means, prapatti is a tiny reason, nothing else is required, requires a firm faith on the Lord and live without any expectation.

உபாய நிஷ்டை என்பது எம்பெருமானே முக்யமான உபாயம். செய்த ப்ரபத்தியாகிற ஒரு அல்ப சாக்கைத் தவிர செய்ய வேண்டியது வேறில்லை, பகவானிடத்து அசைக்க முடியாத நம்பிக்கையுடன் வேறு எதையும் எதிர்பாராது இருப்பது.

Mental assurance of the means is – Realizing Bhagavan is the only means. Though praptti is done, it is only a minor reason. Other than prapatti nothing else is required. Having an unshakeable confidence on the Lord and live without any expectation.

14-7 **உபாய நிஷ்டையின் அடையாளங்கள். பகவத் ரக்ஷகத்தில் ஸ்திரம், மரணம் கண்டு மருளாமை, மனம் தேற்றல், வேறு உபாயம் தேடாமை, பகவத் ப்ராப்தியே பரம புருஷார்த்தம் என்னும் அறிவு.**

Firm belief on Lord's protection, not terrified by death, comforted mind, not seraching for other means, Lord's blessings is the ultimate bliss attitude are the symptoms for mental assurance on the means.

உபாய நிஷ்டை தனக்கு உள்ளதை அறிய உதவும் அடையாளங்கள்

1. *ஸர்வேச்வரனான பகவான் ஒருவனே ரக்ஷகன். மற்றவரோ, தானோ இல்லை என்ற நம்பிக்கை.*
2. *இறுதிநாளைக் கண்டு அஞ்சாமல் மரணத்தை மலர்ந்த முகத்துடன் விருந்தினர் போல வரவேற்றல்.*
3. *பகவான் ரக்ஷகன் என்பதால் மனம் தெளிந்து நிலை பெறுதல்*
4. *ப்ரபத்திக்கு பின் அதே பலனுக்காக வேறு உபாயம் நாடாமை*
5. *அநிஷ்ட நிவ்ருத்தி, இஷ்ட ப்ராப்த்தி எல்லாம் பகவான் பொறுப்பு என்று கவலையின்றி இருத்தல்*

Clues for fixed mind on the proper means (upaya nishtai)

- Prapannan has unshahkeable faith that the Lord is the sole protector. No one else or themselves can protect them.
- He is never afraid for the last days of his life and faces the death with a smile greets it like a guest.
- Having a stable mind because Lord will protect him.
- He will not seek any other means for the same result.
- He realizes that removing the imperfections and blessing with eminence and rewards are all Lord's responsibility and nothing of his whatsoever.

14-8 **பல நிஷ்டை என்பது ப்ராரப்த கர்மாக்களை கழித்து, உயர்ந்த பகவத் கைங்கர்யமே ஜீவனின் பயன் என்று இருப்பது.**

Mental assurance of the results is to cleanup the continued (Praruptha) karma and having a firm faith that service to Lord is the essence of being a sentient.

புருஷார்த்த நிஷ்டை என்பது பலன் கொடுக்கத் தொடங்கிய ப்ராரப்த கர்மாக்களை கழித்து பகவத் கைங்கர்யத்தை விடாது செய்வதே உயர்ந்தது. ஜீவனின் இருப்பே அந்த கைங்கர்யத்திற்கே

Mental assurance on the fruit (Purshaartha nishtai) is to spend the praraptha karma so that uninterrupted service to the Lord can be performed. Realizing that the mere existance of jeevan is to perform service to the Lord.

14-9 **உடலை காப்பதில் ஊக்கமற்று, வினையின் விளைவே வாழ்க்கை என்ற நினைவுடன், அறத்திற்கு புறம்பல்லா அனுபவத்தை அவனருள் என ஆனந்தித்து, சுகதுக்கங்களில் சலனமற்று, பகவத் கைங்கர்ய துடிப்புடன் வாழ்வதே பல நிஷ்டையின் அடையாளங்கள்**

Living a life without any anxiety about existance, accepting that present life is the outcome of the past karma, enjoying worldly pleasures appropriately since they are blessings of the Lord, unwavered neither by happiness nor

sorrow, strong yearning towards service to the Lord are the symptoms of mental assurance on the results (pala nishtai).

பல நிஷ்டை தனக்கு உள்ளதை அறிய உதவும் அடையாளங்கள்

1. *சரீரம் சாயும்வரை அதை தாங்குவதில் கவலையின்மை. எப்படி மீதி காலம் தள்ள போறோம் என கவலை வேண்டாம்.*
2. *நடப்பவை முன்வினையின் பயனாலே. எம்பெருமானின் ஸங்கல்பத்தாலே என திடமாய் வாழ்வது. பிறப்பதோ, இறப்பதோ பகவானின் திட்டம், அதுபோலே நடத்துவதும்.*
3. *பகவத் ஸங்கல்பத்தால் விளைந்த சுகத்தை கர்மா கழிவதாய் நினைத்து சாஸ்திர ரீதியாய் தன் முயற்சியின்றி அனுபவித்தல்*
4. *கிட்டாத பொருளுக்கு அலையாமலும், வீணான கர்வம் இல்லாமலும், இன்பம், துக்கம் இரண்டிலும் மனம் மாறமலும்*
5. *பகவத் சிந்தனையுடன் கைங்கர்யத்தில் ஒரு துடிப்புடன் வாழ்வது.*

Clues for the firm mind on the fruits for the soul (Pala nishtai)

- Prapannan should not worry about means or quality of life. "How we going to live the rest of life" is an unecessay worry beyond one's abilities.
- One is rewarded in this life based his previous deeds. Everything goes according to the Lord's plan. He is the one gives us birth and death. Then why we worry about sustenance alone as if we have the pwer to control it?
- Worldly pleasures are rewarded by Bhagavan. Go thorugh them since enjoyment or suffering is merely an adjustment to the karma balance sheet.
- Keep a steady mind on happiness or sorrow. Don't serach for things that are inaccessible. Give up the ego.
- Livea life based on contemplation about the Lord and strogn craving towards service to Him.

14-10 **இந்நிலை கண்டவனுக்கு பாகவத அபசாரத்தில் பீதி. பகவத் கைங்கர்யத்தில் ப்ரீதி. மற்றதில் வேற்றுமை இல்லை.**

One who achieved this status is afraid of wrongdoing to Bhagavan's devotees (Bhagavatha apacharam), always cheerful on doing service to the Lord and indifferent to the rest.

இந்த நிஷ்டையுடையவனுக்கு, ப்ரஹ்மவித்தான பாகவதரிடம் படும் அபசாரம் தவிர வேறு ஒன்றும் பயம் தராது. பகவத் கைங்கர்யம் ஒன்றே ருசிக்கும். அதுவே பரமானந்தம்.

For the prapannan who has this state of solid mind, nothing will fright him except any errors caused to the pure devotees of the Lord. Ony service to the Lord will make him happy.

14-11 **எஞ்சிய நாட்கள் எம்பெருமானால் ஏற்படுத்தப்பட்ட அதிர்ஷ்டம் என தலையில் கொண்டு கனவு போன்ற இந்த இடைநிலையில், தத்வ ஹித புருஷார்த்தங்களை தன் நிஷ்டையில் அறிந்து மகிழ்வர்.**

Prapannan cherishes that the rest of the life as a fortune blessed by the Lord. In this intermediate dream-like state, he follows the nature, means and ends (Tattva, hitha, purushartham) according to the scripts and will be pleased by identifying that he has them in his actions.

கனவு என்பது தூக்கம், விழிப்பு இவற்றின் இடைநிலை. அதுபோல ப்ரபன்னின் மீதி வாழ்நாள் ஸம்ஸாரம், மோஷத்திற்கு இடையில். ஏதோ ஒரு பாக்யத்தால் எம்பெருமான் ஏற்படுத்திய இந்த இடைநிலையை தத்துவ ஹித புருஷார்த்தங்களை தன் நிஷ்டையாலே அறிந்து எம்பெருமானால் அளிக்கப்பட்ட திருப்பரிவட்டம் என மகிழ்ந்து மீதி வாழ்நாளை கழிப்பர்.

Dream is a stage between sleep and being awake. Similarly, prapannan's rest of the days on the earth is between regular birth/detah cycle (samsaaram) and moksha. He cherishes that state blessed by the Lord through his knwoledge on innate nature, means and result (svaroopa, upaaya and pala) and have a fixed mind (nishtai) on that. He enjoys thoe days like the ribbon worn (tiruppari vattam) aroud the head to honor great people.

14-12 **இங்கனே, அஷ்டாக்ஷரம் அறிவிக்கும் ஸ்வரூப உபாய பல நிலையை தம்மிடே கண்டவர் பூலோக நித்யஸூரிகளே.**

Thus, as revealed by ashtakshara, those who have the confirmed mental assurance on the nature, means and results within themsleves are earth living eternals (nithyasoori)

திருமந்திரம் உரைக்கும் ஸ்வரூப, உபாயம் புருஷார்த்ததில் நிஷ்டையுடையவர், தமக்கு தகுந்த நித்ய நைமித்ய கர்மாக்களுடன், சாஸ்திர வழியில்லாத மற்றவைகளை தகாதவை என விலக்குவர். இந்த ஸ்வநிஷ்டைகளின் அடையாளங்களை தம்மிடத்தே கண்டவர், பூமியில் வாழும் நித்ய ஸூரிகளே.

Tirumantram clearly describes reality, means and objective (Tattva hitha, pursushaartham). Prapannas who have firm grasp of the knowledge on them will abide by the rules prescribed by vedas (saastras). Those who found these clues in them are the the eternals (nithyasoori) on this earth.

14-13 (tag)

Chapter 15
உத்தர க்ருத்யாதிகாரம்
Duties of the prapannan after prapatti

15-1 **ப்ரபன்னன், ப்ரபத்திக்குபின் செய்ய வேண்டிய கடமைகளைச் சொல்வது இந்த அதிகாரம்.**

This chapter deals with the duties of the prapanan post prapatti.

தத்துவங்களை அறிந்து சரணாகதி செய்தவன் எஞ்சிய காலம் பூமியில் இருக்கும் நிலையைப் பற்றி கீழே இரண்டு அதிகாரங்களில் சொல்லி அவன் செய்ய வேண்டிய காரியங்களைச் சொல்வது இங்கே. எது செய்ய வேண்டும், எது கூடாது என்பதை வலியுறுத்துகிறது.

Last two chapters dealt about lifestyle of a prapannan who has understood the tattvas and completed the total surrdenr to the Lord. This chappter deals with the duties and actions required out of that prapannan. It empahsizes the taks he must do and the ones he should refrain from.

15-2 **பிரபன்னனின் பிற்கால கடமைகள் எட்டு - பகவத் ஸேவை, ஆசார்ய அறிவுரை, பரமைகாந்திகள் பரிச்சயம், தன்னிலை உணர்தல், புலனடக்கம், அர்ச்யாவதார ஆசை, பகவானிடம் நன்றி விசுவாசம், ஆசாரியனிடம் நன்றி உணர்தல்.**

Tasks for post praptti is eight - Service to the Lord, acharyas' advice, relation with enlightened souls, understanding the self, organ control, idol worship, grateful to the Lord, grateful to acharyas.

ப்ரபன்னன் செய்ய வேண்டிய கடமைகள்
- *பகவானிடத்து - கைங்கர்யம், அர்ச்யாவதார ஈடுபாடு, நன்றி உணர்தல்*
- *ஆசாரியனிடத்து - காலக்ஷேபம் செய்தல், நன்றி உணர்தல்*
- *பாகவதரிடத்தில் - பரமைகாந்திகளுடன் தொடர்பு*
- *தன்னிடத்தில் - தாழ்மை உணர்தல், இந்திரிய நிக்ரஹம்*

Important duties of the prapannan

- To lord - Service, attraction to bhgavan's idol from (Archyavathara) and show gratitude
- To Acharyas - Learn from them, show gratitude
- To Bhagavathas - Move with uplifted souls (Paramaikanthis)
- To himself - Realize hisr lowness, organ control.

15-3 **ப்ரபன்னன் எங்கும் பொறுப்பிலாது, எல்லை நாள்வரை அபராதமிலா கைங்கர்யத்திலும், ஆழ்வார், ஆசாரிய திவ்ய சூக்திகளிலும் மகிழ்ந்து, மற்றவரையும் மகிழ்விப்பன்.**

Prapannan without any responsibility burden anywhere, in performing flawless service to the Lord and His devotees makes himself and others happy, till the end of his life.

க்ருத க்ருத்யனான ப்ரபன்னன், காணும் பூமியிலும், காணாத மோஷத்திலும் பொறுப்புகள் எல்லாம் நீங்கி, எல்லை நாள்வரை குற்றமில்லா வாழ்க்கையுடன், மன மகிழ்ச்சிக்காக ஸ்ரீபாஷ்யத்தை பெரியோரிடம் கேட்டறிந்து, ஆழ்வார்களின் திவ்யமான அருளிச் செயலை எப்போதும் அனுபவித்து, மற்றவரையும் ஆனந்தப் படுத்துவான்.

The one who has surrendered to the Lord is called "Krutha krthyan", means that he has completed all that needs to be done. He does not bear any responsibility for anything for the rest of his life here or in moksham. But on the rest of the days on this earth, he will be studying SriBashyam for mental peace. He also will listen to the leders on Azhvar's prabhandam. He not only study them but also will make others happy in propagating them.

15-4 **உனக்கே நாம் ஆட் செய்வோம் என்று பகவானுக்கும் அவன் அடியவருக்கும் அடி பணிந்து, உகந்து, சாஸ்திர முறையிலே, தனக்கேற்றவாறு உள்ளம், உரை, உடலால், வழுவிலா அடிமை செய்து மகிழ்வது கைங்கர்யம்.**

"Will do service only to You" should be the pronouncement of prapanna. He performs all the unblemished service to the Lord and His devotees, by

demonstrating obeisance to them, with a pleasing attitude, as prescribed in sastras, within his limits, in mind, words and in action.

- *யாருக்கு - ப்ரபன்னன் பகவானுக்கும் அவன் பாகவதருக்கும் மட்டுமே கைங்கர்யம் செய்வான். மற்ற செல்வந்தரையோ, அரசனையோ அல்ல.*
- *எப்படி - மனோ, வாக், காயை எனகிற த்ரிகரணங்களாலும், சாஸ்திர முறையிலே உகந்து, வாசித்தும், வழி பட்டும், கேட்டும். பூசித்தும் பணி செய்வன். மருந்து குடிப்பது போல் அன்று. தாஸ்ய பாவத்துடன் செய்வன்.*
- *எதைக் கொண்டு - நல்ல முறையில் தானே சம்பாதித்த வஸ்துவுடன் செய்வன். புஷ்பம், ஸந்தனம், தேன் போன்ற உபசாரங்களால்*
- *எது மாதிரி - ஒரு பத்தினிப் பெண் தன் திருமாங்கல்யத்தை காப்பது போலே*

- To whom the service? - Lord Narayana and His devotees only. Not to any rich person or King etc.
- How? - With mind, words and in action. He should be delighted In reading hearing, talking, praying, all sorts of Lord related things in a service attitude just like one drinks milk because of his liking and not because it is a medicine.
- With what? - Any item what he earned by himself in a righteous way. Flowers, garland, chandanam, honey etc.
- Like what? – Similar to how a perfect wife protects her marriage thread (ThirumangalyamMarriage thread).

15-5 **கைங்கர்யம் செய்வது, தான் மகிழ. பகவானை மகிழ்விக்க. உகந்த பகவான் மேலும் கைங்கர்ய ப்ராப்த்தியை அருள. மோஷ பலனுக்கு இதுவே முன்னோடி என்று அறிய.**

Performing service is to make himself happy, make the bhagavan happy, make the satisfied Lord to shower further service opportunities and to achieve the mindset that this is a precursor to moksham.

- *கைங்கர்யத்தால் முதலில் தன் ஸ்வரூபத்தை அறிகிறான். அதனால் மகிழ்ச்சி. கறும்பு தின்ன கூலியா?*

- *பகவான் உகப்பது அவனுக்கு செய்யும் பணியே.*
- *உகந்த பகவான் மேலும் ததாஸ்து என அருளுகிறான்.*
- *மோக்ஷ கைங்கர்யத்தின ஆரம்பமாக செய்கிறான்.*

- By doing service, the prapannan understands the nature of his soul (Svarupa). He is happy once he understands that.
- He knows that the Lord is happy with the service done by Jeeva souls.
- Once the Bhagvan is delighted by this service, he blesses to have more opportunities to serve Him
- Prapannan knows eternal bliss starts on the earth itself by doing the service and continues into moksham.

15-6 **பகவத் ப்ராப்தி பூமியிலே பூர்த்தியாவது சாஸ்திரத்தாலே. பகவத் அனுபவ தெளிவும் ஆசையும் உண்டாக சாஸ்திர ஞானம் வேணும்.**

Enjoyment of Bhagavan on the earth is completes only through sastras. By learning them prapannan develops a clear understanding and an yearning towards Bhagavan.

ப்ரபத்தியோ முடிந்தது. மோஷமோ நிச்சயம். இனி என்ன என்று வீணாய் காலத்தை கழிக்கலாகாது. சாஸ்திர ஞானம் சம்பாதிக்க வேண்டும். அது இருந்தால்தான் கர்மலோகத்தில் பகவத் அனுபவம் நிறைக்கும். ஆசை பிறந்து, வளர்ந்தது, க்ரமமாய் அனுஷ்டிக்க, சாஸ்திரத்தை கற்று, தெளிந்து கடைசிவரை பின்பற்றுவன் ப்ரபன்னன். பகவத் கைங்கர்யத்திற்காக ஞானத்தை வேண்டுவதில் தவறில்லை.

Prapannan should not think "why should it matter on how I live now when the surreder has been completed and the result of moksham has been guaranteed". Instead, he should presevere to learn the sastras. Without sastras his enjoyment of the Lord won't be completed to the full extent.

15-7 **ஆசாரியனிடம் அடி பணிந்து தன் அஞ்ஞானத்தையும், அசக்தியையும் உணர்ந்து, சாஸ்திரார்த்தங்களை ப்ராத்தித்து பெற வேண்டும்.**

Prapannan understanding his lack of knowledge (agjanam) and abilities (asakthi), bows down to the Acharya's feet and prays to teach him the meaings of the scripts (Saastraartha).

மேலையாரை வணங்கி, விரோதமின்றி சாஸ்திரங்களை முறைப்படி அறிய வேண்டும். சாஸ்திரத்தை அரிய தனக்கு உள்ள அடிமட்டமான தகுதி ஞானம் இவற்றின் நிலையை உணர வேண்டும். சந்தேகங்களைக் கேட்டு தெளிய வேண்டும்.

Prapannan needs to respect elders and learn sastras in a formal manner. He needs to remember his lowness and ignorance at all times. He needs to ask doubts and get cleared.

15-8 **ஞானத்துடன் அனுஷ்டானமும் அவசியம். பரமைகாந்திகளுடன் பழகி அவர் வழியை இயன்ற வரை பற்ற வேண்டும்.**

Knowledge coupled with practice (Gjana and anushtaana) is essental. Association with self-realized elders (Paramaikanthis) and try to follow their lifestlye as much possible, is required

ஸத் ஸங்கம் ஸாதகம். பரமைகாந்திகள் நல்ல வழியை காட்டிக் கொடுக்கின்றனர். அவர்களுடன் நெருங்கி பழகி அவரை பின்பற்றி தனக்கேற்ற குற்றமில்லாத அனுஷ்டானங்களையும், இதர கைங்கர்யங்களையும் நிறைவாக செய்ய வேண்டும். அவர்களின் பார்வையும் வார்த்தையும் நல்வழிக்கான அருமருந்து

Good company is essential. Relation with enlightened souls (Paramaikanthis) is a must. This would help a prapannan to understand his status and follow the required tasks without any flaws.

15-9 **பொருள் சேர்ப்பது, கொடுப்பது, அனுபவிப்பது சாஸ்திரத்திற்கு சம்மதமாய் இருக்க வேண்டும்.**

Earning, donating and enjoying of wealth needs to abide by the satras.

சாஸ்திர நியதியில் வாழ்க்கை அவசியம். பொருளை சரியான முறையில் சம்பாதித்து, நல்ல வழியில் செலழிக்க வேண்டும்.

Prapannan needs to lead the life according to the sastras. His earnings should be fair and reasonable and also spend them in a virtuous way.

15-10 **புலன்கள் ஒன்றும் வென்றிலேன், பாவமே செய்து பாவியானேன், நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன், என் நான் செய்கேன், என்று தன்னுடைய கார்ப்பண்ய நிலையை என்றும் மறக்காது, கர்வமின்றி ஆகிஞ்சன்ய அனுஸந்தானத்துடன் இருக்க வேணும்.**

Azhvars' verses say - "I haven't conquered any of my organs", "Became a sinner by doing only sins", "Haven't done any ritual or acquired intricate intelligence" "What can I do".
These remind the helpless pathetic nature of the prapannan. Despite of his superiority in knoweldge or in actions, if any, he should never disrespect other devotees and should behave egoless.

ப்ரபன்னன் தன் குறைகள், தாழ்வுகளை மறக்கக் கூடாது. நைச்ச்யானுஸந்தானம் அவசியம். ந தர்ம நிஷ்டோஸ்மி என்பதை எப்போதும் அநுஸந்திக்க வேணும். தான் எவ்வளவு ஞானத்தில் அனுஷ்டானத்தில் உய்ர்ந்து இருந்தாலும் பிறரை அவமரியாதை செய்யக் கூடாது.

Many Aazhvars' verses say - "I haven't conquered any of my organs", "Became a sinner by doing only sins", "Haven't done any ritual or acquired intricate mind" "What can I do". Looking at those, one should always remember his pathetic situation. However superior he on his knwoeldge or actions, he should never disrespect others and should behave egoless.

15-11 **அநாதி காலமாய் பகவத் கைங்கர்யத்தை இழந்ததில் சோகிக்காது கண்ணன் கனிந்து உரைத்த அவதார ரஹஸ்யங்களில் மனம் நெகிழ வேண்டும்.**

Prapannan should never despair on the past Infinte years where he was lost without any service to the Lord. Instead, he should rejoice on the

"Secrets on Lord's incaranations" (Avatara Rahasyam) as explained by Lord Krishna.

அநாதி காலமாய் தன் தகுதி அற்ற நிலைமையும் ஞான சூன்யத்தையும் நினைத்து வருந்தக் கூடாது. பகவத் கீதையில் கிருஷ்ணன் சொன்ன அவதார ரஹஸ்யங்களை நினைத்து மகிழ வேண்டும்.

Prapannan should never be sad about his days before the complete surrender when he was ignorant and inelgible for any means. That was then. Now, he should be happy, carefree and enjoy reading Lord Krishna's "avatara rahasyam" as narrated in Bhagavat Gita.

15-12 **"ஆவி திகைக்க ஐவர் குமைக்கும் சிற்றின்பத்தை" விலக்க புலன் அடக்கம் அவசியம். இந்திரியங்களை உரிய விஷயத்தில் செலுத்த வழி ஸாத்விக உணவு. முறையான கர்மாக்கள்.**

"While soul is startled desperately, the five immerse into lust" as Nammazhvar put it, control of organs is vital. For that good type of food (Satvic) and performance of mandated rituals are necessary.

- *ஸாத்விக ஆஹாரங்களை புஜிக்க வேண்டும்.*
- *இந்திரிய நிக்ரஹம் மிகவும் தேவை.*
- *அஜ்ஞா, அநுஜ்ஞா கைங்கர்யங்களை செய்ய வேண்டும்.*
- *புலன்களை ஒடுக்குவது அஸாத்யம். அவற்றின் திசையை திருப்பலாம்.*
- *ஸாத்விக உணவும் ஸத் ஸங்கமும் அதற்கு காரணம்.*
- *பிள்ளை உறங்காவில்லி தாஸர் பக்கலில் காணலாம்.*

Eat satvic foods onlt, the food that nurture goodness in mind. Limit the passion and control of organs is important. Perform service conforming to sastras prescribed as mandatory and optional.

15-13 **ப்ரபன்னனுக்கு ஸதா பகவத் த்யானம். அதிலும் அர்ச்சாயவதார திவ்ய மங்கள விக்ரஹத்தின் ஸௌந்தர்ய, லாவண்ய, ஸௌஸீல்ய ஸௌலப்யாதி குணங்களில் தனி அபிமானம். அமலனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே.**

Prapannan contemplates about Bhagavan constantly. He is enchanted especially with the idol forms (archya) and its holiness, beauty, attraction and accessibility. Like Thirupaanazhvar puts it "After seeing You Sri Ranaganatha, let these eyes don't see anything else".

- பகவத் சிந்தனை, அதிலும் அர்ச்சாயாவதாரத்தில் ஈடுபாடு அவசியம்.
- அந்த திருமேனி மேன்மையும், எளிமையும், அடியவரின் அஞ்ஞானத்தை போக்கும் மருந்தாகவும், மனத்தை கவர்ந்து இழுக்கும் ஸௌந்தர்யத்தையும் நினைத்து ஆனந்திக்க வேண்டும்.
- மந்திரம், பிம்பம் இவற்றில் அர்ச்ச்யாமூர்த்தி ஷாட்குண்ய பரிபூர்ணன்.
- "தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே" என்று ஆஸ்ரிதர்கள் உகந்த ரூபத்தில் உள்ளான்.

One needs to contemplate about Lord. Attachment to Lord, especially idols in temples and home is important. They are the supreme form of Bhgavan's beautiful body and easily accessible to anyone. They are the medicine that removes the devotee's ignorance, magnet that pullss their heart and gives them pleasure that can't be described.

15-14 **பகவானே பெற்ற தாய், தந்தை. அவனுடைய ப்ரத்வ, ஸௌல்பய காருண்யத்திற்கு ஈடு இணையில்லை என்றும், அவன் அருளும் நித்யானந்தத்தை நினைத்து நன்றியுடன் இருப்பவன் ப்ரபன்னன். அவனுக்கு ஸமர்பித்த பொருளே பிரபன்னனுக்கு போக்யமானது.**

Prapannan recognizes that Bhagavan is the only mother, father and all kinds of relation. His supremacy, accessibility and grace are above and beyond. He is grateful for the eternal bliss. He offers everything to the Lord first, before his consumption.

பாதுகைகளை வணங்கிய பின்னே ராஜ்ய பரிபாலனம் செய்த பரதனைப்போலே எம்பெருமானுக்கு ஸமர்பித்த பின்னே தான் அனுபவிக்க வேண்டும்.

Bharatha always paid his homage to Sri Rama's padukas first, before ruling the country. Similarly, one should always offer any food first to the Lord before consuming.

15-15 **திருமாங்கல்யத்தை காக்கும் பத்தினிப் பெண் போலே இக் காரியங்களை காலம் கழியும் வரை காக்க வேண்டும்.**

Prapannan should be careful and safeguard all the services required out of him on this earth, just like the marreid woman protects her marriage thread (thirumangalyam).

15-16 **பகவத், பாகவத, ஆசார்ய கைங்கர்யமே விசேஷம்.**

Service to the Lord, His devotess and acharyas are exceptional.

பகவத் கைங்கர்யத்தின் எல்லை பாகவத கைங்கர்யம். தன் அடியாருக்கு செய்யும் ஸேவையை பகவான் தனக்கே செய்ததாய் நினைத்து மகிழ்கிறான்.

The ultimate service to Lord is doing service to His devotees. In fact, Bhagavan enjoys service done to His devotees more than service done to Him. Service to the Lord, Devotees and Acharyas are essential.

15-17 **ஆசாரியனிடத்தில் நன்றியுடனும் பகவத் பாகவத கைங்கர்யத்தில் ருசியுடனும் காத்திருந்து செய்ய வேண்டும்.**

Prapannan should exhibit his gratitude to the Acharyas and the fondness towards Bhgavath, bhagavatha kaimkaryam.

15-18 **இந்த ஆனந்தம், ஞானம், ருசி எல்லாவற்றிகும் அடிப்படை ஆசாரியன் அருளே. அனைத்திற்கும் ஆதி காரணம் எம்பெருமானின் நிர்ஹேதுக க்ருபையே.**

Aptitude in service and quest for knowledge are all exposed by acharya's blesings. The root cause for everything is the unconditonal benevolence of Bhagavan towards all the living thing In the universe.

15-19 **செய்ய வேண்டியதில் ப்ரதானம் ஆசார்யனின் பேருபகாரத்தை நினைத்து மகிழ்தல், த்வயானுஸந்தானம், பாகவத கைங்கர்யம். விலக்க வேண்டியதில் ப்ரதானம் அல்ப சுகங்கள், தற்புகழ்ச்சி, ப்ரஹ்மவித அபசாரம்.**

"Do"s for the prapannan are remembrance of acharya's great rescue, dvaya recitation and service to His devotees. "Don't"s are indulge in cheap pleasures, self-boasting and insulting the devotees.

ப்ரபன்னன் முக்யமாய்

- *மனத்தால் நினைக்க வேண்டியவை. ஆசார்யன் உபகாரம், மறக்க வேண்டியவை உலக விஷயங்கள்*
- *வாயால் சொல்ல வேண்டியது ஸதா த்வயம். செல்லக் கூடாது தற்புகழ்ச்சி*
- *முக்கரணங்களாலும் விலக்க வேண்டியது பாகவத அபசாரம். மகிழ வேண்டியது பகவத் பாகவத கைங்கர்யம்.*

Prapannan's important duties

- In mind. Always think of the Acharya's blessings. Forget about the worldly pleasures.
- By word. Chant Dvayam. No self-praise and boasting
- By mind, word, or by action eliminate any disrespect to the bhagavathas, enjoy performing service to them

15-20 **தகாத ஆசை, சாஸ்திரங்களில் சந்தேகம், தேவதாந்தர ஸம்பந்தம், தானே கர்த்தா, தனக்கே பலன் எனும் அகந்தை இந்த ஐந்தும், பாகவத ஸேவையில் ஈடுபடும் ப்ரபன்னனுக்கு வராது.**

A prapannan involved with devotee service will never be afflicted with five offenses - inappropriate desires, doubts In sastras, connection with demi-Gods, assumtion of action ownership, and benefit ownership.

பாகவத ஸேவையில் மனம் மகிழ்ந்தவராய் இருக்கும் ப்ரபன்னர்களுக்கு இந்த ஐந்து குறைகளும் வராது

- தகாத காரியங்கள் செய்வதில் ஆசை
- சாஸ்திரங்களில் சந்தேகம்
- இதர தெய்வங்களின் தொடர்பு
- தானே தன் சுகத்திற்கு காரணம் எனும் அகந்தை
- தன் சுகங்களின் பயன் தனக்கே எனும் எண்ணம்

Those prapannas who enjoys Bhagavatha kaimkaryam will not have the following five shortcomings

- Itching to do actions barred in sastra
- Doubts about sastras
- Connection with demi-Gods
- Ego of thinking that all his pleasures are due to his efforts
- Ego of thinking all his pleasures for his own enjoyment only

15-21 **அன்பான மனைவி கண்ணாடியில் தன்னைக் காணும்போது, தன் அருமைக் கணவன், தானே பின் வந்து நிற்பதைக் கண்டு மகிழ்வதைபோலே. ப்ரபத்தியான உயர்ந்த செல்வத்தை பெற்ற விவேகிகள், ஆசார்யர்களால் நன்கு உபதேசிக்கப்பட்ட திருமந்திர ரத்ன கண்ணாடியில், சேஷனாகிய தன்னுடன் சேஷியான எம்பெருமானை ஸாத்விக த்யாகத்துடன், வாசனையுள்ள மலர்கள் போன்ற கைங்கர்யத்துடன் கண்டு மகிழ்வர்.**

A passionate wife while dressing herself in front the mirror will be delighted to see her loving husband, by himself come and stand behind her. Similarly when a rich prapannan looks into the ashtakshara mirror, he is delighted to see himself with his master Lord Narayana. To please that Lord he would dress up with fragrances and perform service to Him.

15-22 (filler)

Chapter 16
புருஷார்த்த காஷ்டை
The utimate objective's final frontier

16-1 **பகவத் கைங்கர்யம் பூர்த்தி பாகவத கைங்கர்யத்திலே. அதைச் சொல்வது இந்த அதிகாரம்.**

Service to Lord is complete only with service to His devotees. How Lord's service extends to the His devotees is dealt here.

ப்ரபன்னனுக்கு புருஷார்த்த பலனாகிய பகவத் கைங்கர்யம் பூமியிலேயே அரம்பம் என போன அதிகாரத்தில் சொல்லி அந்த கைங்கர்யம் மலர்ந்து, பாகவதவ கைங்கர்யத்தில் பூர்த்தி ஆகிறது என்றது இங்கே.

Prapannan, the one who has surrendered everything to the Lord, need not wait till reaching moksham to perform service (kamikaryam) to the Lord. He can start reaping that reward, while living on earth (Prakrithi) itself. Lord's service blosoms into service His devotees.

16-2 **ப்ரபன்னனின் பலனாகிய பகவத் கைங்கர்யம், பாகவதர்கள் வரை பரவ வேண்டியதால் புருஷார்த்தத்தின் எல்லை பாகவத கைங்கர்யம்.**

Prapannan's ultimate aspiration is to perform service to the Lord. And that has extend till His devotees. So, the final frontier of the ultimate bliss is the service to His devotees.

ப்ரபன்னனின் பரம ப்ராப்யம் பகவானுக்கு செய்யும் கைங்கர்யம். அத்தோடு நிற்காமல் அவனிடத்தில் பக்தி உள்ளவர்களிடமும் கைங்கர்யம் செய்ய வேண்டும். ஆகவே பாகவத கைங்கர்யம் புருஷார்த்த காஷ்டை எனப்படும் எல்லை நிலம்.

The ultimate case of final objective (the fartherest extent of purushaorttham) is the service to the Bhagavathas

16-3 **பகவான் உகந்தவற்றையே செய்ய வேணும் என்பதால் அவன் உகப்பது அவனடியவர் பணியே. ஆகவே பாகவத கைங்கர்யம். சரீரம் உகப்பில் ஆத்மாவிற்கும் உகப்பு.**

Prapannan should engage only in activities that pleases the Lord. And what makes Bhagavan happy? Service to His devotees only. When the body is delighted, so is the soul

ப்ரபன்னன் பகவானுக்கு மகிழ்ச்சி தரும் ககரியங்களளைசெய்ய வேணும் என்பதால். சரீர சுகத்தை, ஆத்மாவும் அனுபவிக்கிறான் என்னும்போது பாகவதர்களாகிய சரீரம் சுகத்தை அடையும்போது, ஆத்மாவான எம்பெருமானும் அனுபவிக்கிறான்.

Bhagavan who is the soul for everything enjoys when his devotees, who are His mere body enjoys.

16-4 **"என்னைபோலே என்னடியவரும் பூஜைக்கு உயர்ந்தவர்", "ஜ்ஞாநிர் ஆத்மைவைவ மே மதம்" என்று அவனே சொன்னதால் பாகவத கைங்கர்யம்.**

My devotees, just like me are the highest caliber who deserve to be prayed.

பாகவதர்களை வணங்கி வழிபட்டு அவர்களுக்கு பணி செய்வதே எம்பெருமானுக்கு உகந்தது. என்னடியாரிடம் பக்தி உள்ளவரிடம் எனக்கு அதிகமான ஆசை என்கிறான் பகவான்.

Devotees are Lord are worthy of praise, obedience and prayer since the Lord is delighted in those. Lord says he loves more, the people who loves His devotees.

16-5 **ஸர்வ ஸ்வதந்திரன், ஸ்வாமி, ஸ்ரீயப்பதியான ஸ்ரீமந் நாராயணன் எல்லா சேதனா சேதனங்களையும் தனக்கு ப்ரியமான தன் அடியவருக்கு அடிமையாக்குவதால் பாகவத கைங்கர்யம்.**

Sriman Narayana, the only all autonomous and powerful Lord, makes all sentient and non-sentient beings to be subservient to His devotess.

ஸர்வசுதந்திரனான எம்பெருமானும் தனக்கு செய்யும் பணியை தன் அடியவருக்கு செய் என்கிறான். உலகத்தில் ஒருவன் தனக்கு உள்ளவற்றை தன் விருப்பப்படி செய்வது நடைமுறை வழக்கு. அரசன் தன் அணிகலன்களை தனக்கு விருப்பப்படி தருகிறான்.

The all independent Lord, directs any service done to Him, towards His devotees. Bhagavan is the owner of any service offered to Him. The owner in turn can do anything with it. Just like a king owns a lot of ornaments. He can take anything and give it to anyone he wishes.

16-6 **"அடியார்க்கு என்னை ஆட்படுத்த விமலன்", "நின் திருவெட்டு எழுத்தும் கற்று உற்றதும் உன் அடியார்க்கு அடிமை" என்பதால் பாகவத கைங்கர்யம் ப்ரமாண ஸித்தம்.**

Authoritative scripts (pramaanams) acknowledge the importanve of service to devotees. Azhvars say "That flawless Lord puts me into the service of His devotees", "After learning Your eight lettered mantra, what I grasp is that I am a slave to Your devotees".

பாகவத கைங்கர்யத்தை எல்லாப் ப்ரமாணங்களும் (ஸ்ருதி, ஸ்மிருதி, இதிஹாஸ, புராணங்கள்) ஒப்புக் கொண்டு உள்ளன.

Service to devotees has been accepted by all the noble scriptures (Vedas, smrithis, ithihasas and puranas)

16-7 **பகவத் ஸேஷத்வ ஞானம் அளிப்பது பாகவத ஸேஷத்வம். அல்ப ஆசைக்கு தாஸராவது ஸ்வரூப விருத்தம். உயர்ந்த புருஷார்த்தமான எம்பெருமானுக்கு உகந்த பாகவத ஸேஷத்வத்தில் திளைப்பது திருமந்திரத்தின் தாத்பர்யம்.**

Servitude to Bhgavan enlightens a chetana and leads him to devotee service. Serving someone for cheap pleasures is against the nature of the soul. The ultimate bliss is reach the Lord and indulge in actions that please

Him. Nothing else would please Him more than pleasing his devotess. That is the intricate meaning of Tirumantram.

16-8 **ராஜாவின் ப்ரீதிக்காக ராஜகுமாரனை கொஞ்சுவது உலக வழக்கு. அதை சாஸ்திரத்துடன் சேர்த்து பார்க்குங்கால் பகவானை அடையும் வழி பாகவதரை அடைவதே. ஆகவே பாகவத ஸேஷத்வம்.**

To earn the affection of the king cajoling the prince is a common pratice. The way to reach the Lord is through His devotees can be conclusively derived by both sastras and by worldly practice.

16-9 **பாகவதர்களின் உயர்ந்த குணங்களில் ஈடுபட்டு அவருக்கு கைங்கர்யம் செய்ய துடிப்பது இயற்கை. ஆகவே பாகவத ஸேஷத்வம்.**

The pristine qualities of the bhagavan's devotees attract others and that would stimulate and lead them to perform service for them.

16-10 **பகவானுக்கு மட்டுமே அடிமையான சேதனன், அவன் அடியவருக்கு அடிமையாவதில் முரண் இல்லை. அது சேதனனின் எஜமானனாகிய எம்பெருமானின் உரிமை, அதிகாரம், விருப்பத்தால் விளைவது.**

Being subservient only to Bhagavan does not contradict with the subservience ce performed to His devotees. Lord is the master of sentient being and as such he has ownership, right and coomand over what he could and needs to do.

சேதனன் அநந்யார்ஹ ஸேஷன். பகவான் ஒருவனுக்கே தாஸன். அவன் பாகவதருக்கு சேஷன் ஆகலாமா என்றால் ப்ரபன்னும் அவன் கைங்கர்யமும் பகவானுக்கு உரிமை. எஜமானன் தனக்கு செய்யும் பணியை தன்னடியவருக்கு செய் என சொல்லி மகிழ்கிறான்.

While the prapannan has to be loyal only to the Lord, how come the service to devotees can be justified? Since Bhagavan is the boss, He has the right to dispense his belongings In any which way He wants it.

16-11 **ஆராதனத்தில் உயர்ந்தது விஷ்ணு ஆராதனம். அதனினும் உயர்ந்தது ததீயர் ஆராதனம். பாகவத கைங்கர்யம் சுத்தியைத் தரும்**

Of all the prayers, prayer done to Lord Vishnu has the highest merit. The one surpasses that is the prayer to His devotees. Service to His devtoess provide puirty.

16-12 **அறிவினால் சேதனன், அசேதனத்ததைவிட வேறுபட்டு பாகவத கைங்கர்ய ஆனந்தத்தில் லயிக்கிறான்.**

Sentient has the intelligence and so it discerns itself from nonsentients by performing service to His devotees.

பகவானின் உடைமைகள் சேதனா சேதனங்கள். அவற்றில் அசேதனத்திற்கு அறிவில்லை. சேதனன் அறிவு உடையதால், அந்த அறிவைக் கொண்டு பாகவத கைங்கர்யத்தில் மகிழ்கிறது.

Bhagavan owns both sentient and non-sentients things. Between them, only the sentient has intelligence and so can enjoy doing service to the devotees.

16-13 **முறையான கைங்கர்யத்தாலே பகவானுக்கு லீலாரஸம் இங்கே. ஞான விகாஸமில்லா கைங்கர்யத்தாலே போக ரஸம் அங்கே.**

Service rendered on earth is playful taste for Bhagavan. The service done in moksha with invariable knowledge has an exhilarated taste for Him.

சேதனர்கள் அந்த அறிவைக் கொண்டு எம்பெருமானை மகிழ்விக்கிறார்கள்

- *சாஸ்திர ரீதியாக நடந்தால் பகவான் பலன் அளிக்கிறான். பகவானுடைய திருக்கல்யாண குணங்கள் பிரகாசிக்கின்றன*
- *சாஸ்திரத்தை மீறினால் தண்டிக்கிறான். அதுவும் அவனுக்கு லீலா ரஸமே.*

முக்தர்கள் நித்யர்கள் எப்போதுமே ஞான சுருக்கம் இல்லாமல் பகவானை நேரிலேயே கண்டு உகக்கிறார்கள். பகவானுக்கு போக ரஸத்தை கொடுக்கின்றனர்.

Sentient beings use their intelligence to please the Lord. He is pleased and displays His magnificient qualities if their actions abide by the scriptual code; otherwise He punishes. After all, they are all merely playful activities to Him. But in moksha, since there is no slack or obstruction to intelligence, all the services are righteous. There the Lord enjoys pristine pure service rendered to Him and that is His ecstastic enjoyment.

16-14 **பகவத் விஷயத்தில் டம்பமில்லாது, விரும்பி கேட்டு, தன்னை மறந்து, எப்போதும் நினைத்து, ஆராதிக்க முயன்று, பலன் வேண்டாது, பாகவத குறை காணாது, அவர் பக்தியில் மகிழ்வது, பாகவதனின் அடையாளங்கள். இது கருட புராணத்தில் பகவான் வாக்கு.**

A true devotee can be identified by the following - No hypocrite service, yearns to hear about Bhagavan, mesmerized while hearing, constant contemplation of God, make efforts to do pooja, never requests any favor, perform service to His devotees by ignoring their flaws, takes pleasure in their devotion to the Lord.

பக்தி எட்டு வகை

- *பகவத் விஷயத்தில் டம்பமில்லாமை. மற்றவர் கொண்டாட வேண்டும் என்பதற்காக பகவத் காரியங்கள் செய்வதில்லை.*
- *விரும்பி கேட்டல். பகவத் விஷயத்தை முயற்சி செய்து கேட்க வேண்டும்*
- *தன்னை மறந்து - பகவத் விஷயத்தை குலசேகரழ்வார்போல் கேட்க வேணும். கண்ணீர் மல்கி, தொண்ட தழதழத்து, மயிர் கூச்சல் உண்டாகி, மனம் புளாங்கிதம் அடைதல்.*
- *எப்போதும் நினைத்து - ஸதா பகவத் ஸ்மரணையாக இருக்க வேண்டும்*
- *ஆராதிக்க முயன்று - பகவத் ஆராதனம், பூஜை, எந்த விதமான கைங்கர்யத்தில் தானும் ஈடுபட முயலுதல்*
- *பலன் வேண்டாது - பகவானிடத்தில் ஒன்றும் கெட்காமல் இருப்பது. பத்னி பெண் போலே*

- *பாகவதர் பணி - மற்ற பாகவதரிடத்து குற்றம் காணாது அவர்களுக்கு கைங்கர்யம் செய்தல்*
- *பாகவதர் பக்தியில் ப்ரீதி - மற்ற பாகவதரின் பகவத் கைங்கர்யத்தைக் கண்டு தானும் மகிழ்ச்சி அடைதல்*

A true devotee can be identified thorugh eight indications

- No False pride. He does not do hypocrisy service to Lord
- Loves to listen. He is deperate to hear about Bhagavan
- Forgets himself. When he hears about bhagavan he is mesmerized with tears rolling down and stuffed throat
- Constantly contemplating. He thinks only Bhagavan all the time
- Tries to do puja. One tries to make an effort to learn and do any type of service to the Lord
- No favors requested. He never asks Bhagavan to do any favors for him. He accepts whatever is given to him
- Service to His devotees. True bhagavatha perfrosm service to other bhagavathas without looking at their flaws
- Take pleasure in their devotion. Enjoys their service to the Bhagavan.

16-15 **கீழே சொன்ன எட்டையும் உடையவன் தாழ்ந்தவனாயினும் ஞானமும் பக்தியும் உடைய ப்ராஹ்மண ஸ்ரேஷ்டனாய், ஸந்யாஸியாய், அறிஞனாய் போற்ற வேண்டியவன். அவனிடம் ஞான உபதேசம் செய்யலாம், பெறலாம். என்னைப்போல் அவனை பூஜிக்கலாம் என்பது பகவான் வாக்கு.**

If one has all the eight qualties mentioned below, even if he is born In a lower status, he should be cherished like a noble person (brahmana sreshta), saint (sanyasi), scholar. He can give and receive knowledge. He can be worshipped, just like me. This was told by Bhagavan himself.

16-16 **"பரஸ்பர நீச பாவை" என்று அடியவர் பணி முக்தியிலும் முக்யம்.**

Mutual subservience stance is displayed among the devotees even in Srivaikuntam.

16-17 **பாகவத கைங்கர்யம் ப்ரபன்னனுக்கு ஸ்வரூபத்தினாலா அல்லது ஒரு காரணத்தினாலா என்னில் ஸ்வரூபத்தினால் பாகவத தாஸர்கள் ஆயினும், பகவத் காரணத்தினால் சாஸ்திர விரோதமின்றி செய்ய வேணும்**

The attitude to serve the devotees, does it arise from the prapannan's innate nature or due to some particular reason? Though it's in the nature, one has to serve devotees without breaking the code in the scripts.

பகவானுடைய வஸ்துவாகிய நாம் அவன் விருப்பப்படி நம்மை எப்படி பயன்படுத்துகிறானோ அதை ஒப்புக் கொண்டு அவன் மனதிற்கு உகந்தவாறு நடக்க வேண்டும். நித்யமான வேதத்தின்படி வர்ணாச்ரம், தர்மம் குலையாது செய்ய வேண்டும். பாகவதர்கள் ஆயினும் மகனை தந்தை, க்ரஹஸ்தனை ஸ்ந்யாஸி, சிஷ்யனை ஆசார்யன் ஸேவிப்பது என்பவை சாஸ்திர விரோதம்.

We are all owned by the Lord. We have to accpet and be pleased with whatever the way He likes to dispose us and our actions. Our service has to abide by the rules found I nthe eternal vedas with adherence to birth and chosen lifestyle. Prostrating by a father to his son, acharya to his sishya and a renounced to a married person are all prohibited, for example.

16-18 **பரஸ்பர கைங்கர்யத்தில் ஒருவனே ஸேஷனும் ஸேஷியும் ஆக முடியுமோ என்னில் அந்யோந்ய ஆஸ்ரய தோஷமில்லாது ஒருவருக்கு ஒருவர் ஸ்வாமியும் தாஸரும் ஆகலாம்**

In the mutual service between two devotees, how a single person can be both doer and the receiver? That can be explained by there is no mutual dependence for between their actions.

இரண்டு பாகவதவர் ஒருவருக்கு ஒருவர் செய்யும் பணி எதிர் நோக்காமல் செய்வது. இவன் உபகாரத்தை வேண்டாது அவன் உபகாரம் செய்வான். அதை வேண்டாது இவன் வேறு உபகாரம் செய்வான். பலன் பெறுவது, கைங்கர்யம் செய்வது இருவருக்குமே. எனவே இருவரும் ஸ்வாமி, இருவரும் தாஸர்.

Two devotees perform service to each other without any expectation. Their service has no mutual dependence. One service does not expect or presuppose the other service. Since both are the service doers and receipients, both are masters (swami) and servant (daasyars).

16-19 **எம்பெருமானாரை முதாலாய் கொண்டு சாஸ்த்ர முறையிலே ஞானத்தை நன்கு உணர்த்தப்பட நமக்கு பாகவத கைங்கர்யம், பகவத் கைங்கர்யத்தின் எல்லை ஆயிற்று. பாகவத கைங்கர்யத்தை இழந்தால் பகவத் கைங்கர்யம் கைகூடாது**

Regarding Swami Ramanuja as the leader, the knowledge of scriptures has been passed on to us by our acharyas. The essence of that knowledge is the serivce to His devotees are the fartherest extent of service to Him. If one lose the service to His devotees, the service to Bhagavan will not be rewarding.

16-20 **நம்முடயை ஸ்வாமியான எம்பெருமானிடத்து அல்ப பலனோ, அஸ்திர பதவியோ, ஆத்ம சுகமோ, அனந்தமான ஆனந்தமோ யாசிக்காது. அந்தப்புரப்பெண் போன்ற பாகதவரிடத்து கைங்கர்யத்தை, முக்தியில் உள்ள பட்டப் பகலுக்கு முன் உள்ள காலைப்பொழுது போலே உகந்து செய்து, பகவதருள் என மகிழ்வோம்.**

Sriman Narayana is our master. We never approached Him for low level pleasures, temporary positions, enjoyment of one's own soul, or even moksha. We take pleasure in serving the devotees who, like a noble lady, engage themselves only to Bhagavan. That enjoyment is like an early morning just before a fully bright and sunny day of moksham blooms.

16-21 (tag)

Chapter 16 Concluded
புருஷார்த்த காஷ்டாதிகாரம் ஸம்பூர்ணம்.

Chapter 17
சாஸ்திரீய நியமநமநாதிகாரம்
The decree of sastras

17-1 **பகவத் பாகவத கைங்கர்யத்தை கீழே சொல்லி அதை பூமியிலே சாஸ்திர முறையாய் செய்ய வேண்டியதை இங்கே சொன்னது.**

Service to the Lord and His devotees was discussed In the previous chapters and here how that service should be performed in accordance with the scripts is described.

ப்ரபன்னன் மீதி நாட்களில் கைங்கர்யங்களை தன் இஷ்டம் போல் செய்யாது சாஸ்திர முறையில் நடக்க வேண்டும். அதனால் சாஸ்திர ஞானத்தின் அவசியத்தையும் அதன் கட்டுப்பாட்டையும் சொல்வது இந்த அதிகாரம்

After prapatti, a prapannan can't do the service (kaimkaryam) as he wishes. Instead he needs to follow the scripts (saastras). That's why he needs to learn them and understand the structure under which he can perform the service.

17-2 **இருள் தருமா ஞாலத்தில் இணையிலா கைவிளக்கு சாஸ்திரம்.**

This earth feeds only darkness (ignorance). Scripts are the only unequivocal light that provide guidence.

17-3 **பகவானிடம் ப்ரந்யாஸம் செய்து, பாபங்கள் விலகி, முக்தனான இப்பிரபன்னன். பகவான் எண்ணத்தை மறைக்கும் இந்த இருள் தருமா ஞாலத்தில், சாஸ்திரத்தின் துணையுடன், பகவத் ஆணையை மீறாது, மீறினால் நேரும் தீங்கிற்கு பயந்து, மோஷ காலம் வரை வாழ்கிறான்.**

The completion of total-surrender (saranagati) to Lord Srimun Narayana eradicates all his sins. Earth (Samsaara) by its nature will hide the true intentions of the Bhagavan from him. So this liberated soul (prapannan) lives the rest of the days on this earth with the guidance of sastras. He

adheres to them very strictly because they are the ordained by the Lord and do not want to face the consequences of breaking the code.

ப்ரபன்னனுக்கு ஆத்மா பற்றி கவலை இல்லை. பகவனிடம் ஒப்படைத்தாகி விட்டது. பகவான் காப்பாற்றுவான் என்ற திட நம்பிக்கை. சரி மீதி நாட்கள் காலம் தள்ள வேண்டுமே! பணம், வசதி, அன்பு, வியாதி இல்லாமை இது எல்லாம் பூர்வ கர்மாவினால் வந்தது என்று மனம் தெளிய வேண்டும்.

Prapannan is not worried about his soul because it has been already submitted to the Lord for safe-keeping and has the utmost confidence that He will protect him. Then the prapannan should not agonize himself about how he is going to live out the rest of the days. It should be apparent to him that the wealth, luxury, love, health are all predetermined based on his previous karma and he has no control over it.

17-4 **எம்பெருமானார் திருவாக்கால் இந்த சாஸ்திர முறையை அறியலாம்.**

This code of conduct is crystal clear from the sayings of Bhagavat Ramanuja.

எம்பெருமானார் பிரியும் காலத்தில், அதற்கு கலங்கி, சிஷ்யர்கள் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்வோம் என்று சொல்ல, அதைக் கேட்டு "ஆளவந்தார் திருவடி மீது ஆணை. என் பிரிவால் யாரும் உயிர் போக்கிக் கொள்ளக் கூடாது. அப்படி செய்தால் அவனுக்கு என்னுடன் சம்பந்தம் இல்லை" என அருள, சிஷ்யர்கள் "நாங்கள் என்ன செய்வது" என்று சோகிக்க அப்போது பாஷ்யகாரர் செய்த உபதேசம்.

When Bhagavat Ramanuja was getting ready to ascend to Srivaikuntam, his disciples were extremely distressed. Coming to conclusion that they can't be separated from their acharya, they decided to kill themselves. When the Acharya observed this, he commanded "I promise on the lotus feet of Sri Alavanadar that no one here should commit suicide, otherwise he will break all the ties with me". Then bewildered disciples sought the advice from the acharya on how to live the rest of their lives without him. Then the acharya started to summarize.

1. *ப்ரபன்னனின்*

- *ஆத்மா எம்பெருமான் வசம். அதைப் பற்றி கலங்கினால் அவன் செய்த பரந்யாஸம் பொய்யாகும்.*
- *பூமியில் வாழ்க்கை வினைப்பயனால். அதைப் பற்றி கவலைப்பட்டால் அவன் நாஸ்திகன் ஆவான்*
- *இங்கோ, அங்கோ இவனுக்கு ஒரு பொறுப்பும் இல்லை. ஆனால் உள்ளம், உரை, உடலால் தன் இஷ்டப்படி நடக்கக் கூடாது.*
- *உபாயமாய் ஒன்றையும் செய்ய வேண்டாம் என்னில் பலனான கைங்கர்யங்களை செய்யக் கடமை உண்டு*

Prapannan

- Need not worry about his soul, since its owned by Bhagavan. Otherwise his prapatti is not true.
- Need not worry about the rest of the days here since they are dictated by past karma. Otherwise he will be an atheist.
- Has no burden of responsibility anywhere but can't slack on his behavior through his mind, word and action.
- Doesn't have to perform any more means but it doesn't preclude him from is duties in performing service.

2. *ப்ரபன்னன் இச்சரீரம் கழியும்வரை செய்ய வேண்டியவை முறையே ஸ்ரீபாஷ்யம் வளர்த்தல் - ஆழ்வார் அருளிச் செயல் வளர்த்தல் - திவ்யதேஸ கைங்கர்யம் - த்வயமர்த்தாநுஸந்தானம் - ஸ்ரீவைஷ்ணவன் ஒருவனை பற்றுதல் என்று எம்பெருமானார் அருளிய கைங்கர்ய ஸாரங்கள்.*

Duties to be followed by all the prapannas till death. Study and spread SriBashyam, study and spread Alvars' works, perform service at temples which are blessed by Alvars (divya desa kaimkarya), understand and recite the couplet mantra (Dvaya artha anusandana) and finally live under the aura of a Sri Vaishavavan. These are the essence of all services.

ப்ரபன்னன் சாஸ்த்ர ரீதியாக செய்ய வேண்டியவை

i. *ஸ்ரீபாஷ்யம் படிப்பது, கேட்பது, பரப்புவது.*

ii. அதற்கு தகுதி இல்லையேல், திவ்ய பிரபந்தங்களை படிப்பது, கேட்பது, பரப்புதல்
iii. அதற்கு தகுதி இல்லையேல், அர்ச்ச்யா மூர்த்திகளுக்கு கைங்கர்யம் செய்தல் - மாலை சாத்துதல், ப்ரஸாதம் செய்தல், கோவில் காரியங்கள் செய்தல்
iv. அதற்கு தகுதி இல்லையேல், த்வயத்தின் அர்த்தத்தை அறிந்து அனுஸந்தானம் செய்தல்
v. அதற்கு தகுதி இல்லையேல் கடைசி பக்ஷமாய் ஒரு ஸ்ரீவைஷ்ணவனின் நிழலில் ஒதுங்கி இருத்தல்.

Duties of the prapanna in accordance to the scripts.

- Study, listen and spread Sri Bashyam
- If not competent, then study, listen and spread aazvaar's prabhandam
- If not competent, then perform service at the temples - like make garland, sweep the temple floors etc.
- If not competent, then understand the meaning of and recite the mantra
- If not competent, as last resort, go and live under the glory of a true Sri Vaishavan

3. பிரபன்னனுக்கு அனுகூலர் ஸ்ரீவைஷ்ணவர், அவரிடம் நிலா, சந்தனம், பூ, தென்றல், மனைவியைப்போல் மகிழ வேண்டும். பொருள், ஆசை இத்தால் அனுகூலரை அவமதித்தால், ராஜ குமாரனுக்கு அவமரியாதை செய்ததைக் கண்ட ராஜா போலே பகவான் சீறுவான்

Sri Vaishnavas are the suitables or favaorables (anukoolars) for the prapannan and their association should be cherished by the prapannan like the sight of a nice perfume, moon or his wife. If the prapannan disrespect these facilators greedy over money or lust, Bhagavan will be very angry. Lord will treat that as if a King witnessed his Prince son is being disrespcted before his own eyes.

4. ப்ரதிகூலர் பகவானை தூஷிப்பவர். இது கர்மாவினால் ஏற்பட்டது என அவரை பாம்பு, தீ போல் விலக்க வேண்டும். அவரிடம் போய் வேண்டினால் பட்டமகிஷி பிச்சை எடுத்தாற்போலே பகவான் வெறுப்பு கொள்வான்

Unsuitable or unfavorable are the ones (prathikoolas) who are the enemies of Bhagavan. Prpannan dreads their sight ike a snake or fire, and runsaway from them. He knows what they do is due to their karma. If a prapannan approaches them for a favor, Bhagavan treats them like a rich queen go and beg like a paupar citizen.

5. *இரண்டும் இல்லாத நடுநிலை பகவானிடத்து விருப்பு வெறுப்பு பாராட்டாதவர். இவரை கல், ஓடு இவற்றைக் கண்டாற்போல் கவனமின்றி இருக்க வேண்டும். திருந்துவராகில் ஞானத்தை உபதேசிக்கலாம். இல்லையெனில் இரக்கம் கொள்ள வேணும். பொருள், ஆசைக்கு இவரை அண்டினால், கல்லிற்கும், ரத்னத்திற்கும் வித்யாசம் தெரியாது போலே, இவனுக்கு பிறந்த ஞானத்திற்கு பலன் இல்லையே என பகவான் புறக்கணிப்பான்*

Don't care type is the one who is neither of the above two. No love or hatred towards Bhagavan. Prapannan should ignore them like a stone and dirt. If they could be corrected then prapanna can impart knowledge. Otherwise sympathize with them. If a prapannan approaches these types for cheap favors, Bhagavan will feel sorry for the prapannan. Prapanan's knowledge, though gained but not used up like a one can't tell the difference between a gem and a stone.

17-5 **பகவானைத் தன் தெய்வமாக நினைத்து பக்தி செய்தாலும் பகவான் கட்டளையை மீறியவன் பகவானுக்கு எதிரி. அவன் வைஷ்ணவன் இல்லை.**

Even when one worships the Lord as the only resort, if he does not obey the commands of the Bhagavan then he is a traitor and can't be called as a srivaishnavan.

ஸ்ருதி, ஸ்மிருதியின்படி ஆஞ்ஞா, அனுஞ்ஞா கர்மாகளை செய்ய வேணும். சாஸ்திர விரோதியை "மம த்ரோஹி", "ந வைஷ்ணவ" என்று அவன் என்னைச் சேர்ந்தவன் இல்லை என்றான் பகவான்.

17-6 **தர்மங்கள், குலங்கள், நல்வழி, சாஸ்திர மரியாதை இவை நிலை நிற்க, என் தேவதேவனாய் சங்கேந்திய எம்பெருமானின் மனம் மகிழ, அறிந்தவனான ப்ரபன்னன் வேத நீதி முறையை மனத்தாலும் கூட மீறக் கூடாது என்பது லக்ஷ்மி வசநம்.**

The God of all Gods, the one who holds the conch, and my Lord will be happy only when - righteousness, rich dynasty, good path and respect for the scripts - all these flourishes. A prapannan who understand His intention will not even dare to think of breaking the code of scripts. This was spoken by Sri Maha Lakshmi.

17-7 **அனைவருக்காக அமைத்த நதியை, தனக்கு பயன் இல்லை என கெடுத்தவன் வேண்டியவனே ஆயினும், அவனை அரசன் தண்டிப்பான். எனக்கு அன்பானவன் ஆயினும் வேத விதியாகிய என் ஆணை மீறியவன் தண்டனைக்கு உரியவனே என்றார் பகவான் (லக்ஷ்மி தந்திரம்)**

If a person pollute the river, which was constructed by the King to benefit all the citizines, the king will punish him, no matter how closely he is related to the king. Simialry, Bhagavan punishes those who break the codes of the scripts, despite of however affectionate and close to Him. This is told by Bhagavan himself in Lakshmi Tantram.

17-8 **சாஸ்திர விரோதமான காரியங்கள் ப்ரபன்னனின் ஸ்வரூபத்திற்கு விலக்கு. "வேண்டிற்று செய்து திரிய அமையுமோ என்னில் அது இவனுக்கு ஸ்வரூபமன்று" என்றார் எம்பெருமானார்.**

For prapannan, actions which contradict the scripts are out of nature. Swami Ramanuja said "If one wanders around without caring to obey the sastras then that is not his (prapannan's) true nature".

17-9 **எம்பெருமானின் கோவத்திற்கு ஆளானவன் கொடிய நரகம் போல் தவிப்பான். பலனை இங்கேயே அனுபவிக்க வேண்டும். பரிகாரம் தேடுவான். வருந்தி துடிப்பான். இந்த ஸாத்விக உணர்ச்சி இல்லையேல் அவனுடைய பகவத் ப்ரீதியும், மோஷ ஆசையும் சந்தேகமானவை.**

A prapannan who got into the wrath of Bhagavan will suffer internally like a brutal hell. He has to face the consequences on this life itself. He will repent and look for atonement (parikaaram). If that apprehensive and reconciling (satvic) attitude does not arise, then the affection towards the Lord and yearning for the ultimate bliss (moksha) is doubtful.

17-10 **கைங்கர்யங்கள் ஆஞ்ஞா, அநுஞ்ஞா என இருவகை. ஆஞ்ஞா என்பது பகவான் ஆணை. அதைச் செய்வதால் பகவத் ப்ரீதி. செய்யாது போனால் பகவானின் சீற்றம். ஸந்தியா வந்தனம் போன்ற நித்ய, ச்ராத்தம் போன்ற நைமித்ய கர்மாக்கள் இவை.**

Rites (Acts, services or karma) can be classified as mandatory (Agnjya) and non-mandatory (anugnjya). Obligatory rituals, as the name implies are commands of the Lord. Failing on this will cause Bhagavan's bitterness. Daily rituals (nithya karma) like sandhya vandanam and reason-based rituas (naimithya karma) like annual ceremony of forefathers (sraatham) are examples of these type.

17-11 **அநுஞ்ஞா கர்மாக்கள் செய்தால் பகவத் ப்ரீதி ஏற்பட்டு அத்தால் பலன் உண்டாகலாம். செய்யாது போனால் பாபமில்லை. பகவானுக்கு பூ சாற்றுவது, சந்தனம் அரைத்துத் தருவது போன்றவை.**

One can please the Bhagavan by performing non-mandatory or permissive rituals, and attain the benefits. There is no sin if one fails to do these rituals. Actions like making garlands, any service performed at temple are examples of these type of ritesuals.

17-12 **கர்மா எதுவாயினும், முறை கெட்டால் பாபம்.**

Any ritual violating prescribed procedure is a sin. Transgression of sastras is not tolerated.

17-13 **இரவிற்கு ஒளி மதியாலே, இப்புவிக்கு மதி ஒலியாலே. ஒங்கி உலகளந்தவன் பாங்காய் காட்டிய நான்கு வேதங்களைக் கொண்டு,**

மீண்டும், மீண்டும், நித்யரைப்போல் நிலை நின்று பணி செய்ய வழி வேறொன்றும் இல்லை.

The light of the moon dispels the darkness. Simiarly scripts dispels the ignorance of the earth-bound.ipts. For sentients, to perform service like the eternals, there is no method other than obeying repeatedly, the four vedas whose prominence was displayed by the Lord Tiruvikrama.

17-14 **ஸ்ருதி, ஸ்மிருதி, அநுஷ்டானம், புத்தி, நல்லவர் எண்ணம், தர்மத்திற்கு ஒத்த குலம், கால, தேஸ முறைகள், முன்னோர் வாக்கு, சகுநம், கனவு இவற்றால், ஸர்வ சக்தனான எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனின் எண்ணத்தை வித்வான் அறிகிறான்.**

A learned understands the intentions of the omnipotent Srimun Narayana through vedas, smrithis, conformance to the scripts, clear mind, intentions of noble people, duties that arise out of birth, time and location that are in sync with scripts, blessings of elders, good omen, and dream.

17-15 (tag)

Chapter 18
அபராத பரிஹாரம்
Atonement for offenses

18-1 **பிரபன்னனின் பகவத் பாகவத பணியில் பழுது ஏற்படின், அதற்கான பரிகாரங்களைச் சொல்வது இந்த அதிகாரம்.**

When the liberated soul serves the Lord and His devotees, If any mistakes occurs, it needs to be reconciled with. This chapter discusses that.

இப்படி எம்பெருமானுக்கும் அவன் அடியவருக்கு சாஸ்திர ரீதியான கைங்கர்யங்களை செய்து வரும் பிரபன்னனுக்கு அபராதங்கள் செய்யும்படி நேரிட்டால் அதை போக்கிக் கொள்ள, செய்ய வேண்டிய பரிகாரங்களைச் சொல்வது இது. ப்ரபத்திக்கு பின் ப்ரபன்னனுக்கு பாபங்கள் மோஷத்திற்கு தடையில்லை. ப்ரபன்னின் பாவம் தீரும் வழியைச் சொல்கிறார்

After prapatti, a prapannan spends his life in doing flawless service th Bhagavan and His devotees. If any mistake happens, then he has to take efforts for reparation process. For prapannas, sins are not a hurdle for moksham. But they have to me discharged with remedial actions.

18-2 **தன் நிஷ்டையை அடையாளங்களால் அறிந்து, சாஸ்திர முறையில் கைங்கர்யங்களைச் செய்து வரும் பிரபன்னனுக்கு அபராதங்கள் ஏற்படாது.**

When a prapannan understands his true nature with all the aforementioned symptoms, and renders service, there is little chance for any mistake.

தன் ஸ்வரூப, பர, பல ஸமர்ப்பணம் செய்து எம்பெருமானையே உபாயம், பலன் என நம்பியிருக்கும் ப்ரபன்னனை அபராதங்கள் செய்யும்படியான சந்தர்ப்பத்தை பகவான்ஏற்படுத்த மாட்டான்.

Prapannan has submitted his nature, means for moksha and the rewards to the Lotus feet of Srimun Narayana. He spends his life on the trust that Bhagavan is both means and ends. By the grace of the Lord, that prpannan will not face any situation where he has to err.

18-3 **இந்த ப்ராகிருத உடலைத் தாங்கி நிற்கும் ப்ரபன்ன ஆத்மா, யாத்ருச்சிக புண்ய பலனாய், மோஷத்திற்கு தடையான பாபங்களை போக்க, உயர்ந்த குணங்களை உடையவனாயும், இழிவான குணங்கள் அற்றவனாயும், அநிஷ்ட நிவ்ருத்தி, இஷ்ட பராப்தியை அளிக்க வல்லவனான ஸ்ரீமந் நாராயணனை உபாயமாக அடைகிறான். ஆயினும், இந்த பிரபன்னன் உலக விஷயங்கள் என்னும் வெள்ளத்தால் உண்டான சேற்றில் மறுபடியும் தன் உடலை அழுக்கு ஆக்கிக் கொள்கிறான். அதனால் மஹான்களுடன் சேர முடியாதபடி ஆகிறான்.**

A prapanna's soul is carrying the body made of trigunas. Due to his incidental good deed, he gets the opportunity to reach out to Lord Srimun Narayana as the only means. The Lord is an ocean of great qualities. He has the power to remove all the impediments and shower with all the rewards. The liberated soul, as long as he is still on earth, makes himself dirty by indulging In the the low level pleasures. Because of his uncleanliness, he could not associate himself with the crowd of noble souls.

18-4 **தன்னை அறியாமலும், உறக்கத்திலும், ஆபத்து காலத்திலும் நேரிட்ட பாபங்கள் இவனைச் சேராது.**

Sins which are caused unknowingly, while at sleep, and In emergency will not haunt him.

அறியாமல் செய்யும் பாபம், உறக்கத்தில் (தெரியமால் பாகவதருக்கு முன்னே காலை நீட்டி இருப்பது), ஒரு ஆபத்து காலத்தில் (உயிர் பிழைக்க உணவு ஏற்பது)

Unknowningly committed sins -
Sins at sleep - He stretches out the leg in sleep In front of a truce devotees.
Emergency case - Eat food from a barred place or person.

18-5 **அறிந்தே செய்யும் பாவங்களுக்கு எவரும் விதி விலக்கு அல்ல. புத்தி பூர்வமான பாபங்கள் பக்தி, பரபத்தி யோகத்தில் ஒட்டாது எனில் அது ஸ்ரீபாஷ்யத்திற்கு விரோதம் (ஸ்ரீபாஷ்யத்தில் இதே கருத்துதான் பக்தி யோகத்திற்கு சொன்னது)**

No one is barred from intentionally committted sins. "A crime done with a clear mental state will not effect the doer" statement like this are in absolute contradiction with Sri Bashyam.

சில பேர் சொல்கிறார்கள் - மோக்ஷத்துக்காக முன்னாடி செய்த ப்ரபத்தி ஒன்றே போதும். பின்னாடி தெரிந்தே பாவங்கள் செய்தாலும் அதை போக்கும். கிருஷ்ணன்தான் "ஸர்வ பாபேப்யோ" என்றான். அது தெரிந்து, தெரியாமல் என்ற எல்லா பாபங்களையும் பொசுக்கும். அதனால் பிராயசித்த ப்ரப்த்தி அவசியமில்லை".

இது தவறு. *எவருக்கும், பிரபன்னன் உள்பட, அறிந்தே செய்யும் பாவங்கள் ஒட்டாது என்ற கருத்து. இபடி சொன்னால் சாஸ்திரங்கள் எல்லாம் அர்த்தம் இல்லாமல் ஆகிவிடும்.*

பக்தி, ப்ரப்த்தி இரண்டிற்கும் அறிந்தே செய்யும் பாவங்கள் ஒட்டாது என்பது தவறு.

18-6 **மாறாக, அறிந்தே செய்த பாபங்களுக்கு பிராயசித்தமோ, பிராயசித்த ப்ரபத்தியோ அல்லது அநுபவித்தோ தீர்க்க வேணும்.**

On the cotrary, sins committed deliberately needs to be reconciled. - Redemption actions, redemption prapatti or finally one has to go through it in this life.

பிரபன்னன், கர்ம வசத்தால் பாபங்கள் செய்யும்படி ஆனால்

- *அதற்காக மனம் வருந்தி அந்த பாபத்திற்கான ப்ராயசித்த காரியங்கள் செய்ய வேணும்.*
- *அது முடியாவிட்டால் எம்பெருமானிடத்து பிராயசித்த ப்ரபத்தி செய்தால் அது கழியும்.*
- *அல்லது, கடைசியாக அதை அநுபவித்தே தீர்க்க வேண்டும்.*

If a prapannan happens to do sins, due to his karma

- Repenting and performing atonement for that action is essential
- He can do atonement prapatti to excuse him out of his sins
- If those are not possible, as a final resort he needs to go through the reward/punishment for his previous actions.

18-7 **ஸர்வ பாபேப்யோ என்பதால் முன் செய்த ப்ரபத்தி, பின் வரும் பாபங்களில், அறியாமல் செய்தவற்றை மட்டுமே கழிக்கும். அறிந்தே செய்யும் பாபங்கள் பிரபன்னனை ஒட்டாது என்பதற்கு எந்த ப்ரமாணமும் இல்லை**

Lord Krishna's said to the prapannas that He will relieve them from all the sins. This also include future sins, but those committed unknowingly. No sastras say that one can walk away freely for the sins committed deliberately.

முன் செய்த ப்ரபத்தி, பின்னே அறிந்தே செய்யும் பாவங்களை போக்காது. போக்கும் என்றால் ப்ரபத்தி செய்து விட்டு எல்லா விதமான அக்கிரமங்களையும் யார்தான் செய்ய மாட்டர்கள்? தவிர பாபம் வந்தால்தான் பரிகாரம் வேண்டும். நிமித்தம் இருந்தால்தான் நைமித்திகம் வரும்.

Prapatti done in an earlier period will not wash out the sins committed deliberately, in the post prapatti period. Otherwise everyone will do praptti and will committ all kinds of crimes.
Besides compensation is required only after the sin is committed.

18-8 **அறிந்து செய்யும் பாவங்களுக்கு ப்ராயசித்தத்தை விதிக்கிறது சாஸ்திரம். மறுபடி பகவானை சரண் அடைவதே பிராயசித்தம். என்கிறது லக்ஷ்மீ தந்திரம். மோஷ ப்ரபத்திக்குபின் மற்றை கர்மயோகங்களை உபாயமாக பற்றினால் அது அபராதம்.**

Sastras prescribe remedial actions for offenses committed knowingly. It is surrenedering to the Lord again, says Lakshmi Tantram. After moksha prapatti, any adoption of karmas for the same moksha objective is condemned.

18-9 **அறிந்தோ, அறியாமலோ இழைத்த அபராதத்தை பொறுத்து அருள வேணும் என பிராத்திப்பதே ப்ராயசித்தம் என்பது வங்கிபுரத்து நம்பிகாரிகை.**

Vangeepuram Nambi said "Ask for the forgiveness to the Lord for the knowingly or unknowingly committed sins and request for His forbearance and blessings" is the remedial action.

18-10 **இந்த ப்ராயசித்தம் செய்யாது போனால் அதன் பலனை, ஜீவித காலத்திலேயே அனுபவிக்க நேரும். பரமகாருணிகனான எம்பெருமான் இப்பாபங்களுக்கும் அளிக்கும் பலனும் "ராஜாகுமாரனுக்கு அளித்த லகு தண்டனை போலே" இருக்கும்.**

If one doesn't do remedial prapatti (prayaschitha prapatti) he has to undergo the suffering for his sins during the current life. Bhagavan is extremely kind. The punishment given by Him will also be less taxing as the punishment given to a prince.

18-11 **ஸர்வ பாபேப்யோ என்பது பொது வசனம். தெரிந்தே செய்யும் பாவம் என்பது அதற்கு விதி விலக்கு. பல சாஸ்திரங்களையும் ஆசசர்யர்களின் கருத்துக்களையும் அனுசரித்தது இது. விசேஷ தர்மம், சாதாரண தர்மம் இரண்டையும் கொண்டு பார்க்க வேணும்.**

"I will relieve you from all sins", are the words of Lord Krishna. But the deliberately committed sins are exceptiosn to this rule. This is derived from comapring and conforming to aachrya's worls and other scriptures. Ordinary case and special case situations have to be balanced.

அதனால்தான் எமபெருமானார் போன்ற ஆசார்யர்கள்கூட ப்ரபத்திக்கு பின் மிக கவனத்துடன், பாபங்கள் நேராமல், அனுஷ்டானம் செய்தனர்.

That is the reasony why, aacharys like Ramanuja and others, were extremely careful even after post praptti, in their rituals so as to avoid any errors.

18-12 **நாள் குறித்து பலன் வேண்டியவனுக்கு, அந்நாளுக்குள் பரிகாரம் முடியும். மற்றவனுக்கு பரிகாரம் ஆகிறவரை நாள் வளரும்.**

இந்த காலத்தில் மோக்ஷம் ஸித்திக்க வேணும் என்று வேண்டியவருக்கு அதற்குள் அபராத பரிகாரங்கள் நிறைவேறும். காலம் குறிக்காது வேண்டியவருக்கு அபராதத்திற்கு பரிகாரம் உண்டாகிற வரையில் ஆயுசு வளர்ந்து கொண்டே இருக்கும். அத்தால் மோக்ஷ பலனில் தாமதம்.

இந்த சரீரம் கழிந்தவுடன் மோக்ஷம் என்று வேண்டியவருக்கு அதை நிறைவேற்றுவான். அப்படி இல்லாமல் மோக்ஷத்தை மட்டும் கேட்பவருக்கு அவர் பாபத்துக்கான ஜன்மங்களளை எடுத்தபின் மோக்ஷம் வரும்.

The remedial actions to clear the sins will be completed before the d ate with which the prapannan had requested already that heneeds to be awarded moksha. If no fixed time was requested altready, his life will continue to grow till the remedia lactiosn are completed.

When performing the prapatti, if one asks for moksha at the end of current life, he will be granted accordingly and will definitely get moksham when his janma ends. On the other hand, if on requests just moksha alone without any requirements on time, he will get it once all his sins are washed out. And that may take several lives.

18-13 **ப்ரபன்னனுக்கு பாவங்கள் நரகத்தை தராது. மோக்ஷத்தை மறுக்காது. கொடிய பாபங்கள் அயினும், எம்பெருமான் தன் வாத்ஸல்யத்தால் சிறிய தண்டனையே அளித்து பிரபன்னனை சுத்தமாக்குகிறான். இவனை பகவான் ஒருக்காலும் கை விடுவதில்லை. ப்ரபன்னனுக்கு தேஹாவஸானத்தளவில் மோக்ஷம் நிச்சயம்.**

Prapanna will never go to hell, despite of whatever the type of sins it may be. Moksha will never be refused. Even if he has committed violent offeses, Lord cpurifies him by giving only a small punishment. Bhagavan never gives up on him. Prapannan definitely gets moksha at the end of his current life period.

18-14 **பாகவத அபசாரம் மிகக்கொடியது. எப்பாடு பட்டாவது அதை வரமால் விலக்க வேண்டும். பகவத் பாகவத அபசாரங்களுக்கு மோஷ ப்ராப்த்தியைகூட தடை செய்யும் சக்தி உண்டு என்பர் முன்னோர்.**

Since offences to the Bhagavathas are the worst, Prapanna should try by all means not to get into those. Some even say, the offenses to Bhagavathas has effect so much, even to stop the benefit of moksha.

18-15 **பிரபன்னன் பெறும் பேறு வியாஸர், நாதமுனிகள், ஆளவந்தார் இவர்களின் ஸமமாயினும் தன்னை அந்த மஹான்களுக்கு நிகர் என கருதக் கூடாது.**

The reward what prapannan gets is equivalent to those of Vyasa Bhagavan, Natha muni, Alavandar received, previously. But prapannan should never consider himself equivalent to those revered seers.

18-16 **சாஸ்திரம் வர்ணாச்ரம தர்மத்தை நியமித்தாலும், எந்த பாகவதருக்கும் அளிக்கும் மதிப்பு, மரியாதையில் குறை கூடாது. இதில் தவறியவன் யமன் கடைவாயில் அகப்பட்டாற்போலே நடுங்கி பிராயசித்தம் செய்வான்.**

குல வரைமுறைகளை (வர்ணாச்ரம தர்மம்) சாஸ்திரம் நியமித்தாலும், பாகவதனுக்கு கொடுக்கும் மதிப்பு, மரியாதையில் இம்மிகூட பிசாகமல் கைங்கர்யம் என நினைத்து செய்ய வேண்டும். ஆயினும் அவனுக்கு கொடுக்கும் மதிப்போ, மரியாதையோ சிறிதும் குறையாமல் பாகவத கைங்கர்யம் என நினைத்து

18-17 **பாகவத அபசாரத்தாலோ, வினைப்பயனாலோ ஒரு பிரபன்னனை பாகவதர்கள் வெறுக்கக்கூடும். சீறிய பகவானின் உள்ளம் கூட மன்னிக்கும். அது போதாது. அதே பாகவதரிடம் மன்னிப்பு பெற வேணும். லக்ஷ்மணன், சுக்ரீவன் விஷயத்தில் இது ப்ரசித்தம்.**

A prapannan, though innocent, may be disliked by some bhagavathas. This could be due the effect of his misdeed to those bhagavathas or due to some earlier karma. Irrespective of this, he should seek forgiveness from

the same bhagavathas, even Bhagavan's pardon may not be enough. This has been demonstrated in Sugreeva-Lakshmana incident.

ஒரு பிரபன்னன் குற்றம் செய்யாதிருந்த போதும் பாகவதர்கள் அவனை வெறுக்கக்கூடும். இது கர்மவினையால் பகவான் தன்னை தண்டிக்கிறான் என எண்ணி அந்த பாகவதரிடம் மன்னிப்பு கோர வேண்டும். சீறிய பகவான் உள்ளம் கூட மன்னிக்கும். ஆனால் பாகவதர்களின் மன்னிப்புதான் முக்யம்.

18-18 **பாகவதரிடம் மன்னிப்பு பெறாத பிரபன்னன் பாகவத பணியையும், பகவானின் அபிமானத்தையும், தன் ஆத்ம ஸ்வரூப ஞானத்தையும் இழக்கிறான்.**

A prapannan who hasn't received the pardon from a bhagavatha, loses the benefit of serving bhagavan and His devotees. He also loses his good standing in Bhagavan's mind. He also loses his realization of innate nature of his soul.

18-19 **ஆகையாலே முதலில் ப்ரபத்தி செய்யுங்கால் மோஷ ப்ராப்தியுடன், அபராதமில்லாத கைங்கர்யத்தையும் வேண்டுவர்.**

Some, in addition to moksha prapatti, may request the Lord to grant them also the reward of flawless service for the remaining days here on earth, while they do the total surrender.

18-20 **ஸர்வசக்தனான எம்பெருமான் பிரபன்னனின்**

- **ப்ரபத்திக்கு முன் செய்து பலனைத் தர ஆரம்பித்த பாபங்கள் தவிர மீதியை முழுவதுமாய் (ஸஞ்சிதம்)**
- **பிரபத்திக்கு பின் அறியாமல் செய்த பாபங்களையும்**
- **பலன் தர ஆரம்பித்த பாபங்களில் பிரபன்னால் ஏறுக் கொள்ளப்படாத பாபங்களின் பகுதியையும் (அநப்யுகத ப்ராரப்த கர்மா) இவற்றை ப்ரபத்தியாலே போக்கி**
- **ப்ரபத்திக்கு பின் பாபங்களளை செய்ய மாட்டான் ஆயினும், நேர்ந்தால் அவற்றிற்கு தகுந்த ப்ராயசித்தம் செய்வதாலும்**

- **பிராயசித்தம் செய்யாத முரடர்களுக்கு சுலபமான தண்டனை கொடுத்தும்**
- **பிரபன்னர்களை பாபமில்லாமல் ஆக்கி காக்கிறான்.**

Bhagavan is all-powerful supreme. For prapannan, He

- Removes completely all the sins except those which were committed before prapatti but started to yield their effects (sanchitam)
- Any unknowingly committed sins after Prapatti
- Portions of the sins which have started to yield its effects but not accepted by pranannan during prapatti. (anapugatha prarabtha karma). They are removed by the prapatti process
- After prapatti, a good prapanna will not do any sins. If it happens, the nLord removes them if the prapannan does any remedial actions
- Prapannas who are tough and refuse to act on any remedy, Lord remvoes their sins by giving small punishments.
- Lord releives the prananna one way or other and make them sin-free.

18-21 (tag)

Chapter 19
ஸ்தான விசேஷாதிகாரம்
Significance of prapannan's residence

19-1 **பகவானின் பணிக்கு உகந்ததாய், மறந்தும் புறந்தொழா பாகவதரின் சேர்க்கை தருவதாய், ரிஷிகள் கூறியதுமான தேஸங்களே பூலோக வைகுண்டம்.**

Places which are considered as the earthly Srivaikuntam are: Those which are instrumental for bhagavad kaimkaryam, those that establish relations with bhagavathas who even by mistake don't approach other demi-gods and those which are blessed by the maharishis.

எம்பெருமானின் ஸேவை, திருவாராதனம், மற்றயை பணிகளுக்கு ஒத்த மனதைத் தருவது, இதர தேவதைகளின் பலனின் நாட்டமில்லாது நிலையான எண்ணத்தை உடைய ஏதேனும் ஒரு பாகவதனின் சேர்க்கை அமைவது போன்ற இவற்றை அமைத்து கொடுக்கும் இடம், ஸம்ஸாரத்தில் வைகுண்டமாய் பிரகாசிக்கும். மஹரிஷிகளால் அருளப்பட்ட தேஸங்கள் பல அவை.

19-2 **பகவத் கைங்கர்யம் ஸ்வயம் ப்ரயோஜனமாய் செய்ய வேண்டும். பகவானுக்கு செய்வது அவன் சந்தோஷத்திற்காக. வேறு ஒரு பொருளை யாசிப்பதற்காக அல்ல**

When performing kaimkaryam to the Lord, one should be conscious of selfless motive. Kaimkaryam is to make the Bhagavan happy and not a reason for prapannan requesting his wish for any rewards.

19-3 **அந்த கைங்கர்யம் செய்ய நல்ல சூழ்நிலை, சந்தர்ப்பம் அவசியம். அதற்கு வாஸம் செய்யும் இடம் முக்யம்**

The place of residence should conform to the standards and influential for Bhagavad kaimkaryam. It needs to provide proper ambiance and opportunities.

19-4 **முக்தி தரும் நகர் ஏழு - அயோத்யா, மதுரா, மாயா, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகா.**

Scripts claim that there seven gateway cities to moksham. Ayodhya, Mathura, Maaya, Kaasi, Kaanchi, Avanthi and Dwaraka.

19-5 **ஆசாரியர்கள் அபிமானித்தவை நாலு - கோவில், திருமலை, பெருமாள் கோவில், திருநாராயண புரம்.**

Aachrayas blessed four places to be the most sacred – Srirangam, Tirupati, Kancheepuram and Tirunaarayanapuram (Kovil, Tirumalai, Perumal Kovil and Maylkottai).

19-6 **பகவத் கைங்கர்யத்திலேயே திளைத்திருக்கும் பாகவதர்கள் உகந்திருக்கும் தேஸமே நமக்கு உகந்தது**

Places where bhagavadas find happiness in perform ceaseless service to Lord Srimun Naarayana is the best places to stay in.

19-7 **கங்கை, காவிரி, தாமிரபரணி போன்ற நல்ல நதிகள், இமய மலை போன்ற மலைகள் போன்றவை புண்ய தீர்த்தங்கள், புண்ய ஸ்தலங்கள் முக்யம்.**

Rivers like Ganges, Cauveri, Tamirabharani, mountains like Himalayas and other holy waters, holy places are all important.

19-8 **ஆயினும் பிரபன்னன் ஆபத்து காலத்தில் எந்த தேஸத்தில் தங்கினாலும் அவனால் அந்த தேஸம் சிறப்படையும்**

Even so, during emergency wherever a pure prapanan stays, that place gets highlighted because of him.

19-9 **எம்பெருமான் என்னும் தேனைப் பருகி மகிழும் பாகவதரின் மனத்திற்கு பாங்கல்லாதவை வஸிப்பதற்கு ப்ரயோஜனமில்லை. அது காசி என்ற பேரால் பிரகாசிக்காது. அயோத்தியாயினும் வசிக்க தகாது. அவந்தியாயினும் பாபத்தை போக்காது. காஞ்சி என்பதால் உயராது. மதுரை என்பதால் பெருமை பெறாது. மற்ற நகரங்களும் இப்படியே மதிப்பு பெறாது. பாகவதர்கள் உகந்து வஸிக்கும் இடமே புண்ய க்ஷேத்திரம்.**

If any place which is not suitable for bhagavadas who drink the honey called Bhagavan and immerse themselves in enjoyment, is not a place to live. It may be called Kaasi, Ayodhi, Avanthi, Kaanchi, Mathura. Still the name alone is insignificant to make a living there. Whereever the bhagavathas enjoy and stay, that is the holy place.

19-10 **பாகவதர்கள் உகந்து வசிக்கும் இடமே புண்ய ஸ்தலம். எத்தனை சிறப்பானாலும் அவர்கள் உகக்காதவை ப்ரபன்னன் வசிக்க ஏற்றது அன்று.**

Places which is favored by Bhagavathas are the holy places and those places which hare not favored by Bhagavathas, however great they may be, still not a good a place to stay for prapannan.

19-11 (tag)

Chapter 20
நிர்யாணாதிகாரம்
Soul's Exodus

20-1 **ஆத்மா உடலை விட்டு பிரியும்போது நடக்கும் முறையைச் சொல்வது இந்த அதிகாரம்.**

This chapter deals with the details of how the individua lsoul is being released from the body.

20-2 **உபாயம் செய்தவன், செய்யாதவன் இருவருக்கும் பொதுவான முறை - இந்திரியங்களை மனத்திலும், அதை ப்ராண வாயுவிலும், அதை ஜீவனிடத்திலும், அதை ஸூக்ஷ்மமான பஞ்ச பூதங்களிலும், அதை பரமாத்மா தன்னுடன் விரைவாக சேர்த்துக் கொள்கிறான். பிறகு அவனவனுக்கு தகுந்த நாடி மூலமாய் வெளியேற்றுகிறான். பின், அர்ச்சிராதி அல்லது தூமாதி வழியாய் அழைத்துச் செல்கிறான்.**

The common process for both the prapannan who has completed the means for the moksham and all others – First all the organs (indriyas) are joined with the mind. This joins with vital air (oxygen that keeps hi malive), that is joined with the individua lsoul, that is joined with subtle form of five fudamental elements, thati s joined with the Lord himself, quickly. Then this is removed through the respecitve naadi (nerve ending). The nthe Lord takes them to their respective paths.

20-3 **மூன்று தூண் ஆயாஸம். முதுகில் உள்ள மூன்று எலும்புகளைக் (த்ரிஸ்தூணம்) கடைந்து பஞ்ச பூதங்களின் ஸூக்ஷ்மமான அம்சத்தை எடுத்து ஆத்மாவுடன் சேர்க்கிறான். இதில் உண்டான வேதனை தீர அவனை அணைத்துக் கொள்கிறான், பகவான். இது எல்லோருக்கும் பொது.**

Human beings have three big bone structure on that back. At the tiem of death, this was churned to remove the subtle gross elements and joins that with the individual soul. This is a painful process. To subside the pain,

Lord embraces the soul with him. This is common for all souls, prapanna nor not.

20-4 **உறுதியான நிஷ்டையுடன், அபராதம் கலவாத கைங்கர்யம் செய்யுங்கால் நிலையான அகங்கார மமகாரங்கள் பிரபன்னனுக்கு ஏற்படாது. உண்டாயின் அது விவேகத்தால் அழியும்.**

When the prapannan truly understand himself and performs error-free service to Bhagavan and Bhagavathas, there won't be any self-ego. In case, it happens, that will be squashed through his discriminataive knowledge.

20-5 **பிரபன்னனுக்கு அபசாரங்கள் ஏற்படின் அது பிராயசித்தத்தலோ, பிராயசித்த பிரபத்தியாலோ இல்லை லகு தண்டனையாலே கழியும்.**

If any error occur for prapannan, it can be rectified through atonement actions, atonement prapatti, or going through small punishment.

20-6 **மோக்ஷத்தை யாசித்து செய்த பிரபன்னனுக்கு உலக விஷயங்களில் ஆசை ஏற்பட்டு அதனை பகவானிடத்து விரும்பினால் பிரபன்னனுக்கு**

- **அவற்றை கொடுப்பான்**
- **அவன் நன்மை கருதி கொடுக்காமல் இருப்பான்**
- **நல்ல புத்தியை ஏற்படுத்தி ஆசையை போக்குவான்**
- **சிலவற்றை அனுபவிக்க கொடுத்தும், சிலற்றில் வெறுப்பை உண்டாக்கியும் போக்குவான்**

If the individual soul beg the Lord for moksham and later if he desires some worldly pleasures and request those to the Lord then the Lord

- Will confer those on him
- Might refuse with the intention that is good for the prapannan
- Might give good sense for him so that he will giveup his desires
- Might give some to enjoy and the rest he will make the chetana to dislike them.

20-7 **அந்ய தேவதை சம்பந்தம் ஏற்படின் பரமை காந்திகள் சகவாசம் ஏற்படுத்தி அத்தால் போகுவான் தேவதாந்தர சம்பந்தம் நிலத்து நின்றால் ப்ரபத்தி பலிக்காது. அவர்களுக்கு நரகம் போன்றவை உண்டு. நற்காரியங்கள் பலனாய் பின் ஏதாவது ஒரு பிறவியில் நல்ல வாசனை உண்டாகி ப்ரபத்தியில் கொண்டு சேர்க்கும்.**

After prapatti, if a chetana gets relation with other demi-gods, Lord will establish connections with pure-devotees with the intentio nthat the prapannan will learn fro mthem. If the prapannan's involement with other demi-gods is permanent then his praptti will not be fruitful. They have regualr rewards/punishments like hell etc. Since they doen some good deeds, Lord will remember them and in some future birth he will get involved with praptt iagain.

20-8 **மஹாவிசுவாசத்துடன் ப்ரபத்தி செய்தவனுக்கு அதில் குறை வராது. உண்டாகில் அவனுக்கு உறுதியை அளித்து ப்ரபத்தியை நிறைவேற்றுவான் எம்பெருமான்.**

If the individua llearns everything and perofrms the praptti with an unshakeable faitho n Lord, then his faith will not be diminished. In case, it happens, the Lord will give enhance that and make sure his prapatti is fruitful.

20-9 **இக்குறைகள் இல்லாதவனுக்கு மோக்ஷ கால தாமதம் இல்லை**.

Those prapannas who does't have these shortcomings, there won't be any delay for them to reach moksham.

20-10 **இந்த பிரபன்னனிடம் மகிழ்ந்த எம்பெருமான் அவனை பலவிதமாய் திருத்தியும், காத்தும், மோக்ஷத்தை அளித்தும் இன்னும் போதாது என்ற மஹா ஆசையுடன் அவனை சேர்ந்தவர்களுக்கும் நன்மை செய்ய கருதுகிறான். உயிர் பிரியும் தருணம் வந்தபோது நிவர்த்தி ஆகாத அவன் புண்யத்தை அவனுக்கு வேண்டியவருக்கும் பாபத்தை வேண்டாதவருக்கும் அளிக்கிறான்.**

Lord is very delighted with this prapannan and He will correct him, if required, protect him, and will award the moksham. Still, the Lord won't be satisfied, He will look ways to please the prapanna's close circle. When its time for the prapannan to die, Lord will distribute his punyas to the prapannan's favorable people and sins to his enemies.

20-11 **சரீரம் சாயும்போது ஸாயுஜ்யம் அளிக்கிறேன் என்கிறபடி பகவான் மோஷத்தை அளிக்கிறான். ஆத்மா வெளியேற பகவானே ஏதோ காரணத்தை உண்டு பண்ணுகிறான்.**

For prapannan, Lord has promised the ultimate bliss when his biody is hshed. He keeps His promise and takes the prannan to moksham.

20-12 **ப்ரபன்னனின் மோஷதிற்கு உயிர் பிரியும் காலம் - பகல், இரவு, பக்ஷம், அயனம் போன்ற நியமங்களோ அந்திம ஸ்மிருதியோ மோக்ஷத்திற்கு அவசியமில்லை. மற்றவருக்கே அவை.**

There is no requirement on when the prapann has to die – like day time, uttharaayanam etc. Last second prayer is also not necessary.

20-13 **பிரபன்னனுக்கு சுவர்க்கம், நரகம் செல்லும் நாடிகளின் வழியை விலக்கி பிரம்ம நாடியான 101வது நாடி மூலம் அர்ச்சிராதி வழியில் சேர்க்கிறான். சூரிய கிரணங்களை பிடித்துக் கொண்டு செல்கிறான்.**

For prapannan, He eliminates the pathways that leads to svarga and naraga and uses the 100st nerve ending called bramma naadi and takes the individual soul through the bright path (archiraadi maargam). The chetanan climds through the rays of the Sun.

20-14 **அந்திம ஸ்ம்ருதி என்பது சாகும் தருணம், புலன்கள் ஒய்ந்தபின், மனம் ஒய்வதற்கு முன் வரும் நினைவு. இதை அருகில் உள்ளவர்கள் அறிய முடியாது. இறப்பவனும் இறைவனுமே இதை அறிவார்கள்.**

Last second prayer is the one when all the organs subside, but still the mind is working. This stage nnone can realize it, howwever they are close to the prapannan. The person who is dying and only the Lord knows.

20-15 **ஸர்வ சக்தனான பகவான், சேற்று கிணற்றில் தவறி விழுந்த குழந்தையை எடுக்க தானே கிணற்றில் குதித்த தகப்பனைப் போலே, இதயத்தின் உள்ளே இருக்கும் நுண்ணிய ஆகாசத்தில் இருக்கும் எம்பெருமான் உயிர் பிரியும் அக்காலத்திலே அந்த எம்பெருமானே இந்த லோகத்தில் மோக்ஷ பிரயாணத்திற்கு ஏற்பாடு செய்வதாய் 101 வது நாடியில் பிரவேசிக்க வைக்கிறான்.**

The all powerful Lord, jumps into the well like a father who heard that his child has fallen into the muddy well by accident.
He is staying inside the subtle space inside the individual soul's heart. He makes al lthe travel arrangements and makes that soul leaves through the bramma naadi.

20-16 (Tag)

Chapter 21
கதிவிசேஷாதிகாரம்
Soul's travel on superior path

21-1 **ஜீவாத்மா உடலை விட்டு பிரிந்து அர்ச்சிராதி மார்க்கம் வழியாய் மோஷம் போய்ச் சேருவதைச் சொல்கிறது இந்த அதிகாரம்**

This chapter details how the individual soul sheds the gross body and starts the journey through bright route (archiraadi maargam) and eventually reaches moksham.

21-2 **ஸ்தூலமான சரீரத்தில்**

- **எம்பெருமான், இதயத்திலிருந்து ஜீவனை கிளப்பி,**
- **101ம் நாடியில் செலுத்தி,**
- **தலையில் உள்ள உச்சித் துவாரமாகிற பிரம்ம நாடி வழியாய்**
- **ஸ்தூலமான உடலிருந்து அகற்றுகிறான்.**

Lord lifts the individual soul from the heart through the 101st naadi. The soul is the nreleased thorugh a small aperture on the head called the bramma naadi. Thus the soul is separated from the gross body.

21-3 **ஸூக்ஷ்ம சரீரத்தில்**

1. **கண்ணுக்கு புலப்படும் உடலிருந்து பிரிந்த ஜீவனுக்கு கண்ணுக்குத் தெரியாத நுண்ணுடல் தந்து**
2. **அதை அர்ச்சிராதி மார்க்கம் (தேவயாநம்) என்னும் வழியில் சேர்க்கிறான்**

Gross body is visible to naked eye. Once it is shed, Lord give the soul a new subtle body for travel purpose. He then guides it go through th e bright path or archiraadi margam.

கண்ணுக்கு தெரியம் சரீரம் ஸ்தூலமானது. கர்மவினைக்கு அது தேவை. ஆனால் பிரபன்னின் உயிர் பிரியும்போது கர்மங்கள் கழிந்து

விட்டன. அத்தால் அதற்கு சூக்ஷ்ம சரீரம் (temporary ஆக) அவனுடைய உபாய அனுஷ்டானத்தால் விளைவது.

One may ask why the Lord gives a subtle body? Though the soul is still on the earth, its accmulated deeds (karma) are all gone. Till the soul gets out of the gross matter (prakriti) it needs a body for travel. Bhagavan gives a subtle body.

21-4 **ஸூக்ஷ்ம சரீரத்தில்**

- **நுண்ணுடலோடு (சூக்ஷ்ம சரீரம்) உள்ள இந்த ஜீவனை அக்னி முதலான ஆதிவாஹிகர்கள் மரியாதையுடன் அழைத்து சென்று அவரவர் எல்லை வரை வந்து வழி அனுப்புவர்.**
- **இவை 1. அர்ச்சி: (அக்னி), 2. பகல் (அஹஸ்), 3. சுக்லபக்ஷம், 4. உத்தராயணம், 5. ஸம்வத்ஸரம் (ஆண்டு), 6. வாயு, 7. சூரியன், 8. சந்திரன், 9. வைத்யுதன் (மின்னல்) இவற்றின் அதிஷ்டான தேவதைகள் வரிசையாய் அவரவர் லோகத்திற்கு அழைத்துச் செல்வர்.**

The soul with this subtle body is greeted by several angels, specfically Adhivaahikars – which is a group led by Agni (Fire God). They take in turns, greets this departed soul to their land and pay due respects. Those angels are – Fire (archis), day (pakal), bright fortnight (sukla paksha), bettert half year (Uttarayana), Year (samvatsaram), Wind (Vaayu), Sun (Suryan), Moon (chandran), lightening (minnal)

21-5 **ஸூக்ஷ்ம சரீரத்தில்**

- **பிரகிருதி மண்டலம் தாண்டும் வரை மின்னல் தேவதைக்கு வருணன், பிரஜாபதி, இந்திரன் என்பவர் துணை புரிவர்.**
- **அவர்களும் "மாதவன் தமர் என்று வாசலில் வானவர் போதுமின் எமது இடம் புகுக" என்று வரவேற்று வழி அனுப்புவர்.**
- **பிரகிருதியின் எல்லையில் சூக்ஷ்ம சரீரத்தை "ஆறு கடக்கைக்கு பற்றின தெப்பம் போகவிடுமாப்போலே" போக விட்டு விரஜா நதியை, தன் ஸங்கல்ப ஞானத்தால் கடக்கிறான்**

With the subtle body

Angels like Water (Varunan), creator (prajapathi), Indran would help the lightening God till the soul crosses the gross matter (prakriti). At the boundary of prakriti and before Srivaikuntam is the river virja. This soul leaves the subtle body and crosses the virja by intention (sankalpam). The subltle body wil lbe discarded like a float which was used as a safely device to cross the flooded river.

21-6 **விரஜா நதியின் அக்கரையிலே (ஸ்ரீவைகுண்டத்திலே)**

- **ஸுத்த ஸத்வமான சரீரம் பெற்று திவ்யமான திருமேனியுடன்**
- **ஐரம்மதீயம் என்னும் திவ்ய தடாகம் சேர்ந்து**
- **சோமஸவநம் என்னும் அசுவத்த மரம் கீழே**
- **500 அப்ஸரஸ் கையில் மாலை, மை, வாஸனைப் பொடி, ஆடை, ஆபரணம் இவற்றால் அலங்காரம் செய்யப் பெற்று**
- **இவன் திவ்ய கந்தம் ரஸ, தேஜஸ் பெறுகிறான்**
- **நித்யசூரிகள் இவனை வரவேற்று கோபுரம் வாசல் சேர்ப்பர்**
- **இந்திரன் ,ப்ரஜாபதி என்ற வாயிற் காப்பான்களை அணுகி**
- **அப்ராகிருத ராஜோபசாரங்களை பெற்று**
- **பகவான் எழுந்தருளி இருக்கும் திருமாமணி மண்டபத்தில் உள் புகுவான்**
- **எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திவ்யமான பர்யங்கத்தில் ஏறி தன் இயற்கையான ஸ்வபாவத்தை அடைகிறான்**
- **எம்பெருமான் தன் திருவடிக்கீழ் சேர்த்து இவனுக்கு தனக்கு ஸமமான ஆனந்தத்தை தந்து மகிழ்வான் (ஸமம் எல்லாவற்றிலும் அல்ல)**
- **இவனை நித்ய முக்த கோஷ்டியில் சேர்ப்பான்**
- **அங்கே எல்லாவித பணிகளையும் செய்து மகிழ்ந்து எம்பெருமானையும் மகிழ்விப்பன்**
- **ஸார்வபௌமனான அரசன், கிளிக்கு பாலூட்டி அது மகிந்து அதைக் கண்டு தானும் மகிழ்வதைப்போல் பகவான் கைங்கர்ய ரஸத்தை அளித்து தானும் அனுபவித்து மகிழ்வான்**

On the other bank of Viraja river

- Soul gets a pure body (suddha sattvam),
- reaches a pond called Irammya deepam,
- then goes to a tree called somavanam.

- Under that tree, he will be greeted by 500 beautiful maidens andthey would do all the dressing and make-up for him.
- Now the soul gets divine smell, divine glitter etc.
- Eternals, who are never born greets him to the temple entrance.
- He will approach the doorkeepers called Indran and Prajapathi.
- He wil lbe offered all kinds of respects and welcome.
- Slowly he goes into the hall where Bhagavan is in his sitting posture on His Serpent throne.
- He achieves his final realization of the innate nature.
- He bows and prostrates to the Bhagavan's feet.
- The Lord slowly lifts him up and shares his supreme enjoyment with him. Lord grants him the ecstatic happiness as equal to His.
- He makes him to join the other Eternals and liberated souls.
- There the new soul does enjoys in performing all kinds of service (kaimkaryam).
- The all-powerful Lord's action is like that of – A king feeds the milk to the parrot; the parrot enjoys and so does the King.

21-7 **பரமபதம் செல்ல அர்ச்சிராதி மார்கம் தவிர வேறு சில வழிகளும் உள்ளன. அவை சில அதிகாரிகளுக்கே. மது வித்யை, வ்யூஹ உபாசநம் செய்பவர்கள், பிரம்மா, இந்திரன் ப்ராகிருத ப்ரளயத்தில் மோக்ஷம் அடைவதாய் சொல்கிறார்கள்.**

There are paths other than bright path (archiraadi maargam) for a soul to reach moksham, so says scholars. But they are very speicfic to certain types of people. For example - some who follow madhu vidya one of the ritual under bhakthi yoga; some who does the emanation contemplation; and even Bramma and Indran at the end of the dissolution of gross matter.

21-8 (tag)

Chapter 22
பரிபூர்ண ப்ரம்மானுபவம்
Absolute ideal enjoyment of the Brahman

22-1 **பரமபத்தில், பரப்ரஹ்மமான ஸ்ரீமந் நாராயணனை பரிபூர்ணமாய் அனுபவிக்கும் ஆனந்தத்தை சொல்வது இந்த அதிகாரம்.**

This chapter describes about the individual soul which has gone to Srivaikuntam, how it enjoys the Lord with an ectstic, complete, flawless happiness.

22-2 **ப்ரகிருதியை தாண்டி ரஜோ, தமோ குணங்கள் அற்ற பரமபதத்தில், விசித்திர லீலாவிபூதி, நித்ய விபூதி நாயகனான ஸ்ரீ:யதியான பரமபதநாதனை ஆதிவாஹிகர்கள் முலம் அடைந்த பிரபன்னன், தன் இயற்கையான ஆகாரங்கள் வெளிப்பட்டு, பகவானை விட்டு பிரியாதபடி கலந்தவனாய், எட்டு குணங்களையும் பலன்களையும் பெற்று, திரும்புவது என்கிற நினைவற்ற அநுபவத்தில் பகவானுடன் மிகுந்த ஒற்றுமை பெறுகிறான்.**

The individual crosses the gross matter (prakriti) with the help of the guides (adhivaahikar) of bright route (archiraadi margam) and reaches the place Srivaikuntam which has only pure pristine character (suddha tattvam) which belongs to the Lord Sriman Naaraayana who is in charge of both playful universe (leela vibhuti) and ultimate bliss (nithya vibhuti); there all his innate nature (svaroopam) is brought out. He doesn't know what is separatio nfro mthe Lord. He gets all the eight great characters defined by scripts (vedhAs) and their auspicious outcome. His enjoys so much without any idea of "returning back" by having the pleasure equivalent to that of Lord.

22-3 **பகவத் ஸ்வரூபம் ஆனந்தம். அத்தால் அதைச் சேர்ந்தவையும் ஆனந்தம். எனவே பகவத் ஸ்வரூபம், ஜீவ ஸ்வரூபம், ஸ்ரீவைகுண்டம் என்ற மூன்றையும் பரமபதம் என்றும் சொல்வர்.**

The true nature of the Lord is happiness and the Lord makes His surrounding also very happy. So the word "paramapadham (Highest state) reflect Lord, individual soul and the place called Sri vaikuntam.

22-4 **அநுகூல, ப்ரதிகூலமாய் தோன்ற வைக்கும் ஸம்சார கர்ம வினை கழிந்ததால், எல்லாம் இடைவிடாத பகவத் ஸங்கல்பத்தால், பகவத் அனுபவத்துடன் கூடிய அநுகூலங்களாகவே இருக்கும்**

When one is born on this universe, because of accumulated deeds (karma), some items or work seems to be favorable and others are not. In Srivaikuntam, since there is no karma, everything will be favorable to the soul due to His grace.

22-5 **இப்படி பரிபூர்ண ப்ரஹ்மானுபவம் பெற்ற பிரபன்னன் கர்ம வினையால் திரும்பி வருவதில்ல, ஸம்சாரமில்லை.**

Thus when the individual soul continued to have a complete enjoyment, it never comes back to the earth (prakriti) due to accumulated deeds (karma). There is no bondage of birth/death cycle for him.

22-6 **ஆனால் எம்பெருமானின் அருளுடன், அவன் விருப்பத்துடன் எங்கும் போகலாம். அவன் ஞானமோ, பரிபூர்ண ப்ரஹ்மானுபவமோ எங்கும் சுருங்குவதில்லை**

But the mukthan can go anywhere as pleases due ot the blessings of the Lord.There is no shrinkage in his knowledge or his enjoyment of the Lord anywhere.

22-7 **மத்வ மதம் ஸம்சாரத்தில் சரீர காரணமாய் தேவ, மனுஷ பிரிவு போல் மோக்ஷத்திலும் உண்டு உயர்ந்த தேவர்கள், அதிகமாய் உபாஸனம் செய்தவர்கள் இவர்களின் ஆனந்தம் அதிகமாய் இருக்கும் என்பது அவர்கள் கருத்து. இது தவறு.**

Dvaita philosophy, propagated by Madhvaacharya has a different concept - They believe the happiness among mukthas can vary. They are not equal. For example angles (devas) have higher happiness since they reached moksham fro ma higher plane compared to human beings. Those who have done more bhakthi before can als ohave more happiness. This not correct correct according our tradition.

22-8 **முக்தன் பரமாத்மாவுடன் பரம ஸாம்யத்தை அடைகிறான் என்றது உபனிஷத். (பரமாத்மாவிற்கு இணையான போகங்கள் பெறுகிறான்) ஆனந்த அநுபவத்தில் பகவான், முக்தர், நித்யர், இன்று வந்து சேர்ந்த பிரபன்னர் இவர்களில் ஏற்ற தாழ்வு என்பதற்கு ப்ரஸக்தியே (வாய்ப்பே) கிடையாது**

Upanishad declares that the mukthan gets the ultimate equality with the Lord; what it is the equality in happiness. In terms of enjoyment and happiness there is no difference among the Lord, eternals, mukthas and the newly joined prapannan.

22-9 **எந்த சரீரத்திலிருந்து மோக்ஷம் பெற்றாலும், எந்த காலத்தில் பெற்றாலும் ஆனந்த தாரதம்யம் இல்லை.**

Unbiased happiness is granted for everyone irrespective of what place, when or what body they have come from.

22-10 **முக்தனுக்கு பர்பூர்ண ப்ரஹ்மானுபவம் வருமா? என்று ஒரு கேள்வி. உண்டு**
ஸர்வதேச, ஸர்வகால, ஸர்வாவஸ்தைகளிலும் பகவானின் ரூப, குண, விபூதிகளை, நிரதிசய போக்யமாய் அனுபவித்தல் பர்பூர்ண ப்ரஹ்மானுபவம் இதில் பகவானுக்கும் முக்தனுக்கும் அநுபவத்தில் ஸாம்யம்.
ராஜ மஹிஷிக்கு ராஜ போக்யம். அரண்மணை போன்ற இடங்களும், உபகரணங்களும் அவனுடைய உடைமைகளும் அனுகூல போக்யம். பகவான் போக்யமானதால் அவன் விபூதிகளும் போக்யமாகலாம்.

Question arises whether a complete ideal enjoyement is possible for muktha? Muktha serves the Lord without any barrier from time, space or state. In this enjoyment he is equal to that of Lord.
The queen likes her husband, the King. Any item or people who the King likes also looked upon favorably by the queen. Similarly, any item that belongs to the Lord will please the muktha.

22-11 **பரமபதம் போக்யம், சரி. லீலாவிபூதி எப்படி போக்யம்?**
பித்த தோஷம் உல்ளவனுக்கு பாலில் வெறுப்பு. அது அகன்றவுடன் பால் அனுகூலம்.
ராஜகுமாரன் சிறைச்சாலையில் உள்ளபோது வெறுப்பு. நீங்கியவுடன், அது அப்பா, ராஜவின் உடைமை என்ற நினைவால் போக்யம்.
ஒரே பொருள் லீலாவிபூதி ஒரிவனுக்கு சுகம் - முகதனுக்கு. ஒருவனுக்கு வெறுப்பு - ஸம்சாரி. இது பகவத் ஸங்கல்பத்தால்.

One may question that complete overflowing happiness is possible in Srivaikuntam which is easy to believe. But how the muktha will have the same feeling on earth?
If a person is sick he may not like certai nfood, but once sickenss is gone he would like the same stuff.
Whe nthe pricne was jailed, he hated it. But when he was released, once he understand everything is owned by his father, he likes thae jail too, but from outside.
Same earth is horrible for bhakthas who are not liberated but is pleasant for the mukthas, that is due to Lord's intentions (sankalpam).

22-12 **முக்தி பெற்றவன் எம்பெருமானுக்கு சமம். எதில்? ஆனந்தத்தில். மற்றவற்றில் அல்ல. முக்தனுக்கு ஜகத்வ்யாபாரம் கிடையாது.**

One attained the moksham is same as the Lord and has has equality in happiness only. He has part in creation, sustenance of universe etc.

22-13 **எம்பெருமானுக்கே உரியவை**

1 **ஜகத் காரணகத்வம் - ஸ்ருஷ்டி**
2 **ஜகத்காரணகத்வம் - ஸ்திதி,**

3 **ஜகத்காரணகத்வம் - ஸம்ஹாரம் (ஜீவனுக்கு ஜகத்வ்யாபரம் இல்லை)**
4 **அநுப்ரவேசம், அந்தர்யாமியாய் இருத்தல்**
5 **மோக்ஷ உபாஸகானாய் இருத்தல், மோக்ஷம் அளித்தல், எல்லா பலன்களையும் அளித்தல்**
6 **பிராட்டியோடு சேர்ந்திருத்தல்**
7 **எல்லா பொருள்களுக்கும் ஆதாரமாய், நியாந்தாவாய் ஸ்வாமியாய் இருப்பது**
8 **எல்லா சொற்களுக்கும் பொருளாய் இருத்தல்**
9 **வேதங்களால் அறியப்படுதல்**
10 **எங்கும் பரந்த ஞான, ஆனந்த ஸ்வரூபியாய் இருத்தல்**

Things that are exclusive to the Lord --

- Reason for the universe creation
- Reason for the universe sustenance
- Reason for the universe destruction
- Power to get into all bodies and stay there hidden (antharyaami)
- Ability to grant moksham and other benefits
- Support, Control and own everything
- Represent the meaing of all words
- To be understood by the vedhAs
- Pervasive everywhere with complete knowledge and happiness

22-14 **இவற்றை எம்பெருமான் செய்ய அதைக் காணும் முக்தனுக்கு ஆனந்தத்தில் ஸாம்யம். ஞானத்தில் ஸாம்யம். செய்யும் காரியங்களில் ஸாம்யம் இல்லை.**

All the above actiosn are carried out only by the Lord. Muktha watches that gets part in enjoyment only.

22-15 **முக்தன் ஏன் திரும்பி வருவத்தில்லை**

- **பரிபூர்ண ப்ர்ஹ்மாநுபவம் - வேறே உயர்ந்த ஆசை கிடையாது**
- **கர்மா கிடையாது - அத்தால் ஸம்சார பிணை கிடையாது**
- **ஞான சுருக்கம், கிடையாது - தவறு செய்ய முடியாது**
- **சாஸ்திரங்கள் கிடையாது - மீறும் வழி இல்லை**
- **பகவானுக்கு இவனிடம் அதிகமான அன்பு - எம்பெருமான் கர்மபூமியில் தள்ள மாட்டான்**

- **பகவான் உகப்பே இவன் உகப்பு - பகவான் நிக்ரஹத்திற்கு வாய்ப்பு இல்லை**

Why muktha never returns into bondage?

- His enjoyment is complete and ideal – No need to look at anything
- No associated deeds (karma). Because of that there is no bondage
- No shrinkage in his knowlesdge. So he won't commit any mistake
- No scripts (sastras) in moksham. When there is no rule, he is not viable for breaking it
- Lord loves him enormously. So He won't push him down to earth
- Muktha's desire is whatever Lord's desire is. So, he will not get into the angry side of the Lord.

22-16 **ஆக, முக்தி தெசையில் ஆத்மா உள்ளவரை பரிபூர்ண ப்ரஹ்மாநுபவம். அத்தால் அது நித்யம்.**

So, in the muktha satge, complete ideal enjoyment as long as the athma is alive. That means it is ever permaent.

22-17 **முக்தன், ப்ரஹ்மம் ஐக்யம் கிடையாது. ப்ரஹ்மமே ஆகிறான் என்பது கிடையாது. ப்ரஹ்மத்தை போல ஸாம்யம், ஒற்றுமை சிலவற்றில் மட்டுமே. எல்லாவற்றிலும் கிடையாது.**

There is no unity of muktha and Brahmam. Muktha will never become the Lord. He will be equal to Lord in some aspects only. Not in everything.

22-18 **ஒரு சேதனன்**

- **ப்ரதமாசாரியனால் கடாக்ஷிக்கப்பட்டு (. உபோத்காதம்)**
- **ஸாரமான ரஹஸ்யத்ரயத்தை தெரிந்தவனாய் (ஸார நிஷ்கர்ஷாதிகாரம்)**
- **சித், அசித், ஈச்வர தத்வங்களை தெரிந்து (ப்ரதாந ப்ரதிதந்த்ரம், . அர்த்த பஞ்சகம், . தத்வத்ரயம், . பரதேவதா பாரமார்த்யம்)**
- **உலக பற்றை ஜயித்து (முமுக்ஷுத்வம்)**
- **பக்தி, ப்ரபத்தியில் நிஷ்டை உடையவனாய் (. அதிகாரி விபாகம்)**

- **உபாய தெளிவுடன் (. உபாய விபாகம்)**
- **வேறு வழியற்று வருந்தியவனாய் (ப்ரபத்தி யோக்யம்)**
- **அங்கங்களுடன் சேர்ந்த (பரிகர விபாகம்)**
- **பரந்யாஸத்தால் (. ஸங்கப்பரபதநம்)**
- **செயலை முடித்தவனாய் (. க்ருத க்ருத்யம்)**
- **தன் நிஷ்டைக்கு ஏற்ற (ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநம்)**
- **பணி முறையை (. உத்தர க்ருத்யம், புருஷார்த்த காஷ்டை)**
- **பக்த தெசையில் சாஸ்திர விஹிதனாய் (. சாஸ்த்ரீய நியமனம்)**
- **குற்றங்கள் அற்றவனாய் (அபராத பரிஹாரம்)**
- **ஒரு நல்ல தேஸத்தில் (. ஸதாந விசேஷம்) வசித்து**
- **ஸ்தூல சரீரத்தை விட்டு (. நிர்யாணம்)**
- **ஸூக்ஷ்ம சரீரத்தை விட்டு (. கதி விசேஷாதிகாரம்)**
- **அந்த எம்பெருமானை நித்யமாய் அனுபவிக்கிறான் பரிபூர்ண ப்ரஹ்மாநுபவம்).**

The individual soul

- Through the blessings of a great aachrya (ch.1)
- Get to know the essence of the three mantras (2)
- Undestand the intricacies and reltionship between sentient, nonsentient and the Lord (3-6)
- Overcome the magentism of wolrldly pleasures (7)
- Have a stabilized mind on bhakthi and prapatti process (8)
- With a clear mind on the proper means (9)
- Lament on his helpless position on other means (10)
- Combined with the accessories (11)
- Of that process of bharanayaasam (12)
- Having completed the requied task (13)
- Suitable to his determined state of living (14)
- Perform the service (15-16)
- Obey the scripts (17)
- Without any flaws (18)
- Stay in a spiritual place (19)
- Leave the gross body (20)
- Leave the subtle body (21)
- Enjoys the Lord permanently (22)

22-19 (tag)

அர்த்தாநுசாஸந பாகம் முற்றும்

End of Part - I

Part - II
ஸ்த்திரீகரண பாகம்

இதுவரை சொல்லிய 22 அதிகாரங்களில் எழும் சந்தேகங்களை தீர்த்து, மறுப்புகளை தகர்த்து, அர்த்தங்களை உறுதிப் படுத்துவது இந்த பாகம். இதில் நான்கு அதிகாரங்கள்

This part II consists of 4 chapters. They primarily deal with clearing the doubts that arises from the earlier discussions invalidates the negative arguments and enhances the true meanings described earlier.

இது தேவையா என்னில், நல்ல காரியங்களுக்கு தடையும், சந்தேகங்களும் அதிகம். விஷயங்களை கண்ணாடி போல் அறிவது அவசியம்.

Is this necessary?, one may ask. It is common to see the hurdles are huge when the attempted task is nobler. Also doubts are enormous. Essential information has to be learned crystal clear.

சாஸ்திரங்கள் பல வகையாய் இருப்பதால், விபரீத ஞானம், கெட்ட சேர்க்கை இவற்றால் பிரபன்னனின் அறிவு தடுமாறக் கூடும்.

Authoritative sciptures (sAstrAs) are many. Even prapannas get distracted by irrelevant and incongruent knowledge, association with wrong people.

Chapter 23
ஸித்தோபாய சோதனாதிகாரம்
Existing Means

23-1 **இதுவரை சொன்னவை முமுக்ஷுக்கு தெரிய வேண்டியவை. அவற்றை அறிந்து, மனம் தெளிந்து, சந்தேகம் இன்றி இருப்பவன் க்ருதார்த்தன். அவனுக்கு இவ் அறிவுரையே சிறந்தவை. போதும்.**

So far, what has been told are the essential knowledge needed for the one who is the aspirant of moksham. He needs to learn these clearly, and without any doubt.

23-2 **ஆயினும், சிலருக்கு உண்டான ஞானத்தில் கலக்கமும், சந்தேகமும் ஏற்படலாம். குறுகிய மனத்துடன், அல்ப ஞானம் கொண்டு மற்றவரை கலக்குபவர் சிலர். இவர்களை நல்ல யுக்திகளைக் கொண்டு திருத்தி, சரியான அறிவைத் தரவேண்டும் என்று கீழே நாலு அதிகாரங்கள்.**

But still, some prapannas may end up with the distorted knowledge. Narrow-minded others may try to sway them into wrong ideas. Correcting these people with proper technique and putting them in the right direction is what the main theme of the next four chapters.

23-3 **மோக்ஷத்தை அளிக்கும் லக்ஷ்மீநாராயணனே உபாயம். இது நம்மால் செய்யப்படாமல் ஏற்கனவே ஸித்தமாய் உள்ளதால் ஸித்தோபாயம். அந்த உபாயத்தில் உண்டான கலக்கங்களை செப்பனிடுதல் (சோதனம்) இந்த அதிகாரம்.**

Sriman NaaraayaNaa, the grantor of moksham (ultimate bliss), is the means. Since this means is already existing without any effort from us, it is called existing means (sittoopaayam). Bhagavan sriman nArAyaNA is the existign means. The purpose of this chapter is to repair any problems that exist in that means.

23-4 **ஸாத்யோபாயம் என்பது நம்மால் செய்வதற்கு தகுந்த உபாயம். பக்தி, ப்ரபத்தி இந்த இரண்டும்.**

Achievable means is the one that is adoptable by people like us. Bhakthi and praptti (total unconditiona lsurrender) are the two options here.

23-5 **பகவானே முக்யமான, நேர் உபாயம். அது ஸித்தோபாயம். ஆனால் அநாதிகாலமாய் குவிந்த நம்முடைய பாவங்களின் சேர்க்கை அவனுக்கு கோவத்தை உண்டாக்குகிறது. அவனுடைய கோவத்தை தணிக்க உதவுவது ஸாத்யோபாயம். (உண்மையில் நம் பாவம் பகவானுக்கு கோவம் என்றும், நம் புண்யம் அவனுடைய மகிழ்ச்சி என்றும் சொல்கிறோம்)**

Bhagavan is the direct and only means for moksham. He is the existing means. But He is mad on us due to our piles of sins coming from countelss janamaas (births). Our adoptable means of bhakthi or praptti would help to cool down His anger. In reality, Bhagavan is not happy or angry on us. Our merits (puNyaas) and sins are called like that]

23-6 **உதாரணமாக, குழந்தை செய்த தவற்றில் மேல் கொண்ட கோவத்தால் தந்தை அதை விளையாட park அழைத்துச் செல்வதை மறுக்கிறார். குழந்தை அவர் காலைக் கட்டிக் கொண்டு இனிமேல் தவறு செய்வதில்லை என்கிறது. அது ஸாத்யோபாயம். அது தந்தை கோவத்தை தணிக்குமே தவிர அந்த செயலே விளையாட அழைத்துச் செல்லாது. அத்தால் கோவம் குறைந்த தந்தை மட்டுமே பலனைத் தர முடியும்.**

Let us understand this by an example. A father gets angry on the child on its behavior. So he refuses to take the child to the park and play. The kid understands its error and begs the father by holding his feet that he will not do that again. That begging alone will not take him to the park. But the father who is cooled by this action is the one who takes the child to the park.

23-7 **சேதனன் தெளிவாய் அறிந்து கொள்ள வேண்டியவை மூன்று. 1. ஸித்தோபாயம், 2. ஸத்யோபாயம், 3. உபாயத்தின் பெருமை இவற்றை ஒரு சேதனன் ஏன் அறியாமல் இருக்கிறான் என்றால் அது அவனது கர்ம வினையே.**

If a chetanA (an individual soul) does not understand this highly acclaimed existing means, achievable means and the greatness of all these means, it can be attributed only to his karma.

23-8 **இந்த அறியாமையை போக்குவது - 1. பிராட்டியின் பரிவுரை, 2. ஆசாரியன் அருள், 3. ஸம்ப்ரதாயத்தை அறிதல்.**

Three reasons exist to remove this ignorance. 1. Recommendation from pirAtti 2. Grace of the aachaayaas. 3. Understand and learn the sampradAyA.

23-9 **பிராட்டியை முன்னிட்டு செய்த சரணாகதியில் அவள் மகிழ்ந்து "குறை நீக்கி நிறை ஆக்கி துறை என" என்பது போல் சேதனனின் தீய குணங்களை போக்கி நற்குணங்களை தந்து அவனை எம்பெருமான் கடாக்ஷிக்க உபாயம் ஆகிறாள். இது கத்யத்தில் "அஸ்து தே" என்று அவளுடைய வார்த்தை.**

We perform prapatti through piraatti. She feels happy with our saranagathy, and in turn helps us in removing the bad, injecting the good and stand asa mediator to submit ourselves to the Lord. She is the primary reason to achieve the grace of the Lord. In gadyam she says "Let it happen" (asthu the).

23-10 **ஆசாரியன் செய்யும் உபகாரத்திற்கு திருப்பி செய்வது என்பதை நினைத்துப் பார்க்கக்கூட முடியாது. அவருக்கு பணி செய்வது, அவர் புகழை பரப்புவது போன்ற காரியங்களால் அவருடைய அருள் நிலைத்து நிற்கும். பராசாரர், மைத்ரேயர் போன்றவருக்கு ஞானம் ஆசாரிய பணியினால் விளைந்தது.**

The grace and hlp what we receive from achaaryaa is immense. We can't eve nimagine to return an iota of what they have done. The least we can do is perofrm service, spread his fame. By doing those his blesings will be showered permanently on us. Paraasaraa, Maitreeyar etc. are examples of acquiring enormous wisdom by performing service to the Aaahaaryaa (aachaarya kaimkaryam).

23-11 **ப்ரதம ஆசாரியன் ஸ்ரீமந் நாராயணனிடமிருந்து வழி வழியாய் வந்துள்ள பரிசுத்தமான ஸத்விஷயங்களை, புகழ், பொருள், பிறர் வழிபடுதல் இவற்றில் ஆசையின்றி, கருணையே வடிவான ஒரு ஸதாசாரியனிடம், ஒரு சிஷ்யன் ஸத்வ குணத்துடன் பிராத்திக்க, அவர் தத்வ, ஹித, புருஷார்த்தங்களை விளக்கியும், சுருக்கியும் உபதேசிக்க அதை உன்னிப்புடன் கேட்டு பெரும் பயன் பெருகிறான்.**

Sriman NaaraayaNaa is the primary guru. From Him, this great and pure tradition is handed over for generations. An aachaaryaa who has learned these through tradition and who is completely void of qualities like "desire on fame and material wealth, love of being worshipped by others" and who is the emodiment of sympathy and compassion needs to be accessed by a disciple with peaceful and righteous thoughts (sattva gunaa). Whe nthe disciple requests him, he teaches the reality, means and ends (tattva, hitha, purushArttam) briefly and extensively as required. Whe nthe disciple listens to that carefully he achieves the greatest benefit.

23-12 **இப்படி ஆசாரியனிடம் உபதேசம் பெறுபவர் இரண்டு வகை. 1. கூரிய ஞானம் இல்லாதர் விசேஷமாய் சாஸ்திரங்களை அறியாது ஆசாரியன் அறிவுரையே உயர்ந்ததாய் பின்பற்றி கலக்கம், துன்பம் இல்லாது நல்வாழ்வு பெறுகின்றனர்.**

Thus the disciples who benefit from the intimate advice from aachaaryaas are two types. 1. Those who do not have the keen and sharp mind, without going through extensive saastraa knowledge, still they can achieve the highest happiness without any doubt or confusion by just following the instructions of the aachaaryaas.

23-13 **ஆனால் சாஸ்திரங்களை நிலை நிறுத்துதல் புத்திமான்களுக்கு அவசியம். குத்ருஷ்டிகளை தகர்த்தல் முக்யம். ஆகவே யுக்திகளுடன் இவற்றை கற்று தெளிந்து கலக்கங்களை நீக்குதல் அவசியமாகிறது. இது இரண்டாம் வகையினர்.**

Establishing the real meanings of the saastraas are an important task for the learned scholars. They need to uproot all crooked arguments. So it becomes important for them to learn the proper method and understand clearly without any doubt. These are second type of disciples.

23-14 **கேவல ஞானம் கொண்டவர் ப்ரமாணங்களுக்கு விபரீத பொருள் சொல்லி "ஆள்பவன் திருட்டு", "ஆளுகை திருட்டு" என இரண்டு அபஹாரங்களை செய்கின்றனர்.**

Those who have the cheap and irreleavant knowledge keep telling incongruent meaning to the scriptures (vedahAs). By doing this they are committing two thefts - Owner theft and owned theft.

23-15 **ஆள்பவனை திருடுதல் - இது விபூதிமானின் அபகாரம்.**

- **பகவான் ஸ்ரீமந் நாராயணன் ஸகல சராசரங்களையும் ஆள்பவன். இது ப்ரமாண ஸித்தம்.**
- **இதை ஒப்புக் கொள்ளாதவர், இல்லை வேறு ஒருவன் இவனை விட உயர்ந்தவன், எம்பெருமான் அவனுக்கு கீழ் அடி பணிந்தவன் என்ற துர்வாதம் செய்பவர்கள் செய்யும் திருட்டு.**

Owner theft – This is about stealing the Lord

Lord Sriman NaaraayaNaa is the owner of everything. He supports and controls all the animate and inanimate objects.

Those who does not accept this, or argue that someone else is higher than Him and Lord NaaraayaNaa is under that person are al lregarded as the owner theft.

23-16 **ஆளுகையை திருடுதல் - இது விபூதி திருட்டு.**

- **ஆளப்படும் பொருளின் இருப்பையே மறுப்பது,**
- **அவை ஸ்வதந்த்ரமானவை என முரண் பிடிப்பது**
- **அவை எம்பெருமானை விட்டு மற்ற ஒன்றை அண்டியவை (பாரதந்திரியமானவை) என பிடிவாதம் செய்வது**

Owned theft – This is stealing of the owned items

Those who refuse the mere existence of certain objects; some say the objects are independent of the Lord; Or argue that those objects depends on something other than the bhagavAn – all these constitute owned item theft.

23-17 **பிரபன்னனுக்கு ஸ்வரூப ஞானம் மிக அவசியம். அதில் தெளிவும், உறுதியும் இல்லாவிடின், மற்றைய கேவல யுக்திகளால் இழுக்கப்பட்டு மேலே சொன்ன அபராதங்களுக்கு ஆளாகின்றனர்.**

The knowledge on their innate nature is essential for prapannas (those who have doen complete and tota lsurrender). If they don't have any clarity or steadfastness then they could be attracted by cheap and irreleavant arugements and fall prey to the above crimes.

23-18 **மற்றொருவனுக்கு கொடுத்த பொருளை பிடுங்கிக் கொள்வது பாபம். தன் திருட்டை உணர்ந்து உரியவனிடம் திருப்பித் தந்த பொருளை மறுபடியும் புத்தி கெட்டு திருடுவது மஹா பாபம்.**

If a person gives an item to somone and if the giver seize it back from recipient then it is a sin. And now taking that to the next level, if one returns a stolen item to the owner and then tries to steal it back again then it is a huge sin.

23-19 **ஆகவே பிரபன்னன் இந்த கொடிய பாபம் வராது காத்து கொள்ள வேணும். ஞானிகளான பிரபன்னர்களை எந்த சூழ்நிலையும், சேர்க்கையும் பாதிக்காது. ஆனால் எல்லா பிரபன்னரும் சிறந்த ஞானி அல்ல. எனவே ஸத்ஸங்கம் அவசியம்.**

So, the prapanna should protect oneself from committing this huge sin. If they are wise, then any situation or surrounding people won't botherthem. They won't be swerved. But unfortunately, not all prapannas fall into this category and hence good association (sathsangam) Is inevitable.

23-20 **ஸித்தோபாயம் பற்றிய சந்தேகங்களும் அவற்றின் விளக்கங்களும்**

Now let us look into some doubts raised on existing means (siddoopaayam), counter arguments and explanations

23-21 **ஸித்தோபாயமன எம்பெருமான் ஸ்வதந்த்ரன். தானே மோக்ஷம் அளிக்கிறான் இதற்கு ப்ரபத்தி என்னும் உபாயம் எதற்கு? அவன் எதிர் பார்ப்பதில்லையே!**

ப்ரபத்தி நேர் உபாயமில்லை. சேதனனின் ஸாத்யோபாயம் ஒரு வியாஜம். (சில பேருக்கும் மட்டும் மோக்ஷம் அருள பகவான் இதை சாக்காக கொண்டுள்ளான்) இது நம்முடைய ஸித்தாந்தம். ஒரு வ்யாஜமும் இல்லாமல் மோக்ஷம் அளிக்கிறான் என்பது மற்றவர் மதம்.

இது தவறு. பகவான் ஒன்றையும் எதிர் பார்க்கவில்லை என்றால் எனின் சிலருக்கும் மட்டும் எப்படி எம்பெருமான் மோக்ஷத்தை அளிக்க முடியும்? அது பக்ஷ பாதம். சிலருக்கு ஸம்ஸாரத்திலேயே அழுத்தினால் அது இரக்கமின்மை. இது எம்பருமானுக்கு பொருந்தாத குணங்களாய் சொல்ல வேண்டி இருக்கும்.

பகவான் தன்னிடம் ஒரு தோஷமும் வராமல் இருக்கவே சேதனனிடம் ஒரு சாக்கை எதிர் பார்த்து அதை செய்பவர்களை காத்து அருளுகிறான். ஆகவே சேதனனின் உபாயம் இன்றிமையாதது. அதுவும் பகவானின் ஸங்கல்பத்தால் விளைவது.

When bhagavAn is all independent (svatantran) and is an already avaialble means (sitoopaayam), then what is the necessity for prapatti? Lord is not expectign anythign from you!

Prapatti is not the direct means. The praptti process of achievable means (saatyoopaayam) is only a tiny reason (vyaajam). Lord has kept this tiny reason so that he can grant moksham to those who do this. This is our religion. Others say that Lord grants moksham without any effort from the chetanaa.

This is wrong. If Lord does not expect anything, then hoe come he can give moksham only to certain people?, then it is partiality. If He submerges others into birth/death cycle then He will be called merciless. These character which does not suit the Lord has to be explained!

Lord to protect Himself from any flaws, So the indivudual soul's means is inevitable. But it should be remembered that is also done only through the Lord's intention.

23-22 **ஏன் இந்த ஸங்கல்பத்தை பகவான் முன்னே செய்திருக்க கூடாது? சேதனனின் கர்மா பக்குவ நிலை அடையாதலால்.**

Why the Lord could not have blessed and showed the means of prapatti to the chetanaa, earlier?
That is because the chetanaa's karma balance sheet was not yet riped for his liberation.

23-23 **பகவானின் திருக்கல்யாண குணங்களால் (ஸ்வதந்திரனாயும், காருண்யனாயும் இருப்பதால்) ப்ரபத்தி அவசியமில்லை.**

இது தவறு. பகவான் தன் ஸ்வாதந்திர்யத்தால் ஸம்ஸாரத்தை சிலருக்கு கொடுத்து லீலாரஸத்தை அனுபவிக்கிறான். அதில் பக்ஷ பாதம் குறை வராமல் இருக்க, இன்ப துன்பங்களை அவரவர் வினைப்பயனுக்கு ஏற்ப அளிக்கிறான்.

கருணையால் மோக்ஷம் அளித்து ரக்ஷிக்கிறான். அதில் குறை வராமல் இருக்க உபாய விசேஷத்தை (ப்ரபத்தி அல்லது ப்கதி) துணையாகக் கொண்டு மோக்ஷம் அளிக்கிறான்.

எம்பெருமானிடம் உள்ள ஸ்வாதந்திரியம், இரக்கம் இரண்டும் அவசியம் (பரத்வமும், ஸௌலப்யமும் போலே). ஒன்று இருந்து மற்றொன்று இல்லாமல் போனால் பலன் இல்லை

Lord, due to His independence awards samsaaraa to some and enjoys. To make sure he doesn't favor anyone, he allocates the happiness and sorrow according to their own merits and sins.

He bestows moksham and protectcetion because of His extreme compassion. To avoid partiality, He looks for a means (prapatti or bhakthi) as a supplemetary means.

Bhagavaan's independence and compassion, both are necessary and sufficient qualities for the chetanaa's liberation. Either one alone is not enough.

23-24 **ஆக எம்பெருமானுக்கு ஞானம், சக்தி போன்ற குணங்கள் பல இருப்பினும் கருணையே சேதனனை அருளுவதற்கு காரணம். கருணைதான் குண ஸார்வபௌமீ (குணங்களின் தலைவி)**

Even among the infinite of Lord's noble qualities, like knowledge, power etc., His compassion is the one stands big. And that is the omain cause for blessing the chetanAs despite of their infinite sins. Compassion is the chief for all of Lord's noble characters.

23-25 **பகவானுக்கு உண்மையில் துக்கம் உண்டா?**

இல்லை. பகவான் ஆனந்த ஸ்வரூபி. ராம கிருஷ்ணாவதாரங்களில் எம்பெருமான் வருந்துவது பாவனை. லீலா ரஸம்.

Is the sadness for Bhagavaan, real?
No. It is just an acting only. He is an emodiment of eternal ultimate pleasure. But when he descends down as Raamaa or krishNaa, he acts like the rest of the people. That performance is for His pleasure only (leela rasam).

23-26 **ப்ரபத்தி உண்மையில் உபாயமில்லை என்று சிலர் கருத்து. இது தவறு.**

- **நம் ஸம்பிரதாயத்தில் ப்ரபத்தி உபாயம் அன்று என்றால் ப்ரபத்தி செய்ய வேண்டாம் என்பதில்லை. அது வ்யாஜம் மட்டுமே, ப்ரதாந உபாயம் அன்று. பலனைத் தரும் பகவானே முக்யமான நேர் உபாயம்.**
- **எம்பெருமானே முக்ய உபாயம் என்று "ப்ரபத்தி உபாயமில்லை" என்று சிலர் கூறியது எம்பெருமானின் ஸித்தோபாயத்தில் உள்ள ஊற்றத்தாலே. அது ப்ரப்த்தி செய்ய வேண்டாம் என்று விலக்காது.**
- **சாஸ்திரங்கள் ப்ரபத்தியை செய் என்று சொல்லும்போது ப்ரபத்தி செய்யக் கூடாது என்றால் அது சாஸ்திர விரோதம்..**
- **நம்மாழ்வார் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே என்கிறார்.**
- **மணவாள மாமுனிகளும் "ஆழ்வார்கள் ப்ரபத்தி பண்ணிற்றும் அர்ச்சாவதாரத்திலே" என்றார். "பக்தி பாரவஸ்யத்தாலே ப்ரபன்னர்கள் ஆழ்வார்கள்" என்றார்.**
- **கீதையில் கண்ணன் கூறியது ஸித்தோபாயமான "என்னை ஒருவனையே பற்று" என்பது முக்யமான, நேரான உபாயம்.**

- **ஆனால் அழுக்கான ரத்னத்தை துடைப்பதால் அழுக்கு நீங்கி ஒளி விடுவது போல் ஜீவனின் கர்மாவால் இயற்கையான ஞானம் சுருங்கி கிடப்பது பகவத் நிக்ரஹத்தால். எம்பெருமான் ஸங்கல்பத்தால் ப்ரபத்தி செய்ய நிக்ரஹம் கழிந்து முக்தி பேறு பெருகிறான்.**
- **யாகம் போன்றவை சுவர்க அனுபவத்தை பெற்றுத் தரும். ப்ரபத்தி அதுபோல மோக்ஷ அனுபவத்தை பெற்றுத் தராது. மோக்ஷ அனுபவம் நம் உரிமை. ஆனால் அதைப் பெறவொட்டாமல் இருக்கும் கர்மா போன்ற தடைகளை ஒழிக்கிறது.**
- **வ்யாஜம் என்பது தடையை ஒழிப்பது.**
- **மோக்ஷானுபவத்தை ஜீவன் இயல்பாக பெறுவதற்கு காரணம் பக்வத் ஸங்கல்பம்தான். தடையில்லா நித்யர்களின் ஸத் கூட எம்பெருமானின் ஸங்கல்பத்தாலே.**

Some say praptti is not a means.
This is wrong. When Lord krishNaa told, "Hold only me as the only means", it means He is the existing direct means that is already available. Just like how a gemstone will bring back its lustures when it is found from a dust pile and was given enough cleaning and polishing, the chetanaa's original knowledge will come out bright once the sins arecleared. The sins are Bhagavaan's dislike on him and that is neutralized when the chetanA does the prapatti to Him. When some say that Bhagavan and not prapatti is the means, what they infer is bhagavAn is the direct existing overwheliming means. But that never precludes the prapatti process.

23-27 **உறவால் (சேஷ-சேஷி பாவத்தால்) ப்ரபத்தி அவசியமில்லை என்ற வாதம் தவறு.**

தாய் குழந்தைக்கு பாலூட்டுவது அவள் கடமை. குழந்தை அதற்கு கூலி தர வேண்டாம். உரிமையுடன் அழுது பெறும். வைகுந்தம் நம் உரிமையெனில் ப்ரபத்தி என்னும் உபாயம் செய்து பெற வேணுமோ?

ரிஷிகளும், ஆசாரியர்களும் உபாய அவசியத்தை உபதேசித்தும், தாங்கள் அனுஷ்டித்து காட்டியும் உள்ளனர். சாஸ்திரங்கள் திட்ட வட்டமாக செய்தே ஆக வேண்டும் என்கிறது. தாய் பாலைத் தர முன்வந்தாலும், குழந்தை அதை சாப்பிட முயற்சி செய்ய வேண்டுமே.

Because of the existence of master-slave relation, praptti is not required.

Feeding the baby is the mother's duty. Baby does not pay for it. Similarly Srivaikuntam is our right, so praptti is not required.
Seers, aachaaryaas have instructed the requirements of means for moksham and showed by living accordingly. Saastraas unilaterally claim that this means is a must. In the example, even if the mother offers the milk, it is the baby's duty to do the drinking job. (You can take the horse to the water but you can't make it to drink)

23-28 **பகவானுடன் நம்முடைய ஸம்பந்த ஞானமே போதும். ப்ரபத்தி அவசியமில்லை.**

தவறு. ஸம்பந்த ஞானத்தை அறிவித்த சாஸ்திரமே ப்ரபத்தியையும் செய் என்கிறது. சாஸ்திரத்தில் இரண்டையும் எடுத்துக் கொள்ள வேணும்.

Some argue that the realization of our eternal realtion to the Lord in itself alone is sufficient and no need for the prapatti process.
This is wrong. The scriptures which revealed this knowledge also prescribe the praptti and advise that has to be performed. One can't be selective on what part of saastraas one will abide by.

23-29 **எம்பெருமான் ஸர்வ ரக்ஷகன். ஆகையால் நம்மை காத்துக் கொள்ளும் பொறுப்பு நம்மை சார்ந்தது அல்ல எனில் ப்ரபத்தி மூலமாய் யாசிப்பது ஏன்?**

பரந்யாஸம் பகவானே செய்வித்தான். ஸாத்விக த்யாகம் இதை காட்டுகிறது.

Bhagavaan is all powerful protector and so we don't have any responsibility of protecting ourselves. Then why are you begging this through prapatti?
The bharanyaasam process is perofrmed with all-sacrifice mode (saatvika thyaagam). Bhgavaan is doing this for His pleasure and by Himeself, through me.

23-30 **சேதனன் ஒரு செயலையும் செய்ய வேண்டாம் என்பது, வேறு ஒரு ரக்ஷகனையோ, உபாயத்தையோ தேட வேண்டாம் என்பதற்கே. அப்படி என்னில் சாப்பிடுவதோ, தூங்குவதோ போன்ற செயல்களை எதற்கு செய்ய வேண்டும்?**

When the saastraas say that the chetanaa doesn't need to do anything, it really means that he does not need to search for a protector or a means. If it literally meant that no action on his part absolutely not required, then why is he sleeping or eating?

23-31 **த்வயத்தில் முதல் வாக்யத்தில் பிராட்டியை சொல்வது உபலக்ஷணம். உபாயமகாது. பிராட்டி உபாயமில்லை**

அதாவது "லக்ஷ்மீ ஆத்துக்காரரிடம் கொடு" என்றால் அந்த கணவனிடம் கொடு என்று பொருள். லக்ஷ்மியிடம் அல்ல. லக்ஷ்மியைச் சொல்வது ஆத்துக்காரரை காட்ட ஒரு உபலக்ஷணம். பகவானோடு சேர்ந்து உபேயம் ஆவது சரி. எம்பெருமான் ஒருவனே சுதந்திரனாய் இருக்க அவள் உபாயம் ஆவது எப்படி?

இது தவறு.

- *த்வயத்தில் ஸ்ரீ மந் என்று முதல் வாக்யத்திலும் ஸ்ரீமதே என்று பின் வாக்யத்திலும் ஒரே மாதிரியாக சொல்ல்யிருக்க முதலில் உபலக்ஷணம், பிறகு விசேஷணம் என்று பிரித்து சொல்வது சரியாகாது.*
- *முதலில் எம்பெருமானும் பிராட்டியையும் பிரிக்க முடியாத தத்வம்.*

Is Lakshmi, a valid means?
Lakshmi is the final benefit when She stands with Him. When the Lord is the only one who is independent, then how Lakshmi can be a means too? Fist, NaaraayaNaa and Lakshmi are the inseparable reality.

பிராட்டி உபாயம் என்றால் எம்பெருமான் ஒருவனே உபாயம் என்று ஸித்தாந்த விரோதம் வருகிறது. அப்படி எனில் பலனும் எம்பெருமான் ஒருவனே என்கிறது சாஸ்திரம். அங்கு மட்டும் பிராட்டியை ஒப்புக் கொள்வது எப்படி?

If we take into account, Lakshmi as the means, then it contradicts the scripture sayign that the Lord is the only means. But the same scriptures say Lord is the fina lbenefit. How comewe accept there that Lakshmi is the fina lreward along with the Lord?

அப்படி பிராட்டி உபாயம், பலன் இரண்டிலும் பிராட்டி ஸம்பந்தம் இல்லை எனக் கொண்டால், அது போலவே எம்பெருமானின் குணங்கள், திருமேனி, செயல்கள் எல்லாம் உபாய உபேயங்ளில் அவசியமில்லை என்று வரும்.
ஆகவே எம்பெருமானும், பிராட்டியும் உபாயம், பலன் என்பதே மறுக்க முடியாத உண்மை.

Then if Lakshmi has not part in the means or ends, then we have to take into account bhagavan's noble characters, beautiful body, actions everything has no part in means or ends, which is not true.
So, NaaraayaNaa and Lakshmi, the combined form is the only means and ends, which can't be refuted.

இது வால்மீகி ரிஷியிலிருந்து எம்பெருமானார் அதன் பின் கூரத்தாழ்வான், பட்டர், நஞ்சீயர் எல்லோரும் ஒப்புக் கொண்டதே.

This truth has been accepted starting from Vaalmiiki to Bhagavad Raamaanujaa and then his disciples like Kuurattaazvaan, Bhattar, Nanjlyar etc.

நித்ய யௌவநம் போன்ற குணங்கள் இருவருக்கும் ஸமமாய் உள்ளது. ஆனால் ஆண்மைக்குரிய ஸ்வாதந்த்ரியம், பகைவருடன் சண்டடை இடுதல், உறுதியாய் நிலைத்து நிற்றல் என்பவை பகவானுக்கும், பெண்மைக்குரிய மென்மை, கணவனுக்கு அடங்கி இருத்தல், இரக்கம், பொறுமை போன்றவை பிராட்டியும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.
இது அவர்கள் தமக்குள் வகுத்துக் கொண்டது.

Some characters like "being always young" are common for both NaaraayaNaa and Lakshml. But things lwhich are male-oriented like independence, fightign the enemy, steadfastness are taken up by the Lord and female-oriented characters like softness, obedient to the husband, compassion, patience are al ltaken up Lakshml.
This is their scheme.

23-32 **முடிவான கருத்து**

- **பகவான், பிராட்டி இருவரும் பலன்.**
- **இருவரும் நம் கைங்கர்யத்தை ஏற்றுக் கொள்பவர்கள்**
- **இருவரிடமும் உள்ளது ஒரே ஸேஷித்வம்**
- **இருவருக்கும் ஒரே எண்ணம், கடமை**
- **ஒருவருக்கு ஒருவர் மிகுந்த பரிவுடன் உள்ளனர்**
- **இருவரும் ஸ்வரூபம், திருமேனி இவற்றில் பிரியாது உள்ளனர்**
- **பகவான், பிராட்டி என்னும் மிதுனமே உபாயமும் பலனும்**
- **எம்பெருமானைச் சொன்னவிடத்திலே பிராட்டியையும் சொல்லிற்றாம் என்பது ராமானுஜர் வாக்கு.**

Final Conclusion

- Bhagavaan and piraatti both are the final rewards.
- Both accept our service (kaimkaryam)
- Both have the one and only mastership
- Both have the same intention and duty
- Both are concerend about each other
- Both are inseaprable from each other in their innate nature and beautiful body
- So, the combined form of bhagavaan and piraatti (the gemini) is both the means and ends
- "Wherever Bhagavaan is referred, there it refers Piraatti also, implictly", said Bhagavad Raamaanujaa.

23-33 **கோவில்களில் பிராட்டி மூன்று வகை (லய, போக, அதிகார) அர்ச்யாரூபியாய் உள்ளாள். எம்பெருமான் திருமார்பில், அருகில், தனிக் கோவிலாய்.**

Piraatti has three types of states in temples. On the Lord's chest, adjacent to the Lord and as a separate temple for Her.

23-34 **மஹா விஶ்வாஸம்தான் ஶரணாகதி என்று சொல்கிறர்.**

அது தவறு. ப்ரபத்தியில் ஆத்ம ரக்ஷா பரஸமர்ப்பணம்தான் அங்கி. மற்ற விஶ்வாஸம், கோப்த்ருவ ப்ராத்தனை எல்லாம் அங்கங்கள். எம்பெருமானாரும் "ப்ரத்தி விஶ்வாஸ:" என்ரு அருளினார்.
விஶ்வாஸம் ப்ரபத்தியாகாது. ஆனால் அது ப்ரபத்திக்கு அங்கம்தான். முக்யமான அங்கமானதால் அதைச் சொல்கின்றனர். தவிர ஆரம்பத்தி ஒரு விஶ்வாஸம் இருந்தால்தான் ப்ரபத்தியை பற்றி தெரிந்து கொண்டு அதைச் செய்து முடிக்கிறான். அந்த விஶ்வாஸமே மஹா விஶ்வாஸம் ஆக அங்கமாகிறது.

Some say that the unsjhkaeable faithon the Lord is the prapatti itself. This is wrong.
Submitting the soul to the owner and proetection of that is the main theme in prapatti. Faith and request to grant moksham are all accessories. Bhagavad Ramanuja himself said "faith Is the prapatti".
Faith itself alone is not prapatti. But that is an essential accessory and that is why the say like that. First of all one needs some faith to get belief in prapatti and start inquiring more on that. That belief manifests into unshakeable faith and he completes the prapatti.

23-35 **ப்ரபத்தி என்பது ப்ராத்தனையே**

தவறு. கோப்த்ருத்வ வரணம் ஒர் அங்கம். அது ப்ரபத்தியாகாது. பகவான் நம் ப்ராத்தனையையே முக்யமாக எதிர் பார்க்கிறான். பிராத்திக்காவிட்டால் ரக்ஷிப்பதில்லை. இந்த அங்கம் முக்யம் என்பதை உணர்த்தவே சிலர் அப்படி சொல்கின்றனர்.

சில இடங்களில் அங்கங்களை ப்ரதாநமாக சொல்வது வழக்கம். "தாலி கட்டறதுதான் கல்யாணம்".

Some say prapatti is just a request for moksham
This is wrong.
The request for moksham is an accessory only. It is not the whole prapatti. The Lord expects the request from us so that hHe can take action, because scriptures say that protection is offered only when one asks for it. Due to importance of this this accessory, many say prapatti is the prayer.

In some instances, accessories are given importance and talked highly; like "Tying the knot is actual the wedding".

23-36 **வாக்யத்தால் வரும் ஞானமே மோக்ஷம்**

ஶேஷத்வ அனுஸந்தானமே மோஷ உபாயம். ஶாஸ்திரத்தை கற்கும்போதே அவனுக்கு நாம் அடிமை. பாரதந்திரியர் என்ற ஞானம் வருகிறது. இது தவிர வேறு உபாயம் வேண்டாம்.
இது தவறு. இது பலனின் ருசியை காண்பிக்கிறது. ஶாஸ்திரத்தால் ஶேஷத்வ ஞானம் பெற்றவன் அங்கங்களுடன் ஶரணாகதி செய்ய வேண்டும். ஆத்ம ரக்ஷ பர ஸமர்ப்பணம் அவசியம். ஞானம் மட்டும் மோக்ஷம் தராது.

Some argue that "The knowledge derived out of scriptures is the moksham. Understanding that we are slaves to the Lord is the means for moksham. While learning the scriptures one is reminded of this. Once he gets this knowledge, he doesn't need any other means".

This is wrong. The scriptures unilaterally reveal that Lord is the master and we are all His slaves. The only purpose of this soul's existence is to serve Him. This creates an appetide on the final reward of moksham. Once the knowledge is derived from scriptures, he needs to perform prapatti with all the accessories. Submitting the soul and its protection to the Lord is essential. Knowledge alone will not yield moksham.

23-37 **இந்த அதிகாரத்தின் ஸாரம்**

- **ஸ்ரீமந் நாராயணனே நாலாவித பலன்களையும் அளிப்பவன்**
- **அவன் சக்தி நிறைந்த கருணையின் இருப்பிடம்**
- **ப்ரபத்தி செய்வதற்கு முன்பாகவே உள்ள ஸித்தோபாயமாய் அவனை வித்வான்கள் அறிகின்றனர்**
- **அவனை கவர்ந்து தத்தம் விருப்பத்தை பூர்த்தி நிறைவேற்ற செய்யும் பக்தி ப்ரபத்திகளை ஸாத்யோபாயமாய் அறிகின்றனர்.**
- **ஸித்தோபாயமான, ஸேஷியான எம்பெருமானின் லீலாரஸம் ஸாத்யோபாயங்களாலே பெருகிய கருணை வெள்ளத்தால் தடுக்கப்படுகிறது**

- **பகவத் கைங்கர்யங்களுக்கு தடையான ஸ்வதந்த்ரனான எம்பெருமானின் எல்லா ஸங்கல்பங்களும், அக்கருணைக் கடலின் வேகத்தாலே மணல் அணைபோல் அழிகின்றன.**
- **இந்த பக்தி, ப்ரபத்திகள் எம்பெருமானின் அருளுக்கு காரணமாய், ஒரு பலனை உத்தேசித்து உபாயாமவது சாஸ்திர சம்மதம்.**
- **ஆயினும் பலனை அளிக்கும் அதிகாரியாய், நேர் காரணமாய் ஸித்தோபாயமான எம்பெருமான் இருப்பதால் அதை முக்யம் என்றது.**
- **ஸ்வதந்த்ர ப்ரபத்தி செய்தவன் தன் சுமையை எம்பெருமானிடம் ஸமர்பிக்கிறான். அப்போதே தன் முயற்சியை விடுகிறான். ஸித்தோபாயமான எம்பெருமானே எல்லாம் என காத்திருக்கிறான். ஆகவே ஸித்தோபாயமான எம்பெருமானிடத்து வெள்கி நிற்கும் நிலை சிறப்பித்து சொல்லப்பட்டது.**
- **புதையலுக்கும் மேலே இருந்து கொண்டு அதை அறியாத ஆசார்ய ஸம்பிரதாயத்ததை சேராதவர்களுக்கு "நானே என்னை அடைய வழி, நால் வேதத்திலும் இது ப்ரசித்தம்" என வெளியிடும் இந்த தங்கப்புதையல் எனும் பகவானை ஸத்வ குணமுடையோர் அருகில் காணலாம்.**

The summary of this chapter

- Lord NaaraayaNaa is the one who bestows all of our wishes.
- He is all powerful and full of compassion
- Scholars know Him as the existing means for moksham even before one does prapatti
- Chetanaas please Him and do bhakthi or prapatti as an achievable means
- Though the Lord is the ultimate master and existing means, His playful acts (leela rasam) are stopped by his erupting compassion.
- The Lord's will that were the hurdles for the service to the Lord are destroyed completely like the sand dissolved by the force and speed of the ocean of compassion.
- This bhakthi and prapatti performed for a particualr objective conforms to the saastraa
- But since the Lord who stands as an existing means, is the one who rewards the final benefit, it is said that He is the primary means.
- When the chetanaa does the prapatti with the objective of moksham submits his load of protecting himself to the Lord. Immediately, he gives up his own efforts. He apteintly waits for the Lord who is the

existing means. That is why the state of chetanaa stand as utterly uselss before the Lord has been praised so high.

- Those who stay above the treasure without knowing it are the ones who do not belong to the aachaaryaa group. For them Lord has shown that He is the means to reach Him. All the four scriptures (vedhaas) claim this is the golden treasure. And this is known to exist next to righteous people (sattva gunaa).
-

23-38 (tag)

Chapter 24
ஸாத்யோபாய சோதனாதிகாரம்
Clearing the doubts on achievable means

24-1 **ஸாத்யோபாயமான பக்தி, ப்ரபத்தி இவற்றில் எழும் சந்தேகங்களுக்கு பதில் இந்த அதிகாரம்.**

This chapter clarifies the doubts regarding the two means for the ultimate bliss (moksha), namely devotion (bhakthi) and complete surrender (praptti).

24-2 **தம் தகுதிக்கு ஏற்ப ஜீவர்கள் செய்யும் யாக, தாந, ஹோம பூஜை, ப்ரபத்தி, பக்தி இவற்றால் நன்கு பிராத்திக்கப்பட்ட பகவான் பலனை அருளுகிறான் என்பது ப்ரமாணங்களால் பிரஸித்தம்.**

Lord is prayed by many according to their abilities, by different methods – Yaga, yugnya, charity (dhaana), homa, pooja, bhakti and prapatti. Lord who is satisfied by those confers the benefits., so says all the scriptures.

24-3 **ஸித்தோபாயமான எம்பெருமானை வசீகரிக்க ஸாத்யோபாய தெளிவு அவசியம். எனவே, ப்ரபத்தியின் தகுதியிலும், ஸ்வரூபத்திலும், அங்கங்களிலும் வரும் சந்தேகங்கள் இங்கே நீக்கப்பட்டன.**

When the Lord Himself is called the existing means (siddhoopaayam), to attract Him an individual soul needs a clear understanding of the achievable means (saathyoobhaayam). So he needs to be sure on various aspects like the eligibility for prapatti, realization one's innate nature, accessories for the total surrender etc.

24-4 **எம்பெருமானின் ஸித்தோபாயத்தில் தெளிவும், அல்ப அஸ்திர பலன்களையே தரும் ஸம்சாரத்தில் வெறுப்பும், பரம புருஷார்த்தமான எம்பெருமானை அநுபவிக்க ஆசையும், மோஷோபாயத்தில் துடிப்பும். இருப்பினும் பகவத் கட்டளையை மீறியதால் பிறவிக்கடலில் அழுத்தும்**

எம்பெருமானின் கோவத்தை தணிக்க வழியென விதிக்கப்பட்ட ஸாத்யோபாயத்தில் தெளிவு அவசியம்.

Despite of crystal clear knowledge on the existing means, aversion towards the birth/death cycle and their yield of low level pleasures, strong yearning to achieve the ultimate enjoyment of the Lord, impatience and restlessness to go to moksham – because of his past wrongful deeds an individual soul has become the target of Lord's unhappiness. To cool off the Lord's anger one invariably has to learn unambigously about the achievable means

24-5 **ப்ரபத்தியின் தகுதியில் வரும் கேள்விகள். சாஸ்திரம் சரணாகதியை யாகம் என்னும்போது அதை அனுஷ்டிக்க ஸர்வருக்கும் அதிகாரம் உண்டா?**

சரணாகதி அனுஷ்டிக்க சாதி வேறுபாடு இல்லை என்றது ஸ்ருதி. ஸ்மிருதி, பகவத் கீதை.
வேதங்களை ஓத சிலருக்கு அதிகாரம் இல்லை எனினும், அதன் கருத்தின்படி நடக்க அவசியம் உண்டு. "ஸத்யம் வதா, தர்மம் சரா". அது போலே ப்ரபத்தியும். காகம் கதையில் இதைக் காணலாம்.

Now let us look into some common arguments- When scriptures say that total surrender is a yaaga, how come everyone is eligible to perform that? Saastras like vedaas, smrithis and Bhagavd Gitaa, say that to perofrm total unconditional surrender, there is no discrimination based on caste or gender. Though some are not qualified to pronounce veda mantras, but everyone is bound to follow the rules states in there. For example, vedas say tell the truth, follow the path of righteousness. This is common for everyone. Similarly in prapatti, without pronouncing exactly the veda mantras one can benefit out of it. This is obvious in the Kakaasuran story in Srimad Raamaayanaa.

24-6 **பக்தி யோகத்துக்கு அதிகாரி மூன்று வர்ணத்தாரே எனினும் தொடங்கிய பக்தி யோகம் முடிவு அடைவது எந்த சரீரத்திலும் இருக்கலாம்.**

The eligibile candidates for the bhakthi yoga are the first three castes only. Though they might have strated then, the final form of body from which they will get the reward is laregley unknown.

24-7 **ஆனால் ப்ரபத்தி என்பது எல்லா சாதியாரும், தம் தகுதிக்கேற்ப, வேத மந்திரங்களையோ, வேறு வசனங்களையோ கொண்டு அனுஷ்டிக்கலாம். இதற்கு தகுதி ப்ரபத்தி யோக்யதாதிகாரத்தில் விளக்கியபடி, மட்டுமே. வேறு அவசியமில்லை.**

But prapatti is a universal means. Anyone can perform prapatti following their pronouncing eligibility criteria of the mantras (either from vedaas or other holy scriptures). Who can do this prapatti is very well described in earlier chapters.

24-8 **ப்ரபத்தியின் ஸ்வரூபத்தில் வரும் கலக்கங்கள் விசுவாசத்தையே ப்ரபத்தியாக சிலர் கூறுவது ஏன்?**

உண்மையில் விசுவாசம் மட்டும் ப்ரபத்தி ஆகாது.
நம்பிக்கை தகுதி உண்டாக்கும். நம்பிக்கை இல்லை எனில் ப்ரபத்தியில் அதிகாரம் இல்லை.
தவிர நம்பிக்கை வளர்ந்து மஹாவிசுவாசம் என்று அங்கமாகவும் ஆகிறது.

There are some confusion exists regarding the innate nature of an individual soul and the prapatti process. Some claim the unshakeable faith in itself is the prapatti.
This is wrong conclusion. Faith alone will not make a complete prapatti. But faith is an essential ingradient for qualification into prapatti. In addition to the inducing some interest in prapatti, this faith manifests into unshaekable state and form as one of the accessories to the total surrender.

24-9 **ப்ராத்தனையையே ப்ரபத்தியாக சிலர் கூறுவது ஏன்?**
எம்பெருமானிடம் "நீ உபாயமாக வேண்டும்" என்று கோப்த்ருத்வ வரணம் எனும் அங்கத்தை ப்ராத்திக்க வேணும் அவசியத்தை வலியுறுத்துகிறது.

There are some who claim that the request prayer in tself is the prapatti This is also wrong. Scriptures say that prayer of protection to the Lord needs to be exlplicit. To emphasize this and as an integral accessory of prapatti, some may highlight this process.

24-10 **ப்ரபத்தி என்பது ஸ்ரீமந் நாராயணனன் என்னும் தேவதையிடம் ஆத்மா என்னும் ஹவிஸ்ஸை ஸமர்பிக்கும் ஆத்ம ஸமர்ப்பணம். அது ஒரு யாகம். ஐந்து அங்கங்களுடன் தன் ஆத்மாவையும், தன்னை காக்கும் பொறுப்பையும் ஸமர்பித்தலே ப்ரபத்தி என்றனர் எங்காளாழ்வான், நடாதூர் அம்மாள், அப்புள்ளார்.**

Prapatti is a yaaga in which one surrenders the soul to the Lord Sriman NaaraayaNaa. This process includes the five manadatory accessories, surredenring of one's soul and the surrenderingthe responsibility of protection of oneself, so was confirmed by our teachers like EngaL aazvaan, Nadaadur AmmaaL, AppuLLaar

24-11 **ஸேஷத்வ அநுசந்தானமே ப்ரபத்தி என்பர் சிலர். அது தவறு.**

அநாதியான கர்ம வினையால் ஏற்பட்ட பகவத் நிக்ரஹத்தை தவிர்க்க சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட ஆத்ம ஸமர்ப்பணத்தை அங்கங்களுடன், ஸேஷத்வ அநுஸந்தானத்துடன் செய்து, தன்னை காக்கும் பரத்தை ஒப்படைப்பதே முறையான ப்ரபத்தி.
இதில் ஸேஷத்வ அநுஸந்தானம் என்பது பக்தி, ப்ரபத்தி, இம்மைப்பயன் என்ற எல்லா பலன்களுக்கும் பொது. ஆக அது மட்டுமே ப்ரபத்தியாகாது.
தவிர, மோக்ஷ ப்ரபத்தி ஸேஷத்வ அநுஸந்தானம் இல்லாமல் செய்தால் கூட அந்த ஞானத்தை பகவான் தந்து ப்ரபத்தியை தலை கட்டிவைக்கிறான்.

Some claim that realization of the servitude to the Lord in itself is prapatti This is also wrong. An individual soul has accumulated endless sins and because of that he became the target of Lord's anger. To pacify that anger, he needs to follow the scriptures and perfrom compelte total surrender with all the required accessories, submit his soul, constantly remind

himself of the his servitude nature, transfer the responsibility of self protection to the Lord. This is called prapatti.
In this realization of eternal servitude to the Lord can be part of any request from the Lord – like bhakti, praptti or even while requesting worldly pleasures.
Besides, when doing the prapatti for moksham, even if one does not have that realization of this servitude nature, Lord with magnanimous grace grants that thought to him and makes the prapatti successful.

24-12 **முடியாதவன் தானே கதறி அடைக்கலம் புகுவான், இதற்கு ப்ரபத்தி என்று ஒரு சாஸ்திரமும் வேண்டுமோ?**

உயர்ந்த ப்ரமாணமான சாஸ்திரம் சொல்வதால் கவலை இன்றி அனுஷ்டித்து பலனைப் பெறலாம்.
அனுமானத்தால் ஊகித்து அவரவர் செய்வது முறையின்றி இருக்கும். பக்தியில் அசக்தனுக்கு ப்ரபத்தி என்ற விதியும் தெரியாமலே போகும். வேத மந்திரங்களில் தகுதி அற்றோர் கூட இந்த உபாயத்திற்கு அதிகாரி என்று தெரிய வேண்டும் என்பதால்.

One who is deseperate and completely incapable will find out the complete surrender by himself. Do we really need saastraas for this?
Saastras are the highest authority. When prapatti is mentioned there, one need have to worry about being right on a new venture. If he determines this through his speculative knowledge then everyone else will be coming to their methods and there won't be any commonality. Besides, some may not even recognize that there is an alternate means called prapatti exists for those who are incapable of bhakthi yoga. Saastraas explicitly mention this means to make sure that even those who can't pronounce veda mantras are eligible for this means.

24-13 **ப்ரபத்தியின் அங்கங்களை பற்றிய சந்தேகங்கள்**

அடியவருக்கு அருளுவதில் குறைகாணாத எம்பெருமானாய் இருக்கையில் ஆநுகூல்ய ஸங்கல்பம் என்ற அங்கம் எதற்கு?
அங்கங்கள் ஐந்து, அங்கி ஒன்று என்கிறது பிரித்து காட்டுவது சாஸ்திரம். அதற்கு புறம்பாய் செய்ய முடியாது. ப்ரமாணங்கள்.

ப்ரபத்தி வேறு ஒன்றையும் நாடாது என்றால் இந்த அங்கி அங்கங்களைத் தவிர வேறு ஒன்றையும் எதிர் பாராதது.
தவிர, ப்ரபன்னன் ப்ரத்திக்கு பின் ஒரு கால் பகவானுக்கு உகக்காதவை செய்தாலும், ப்ராயசித்தம் செய்து அந்த தோஷத்தை போக்கலாம்.

Doubts about the accessories of prapatti.
Why there is an accessory called "Determination to do everything to please the Lord" is required?, when the Lord is said to ignore the flaws or mistakes of His devoteess,
Scriptures reveal that the prapatti has five accessories and one whole. One can't perofrm prapatti without abiding by those commands. When authoritative statements claim that prapatti does not require anything, it means anything else besides these.
In addition, if the prapannan happens to do something to unplease the Lord, he can take remedial action to neutralize those flaws.

24-14 **சாஸ்திரத்தில் நம்பிக்கை என்பது பொதுவாய் வேண்டி இருக்க, விசுவாசம் என்று இதற்கு மட்டும் குறிப்பிட்டு சொல்வது ஏன்?**

சாஸ்திர நம்பிக்கையில் பல நிலைகள் உண்டு. இங்கே எல்லையிலா நம்பிக்கை வேண்டும் என்பதை வலியுறுத்தவே அங்கமாக சொன்னது. இதில் தவறியவரைக்கூட எம்பெருமான் ரக்ஷித்து, திருத்தி, பலனைத் தருகிறான்.

Faith is a common requirement in aything related to scriptures. But why this unshakeable faith has been specifically mentioned in prapatti?
Faith in scriptures can be at many levels. Here, to emphasize that needs to be at the highest level, it has been mentioend as an integral accessory to the prapatti process. Even those who failed in this, Lord shows mercy, corrects and rewards them.

24-15 **இம்மை மறுமை பலன்கள் இரண்டையும் அளிப்பது, ஒன்றுக்கு ஒன்று முரண் அல்லவா? அவரை விதைத்தால் துவரை வளருமோ?**

குழந்தை விரும்பி, பிடிவாதமாய் ஒரு பொருளைப் பெறலாம் (ப்ரேயஸ்). அதுவே ஒன்றும் கேட்காமலே இருக்கும்போது தகப்பனே

அதன் நல்ல குணத்தைக் கண்டு எது வேண்டுமானாலும் எடுத்துக் கொள் என்று கூறுவதுபோலே (ஸ்ரேயஸ்).

Aspiring for the rewards on this earth and the ultimate bliss
A child may be adamant about a toy and probably get it (low level pleasures). It may be so nice and quiet and don't asprie for anything and the father feels overwhelmed and request the kid to pick any toy it needs (ultimate bliss).

24-16 **பலன் கிட்டும் வரை அயராது செய்யும் பக்தியோகத்தின் பலனை அநாயாஸமாய் ஒரே தடவை செய்யும் ப்ரபத்தி எப்படி ஸாதிக்கும்?**
உபாயங்களை அனுஷ்டிப்பது அவரவர் சக்தி, தகுதியைப் பொறுத்தது. ஒரே கால அளவில் (1 மணி உதாரணமாய்) வேலை செய்தாலும், ஒவ்வொருவர் பலனும் வேறு அல்லவா. வேதத்தில் வாருணி ஸ்நானமும், மந்திர ஸ்நானமும் அவரவர் சக்த்திக்கு ஏற்ப செய்யலாம் என விதித்துள்ளது போலே.

One has to be tirelessly working on bhakthi yoga for several births and continue till the effect has been achieved. While this is so, how come prapatti gives the results just doing only once, a simple act?
The means one chooses to achieve the results depends on various factors like abilities, eligiblity etc. For example, though a docotor and a mason work for an hour, but each enjoy different levels of pay.

24-17 **மோக்ஷத்தை உடனே பிராத்திப்பவன் ஆர்த்தன், சாகும்போது வேண்டும் என்பவன் த்ருப்தன், ப்ரபத்தியான உபாயமும், மோக்ஷமான பலனும் ஒன்றாய் இருக்க, காலத்தில் வேறுபாடு ஏன்?**

அது அவரவர் செய்யும் ஸங்கல்ப வேறுபாட்டினால்.

Those who request moksham immediately are called aartha prapannas and those who request at the end of this life are called dhruptha prapannas. When, both follow the same means and achieve the same results, why there is a difference in time?
That is because of their intentions are different while they make the request.

24-18 **பகவத் ஸாக்ஷாத்காரம், ஆழ்வார்கள், நாதமுனிகள் போன்று சில ப்ரபன்னருக்கு மட்டும் ஏற்படுவது ஏன்?**

இதுவும் ஸங்கல்ப வேறுபாட்டால் இருக்கலாம். தவிர ப்ராரப்த ஸ்ரீக்ருதத்தினாலும் இருக்கும்.

Aazvaars, and aacharyaas like Naathamuni had the experience of directly seeing the Lord. Why ithis so only with certain prapannas?
This also could be due to the intentional requests of each one. It could be due to their accumulated merits from different births too.

24-19 **ப்ரபத்தி ஸக்ருத் காரியம் எனில் சிலர் மறுபடி செய்வது ஏன்?**

ப்ரபத்தி ஒரு பலனை வேண்டி செய்வது ஒரு முறை மட்டும்தான். வேறு பலனுக்காக அதை செய்திருக்கக் கூடும்.
சரீரம் கழியும்போது மோக்ஷம் என விண்ணப்பம் செய்தவன் கூட, பொறுக்க முடியாத துடிப்பினால், ப்ராரப்த கர்மா கழியே வேணும் என ஸங்கல்பித்து ப்ரபத்தி செய்யலாம். இது கர்மா கழிய வேண்டும் என்னும் பலன். இத்தால் இடர் ஒன்றும் இல்லை.

When prapatti is said to be one time process, how come some do it again?
Saastras say for one particular reward as the effect, prapatti should be done only once. But that doesn't preclude doing prapatti for some other reason.
Though a prapanna requests for moksham at the end of this life, at some point during the life he can do the praptti to remove his continuing sins because of his insataiable craving to be liberated. This praptti is to neutralize the karma. And there is no interference with the prviously done prapatti.

24-20 **இம்மைப் பலனுக்காகவே ப்ரபத்தி செய்து பலனை சிலர் அடையாத போது மோக்ஷ ப்ரபத்தி செய்தவனுக்கு இம்மைப் பலனும் சேர்த்து கிடைப்பது எப்படி?**

ப்ரபத்தி செய்தவரின் பூர்ண விசுவாசம், அங்கங்கள் இவற்றில் குறை இருக்கலாம். சாஸ்திர முறைப்படி ஆசார்ய உபதேசம் பெறாமல் இருக்கலாம். ஆனால், குறையின்றி ப்ரபத்தி செய்தவர்கள் இம்மைப்பலன்களையும் பெறுவதைக் காண்கிறோம். ஆக ப்ரபத்தி எல்லா பலன்களையும் கொடுக்கும்.

While some do prapatti merely for worldly pleasures and they don't even get it, how one can claim that moksha praptti will yield fruits of worldly pleasures?
When one does prapatti there are several factors need to be correct - compelte faith, includes all the accessories, instruction fro mthe aachaaryaa. Idf there is any error or omissions in those prapatti won't yield full results. On the other hand, we see in our daily life some who have done moksha prapatti, enjoy all the benefits of this world. So, it is concluded prapatti will yield all results.

24-21 **மஹரிஷிகள், மற்றும் பல ப்ரமாணங்கள் எம்பெருமானை இடைவிடாது தியானிக்க வேண்டும் என்கிறது. ஆகவே கண்ணன் கூறிய கீதையில் சரணம் அடை என்பது பக்தி யோகத்திற்கு அங்கமான ப்ரபத்தியை சொல்லியது தவிர ஸ்வதந்த்ர ப்ரபத்தி என்று ஒரு தடவை செய்து மோஷத்தை பெறுவது இல்லை?**

ப்ரபத்தி மோஷோபாயம் என்பது பல ப்ரமாணஸித்தம். அதை மறுக்க முடியாது. மஹரிஷிகள் கூறும் த்யானம் ஸ்வயம் ப்ரயோஜனமான அநுபவமே தவிர உபாயமில்லை.
பக்தி யோகம் அனுஷ்டிப்பவனுக்கு இது உபாயம். ப்ரபன்னனுக்கு பலன். பால் நோயாளிக்கு மருந்து. மற்றவனுக்கு போக்யம்.

Words from great Seers and other scriptures asks the devotees to contemplate about Lord continuously without any break. So, When Lord Krisha told to renounce everything and hold on to Me is the prapatti which is an accessory to bhakthi yoga only. It does not imply to surrender once as an indpendent means and get the moksha .
All scriptures claim that prapatti is an independent means for moksham. This can't be refuted. Forthose who have doen moksha prapatti, contemplation of God is not a means but the ends. It is the enjoyment prapannan is after. For bhakthi youga, contemplation about Lord is the

means and prapannan it is the ned in itself. Milk is the medicine for the sick and enjoyment for the rest.

24-22 **ஆனந்த போக்குவீடாய், அநந்ய ப்ரயோஜனமாய் செய்யும் பிரபன்னின் பகவத் கைங்கர்யம் ஐந்து காலங்களைக் கொண்டது (பஞ்ச கால ப்ரக்ரியை).**

- **அபிகமனம் - அன்று பகவத் பாகவத கைங்கர்யங்கள் தையின்றி நடக்க பிராத்தித்து ப்ரபத்தி செய்தல்**
- **உபாதநம். பகவத் ஆராதன பொருளை சேகரித்தல். ஆழ்வார்கள் ஆசார்யர்கள் ஸ்ரீசூக்திகளில் ஈடுபட்டு மனம் சுத்தி அடைதல்.**
- **இஜ்யை. பாஞ்சராத்ர, ஆஹ்நிக முறைப்படி பகவத் திரு ஆராதனம் செய்தல்.**
- **ஸ்வாத்யாயம். வேதாந்த விழுப்பொருள்களை கற்று அறிதல்**
- **யோகம். எம்பெருமான் திருவடிகளையே தியானித்து உறங்குதல்**

When prapanna does service ot the Lord it is the release of the safety valve of his erupting enjoyment. He does those service as an end in itself. It has to be done in five segements of the each day.

- Morning prayer (abhikamanam) – It is the request to the Lord to guide and fullfill thae activities of that day without any impediment.
- Gathering of items for prayer (upaathaana) Gathering of flowers, fruits, sandal paste etc. for the ritual worship (Tiruaaradhanaa).
- Proper ritual (ijyaa) Actual tiruaaraadhanaa followingthe pancaraatra aagamaa and other vedic procedures
- Imploring the knowledge (svaathyaaya) read, discuss about various religious topics to enhance one's knowledge.
- Yogam (yoga). Meditating about Lord's feet and sleep with that thought.

24-23 **சந்தேகங்கள் அற்றவனாய், பகவத் அனுபவமே பலனாய், சாஸ்திர முறைப்படி, ஆசாரியன் உபதேசித்த வழியில், காலம் தவறாது, ஐந்து கால செயல்களையும் பிரபன்னன் சரிவர செய்ய வேண்டும்.**

A prapanna should perform these five segement duties each day in a timely fashion, without any doubts, with the thought of indulging in them itself is the ends, following the guidence of the aacharyaas,

24-24 **இவற்றை யார் செய்யலாம், யார் செய்யக் கூடாது?**

- **பெண்கள், நாலாம் வர்ணம் தவிர மற்ற பிரபன்னருக்கு இது கடைமை. செய்தாக வேண்டும்.**
- **விலக்கப்பட்டவர்கள், பரம பாகவதன் ஒருவன் பணியில் துணையாய் நின்று, எம்பெருமானின் ஜகத் வ்யாபரத்தில் மகிழும் முக்தனைப்போல ஆனந்திக்கலாம்.**
- **திருமந்திர சுருக்கமாய் "நமோ நாராயணா" என்று இவர்கள் அனுஸந்திக்கலாம்.**

Who and who can't do these?

- Fourth caste and ladies are barred from doing these. For others it is a mandatory duty.
- Those wh oare excluded can participate in another prapanna's activities, enjoy and the have the same benefits. Similar to the muktha enjoys with the Lord everything though only Lord is in charge of universal activities.
- They can recite "namoo NaaraaayaNaa" by cuttign out the first and last part of tirumantram

24-25 **இவற்றை எதற்காக செய்வதில்லை?**

- **புகழ், லாபம், மதிப்பு (ய க்யாதி லாப பூஜாஸு) (சார்வாகன்)**
- **மற்ற பலனுக்காக (தத்வ ஞானம், வைராக்யம் அற்றவன்)**
- **மோக்ஷ உபாயமாய் (ப்ரபத்தி இன்னமும் செய்யாதவன்)**

For what purpose these are not performed?

- For fame, any personal gain or any to receive respect from others.
- For other cheap rewards
- To attain moksham as a means

24-26 **இவற்றை எதற்காக செய்கிறான்?**

- **ஸ்வயம் ப்ரயோஜமாய்**
- **முக்தனைபோல் எம்பெருமானின் உகப்பிற்காகவே**
- **அநுபவமாய்**

For what purpose these has to be done

- As an end in iteself
- To please the Lord like a liberated soul
- As an enjoyment

24-27 **இப்படி செய்வதால் என்ன கிடைக்கும்?**

- **வேறு தெய்வங்களை நாட வேண்டிய நிலைமை, அந்த நினைவு, அவற்றை பூஜித்தல் போன்றவை அணுகாது.**
- **வேறு பலன்களை நினைத்தல், பேசுதல், செய்கை இவை தவிர்த்து, எம்பெருமான் பணியில் அநந்ய ப்ரயோஜனத்வம் ஏற்படும்**

What would one get by doing these?

- Any stage where you may have to seek other deities, thinking of those deities, praying those will not materialize for him
- Thinking of other cheap rewards, talking about them and doing actions in search of them – all these will be avoided. Attitude of service to the Lord only and no other benefit whatsoever will result.

24-28 **இப்படி பல பிரமாணங்கள் மோக்ஷத்திற்கு உபாயம் ப்ரபத்தி என்பதால் "பக்தி யோகம் தவிர மற்ற ஒன்றும் கர்மாவை ஒழிக்காது" என்பது பக்தி அதிகாரியை மட்டுமே சொல்லும்**

Thus many authoritative scriptures reveal prapatti as a direct means for moksham. So when they claim that except bhakthi nothing will clear the karma, it refers only to those who are eligible to perform bhakthi yoga.

24-29 **இப்படி சாஸ்திரம் என்னும் நீரில் உள்ள கலங்கலை, ஸம்பிரதாயம் என்னும் தோத்தங்கொட்டையால் நீக்கி, தெளிந்த ஞானத்துடன் ஆசாரியர்கள் நாம் செய்ய வேண்டிய ஸித்தோபாயமான பகவானை வசப்படுத்துவதற்கு காரணமான ஸாத்யோபாயமான பக்தி, ப்ரபத்திகளை நன்கு உபதேசித்தனர்.**

Saastras are water. Muddiness is confusion. Sampradaayam is the seed (toottankottai) which clarifies the water. Aacharyaas thus gained the clear knowledge and instructing us of the achievable means of bhakthi and

praptti which are used to cool off the anger of the existing means called Lord.

24-30 (Tag)

Chapter 25
பிரபாவ வியவஸ்தாதிகாரம்
Boundaries of the means

25-1 **ப்ரபத்தியின் பெருமையை கூட்டாமல், குறைக்காமல் விவரிக்கிறார்**

இந்த இரண்டு அதிகாரங்களில், ப்ரபத்தியின் பெருமையை சிலர் அதிகமாக்கி கூறுவதை மறுத்து ஶாஸ்திர முறைப்படி நிலை நிறுத்துகிறார்.

Svami Desikan, in this chapter describes the greatness of prapatti without any over or understatement. Some go overboard and claims the superfuous and exaggerated magnificance of prapatti, which is undesired. He disproves those with the proper reference to the saastras.

25-2 **எம்பெருமானின் ஸ்வரூப, ரூப, குண, விபூதிகளையும், அவனது மாயையும், ஜீவனின் வர்ணாச்ரம நியதிகளையும் வேதங்களால் உள்ளபடியே அறிய வேணும். பாகவதன் பகவானை அடைய சாஸ்திரத்தில் வரையறுத்த பக்தி, ப்ரபத்தி போன்ற உபாயங்களின் பெருமைகளை எம்பெருமானார் போன்ற மஹான்களால் நிச்சயிக்கப்பட்டுள்ளது**

Just like how vedas show the Lord's innate nature, form, character and wealth (svaroopa, roopa, guna, vibhuthi) and His miraculuous acts (mayai), one needs to learn fro mthe same vedas about the caste and style of living (varna and aasrama dharma) as it is. Svami Ramanuja and other aacharyas have confirmed the modes of bhakthi and prapatti to reach the Lord as depicted on the saastras.

25-3 **குலம் மாறும், ஜாதி மாறாது.**
ஜாதி *என்பது பிறப்பைப் பொறுத்தது. உடல் உள்ளவரை மாறாது. ப்ராஹ்மணன், பசு போன்றவை.*
குலம் *என்பது பின் பற்றுவதைப் பொறுத்தது. மாறக்கூடியது. வைஷ்ணவ குலம் போன்றவை.*

பிற குலத்தில் இருந்தவன் மனம் மாறி வைஷ்ணவன் ஆகலாம். ஆனால் ஜாதி சரீரம் உள்ளவரை மாறாது. கோவில் யானை எத்தனை பெருமையானாலும் யானை ஜாதியைச் சேர்ந்தது

Dynasty (Kulam) can change but not the caste (jaathi).
Caste is dtermined at the time of birth and will not change as long as the body remains. For example, brahmins, cow etc.
Dynasty depends on what one follows up. It can change. For example one belongs to a different belief, may change one day and start living as a converted Srivaishavan.
For example, the temple elephant, despite of its greatness, it still belongs to the caste of elephant only.

25-4 **ஜாதி பற்றிய வரை முறை**

பிறர் கூற்று - *பகவத் பக்தர்களுக்கு ஜாதி வித்யாஸம் கிடையாது. ப்ரமாணங்கள் இதை சொல்கின்றன. "பகவத் பக்தர் எவரும் ஶூத்ரர்கள் அல்லர். பகவானை ஆஸ்ரயிப்பதால் ஜாதி மாறி அவர்களுக்கு ப்ராமண்யம் உண்டாகி அவர் பாகவதர்களான ப்ராஹ்மணர்கள் ஆகிறர். எல்லா ஜாதியிலும் பகவத் பத்தி இல்லாதவனே ஶூத்ரன் ஆகிறான்"*

பதில் - *பகவத் பக்தி உடையோர் எல்லோரும் ஒரே ஜாதியினர் என நினைக்கக் கூடாது. பிறகு சாஸ்திரங்கள் பாகவதனான ப்ரஹ்மணனனுக்கும், பாகவதனான ஶூத்ரனுக்கும் தனித்தனியாக வரையறுத்து கூறும் வசனங்கள் பொருள் அற்று ஆகிவிடும்.*

பக்தியில்லாத அந்தணனுக்கும், அந்நியனுக்கும் எவ்வளவு ஏற்ற தாழ்வு உண்டோ அந்த அளவு பாகவதர்களான இரு வகுப்பினருக்கும் கொள்ள வேண்டும்.

பாகவதர்கள் அனைவரும் ஸமம் என்று சாஸ்திரம் சொல்லியது அடையும் பலனாகிய மோஷம் ஒன்றே என்பதைக் காட்டவே.

Rules on caste

Common belief – There is no difference in caste among bhagavatas. All saastras say this. No bhagavata can be labeled as the fourth caste (sudra). Since they devote themselves to the Lord, their old caste will change and they will get brahaminism and become brahmins. The one who doesn't pray to the Lord is actually the sudra, in any caste.

Answer – The assumption of caste equality among all bhagavatas is wrong. Then why saastras dictate the rituals for a brahmin bhagavata and others? Then those vedic statement will be falsified. The difference between brahmin bhagavata and other caste bhagavata is the same as when compared with two of the same who doesnot pray to God.
When saastras say all bhagavatas are equal, it merely stressess the final reward of moksham is the same for all.

25-5 **பாகவதனை இழிவாய் நினத்தல் தவறு**

பிறவியால் தாழ்ந்தவன் ஒருவன் பாகவதன் ஆனால், அவனை உயர் பதவி பெற்றவன் பகவத் ப்ராபவத்தால், மனத்தால் கூட இழிவாய் நினைக்க மாட்டான்

Thinking low of any bhagavata is wrong.
If someone who is born in the low caste but devoted to the Lord, will never be considered low even by the greatest high caste bhagavatas.

25-6 **பரம பாகவதனே ஆனாலும் ஜாதி உடல் உள்ளவரை மாறாது.**

மஹரிஷிகள் உயர்பிறப்பு உடையோனை கீழாகவும், கீழ் பிறப்புடையவனை உயர்வாகவும் சொன்னது பகவத் பக்தியின் பெருமையைக் காட்டவே. கர்மாவால் ஏற்பட்ட உடல் உள்ளவரை ஜாதி அகலாது

However devoted to the Lord, caste will not change during life.
Some seers have mentioned low of someone who is born in a high caste and vice versa to emphasize the greatness of bhakthi only. But the caste which is dtermined by the karma will never change.

25-7 **குலம் தரும் செல்வம் தந்திடும் (பெரிய திருமொழி 1-1-9)), பண்டைக் குலத்தை தவிர்ந்து பல்லாண்டு (பெரியாழ்வார் திருமொழி 1-5) இதைத்தான் பெரியவாச்சான் பிள்ளை வியாக்யானம் காட்டுகிறது**

Azhvaar's quotes and the explanation of Perivaachan pillai stresses only this.

25-8 **விதுரர் உட்பட ஜாதி வரம்பை மீறதாவர்கள் முன்னோர்கள்**

விதுரர், அம்பாலிகையின் வேலைக்காரி வயிற்றில் பிறந்தவர். கடைசி வர்ணம். ஆனால் பரம பாகவதர். இருந்தும் தன் ஜாதிக்கு தகுந்தே மணந்தார். பாகவதர்களுக்கு ஜாதி மாறி உயர்ஜாதி வரும் எனில் அவர் உயர்ந்த ராஜகுமாரியை கல்யாணம் செய்து கொண்டு இருக்கலாமே!

Our elders including Vidhura never broke the code on caste.
Vidhura was born to the servant aid of Ambalika and so belongs to the fourth class. But he is the supreme devotee of the Lord. Still, he married a girl of his own caste . If onecan move up on cast system by devotion to the Lord, why Vidhura could have married to a princess?

25-9 **விதுரர் வீட்டில் கண்ணன் உண்டது சாஸ்திர சம்மதம்**

பகைவன் வீட்டில் உண்ணக்கூடாது என்று கண்ணன் துரியோதனன் வீட்டில் உண்ணவில்லை. கண்ணன் கஷ்த்ரியன். நாலாம் வர்ண விதுரர் வீட்டில் உண்டது நல் ஒழுக்கமும், பக்தியும் உடையவர் வீட்டில் உண்ணலாம் என்பது யுக சாஸ்திரம். ஆபஸ்தம்ப சூத்திரம் அனுமதிக்கிறது.

Lord Krisha's eating food at Vidhura's house conforms to the saastra.
Lord Krishna didn't eat at Dhuriyodhanan's house since one should not eat at enemy's house. Krisshna belongs to the third class but He still ate at Vidhura, who is of fourth class. Yuga saastras permit to eat at lower caste people's house only if the host are of supreme character, have intense devotion towards the Lord and follow all required the cleanliness (aacharam) procedure. This has bee nstated I nthe Aapasthambha sustra.

25-10 **விதுரரின் அந்திம காரியங்களை தர்மர் நடத்தியது சரி**

விதுரர் நாலாம் வர்ணம் ஆயினும் ப்ரம்மவித். பரம பாகவதர். யோகத்தினாலேயே தன் சரீரத்தை உதறினார். தர்மர் அவருக்கு தாந்த்ரீகமாக, மந்திரங்களை வெளிச் சொல்லாமல் கடைசி காரியங்களை செய்திருக்கலாம். அல்லது அசிரீ வாக்கின்படி தர்மர் நடந்திருக்கலாம். ஆக ஜாடி மாறுதல் என்பது கிடையாது.

25-11 **த்ரௌபதி ஐவருக்கு மனைவி என்பது தெய்வீக விதி விலக்கு**

Dharupathi wife of five is a divine exception of the law.

25-12 **விசுவாமித்திரர் பிறப்பில் அந்தணரே**

Visvamitra, after all is a brahmin by birth.

25-13 **மதுரகவிகளுக்கு நம்மாழ்வார் உபதேசித்தால் ஜாதி நீங்குவது இல்லை.**

The code of caste does not go away even in the case of Nammazvar instructing Madhurakavi.

25-14 **ஞானம் தருவதில் பக்தி மட்டுமே அதிகாரம். ஜாதி இல்லை**.

On imparting knowledge, bhakthi is the qualfication and not the caste.

25-15 **ப்ரஹ்ம வித்யா மந்திரங்களை அதற்கு தகுதி உடையவரே உபதேசிக்கலாம்**

Mantras regarding the understanding of the Brahmam can be instructed only by the qualified people.

25-16 **சாஸ்திரம் சொல்லும் வரையறை முக்யம். ஜாதி நசிப்பது முக்தியில்.**

Code of saastras is important. The elimination of caste only in moksham.

25-17 **உடல் சம்பந்தமான ஜாதி தவிர மனத்தன்மைகளையும் அறிந்து நடக்கவேணும்**

Besides the caste related to the body, one needs to adhere to the mental state and behave accordingly.

25-18 **பரமபாகவதனை பக்தியில்லாதவனுக்கு சமமாக நினைத்தால் நரகமும் உண்டு.**

One goes to hell, eve nby the mere of thought of considering a supreme bhagavata to one who is not devoted to the Lord.

25-19 **பாகவதர்கள் மூன்று வகை - ஏகாந்தி, பரமைகாந்தி, உத்தம பரமைகாந்திகள்.**

Bhagavatas are three types – loners (ekanthi), elevated loners (paramikanthi), supreme elevated loners (uttama paramaikanthis)

25-20 **நாராயணைக நிஷ்டரே உயர்ந்த பாகவதன் என்கிறது விஹகேந்திர ஸம்ஹிதை. அந்த பாகவதன்**

- **உயிர் பிழைப்பிற்காக தொழில் கெடினினும் அது பகவத் ஆராதநத்திற்கேயாம்.**
- **வாத பிரதிவாதங்கள் ஞானத்தை சேர்ந்ததால் அவை ஜபம்**
- **காண்பதெல்லாம் கண்ணன், நிற்பது எல்லாம் நெடுமால். அவன் பார்ப்பதே த்யாநம்**
- **திருவடிநீர் உயர்ந்தது**
- **எச்சில் புனிதமானது**
- **பேச்சே உயர்ந்த மந்திரம்**
- **தொட்டது எல்லாம் சுத்தம்.**

Vihahendra Samhitha claims that bhagavata is the one who is devoted only to Lord Naarayana.
For those bhagavatas

- Performing menail jobs for the sake of survival will be considerd as the deep prayer to the Lord.
- Arguments which enhances the knowledge will be considered as meditation
- Lord will be present wherever that devotee turns, whatever he sees is devotion

- Water flowing through his feet will be considered as sacred.
- Any leftover food left fro mhim is holy
- Any word he speaks is a mantra
- Whatever he touches will get purified.

25-21 **உண்ணத் தகாதவை - அத்திக்காய், சுரைக்காய், கோவைப்பழம், வெண்கத்தரி, நாய்க்குடை, முள்ளங்கி, போன்ற பல**

There are certain vegetables which are excluded from consumption - Atthikaai, kovaikkai, white eggplant, mushroom, etc.

25-22 **ஏகாதசி விரதம் முக்யம். அன்று அன்னத்தை உட்கொள்ள விரும்புவன் கள் குடித்தவன் ஆவான்**

Fasting on Ekadasi is very essential. If one intends to eat om that day he is considered to be have drunk liquor.

25-23 **எவருக்கும் சாஸ்திர நியமங்கள் விதி விலக்கு அல்ல. ஆசாரியர்களும் கடைசி நாள் வர இவற்றை பின்பற்றி நடந்தனர்.**

No person is above saastras. Every single human being on earth including aachryas need to adhere to them till the last breadth.

25-24 **விதிக்கப்பட்ட கர்மாக்களை விபரீத ஞானத்தால் கைவிடுவது தாமஸ த்யாகம்**

One taken over by thaamasa guna gives up his karma because confused and inappropriate knowledge.

25-25 **உடல் வருத்ததிற்காக அஞ்சி, சோம்பலால் விடுவது ராஜஸ த்யாகம்**

One gives up karma being lazy, if he is taken over by raajasa guna.

25-26 **தன் செயல் தனக்கு ஸேஷம், தன் பலனுக்கு அது ஸாதனம் என நினயாமல், எம்பெருமானின் உகப்புக்காகவே என நினைத்து தன் பலனை விடுபவன் ஸாத்விக த்யாகம்.**

If one gives up the benefit of any action and considers that action is not done by him or performed as a means for self-benefit but is done only to make the Lord happy, then iti s called saatvika sacrifice.

25-27 **ஸாத்விக த்யாகத்தின் எல்லை நிலை என்பது ஸ்வயம் ப்ரயோஜனமாய் செய்யும் கைங்கர்யம். அந்த செயலுக்கு மோக்ஷத்தை பலனாக கருதாமல் முன் செய்த ப்ரபத்தியினால் மகிழ்ந்த எம்பெருமானின் கருணையால் என நினைப்பது.**

The extreme case of saatvika sacrifice is performing an action just for doing that service. One should be firm on the belief that moksham is not the benefit of that action, but it is the grace of the Lord who indeed felt happy on the performance of the prapatti, done earlier.

25-28 **ப்ரபத்திக்குபின் அறிந்தேசெய்யும் பாபங்கள் பலனைத் தரும். பரிகாரம் அவசியம் செய்ய வேண்டும். இதை சுக்ரீவன், லக்ஷ்மணனை வேண்டியதும், லக்ஷ்மணன் சுக்ரீவனை வேண்டியதிலும் காணாலம்.**

One has to pay for the sins which are committed knowingly, after prapatti. For those sins, one needs to look for atonement. This is obvious in the case of Sugreeva and Lakshmanan. Each one pleaded the excuse from the other.

25-29 **ப்ரபன்னாயினும் வர்ணாச்ரம தர்மங்கள் சாகும்வரை அவசியம்.**

Adhering to code of saastras, is important even for prapannas.

25-30 *ஆகார நியமம், ஸதாசாரிய ப்ரம்பரையில் வந்த ஞானத்தையே அடைவது, தன் ஸூத்ரங்களால் மந்திரம் கொண்டு கர்மானுஷ்டானம் செய்ய வேண்டும், நியாய சம்பாத்யத்தில் கர்மா செய்ய வேண்டும், ஜாதிக்கேற்ற செய்ய வேண்டிய கர்மா போன்ற நியமங்களும், தேச,*

கால மற்றும் பல நியமங்களுடன் அநந்ய ப்ரயோஜனாய், தன் சக்திகேற்ப ஸ்ரீமந் நாராயணனுடைய கைங்கர்யம் செய்ய வேண்டும். தர்மானுஷ்டானம், சாந்தி, கருணை இவை பகவத் பக்தி புருஷார்த்த பலனை மேலும் கொடுக்கும். ஆத்ம குணம் ஆசாரத்தைவிட உயர்ந்தது.

Strict diet, acquiring knowledge passed through rich lineage, following the karmas according to one's sutras, performing rituals on fairly earned income, doing karmas according to one's caste. Besides following karmas based on time and location etc., wthout looking at any other benefit, one has to perform service to the Lord Sriman Narayana according one's capacity. Folowing righteous principles, calmness and compassion wil lconfer bhakthi and other rewards. One's character and action is more important than the cleansing procedures (aacharaam).

25-31 (tag)

Chapter 26
பிரபாவ ரக்ஷாதிகாரம்
Effectiveness of Prapatti

26-1 **ப்ரபத்தியின் பெருமையை குறைத்து சொல்வதை மறுத்து அதன் உண்மை நிலையை காத்து தருகிறார், இந்த அதிகாரத்தில்.**

ப்ரபத்தி ஜாதியை ஒழிக்காது அதுபோல ப்ராரப்த கர்மாவையும் விலக்காது என்று சிலர் ப்ரபத்தியின் பெருமையை குறைத்து வாதாடுவது தவறு.

Some deliberately talk less and put down about the greatness of prapatti. In this chapter, those claims are refuted and true stand has been established.

Some say just like how prapatti can not eliminate the caste, similarly it will not remove the continued karma (prarabdha). Those claims are incorrect.

26-2 **பகவத் அபசாரம் கொடியது. ஆகையாலே நல்வழி தவறிய பாகவர்களிடம் கூட அபசாரம் படுதல் ஆகாது.**

Doing wrong things to the Lord (bhagavad apacharam) is brutal. Bhagavata apacharam is even worse. That is why one should not behave unpleasantly to bhagavatas who may not be rational.

26-3 **ஸ்ரீமானான எம்பெருமானே ஸித்தோபாயம். அவன் பெருமை மிக உயர்ந்தது. அவன் செயல்கள் விசித்திரமானவை.**

- **கல்லே கன்னிகையானது (அஹல்யை)**
- **பொசுக்கும் தீ பொங்கும் கருணை கொண்டது (ப்ரஹ்லாதன்)**
- **இழிந்த புல்லும் இணையிலா ஆயுதமாயிற்று (காகாசுரன்)**
- **வதம் கூட வரம் ஆயிற்று (விராதன், கபந்தன்)**
- **பாதுகையே பார் ஆண்டது.**

Lord Narayana who is always with the consort of Lakshmi is the only direct means (siddhopayam). His actions are no less than miracles.

- Stone turned out to be a beautiful lady (Ahalya)
- Burning fire turned to be cool and compassionate (Prahlada)
- Even grass became a weapon (Kakasuran)
- Destruction turned out to be a boon (Viraadhan, kabhandan)
- Sandals (Paduka) ruled the universe

26-4 **ப்ரபத்தி ஜாதியை உயர்த்தாது. அது உண்மை. ப்ரபத்தி ப்ராரப்த கர்மாவை அழிக்காது என்பர் சிலர். அது தவறு.**

Prapatti will not change the caste, which is a true statement. But prapatti will not tear down the (prarabdha) karma is false.

26-5 **ப்ராரப்த கர்மாவை நாசம் செய்வதால் பக்தியினும் உயர்ந்தது ப்ரபத்தி**

Since prapatti completely destroys the (prarabdha) karma, it is superior to bhakthi yoga.

26-6 **அனுஷ்டிப்பவரின் ஆர்வத்தைப் பொறுத்து ஆசைப்படும் காலத்தில் மோக்ஷத்தை அளிக்க வல்லது ப்ரபத்தி ஒன்றே.**

Depedning on the performer's eagerness, prapatti is the only one which can fetch the moksham, at the desired time.

26-7 **த்ருப்த ப்ரபன்னனின் ப்ராரப்தம் முழுவதும் அழியாது. அதன் வினை சரீரம் உள்ளவரை தொடரும்.**

Druptha prapanna's prarabdha karma will not be completely eliminated. Because of that it will continue till his death.

26-8 **எதிர்பாரத பலனையும் அளிக்கும் எம்பெருமான் எதிர்க்கமுடியாத ப்ராரப்தத்தை அழிக்காதது புத்தி புகட்டவே**

அடியவருக்கு அருளவே காத்திருக்கும் எம்பெருமான் ப்ரபத்தி செய்யும்போதே மோஷத்தை அளிக்க காத்திருக்கிறான். ஆனால் அவன் த்ருப்த ப்ரபன்னாகில் எம்பெருமான் காக்க வேண்டி உள்ளது. அக்காலத்தில் இந்த உலகில் துன்பமே கலவாது சுகத்தை அனுபவிப்பானாகில் விஷயங்களில் ஆசை போய் பகவத் அனுபவ ஈடுபாடு வராது. ஆக, பகவான் ப்ராரப்த கர்மாவை சாக்காக கொண்டு கலக்கம், பிரிவு, இழப்பு, துக்கம், வருத்தம் இவற்றை தருகிறான். எனவே நப்பாசை கொண்டவனுக்கு அத்தாலே பாடம் புகட்டுகிறான். நோயை நல்ல உபாத்யாயர் என்றார் பட்டர்.

While the Lord can grant unexpected rewards, the reason why He doesn't remove the prarbdha karma is to teach a lesson to the individual.

He is waiting restlessly to bless His devoteees and ready to confer the moksham, the second prapatti process is completed. But since the prapanna is asking for moksham only at the end of this life, unfortunately, He has to restrain himself. If the prapanna on his rest of the days on the earth enjoys everything unadulterated with any sadness then he will not dislike earthly pleasures or turn his attention to the Lord. So the Lord uses the prarabdha karma as a tiny reason and make one to go through mental agitation, separation, loss, sorrow and misery. Lord teaches a lesson only through that. Parasara bhattar clamied disease is a good teacher.

26-9 **சேதனர்கள் இருவகை. எம்பெருமானால் குறித்த ஆயுள் உடையவர், ஆயுஷ்ய ஹோமம் முதலியவற்றால் தன் வயஸை வளர்த்திக் கொள்பவர் சிலர்.**

Individual souls are two types - One has the life span fixed by the Lord and the other extends by performing several rituals (homams and yagyams) [Fixed life and extensible life]

26-10 **துக்கம் பாடம் புகட்டும் ஆசிரியன். மோக்ஷத்தில் ஆசை தூண்டவும், ஆயுஸை வளர்க்காமல் விட இருக்கவும் துன்பத்தை தந்து நல்வழிப்படுத்துவது எம்பெருமானே.**

Grief is a great teacher. To kindle the aspiration for mokshm and not to seek means for extending the life, Lord gives troubles to the individual soul and corrects him.

26-11 **கூரத்தாழ்வான் கண்ணை இழப்பினும் மனத்தாலே பகவானைக் காண வேண்டினார். பார்வை வேண்டவில்லையே!**

Kurratazhvaan when he lost his eyesight, he prayed to the Lord that he desired to see Him mentally and never requested t oget back his eyesight.

26-12 **சில பிரபன்னர்கள் அறிந்தே பாவம் செய்து பலனை அனுபவிப்பது, உலக விஷயங்களில் வெறுப்பும் மோக்ஷத்தில் இச்சையும் உண்டாக எம்பெருமானின் அநுக்ரஹரூபமே.**

Some prapannas knowingly commit sin and pay the penalty. This is only by the grace of the Lord for him to be detached from the worldly affairs and yearn for moksham.

26-13 **துக்கானுபவம் வினையின் பயன். அதுவே தண்டனையாகவும், அதற்கு பயந்து ப்ராயசித்தம் செய்ய முயல்வது ப்ரபத்தியின் பலன்.**

Going through rough times is due to karma. The same acts like a punishment and because of the benefit of prapatti he tries to perform atonement.

26-14 **சரணாகதனான காகாசுரன் உயிர் பிழைப்பு ப்ரபத்தியின் பலன். மறுமுறை இத்தகைய பாபம் செய்வதை விலக்குவதால் கண் இழப்பு என்ற தண்டனை அநுக்ரஹ பலனே.**

Surrendered kakasura got his life spared by the effects of prapatti., The punishment of losing an eye is only the effect of blessing by the Lord, so as not to repeat similar sins

26-15 **பாதுகையை வ்யாஜமாகக் கொண்டு புவனத்தை ரக்ஷித்தவன் ப்ரபத்தியைக் கொண்டு நம்மையும் ரக்ஷிப்பான், பகைவனுக்கும்**

அருள்பவன் பாபமே வடிவெடுத்த நம்மையும் ஆட்கொள்பவன். ஆதலில் ப்ரபத்தியில் இம்மியளவும் சந்தேகம் வேண்டா.

The one who protected the entire universe through the sandals (paduaka) will protect us through the simple reason (vyajam) of prapatti. The one who displays mercy even to the enemy will rescue us who are nothing but manifestation of all sins. So never have an iota of doubt on prapatti.

26-16 **க்ஷண காலத்தில் செய்யும் ப்ரம்மஹத்தி போன்ற பாவங்கள் கல்ப காலங்கள் துக்கத்தைக் தரும். அதுபோலே ஒரு க்ஷணத்தில் செய்யும் ப்ரபத்தி, கல்ப காலங்கள் செய்த வினையை ஒழிக்கும்.**

Some sins like brammahathi, though takes a second to do but will cause suffering for several kalpas. Similarly, though prapatti takes a second to perform it will squash the sins from several kalpas.

26-17 **பகவத் அபசாரம் பாகவத அபசாரம் மிகக் கொடியவை. பாகவதர்கள் தெரிந்தே அபராதம் செய்யினும் அவரிடம் அபசாரம் படாமை அவசியம் வேண்டும்.**

One should not displease the Lord or the bhagavatas. Sometimes a bhagavata may make mistakes knowingly. Even then one should not do anything to hurt his feelings.

26-18 **நிலை நின்றவர் அடி தடுமாறுரினும் அவரிடம் அபசாரம் செய்தல் கூடாது. இவர்களின் பெருமை நித்ய ஸூரிகளாலும் அளவிட முடியாதன்றோ!**

ராமாநுஜ ஸித்தாந்தத்தில் நிலை நின்ற ப்ரபன்னர்கள் தங்கள் வாழக்கையில் பொருளாசை, காம க்ரோத குணங்களில் சிக்கவும் கூடும்.

Even determined devotees sometimes make missteps. Still one should not even think of low or cause any harm to them. Their fame can't be evaluated even by eternals (nithyasooris)

Prapannas who are steadfast on the Bhagavad Ramanuja philosophy might even be distracted by materialistic desires, or lose control on anger and lust.

26-19 **எப்போதும் தீய வழியில் செல்பவன் வேறு. நிலை நின்றவன் தடுமாறுவது வேறு. இருவரது குற்றங்களையும் ஒன்றாக காண்பது நேர்மையாகாது.**

The one who is always engage in bad activities is different from the one once in while slips away. Considering the the faults committed by both are the same is not fair.

26-20 **உபசாரம் எவருக்கு செய்வது என்பதில் வித்யாஸம் காட்டிய சாஸ்திரமே எவருக்கும் அபசாரம் கூடாது என்றது.**

ஸமாச்ரயணம் ஆனவன், பகவான் திருநாமம் கொண்டவன், திருமண் காப்பு தரித்தவன், மந்திரோபதேசம் பெற்றவன் இவர்களுக்கு உபசாரத்தில் மற்றவரைவிட வேற்றுமை காட்டினும் பாகவதன் எவரிடத்தும் அபசாரம் கூடாது.

Sastras which allows discrimination on the treatment amongst people , never says anyone should be hurt.

People who had samaasrayanam, those who keep bhagavan's name, those who are wearing tirumann, those who had the instructiosn of mantras – should be treated well. But noone ever should be harmed.

26-21 **இங்கே பாகவதன் என்பது எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் விஷயத்தில் மட்டுமே ஈடுபட்டவன். அவன் பிரபன்னாய் இல்லாவிடினும் காலத்தில் எம்பெருமான் அருளால் உஜ்ஜிவிப்பர்.**

Here bhagavata refers to those who are committed earnestly only to Sriman Narayana. Even if they are not prapannas, Lord will bless them in time and provide salvation.

26-22 **அறிந்தே பாவம் செய்பவரைக் கூட பகவான் ரக்ஷித்து அவர்களை பிராயசித்தம் செய்ய தூண்டி காப்பாற்றுவான்.**

Even those who deliberately commit mistakes, Lord intervenes and protects them. He gives them good though and induces to perform reparation actions.

26-23 **பகவானிடம் பகைமை கொள்ளாதவன் பக்தி குறைந்து இருப்பினும், மற்ற குற்றம் உடையவன் ஆயினும், ஞானம் மட்டாயினும், எம்பெருமான் திருநாமங்களாளை கடமைக்காகவோ, உளறலாலோ, விளையாட்டாகவோ, அல்ப பலனுக்காகவோ சொல்வதால் தூய்மை அடைகிறான்.**

The one who is not an adversary to the Lord, though has less devotion, have other errors, lacks on knowledge, when he pronounces Lord's name for some reason – as a duty, blabber, for fun, or for low level pleasures - he gets purified.

26-24 **ப்ரபத்தி ஆகாத பகவத் அநுகூலருக்கு க்ஷேத்திர வாஸம் நல்ல புத்தியை கொடுத்து மோக்ஷ வழியைக் காட்டும். ப்ரபன்னனுக்கு க்ஷேத்திர வாஸம் மன உறுதியையும் தெளிவையும் தரும். பகவத் விரோதிக்கு நாம ஸங்கீர்த்தனம், க்ஷேத்திர வாஸம் போன்றவர்றால் பலன் இல்லை.**

Those who are not Lord's advarsaries, dwelling in a holy place helps them correct their life and pursue the the means for moksham. For prapannas this will give them a clear nd stable mind. Those who are against the Lord nothing – like chanting Lord's name, stayinga in a holy place – will help.

26-25 **ப்ரபன்னர்கள் புண்ய ஸதலத்தில், எம்பெருமான் கட்டளைக்கு பணிந்து பாகவதரோடு சேர்ந்து வாழ வேண்டும். பாகவதர்களின் குறைகளைக் காணாது பாலைவனத்தில் கிடைத்த இனிய நீரைப்போல் அவர்தம் குணத்தைக் கண்டு மகிழ வேண்டும். இப்புவியில், மீதி நாட்களை ஸ்வயம் ப்ரயோஜனமய் பகவத் கைங்கர்யத்தில் ஆழ்ந்திருக்கும் பாகவதரோடு வாழும்படி அருள் செய்த எம்பெருமான், பரமபத பேற்றை பாருலகிலேயே அளித்ததாய் மகிழ்ந்து கைங்கர்யத்தில் திளைக்க வேண்டும்.**

Prapannas should obey the commands of the Lord and live in an holy place accompanied by the bhagavatas. They should never see the flaws of the bhagavatas, but look only on the good qualities as if they found sweet water in the midst of a desert. One should consider it's a great blessing of the Lord that they are lving out the rest of the days on this earth with those bhagavatas who perfrom service without any return. They should perform kaimkarya with the attitude that the enjoyment of moksha has already started on earth with His blessing.

26-26 **ப்ரபத்தி என்பது ஒரு தவம். அது தானம், யக்ஞம் போன்ற தர்மங்களைவிட சிறந்தது என ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. ப்ரமாணங்களால் கூட, அதன் பெருமை என்னும் கடலின் ஒரு திவிலையை வர்ணிப்பது என்பது முடியாது.**

Prapatti is a deep meditation (thapas) It is superior to other righteous actions (dharmas) like charity and rituals. Even the authoritative texts can't even describe a drop of its ocaean of fame.

26-27 (tag)

III - பத வாக்ய யோஜநா பாகம்
(Word by word Meaning Section)

இது வரை ரஹஸ்யங்களை கிரஹித்துக் கொள்ள வேண்டிய அறிவுக்கு அடிவாரமான பகுதிகளைக் கண்டோம்.

இனிமேல் மூன்று அதிகாரங்களில்

1. **அஷ்டாக்ஷரம்**
2. **த்வயம்**
3. **சரம ஸ்லோகம்**

என்ற மூன்று மஹா ரஹஸ்யங்களின் பொருளை, பதம் பதமாக பிரித்து வாக்யங்களில் முறைப்படுத்தி விளக்கும் பகுதி இது.

So far we have dealt with the preliminary materials which are simply the foundation to gain the insight on the three rahaysa mantras.

Now in the next three chapters, the esoteric meanings of

1. Ashtaaksharam
2. Dvayam
3. Charama Slokam

Will dealt by considering them at word by word level and also properly positioning them in the whole sentence.

Chapter 27
மூலமந்த்ராதிகாரம் (Moolamantraadhikaaram)
The primary Mantra

27-1 **அஷ்டாக்ஷர மந்திரத்தை முறையாக ஜபிக்க வேண்டும்**

முதலில் ப்ராணாயாமம்

ஸங்கல்பம்
ஸ்ரீமத் பகவத் ஆஜ்ஞயா ஸ்ரீமந் நாராயண ப்ரீத்யர்த்தம் ஸ்ரீமத்
அஷ்டாக்ஷர மஹா மந்த்ர ஜபம் கரிஷ்யே

ந்யாஸம்
ஸ்ரீமத் அஷ்டாக்ஷர மஹா மந்த்ரஸ்ய பதரீகாஸ்ரமவாஸி நாராயண
ரிஷி: தேவீ கயத்ரீ சந்த: ஸ்ரீமந் நாராயணோ தேவதா
ஸ்ரீமத் அஷ்டாக்ஷர ஜபே விநியோக:

த்யான ஸ்லோகம்
ஸவ்யம் பாதம் பரஸார்ய ரித துரித ஹரம் தக்ஷிணம் குஞ்சயித்வா
ஜாநுந்யாதாய ஸவ்யே தரமிதர புஜம் நாகபோகே நிதாய
பச்சாத் பாஹீத்வயேந ப்ரதிபட சமநே தாரயந் சங்க சக்ரே
தேவீ பூஷாதி ஜுஷ்டோ ஜநயது ஜகதாம் சர்ம வைகுண்ட்டநாத:

யதந்த ஸ்தம் அசேஷேண வாங்மயம் வேத வைதிகம்
தஸ்மை வ்யாபக முக்யாய மந்த்ராய மஹதே நம:

அஷ்டாக்ஷர மஹாமந்த்ர ஜபம்
[ஆண்கள் சொல்ல வேண்டியது] ஓம் நமோ நாராயணாய
[பெண்கள் சொல்ல வேண்டியது] அம் நமோ நாராயணாய

27-2 **சாஸ்திர ஞானம் சுய சம்பாத்யம். அஷ்டாக்ஷர ஞானம் பரம்பரை சொத்து. ஆகவே மந்திரங்களும் அவற்றின் அர்த்தங்களும் ஆசார்ய உபதேசமாய் பெற வேண்டும்.**

மந்திரங்களுக்கு பொருள் அறிவது அசாத்யம். ஆசாரியனிடம் அடி பணிந்து வணங்கி ஆவலுடன் அறிய வேண்டும் என்னும் நியதியாலே இங்கே சுருக்கமாய் சொன்னது.

சாஸ்திர ஞானத்தை ஒருவன் எவ்வளவு கரைத்து குடித்தாலும், திருமந்திர ஞானம் என்பதை குற்றம், குறை, விபரீத ஞானம் இவற்றை எல்லாம் தவிர்த்து பாரம்பரிய சொத்தாக, ஆசாரிய முகமாக அறிய வேண்டும்.

மந் என்றால் மனம். த்ரா என்றால் கருவி. மனத்தை பரிசுத்தமாக்கும் ஒரு கருவி.

One can strive hard by himself and learn the saastras. But mantras and their intricate meanings are carried by generations of accharyas and one needs to be heard only through noble aachryaas. This way one avoids the errors, omissions , paradoxical conflicts etc.

Mun means mind. Tra means tool. Mantra is the tool for the mind. It is the psychic elevator.

It is almost impossible to for anyone to knows or write the meanings of the mantras. One should approach proper aacharyaa, pay due respects, prostrate to him, and learn the mantras with great passion. So, here the meanings of mantras are highlighted in a nutshell only.

27-3 அஷ்டாக்ஷரம், த்வயம், சரம ஸ்லோகம் எனும் இந்த ரஹஸ்யத்ரயமே சேதனனுக்கு தாரக போஷக போக்யங்கள்

- உடலுக்கு தாரகம் அன்னம். உயிருக்கு தாரகம் திருமந்திரம்.
- உடலை வளர்ப்பது நெய், பால். உயிரை வளர்ப்பது சரம ஸ்லோகம்
- உடலுக்கு ஆனந்தம் சந்தனம், தென்றல். உயிருக்கு ஆனந்தம் த்வயம்

Ashtaaksharam, Charamaslokam and Dvayam are the three essential secrets. They are the sustenance agent, nurturing agent and luxury agent (thaaraka, boshaka, bhogyangal) for any individual soul.

- Food is essential for the body; similarly tirumantram is for the soul.

- Clarified butter (ney) nurutures the body; simialrly charama slokam is for the soul.
- Nice breeze and and good smell are luxury materials for the body; similarly dvayam is for the soul.

27-4 **அன்று நான் பிறந்திலேன், பிறந்தபின் மறந்திலேன் என்கிறபடி திருமந்திரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து த்வய நிஷ்டராகவே இருக்க வேணும்**

Just like the Azhvaar's words, "I was not born then; but once I did I never forgot" – one needs to be born in Tirumantra, and brought up by dvaya and has to be life-long follower of dvaya mantra.

27-5 **சிறிய கண்ணாடி பெரிய உருவத்தைக் காட்டுமாப்போலே திருமந்திரம் வேதத்தை விளக்குகிறது. ப்ரமாணங்கள் அனைத்தும் இதன் புகழை பரக்கப் பேசுகின்றன**

திரு மந்திரம், மூல மந்திரம், அஷ்டாக்ஷரம், எட்டு எழுத்து மந்திரம் என்னும் இதை உபனிஷத், ஸ்மிருதி, கல்ப கிரந்தங்கள் போன்றவை புகழ்கின்றன

Just like a small mirror can reflect a huge object in front of it, similarly irumantram reflects the Vedas. All the authoritative scriptures talk about the fame of this (tirumantram).

This is being called tirumantram, root mantra, ashtaaksharam, eight lettered mantra in upanishads, smrithi, and other scriptures.

27-6 **ஒரு ஸதாசாரியனால் முறையே ப்ரணவம், நம:, நாராயண பதம் என்று வேதம் பறைசாற்றும் இந்த மந்திரத்தை அர்த்ததுடன் உபதேசிக்கப்பட்டு, அதிலேயே மூழ்கியிருக்கும் அசக்தர்களான நம்மை காக்கும் பொறுப்பை அன்புடன் ஏற்றுக் கொண்ட எம்பெருமான், அவனுக்கு பணி செய்யும் உயர்ந்த செல்வத்திற்கு வரும் தடைகளை உடனடியாக நீக்க வேண்டும்.**

When an individual soul has been instructed this mantra with the intricate meanings of pranavam, namah: and Naarayanaa as revealed by the vedas by

a noble aacharya and then he spends the life in contemplating about this. He has a deep understanding and realization that he is helpless and powerlessand Lord is the only one who has come forward pleasingly to accept the burden of protecting him. That Lord Himself has to remove all the hurdles that stand in the way to the servicce to the Lord.

27-7 **ப்ராப்ய லாபம் ப்ராபகத்தாலே, ப்ராபாபக லாபம் திருமந்திரத்தாலே, திருமந்திர லாபம் ஆசாரியனாலே, ஆசார்ய லாபம் ஆத்ம குணத்தாலே என்கிறபடி ஸத்குணங்களுடன் ஆசார்யன் திருவடி பற்றி அறிய வேணும்**

Final rewards are achieved through proper means; the best means is achieved through Tirumantra; Tirumantra's effect is achieved through Acharya; and aacharya is accessed only through noble characters – It is important to have good qualities and then go and prostrate to the acchrya and listen to to the esoteric meanings of these rahasysms.

27-8 **எட்டு இழையாய், மூன்று சரடாய் இருப்பது ஒரு மங்கள சூத்ரம் போலே என்றார் பிள்ளை லோகாசாரியர்**

This Tirumantra is eight stranded and three strings tied together like a "Maangalya Sutra", said Pillai Lokachariar

27-9 **தந்தைபோலே நரன், நாரதனுக்கு உபதேசம் செய்த பதரி ஆச்ரமத்தில் தவம் கொண்டிருக்கும் நாராயணன் என்னும் ரிஷி நமக்கு மோக்ஷ ப்ராப்தி வரை நன்மை செய்ய வேண்டும்.**

எம்பெருமான் தானே ஆசாரியனாகவும், சிஷ்யனுமாய் இருந்து தனக்குத்தானே உபதேசித்து ஆசார்ய, சிஷ்ய கிரமத்தைக் காட்டினான்

Lord Naarayana who is perofrming penance in the Badri, like a compassionate father has kindly instructed the meanings of this mantra to Naran and Naradar. That seer has to bless al lthe good things till the soul reaches moksham.

Lord made Himself as the teacher and the disciple and taught the intricacies of this mantra to Hiself. This is to demonstrate the world on

the importance of the teacher-student connection and the necessity of the proper learning of this mantra.

27-10 **ஸ்ருதி, ஸ்மிருதியில் உள்ள சொற்கள் எல்லாம் எதில் அடங்கினதோ அந்த வ்யாபக மந்திரங்களுக்குள் உயர்ந்ததான இதற்கு வணக்கம். ஆசாரியனால் அளிக்கப்பட்ட அறிவு கொண்டு திருமந்திரத்தை உணர்வது என்பது புதையலை தெளிவான கண்ணாடி போல் காண்பது.**

We pay our respects to the supreme mantras which are impreganated with meanings of all vedas and smirthis. Realizing the intricacies of Tiumantra as instructed by aachryas is like looking at a treasure through a transparent glass.

27-11 **த்வயம் மூல மந்திரத்தின் விரிவே.**

எனவே மூல மந்திரம், பின் த்வயாதிகாரம் என்னும் வரிசைக்கிரமம் பொருத்தம்

Dvyam is the expansion of Tirumantram.
So the order of first Tirumantram and then Dvayam is handled in the right sequence.

27-12 **மந்திரங்களிளுல் உயர்ந்த எம்பெருமானைச் சொல்லும் வ்யாபக மந்திரங்களிலும் அஷ்டாக்ஷரமே சாலச் சிறந்தது**

ஓம் நாராயணாய வித்மஹே வாசுதேவாய தீமஹி
தந்நோ விஷ்ணு: ப்ரசோதயாத்
மந்திரங்கள் பலவாயினும் எம்பெருமானைச் சொல்லும் மந்திரங்களே உயர்ந்தவை. அதிலும்

- *ஷடக்ஷரம் (ஓம் விஷ்ணவே நம:)*
- *அஷ்டாக்ஷரம் (ஓம் நமோ நாராயணாய)*
- *த்வாதசாக்ஷரம் (ஓம் நமோ பகவதே வாசுதேவாய)*

அதிலும் அஷ்டாக்ஷரமே மிக உயர்ந்தது என்பர் முன்னோர்.

Among all mantras, those which praise the Lord Sriman Narayana are the holiest. In those three have been celebrated as pervasive mantras

(vyabhaka). Six lettered one (om vishanavae namah), eight lettered one (om namoo Naarayana) and twelve lettered one (om namoo bhagavade vaasudevaayae). Even amongst them, Tirumantram is considerd as the leading one.

27-13 **இந்த திருமந்திரத்தின் பெருமை வரையறுக்க முடியாது. ஆசாரியர்கள் உபதேசித்ததில் சிலவற்றை இங்கே காண்போம்**

- அனைத்து வேதங்களின் சாரம்.
- குறைகள் அனைத்தையும் நீக்க வல்லது
- எல்லா பலன்களையும் தனித்தே நின்று, வேறு ஒன்றையும் நாடாது அளிக்க வல்லது.
- எல்லோருக்கும் இதில் அதிகாரம் (மந்திரம், தந்திரம்)
- தத்வ, ஹித புருஷார்த்தங்களை காட்டுகிறது
- ஸகல தெய்வங்களும் இதில் அடக்கம்
- இதை அறிந்தவன் அறிவின் உச்சியை அடைந்தவன்
- அவனை வறுமை, கலக்கம், தளர்ச்சி, துன்பம், நோய், இழப்பு இவை அணுகாது
- ஒரு முறை உச்சரித்தாலேயே ஸகல வேதத்தையும் ஜபித்தற்கு இணை
- அவரவர் கோரிய பலனைத் தரும். மன உறுதியான பிரபன்னனுக்கு எல்லையற்ற பலன்களைத் தரும்
- இதன் பெருமையை அளவிட முடியாது என்கிறான், ஸர்வ ஞானத்தையும் உடைய நாராயணனே
- இதன் பெருமையை எம்பெருமானிடம் நேரே கேட்டு அறிந்த திருமங்கையாழ்வார் பரக்க பேசுகிறார்

It is impossible to describe the the fame and value of Tirumantram by mere words. We will attemot to mention only a few as highlighted by our aachryaas.

- Tirumantram is the essence of all the vedas
- It can remove oneself from all dangers and crisis
- Singlehandedly, it can confer all the benefits without an iota of supplementary help from anything else
- Every single soul is qualified for this (mantra or tantra)
- It illustrates the tattva, hitha, purushaartha principles
- Every single deity is included in here.

- One who has the knowledge of this mantra is considered to be matured in his wisdom.
- Common perils like poverty, weakness, indecisiveness, dilemma, disease, loss etc. won't even approach him.
- Just prouncing merely once is equivalent to the chanting of all vedas known to the universe.
- It can confer whatever the participant desires. For prapannan it can give everything whether he asked for or not
- Even the omnipotent, omnipresent, all-known Lord Narayana Himself says that he can't even estimate the glory of this mantra.
- Tirumangai azhvaar who learned this mantra directly from the Lord's mouth details the grandeur of this mantra in his prabhandam.

27-14 **ஆழ்வார்கள் வாக்கில் இது எட்டு எழுத்தாக புகுந்து புறப்படாயினும், வடமொழி வேதத்தில் எட்டு அக்ஷரமாய் ஒதப்படுவதால் இது அஷ்டாக்ஷரம் ஆயிற்று.**

"நாமம் சொல்லில் நமோ நாரயணமே", "நன்மாலை கொண்டு நமோ நாராயணா" என்ற அழ்வார்கள் வாக்கில் எட்டு எழுத்துக்கள் இல்லை ஆனால் வேதத்தில் ப்ரணவத்துடன் சேர்த்து எட்டு அக்ஷரமாகவே ஒதப்படுவதால் இது அஷ்டாக்ஷரமே.

Though this mantra is not implied directly as eight words in Azhvaar's prabhandam, in Sanskrit Vedas this is always spelled and followed as eight letterd mantra.

Azhvaars has described "Naamam sollil namoo naarayanamae", "nanmaalai kondu namoo naaraayanaa". But in vedas this is always added with pranavama and iterated and so this is eight lettered mantra

27-15 **'ஓம் நமோ நாராயணாய" என்ற ப்ரணவத்துடன் கூடிய மந்திரத்தில் அதிகாரம் சிலருக்கே.**

This mantra when added with pranavam can be chanted only by a few as "om namoo Naarayanaa"

27-16 *"நமோ நாராயணா"* **என்னும் தாந்திரிக நாம ஸங்கீர்த்தனத்தில் அதிகாரம் எல்லோருக்கும். இப்படி, ப்ரணவத்தையும், ஆயவையும் கழித்து எல்லா சாதியினரும், பெண்களும் அனுஸந்திக்கலாம்.**

On the other hand, the common version of this as "Namoo Naraayanaa" which leaves out the pranavam and the last part "aya" can be chanted by everyone including fourth caste and woman.

27-17 **ப்ரணவத்திற்கு பதிலாக, அகாரத்துடன் அனுஸ்வரத்தை சேர்த்து அம் என்று உச்சரிக்கலாம் என்கிறது நாரத கல்பம்.**

Narada kalpam says that those who can't pronounce the pranavam "Om", can say "Am"

27-18 **அவரவர் அதிகாரத்துக்கு ஏற்ப ப்ரணவத்தை சேர்த்தாலும், விட்டாலும், உச்சரிப்பதால் அடையும் பலனில் வித்யாஸம் இல்லை**

It doesn't matter how one chants this according to his/her eligibility criterion, the benefits conferred has no relavance to that.

27-19 **அஷ்டாக்ஷரத்தின் மூன்று பதங்கள் அநந்யார்ஹ சேஷத்வம், அநந்ய சரணத்வம், அநந்ய போக்யத்வம் என்று முறையே தத்வ, ஹித, புருஷார்த்தங்களைச் சொல்கிறது**

- *ப்ரணவம் காட்டுவது* **அநந்யார்ஹ சேஷத்வம்**. *எம்பெருமானைத் தவிர வேறு ஒருவருக்கும் அடிமை இல்லை.* (*ஸ்வரூப ஞானம்*)
- *நம: காட்டுவது* **அநந்ய சரணத்வம்** *எம்பெருமானைத் தவிர வேறு உபாயம் இல்லை.* (*உபாய ஞானம்*)
- *நாராயண: காட்டுவது* **அநந்ய போக்யத்வம்**. *எம்பெருமானைத் தவிர வேறு உயர்ந்த பேறு இல்லை.* (*புருஷார்த்த ஞானம்*)

Ashtaaksharam illustrates the tattva hitha purushaartam through ananyaarha seshattvam, ananya saranatvam, ananya bhogyatam

- Pranavam shows ananyaarha seshatvam. The individual soul is slave only t othe Lord Sriman NaaraayNaa and nothing else. (knowledge of self – svaroopa gjnam)
- Namah shows ananya saranatvam. Other than Lord Sriman Narayana there is no other means (Knowledge of the means - upaaya gjnam)
- NaarayaNaa shows ananya bhogytavam. There is no other better enjoyment than Lord Sriman NaaraayaNaa (Knowledge of the ultimate benefit, purushartta knowledge)

27-20 **இதைச் உச்சரிக்கும் முறையை ஓமித்யேகாக்ஷரம் என்று தெடங்கிய நாராயணோபனிஷத் காட்டியது**

ஓமித்யேகாக்ஷரம் | நம இதி த்வே அக்ஷரே | நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி |
ஓமித்யக்ரே வ்யாஹரேத்
நம இதி பஶ்சாத்
நாராயணாயே த்யுபரிஷ்டாத்

ஓம் என்பது ஒரு அக்ஷரம். நம: என்பது இரண்டு. நாராயணா என்பது ஐந்து அக்ஷரம். முதலில் ஓம் என்று உச்சரி. அடுத்து நம: அடுத்து நாராயணா என்று உச்சரிக்கவும்

Ohm is one letter. Namah: is two letter. NaaraayaNaa is five letter. First utter Ohm; then namah; then NaaraayaNaa

27-21 **அகார, உகார, மகாரங்களைக் கொண்ட ப்ரணவவே மூன்று வேதங்களின் ஸாரம்.**

மூன்று தாழியிலே தயிரை நிறைத்துக் கடைந்து வெண்ணெய் திரட்டினாற்போலே, மூன்று வேதத்திலும் மூன்று அக்ஷரத்தையும் எடுத்தது

Pranavam which consists of Akaara, Ukaara, Makaaram is the quintessence meaning of all the vedas.

Like churning and getting butter from three pots filled with yogurt (curd). The three leeters are dervived from three vedas

27-22 **ப்ரணவம் என்பதில்**

- **அகாரத்திற்கு மூன்று பொருள் -** *ஆதாரம், ஸேஷித்வம், ரக்ஷகத்வம்.*
- **உகாரம் என்பதில் இரண்டு பொருள்**
  - *நிருபாதிக ஸேஷத்வம்.* **எம்பெருமான் ஒருவனுக்கே அடிமை (மற்றொன்றின் ஸம்பந்தம் இல்லை)**
  - **உகாரம் பிராட்டியைச் சொல்லும்.**
- **மகாரம் என்பது ஜீவனைக் காட்டும்.**
- **ஆக, சேதனன் என்பது எம்பெருமான் ஒருவனுக்கே சேஷன் என்ற பொருள்.** *அநந்ய ப்ரயோஜனத்தை* **காட்டுகிறது.**

In pravanam

- Akaaram has three meanings – Support, Servitude and Proection
- Ukaram has two meanings
  - Unconditional servitude. No connection to anything else whatsoever.
  - Ukarram illustrates the piraatii
- Makaram means indiviual soul
- Thus, the praNavam illustrates that the individual soul is slave only to the Lord. It demonstrates the unusability of the soul for anything else.

27-23 **நம: என்றால் என்னுடையது ஒன்றும் இல்லை.**

ந *என்றால் இல்லை.* **ம** *என்றால் எனக்கு.*
இடையில் 'கிஞ்சித் - துளிக்கூட" என்று சேர்த்துக் கொண்டால் "இல்லை துளிக்கூட என்னுடையது".

- *ஸ்வாமித்வம் என்ற பதத்தை வரவழைத்துக் கொண்டால், அதாவது எனக்கு நான் சேஷன் இல்லை. எனக்கு சேஷத்வம் இல்லை.*
- **நம:** *என்பது ஆத்ம ஸமர்ப்பணத்தை சொல்லும். இது பல ப்ரமாணங்களில் ஒரே வார்த்தையாக சரணாகதி என்று கையாளப்பட்டுள்ளது.*

Namah means nothing belongs to me.

Na means not. Ma means "for me".

If you add the word "iota" in between, the word now means "not an iota of things belong to me". That means, I am not the master. I don't have any authority.

Many authoritative texts have used this namah as a single word to means total and compelte surrender, saranagathu. So namah means the submission of the soul to the Lord.

27-24 *நாராயணாய சப்தார்த்தம்*

ந என்றால் இல்லை அல்லது வேறு.
ர என்றால் அழிபவை.
ந(ா)ர(ா) என்பவை அழியாத ஆத்மாக்கள் அல்லது அழியும் சேதனத்தைவிட வேறானவை என குறிக்கும் (இது ப்ரமாத்மா, ஜீவன்).
நார என்பது நரங்களாகிய சேதன சமூகத்தை, கூட்டத்தை சொல்லும்.

NaaraayaNaa word Na means not. Ra means perishable. NaRa means not perishable. Things which are indestructilbe - the individual souls and the Lord.NaaRa means the society of individual souls

27-25 **நர என்பது பகவானைச் சொல்லும்**

1 *எம்பெருமானும் அழியாதவன். ஆக அவனையும் சொல்லும்*
2 *ஸ்மிருதி, ஸம்ஹிதைகள் எல்லாம் நர என்பது எம்பெருமானைச் சொல்கிறது என்கின்றன*
3 *ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் கூட 'ஜஹ்நுர் நாரயணோ நர:" என்று எம்பெருமானை நர: என்கிறது*

Naraa refers to the Lord since He is also not perishable

- Smrithi, Samhitas mention that Nru refers to the Lord
- Sri Vishnu Sahasranaamam also refers the Lord as "Jahnur Naaraayanoo naraha"
- Nru means to "lead to". Since the Lord leads all the sentient things to a good path, it refers to Him

27-26 *(அ)யண(ர)* - **ய என்பது இண் என்பதிருந்து தோன்றியதால் "அடைதல்" என்ற பொருள். ஜீவன்களுக்கு பலனை அடையும் உபாயமாக உள்ளான்**

(A)yaNa(a) - Ya is derived from "iN" which means to be reached. Lord is the target to be reached by the individual souls.

27-27 *(ஆ)ய* - **நாலாம் வேற்றுமை உருபு - பொருட்டு என்ற அர்த்தம் நாராயணனின் பொருட்டே**

(Aa)ya – Fourth case. It means on behalf, for him. Here it is for Narayana's purpose, for him

27-28 **ஆக, முக்யமாக முதல் பதம் நான் பகவானுக்கே ஸேஷன் என்ற அந்ந்யார்ஹ ஸேஷத்வம், இரண்டாம் பதம் ஆத்ம ஸமர்ப்பணத்ததை செய்து வேறு உபாயத்தை நாடாது இருப்பது, மூன்றாவது பதம் உபேயமான பகவானே பரம புருஷார்த்தம் என்று மற்றதை விருப்பாதது.**

First word emphasizes the servitude to the Lord and not to anyone, second word detaisl the submission of the soul to the Lord and living free after that, and finally the last word stresses that Lord is the final reward and nothing else matters.

27-29 **ஸ்வரூபத்தில் உணர்த்தியும், ஸ்வ ரக்ஷணத்தில் அசக்தியும், எம்பெருமானைப் பேணுகையும் திருமந்திரம் காட்டுகிறது என்றார் முதலியாண்டான். உணர்ந்து, உலர்ந்து, உகந்து**

What Tiruamantra teaches is the "realization one's innate nature, inability to protect himself, and reaching he Lord and enjoying him are the words of Mudaliaandaan, Ramanuja's disciple.

27-30 **ஸ்வரூப விரோதி ஒழிவது** – *யானே நீ என் உடைமையும் நீயே*
உபாய விரோதி கழிவது - *களைவாய் துன்பம் களையாது ஒழிவாய்*
பல விரோதி கழிவது - *மற்றை நாமங்கள் மாற்று*

27-31 இனி அடுத்த நிலை வியாக்யானம்

Now, let us look into the next level of explanations

27-32 **ப்ரணவத்தில் அகாரம் என்பது சப்தங்களுக்கு மூலமானது. அது ஸர்வ வஸ்துக்களின் மூலமான, காக்கும் எம்பெருமானைக் காட்டுகிறது.**

- அகாரார்த்தோ விஷ்ணு:, அக்ஷராணாம் அகாரோஸ்மி
- எழுத்தில் முதலானது அகாரம். அதுவே எல்லா ஒலிக்கும் மூலமானது. அனைத்துப் பொருளுக்கும் ஆதாரமான எம்பெருமானைச் சொல்லும்
- சப்த மூலமான இது ஸர்வ வஸ்துக்களின் மூலமான பகவானைச் சொல்வது பொருத்தமே
- அவ் என்ற தாதுவிலிருந்து தோன்றியது என்று பார்க்கும்போது, காத்தல் என்ற பொருளைத் தரும்

Akaaram means
- The Lord who supports every single thing in the universe
- A is first letter in alphabets. It is the starting point for all the sounds.
- This Aakaram, which is the origin for all sounds revealing the Lord, who is the origin of all the things seems very apporpriate.
- If we consider that aakaram is derived from the root "Av", it gives the meaning of protection.

27-33 **லுப்த சதுர்த்தி ஸேஷத்வத்தை காட்டுகிறது**

- இது அகாரத்தில் மறைந்த நாலாம் வேற்றுமை உருபு
- இதற்கு ஸேஷத்வம் பொருள். ஸேஷத்வமே ஆத்மாவிற்கு ஸ்வரூபம்
- இயற்கையாக ஸர்வசேஷியான எம்பெருமானுக்கு இயற்கையாய் அடிமையாய் இருப்பவன் சேதனன்

Hidden fourth class (luptha chaturthi)
- This fourth case is hidden on aakaram

- It means mastery (seshatvam) or ownership. The innate nature of the individual lsoul is servitude to the Lord
- Lord who by nature (svaabhaavika) is the all master(sarva seshi). The individual soul is naturally servant / slave to Him

27-34 **உகாரம் ஏவகாரத்தை காட்டுகிறது**

- **உகாரஶ்ச ஏவகார அர்த்த:** - பராஸர பட்டர் ஸூக்தி (உகாரம் எவ என்ற பொருளைத் தரும்)
- உகாரத்திற்கு அர்த்தம் அவதாரணம் (மட்டுமே) **எ** மற்ற ஒன்றின் சம்பந்தத்தை அறவே அறுத்தல்
- எம்பெருமான், பிராட்டி இந்த இருவரைத்தவிர மற்றவருக்கு ஸேஷன் இல்லை. இது இயற்கை
- **மறந்தும் புறந்தொழா மாந்தர்**

Ukaaram means

- AvadharaNam (only for). Here this ukarram competely nullifies any other connection or relation
- Other than Lord Sriman NaaraayaNaa and His inseparable consort Sri Mahaa Lakshmi, this individual soul is not slave anyone else.
- This comes out naturally.

27-35 **மகாரம் அறிவேயான ஜீவனைச் சொல்லும்.**

- ம என்பது ஸம்ஸ்கிருதத்தில் 25ம் எழுத்து.
- அது 25 வது தத்வமான ஜீவனைச் சொல்கிறது
- **மந ஜ்ஞாநே** - மந என்ற தாதுவிற்கு அறிதல் என்ற பொருள்
  - மந் என்பதிலிருந்து தோன்றியது. மந் என்றால் ஞானம்.
  - ஜீவன் அறிவுடையவன் ஆகிறது (ஞானஸ்வரூபன்).
- அறிவில்லாத அசேதனத்தினிலிருந்து வேறு பட்டவன்
- மஸ் என்னும் தாதுவிலிருந்து தோன்றியது எனக் கொண்டால்
  - அளவுடையது ஆகிறது.
  - அணு பரிமாணத்தை குறிக்கிறது.
  - விபுவான எம்பெருமானைவிட வேறானவன்
- அஸ்மத் என்று சொல்வது நான் என்று பொருள். அதில் இந்த ம ஜீவனைக் காட்டுகிறது

Makaaram means

- The 25th letter in Sanskrit is Ma
  - It refers to the 25th tattvam, individual soul (chetana)
- "Mana njaanee" – The root word mana means "knowing"
  - It is derived from mun. mun means knowledegable
  - So the individual soul is knowledgeable.
- He is different from nonsentient thigs
- If we consider that this word derived from root "mus",
  - it means limited or bounded.
  - Individual soul is limited in size since it is atomic in nature.
  - As contrasted with the Lord who is pervasive and spread everywhere
- When we refer "Asmad" it means myself. In that word the letter "m" shows the jeevan, the individual soul.

27-36 *ப்ரணவத்தின் திரண்ட கருத்து*

- **ஆத்மா தேஹத்தைவிட வேறானது (சரீர ஆத்ம ப்ரமம் நீங்கல்)**
- **ஆத்மா ஸ்வதந்த்ரமானது அல்ல. எம்பெருமானைச் சார்ந்தே உள்ளது (ஸ்வதந்த்ர ஆத்ம ப்ரமம் நீங்கல்)**
- **அந்த எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன். அந்த மிதுனமே உபாயம், உபேயம்.**

The overall meaning for pranavam

- Soul is different from body (elimination of the illusion of body and soul are the same)
- The individual soul is not indpendent, but always dependent on the Lord (elimination of the illusio nthat the soul is independent)
- Individual souls depend on that Sriman NaaraayaNaa. That inseparable tattvam of Lord and Piratti together is the means and ends.

27-37 நம: பதம் ஸ்வாமித்வம், ஸ்வாதந்திரியம் இல்லாமையைக் காட்டும்

- *ம என்பது ம் லிருந்து தோன்றியது. ம் என்பது ஜீவனைச் சொல்லும் என்பதை மகாரத்தில் பார்த்தோம்*

- *ம் என்பதன் ஆறாம் வேற்றுமையுருபு ஜீவனாகிய எனக்கு என்பதை ம காட்டுகிறது*
- *ந என்பது இல்லை. ஆக,*
  - *நான் எனக்கு சேஷன் இல்லை.*
  - *அதாவது எனக்கு எதிலும் ஸ்வாமித்வம் இல்லை.*
  - *எனக்கு ஒரு பொருளும் சொந்தம் இல்லை.*
  - *எனக்கு எதிலும் ஸ்வாதந்திரியம் இல்லை*

The word namah

- Ma is derived from "M". We have seen alreaðy that M means the individual soul, makaaram.
- The sixth case of M is ma
- Na means not
- I am not the master of myself. That is, I don't have mastery over anyhing.
- Nothing is ownded by me. I don't have indpendence on anything.

27-38 **ஈச்வரன் தனக்கேயாய் இருக்கும். அசித் பிறருக்கேயாய் இருக்கும். சித் தனக்கும், பிறருக்கும் பொதுவாய் இருக்கும் என்பது கழிந்து, அசித் ஸ்வரூபம் போல் இருக்க வேணும்**

Lord is for Himself; Non-sentient is for others; This individual soul think that they are for themselves and others. That should be changed and he needs to be like an achit, live for others.

27-39 *நம*: **பதத்திற்கு வேதங்கள் மூன்று அர்த்தங்களை விளக்குகிறது**

1. **ஸ்தூலம்**
   - **நம: என்பதை ஒரே பதமாகக் கொண்டால் நாரயணனுக்கு வணக்கம். இது மேலெழுந்த கருத்து.**
   - **நம: என்பது சரணாகதியை குறிக்கும் என்று பல ப்ரமாண வாக்கின்படி, பகவானிடம் செய்யும் ப்ரபத்தியை காண்பிக்கிறது**

2. **ஸூக்ஷமம்**
   - *அகங்காரம் கழிகை* - **நான் எனக்கு உரியேன் இல்லை**
   - *மமகாரம் கழிகை* **எந்தப் பொருளும் எனக்கு உரியவை அல்ல**

- *ஸ்வாதந்திரியம் இல்லாமை* **நான் எம்பெருமானுக்கு கட்டுப்பட்டவன். நான் செய்யும் ஒவ்வொரு செயலும் அவனால். எனக்கு ஸ்வதந்தரம் இல்லை**
- *ஸ்வாமித்வம் இல்லாமை* **எனக்கு நானே அதிபதி இல்லை. வேறு எவருக்கும் நான் அதிபதி இல்லை**

3. **பரம் (ரஹஸ்ய கிரந்தங்களில் காணப்படுவது)**
    - **நம:**
        - **ந = ப்ரபத்தி,**
        - **ம = முக்யம்,**
        - **: (விஸார்கம்) = எம்பெருமான்**
    - **ப்ரபத்தியே உயர்ந்த சாதனம்**
    - **ஸாத்யோபாயமான ப்ரபத்தியால் அடையப்படும் ஸித்தோபாயமான பகவான்**

The word Namah has three meaning according to vedas

1. Gross or manifestation (sthulm)
    - Considering it as a single word, namah: means prostrations to Lord NaaraayaNaa. This is a higher level meaning
    - Also namah: refers to total surrender (saranagathy). According to scripturs this means praptti to the Lord

2. Subtle or latent (sukshmam)
    - Elimination of "I" attitude (ahamkaaram removal)
    - Elimination of "My" and "mine" attitude (mamakaaram removal)
    - Void of independence. I don't have any freedom whatsoever. I am bounded by the Lord every action I make.
    - Void of mastery. I don't have ownership on anything. I don't own myself nor anyone else.

3. Supreme or transcendental (Param)
    - Namah means
        - Na = prapatti
        - Ma = important
        - H (visargam) = Lord
    - Prapatti is the best means
    - Lord, the exisiting means is attained through prapatti, the pluasible means.

27-40 *நாராயணா*

- **இந்த சப்தத்தின் பெருமையை எவராலும் விவரிக்க முடியாது**
- **இதுவே அஷ்டாக்ஷரம் (உயிர் மெய் எழுத்துக்களின் கணக்கில்) என்கிறது புராணம்**
- **இயற்கையாய் சேஷனாய் உள்ள சேதனன் செய்யும் கைங்கர்யத்திற்கு ப்ரதி ஸம்பந்தி (பெற்றுக் கொள்பவன்)**
- **அவன் அகார வாசகத்தாலே சொல்லப்படுபவன்**
- **நார + அயநம்**

NaaraayaNaa

- It is impossible to describe the majesty of this word by anyone
- Puraanaas describe this itiself is the eight lettered mantra (ashtaaksharam) based on Sanskrit vowel and constants
- He is the acceptor of all the services naturally rendered by the individual soul (chetana)
- He is mentioned through the the alphabet a (akaaram)
- Can be broke ninto naara + ayanam

27-41 **நார சப்தம் ந + ர = அழிவில்லாதது.**
இது ஜீவனையும், எம்பெருமானையும் சொல்லும் என்று முன்பே பார்த்தோம் நாரங்கள் என்பவை நர என்னும் எம்பெருமானிடமிருந்து தோன்றியவை நாரங்கள் என்பது சேதன சமூகத்தையும், அசேதனங்களையும் சொல்லும்.

Naara comes from Na + ra, which means indestructible.
Naara are those which come from the Lord Nara.
So Naara means the society of all the sentient and non sentient things.

27-42 **ந்ரு என்பது நடத்திச் செல்லல். எம்பெருமான் ஸகல ஜீவராசிகளையும் நல்ல வழியில் நடத்திச் செல்வதால் நார சப்தம் எம்பெருமானைச் சார்ந்த அனைத்தையும் சொல்கிறது**

"Nru" means leading or guiding properly. Since Lord Sriman Narayana leads all the sentient and non sentient things in the universe, the word

"Naara" is equivalent to all the things that belongs to the Lord.

27-43 **நாரங்கள் என்பவை சேதன அசேதன சமூகத்தைச் சொல்லும்**

1. **சேதனன்**
   - *அழியும் அசேதனங்களைக் காட்டிலும் வேறான அழியாத சேதன கூட்டங்களைச் சொல்கிறது*
2. **அசேதனம்**
   - *அசேதன ஸ்வரூபத்திற்கு அழிவில்லை. நிலை மட்டுமே மாறும் என்பதால் அசேதனத்தையும் சொல்லும்.*
   - *நரன் என்னும் எம்பெருமானிடமிருந்து உண்டானவை நாரங்கள். அவனிடமிருந்து உண்டான பூமி, ஜலம் என்ற எல்லா தத்வங்களும் நாரங்கள்*

The sound "Nara" = Na + ra which means imperishable. This refers to the individual souls, and the Lord.

- Individual souls
  1. Unlike perishable nonsentient things, this talks about collection of imperishable sentients
- Non Sentient things
  1. In reality, even the nonsentient does not perish, It only changes from one state to another. So Naara can refer to non sentient things too
  2. Naaras are the ones that came out of Naran. So, the earth, water, air all these tattvas came out of Lord and so they are also naaraas.

27-44 **வாக்யங்களுக்கு பல அர்த்தங்கள் உண்டு**

வத்ஸ ராம தநு பச்ய: இதி ராகவம் அப்ரவீத் **என்றார் விசுவாமித்திரர்**

குழந்தாய், ராமா, வில், பார் என்று நாலு பதங்கள். இதற்கு பலவிதமய் பொருள் கூறுவர் முன்னோர். அதுபோல இங்கே நார பதம்

VathSa Raama dhanu paSya: ithi raaghavam abraviidh, said Visvamitrar. Four words are here – Child, Rama, Bow and Look. Our aacharyas describe this with many different interpretations.

27-45 **நரனைச் சேர்ந்த அனைத்தும் நாரங்களே.**

எம்பெருமானின் திருக் கல்யாண குணங்கள், திவ்ய திருமேனி, ஆபரணங்கள், ஆயுதங்கள் எல்லாமே. சாரீரக சாஸ்திரத்தின்படி ஸகல சேதன அசேதன வஸ்துக்களும் எம்பெருமானின் திருமேனி.

Things which are belongings to the Naran are naarams.

Lord's noble characters, His divine body, ornaments, weapons are all His belongings. According to the phiolosophy of body-soul relation (saareeraka saastram) all sentient and nonsentient things are all Lord's body.

27-46 *அயநம்* **என்பதற்கு ஆதாரம், உபாயம் பலன் என மூன்று பொருள்**

1. **ஆதாரம் (ஈயதே அஸ்மிந்)**
   - **தத்புருஷ ஸமாஸம்**
     - **நாராணாம் + அயந:**
     - **நாரங்கள் எனப்படும் சேதான சேதனங்களுக்கு ஆதாரமாய் உள்ளான்**
     - **நாரங்கள் பகவானைச் சேர்ந்தவை என்றால் அவனுடைய திருக்கல்யாண குணங்கள், ஆடை, ஆபரணங்கள், ஆயுதங்கள் எல்லாவற்றிக்கும் ஆதாரமாய் உள்ளான்**
     - **பஹிர் வ்யாபதி: சேதனா சேதங்கள் இல்லாத இடத்திலும் எம்பெருமான் உள்ளான்**
   - **பஹுவ்ரீஹீ ஸமாஸம்**
     - **நார: அயநம் யஸ்ய ஸஹ**
     - **அயநம் என்றால் ப்ரவேசிக்கப்படும் பொருள்**
     - **எம்பெருமான் சேதன அசேதங்களில் ஊடுருவி அவற்றை தனக்கு வாசஸ்தலமாகக் கொண்டவன்**
     - **அந்தர் வ்யாப்தி: சேதனா சேதனங்களுள் எம்பெருமான் ஸூஷமமாக இருக்கிறான்**

2. **உபாயம் (ஈயதே அநேந)**
   - **எம்பெருமான் எல்லா சேதனங்களுக்கும் (நாரங்களுக்கு) உபாயமாய் உள்ளான். எம்பெருமான்தான் ஸித்தோபாயம்**

3. **பலன் (ஈயதே அஸௌ)**
    - **எம்பெருமான் எல்லா சேதனங்களுக்கும் (நாரங்களுக்கும்) அடையும் பலனாய் உள்ளான்**

The word "Ayanam" has three meanings – Support, means and ends

1. Support (aathaaram)
    - Tatpurusha samasam
        - NaaraaNaam + Ayanah
        - He is the sustenace for all the animate and inanimate (chetana, achetana) things called "Naaras"
        - When Naaras are the belongings of the Lord, then His beautiful body, ornamaents, clothing etc. are all naaras. He si the support for all
        - This explains the Bahir vyapthi (macro manifestation). Lord is in places where these naaras are not even present
    - Bahuvirhii samasam
        - Naarah ayanam yasya saha
        - Aynamam means things which can be "pierced and entered in"
        - Lord pierces thorugh individual's bodies and stays inside
        - This expalins anthar vyapthi. The ability of the Lord to pierce in and stay at the micro level.

2. Means (Upaayam)
    - Lord is the existing means (siddhopaayam)

3. Rewards / Ends (upeyam)
    - Lord is the final fruit for all the souls

27-47 **அகாரம் நாராயண பதத்தையும், உகாரம் நம: பதத்தையும், மகாரம் சதுர்த்தியையும் சொல்லுகிறது என்பர்**

Akaaram elaborates NaaraayaNaa word
Ukaaram elaborates namaha word
Makaaram elaborates 4th case

27-48 **நாராயணாவிற்கு பின் உள்ள ஆய பதம் பலனைச் சொல்லும்.**

இயற்கையில் சேஷனான ஜீவன் எம்பெருமானுக்கு எல்லாவிதமான கைங்கர்யங்களையும் செய்து பரிபூர்ண ப்ரம்மாநுபவம் பெறுவது.

The word "Aaya" after NaaraayaNaa, refers to the final rewards.

The individual soul is naturally slave to the Lord. By serving the Lord in all respects, he gets the pleasure which is uparallel to anything else.

27-49 **இப்படி பதங்களுக்கு பல பொருள்கள். இனி வார்த்தைகளுக்கு பொருள். முக்யமாக 10 அர்த்தங்கள் என்கிறர் ஆசாரியர்கள்.**

Thus there are many meanings can be derived for each word. Now the ten meanings from total sentences will be dealt as instructed by our great aachrayaas.

27-50 *ஒரு வாக்யம் - இரண்டு அர்த்தங்கள்*
ப்ரணவத்தால் அறியப்படும் எம்பெருமானே காரணம், ரக்ஷகன், ஸேஷி.
1. **உள்ளம், உரை, உடலால் எம்பெருமானை வணங்குகிறேன்**
2. **அந்த எம்பெருமானிடம் சரண் அடைகிறேன். என்னுடைய ஸ்வரூப, பர, பல ஸமர்ப்பணத்தை செய்கிறேன்**

One sentence and two meanings
The Lord who is understood through PraNavam is the Cause, owner and Protector (COP)
1. We pay obeisance to that Lord through mind, word and action
2. To that Lord I take the refuge. I submit my nature, burden of protection and the enjoyment of rewards (svaroopa, bhara and phala samarpanNam)

27-51 *இரண்டு வாக்யங்கள் - மூன்று அர்த்தங்கள்*
1. **அநந்யார்ஹ ஸேஷத்வம், பாரதந்திரியம்**
2. **எம்பெருமானே ரக்ஷகன். அவனிடம் பர ஸமர்ப்பணம்**

3. **அந்ய ப்ரயோஜனம் ஒழிகை, ஸ்வாதந்திர்யம் ஒழிகை (கைங்கர்யம் மட்டும்தான்)**

Two sentences and three meanings
1. Slavery to no one else and complete dependence (ananayarha seshatvam, paaratantriyam)
2. That Lord is the sole protector, to Him submission of our burden of life
3. Complete elimination other usability and indendence (only thing remains is the service)

27-52 *மூன்று வாக்யங்கள் - ஐந்து அர்த்தங்கள்*

1. **மகார ஜீவனாகிய நான் அகாரமான எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் அவர்களுடைய அடியவருக்கும் ஸர்வ தேஸ, கால, நிலைகளிலும் பணி செய்வேன்.**
2. **எம்பெருமான் ஒருவனுக்கே ஸேஷன். நான் எனக்கு உரியன் இல்லை. (அஞ்ஞானம், கர்மா, வாசனை, ருசி, ப்ரகிருதி ஸம்பந்தம்) ஸம்ஸார சூழலிருந்து என்னை மீட்டி எனக்கு கைங்கர்ய ப்ராப்தி தர வேண்டும்.**
3. **அகிஞ்சனான ஜீவன் நான் வேறு உபாயம் அற்றவன். அந்த உபாயத்தின் நிலையில் நீர் இருந்து அநிஷ்ட நிவ்ருத்தி, இஷ்ட ப்ராப்தியை அருள வேணும் [7,8 -** *கோப்த்ருத்வ வரணம்*]
4. **என் சுமை நீக்கி எம்பெருமானிடம் பரத்தை ஸமர்ப்பித்தேன். அத்தால் எல்லா பாபங்களும் விலகியது**
5. **சேதனனாகிய நான் எம்பெருமானுக்கு சேஷன், அவரிடம் சரணாகதி செய்தவன். தடையில்லா, எல்லையிலா பணியை வேண்டுகிறேன்.**

Three sentences and five meanings
1. Soul which is described the letter M is forever slave to the Lord who is describe by the word A and his inseparable consort at all time, location and state.
2. I am slave only to the Lord Sriman NaarayaNaa. I am not the owner of myself. (Ignorance, past deeds, smell, taste and worldly relation) is a vicious circle. I pray to You for releiving me from this and grant the permanent service.
3. I, who has no power and has nothing to offer know of any of other means. I pray to You to stand inl lieu of that means and clear all the

hurdles and confer me with the rewards. [These tw osteps are caled Prayer for protection and granting, gopthruthva varanam]

4. I am releived of all burdens since I have submitted everything to the Lord. Because of that I am cleared of all sins.
5. The individual soul, I am is slave to the Lord. I have perofrmed total surrender to Him. I pray for endless, boundelss service.

27-53 **ப்ரம்மசூத்திரத்தில் கீழே சொன்ன பத்தாவது அர்த்தமே விவரிக்கப் பட்டுள்ளது.**

முதல் இரண்டு அத்யாயங்கள் (ஸமந்வயாத்யாயம், அவிரோதாத்யாயம்) எம்பெருமானையும், ஜீவனையும், மூன்றாவது அத்யாயம் உபாயத்தையும் (ஸாதனாத்யாயம்), கடைசி அத்யாயம் பலனையும் (பலாத்யாயம்) இந்த தத்வ ஹித புருஷார்த்தங்களைக் தெளிவாய் காட்டுகிறது
"அண்டக் குலத்துக்கு அதிபதி ஆகி" *என்பதை பார்க்கவும்*

Brahma Sutra describes the tenth meaning below.

The first two chapters of Brahma Sutra establishes the tattva and the third shows the means and the last one deals with the rewards (tattva, hitha and purushaarta)

27-54 **இந்த உயர்ந்த மந்திரத்தை அனுஸந்திப்பவர்களுக்கு கிடைப்பவை எட்டு பூக்கள், எட்டு ஸித்திகள், எட்டு வித பக்திகள், எட்டு யோகங்கள், எட்டு ஐச்வர்யங்கள், எட்டு குணங்கள், 8x8 கலைகள், எட்டு ரஸங்களுக்கும் மேலான சாந்தி ரஸம்.**

Those who meditate on this mantra will achieve
Eight types of flowers, eight siddhis, eight types of devotions, eight yogas, eight types of wealth, eight noble qualities, 64 different arts (kalai), the ninth peacefulness (shanthi rasam)

27-55 **திருமந்திர ஸாரம் -**
அகாரத்தாலே ரக்ஷகத்தையும்,
லுப்த சதுர்த்தியாலே சேதனனின் ஸேஷவத்தையும்,

உகாரத்தாலே அந்ய ஸேஷத்வ நிவ்ருத்தியும்,
மகாரத்தாலே ஞானமான ஜீவனையும்,
நமஸ்ஸாலே சரணாகதியாகிறா உபாயத்தையும்
நார ஸப்தத்தாலே சாரீரக சாஸ்திரமும்
அயந பதத்தாலே ஆதாரத்வமும்
ஆய பதத்தாலே ஸர்வ விதமான கைங்கர்யங்களும்
காட்டப்பட்டன.

The essence of Tirumantram
Akaaram shows protectionism
Hidden fourth case shows the servitude of the individual souls
Ukaaram shows the refusal of servitude to others
Makaara mshows the knowledgeable souls
Namah: shows that the praptti is the means
Naara sound explaisn the body-soul relation (saareraka saastram)
Ayana sound explains that He is the supporter
Aaya means request to grant to perform all types of services

27-56 **இனி கைங்கர்யத்தைப் பற்றி சில சர்ச்சைகள்.**

Now, we will look into some debatable issues on service (kaimkaryam)

27-57 **சேதனர்கள் அந்நம் ப்ரகிருதியில் முக்தியைவிட வேறானது**

ப்ரகிருதியில் அந்நம்

- *ஸத்வ, தம, ராஜஸங்களால் ஆனதாயும்*

முக்தியில் அந்நம்

- *பகவானின் ஆறு குணங்களையும் (ஞான, பல, ஐச்வர்ய, வீர்ய, சக்தி, தேஜஸ்) உணவாகக் கொண்டது*

The food for the individual souls at moksham different from that on the earth.

On earth the food consists of satavic, thaamasa and raajasa ahankaarams. In moksham the souls eat the noble characters of the Lord, specifically knowledge, strength, valor, energy and splendor (gnana, bhala, aiyswarya, veerya, sakthi and thejas).

27-58 **முக்தியில் ஸாம்யம் என்பதால் அது கைங்கர்யத்திற்கு தடையில்லை.**

உபனிஷத், பிரம்ம சூத்திரங்கள் கூறும் ஒற்றுமை ஞானத்திலும் போகத்திலுமே. அது இயற்கையான ஸேஷத்வம், கைங்கர்யம் இவற்றை பாதிக்காது

Equality in the liberated state will not impinge on the service

Though the upanishads, Brahma sutras exemplify the equality in moksham, they reveal very carefully it is only in enjoyment and in knowledge level. That equality will never interfere with dependence or servitutde.

27-59 **கைங்கர்யத்தில் ஸாத்விகமான அகங்காரம் குற்றமாகாது**

பத்தராய் மோக்ஷத்தை எதிர்பார்த்துக் கொண்டு செய்யும் கைங்கர்யத்திலும், முக்தியில் செய்யும் கைங்கர்யத்திலும் சரீர அத்ம பாவத்தை நினைவில் நிறுத்தி, ஸேஷத்வ சந்தோஷத்தால் விளைவது

Humble egoisim in kaimkaryam which is of satvic nature is not flawed.

Individual souls who happily anticipating the departure day to moksham, while performing service on this earth, and souls who perofrm endless service in moksham may sometimes feel ecstatic and think proud of themselves. This happiness is caused by the understanding of the servitude nature to the Lord and crystal clear knowledge of the body-soul relation (sareera-athma bhavam). This should not be construed as erroneous.

27-60 **கைங்கர்யம் ப்ரகிருதியில் முக்தியைவிட வேறானது**

- *ப்ரகிருதியில் செய்யும் கைங்கர்யம்*
  - *தடை படும் (தூக்கம், சோம்பல், அசிரத்தை)*
  - *அளவிற்கு உட்பட்டது (பணம், பொருள், சக்தி, காலம்)*
  - *மற்றதால் பாதிக்கப்படும் (வாழ்க்கை சம்பாத்யம், மற்றவர்கள்)*
- *முக்தியில் கைங்கர்யம்*

- அநந்தமானது.
- தடையில்லாதது.
- பரிபூர்ணமானாது.
- எத்தாலும் பாதிக்கப்படாது

Service on earth differs from that of at Srivaikuntam

- On earth (prakrithi related) service invariably will be interrupted. It is bounded by limits and also ffected by external environment.
- In Srivaikuntam, service is limitless, boundless and complete in all aspects. It never gets affected by anything.

27-61 **பகவத் கைங்கர்யத்தின் எல்லை நிலம் பாகவத கைங்கர்யம்.**

The extreme case of service to the Lord is service to His devotees.

27-62 **பகவத்-பாகவத பாரதந்திரியம் உயர்ந்தது. அந்த அடிமைத்தனம் உகப்பினாலே போக்யம்**

சேஷத்வம் துக்கரூமாகவன்றோ நாட்டில் காண்கிறது. என்னில் அந்த நியமம் இல்லை. உகந்த விஷயத்தில் ஸேஷமாயிருக்கும் இருப்பு சுகமாகக் காண்கையாலே

Servitude to the Lord and His devotees is the best one can achieve. That slavery is naturally wished for and that is why is it is ecstatic.

27-63 **பாகவதர் என்பது மறந்தும் புறந்தொழா மாந்தர். அவரிடம் உற்றதும் உன் அடியார்க்கு அடிமை என்று இருக்க வேணும்.**

பாகவத கைங்கர்யம் என்பது எம்பெருமானுக்கு உகந்தவராய், அவனுக்கு ஸேஷம் என்று அறிந்தவராய் வேறு பலன் நாடாத பெரியோருக்கு அவர்கள் உகந்த பணி செய்வதே.

Lord's true devotees are the ones who even by forgetfulness will not look into other deities. To them one has to be a slave.

Service to devotees means – performing all kinds of services liked by those who are near and ear to the Lord, who always remember that they exist as a mere slave to the Lord and never expect any other rewards.

27-64 **கடைசியாக, இப்படி**

- **ஒன்று, இரண்டு, ஐந்து எழுத்துக்களாய்**
- **மூன்று பதங்களாய்**
- **வேதாந்த ஸாரமாய்**
- **தத்வ, ஹித, புருஷார்த்தங்களை விவரிப்பதாய்**
- **ரஹஸ்ய த்ரயம், மூன்று வ்யாபக மந்திரங்கள் இவற்றில் முதலிடம் பெற்றதாய்**
- **அகார உகார மகார எழுத்துக்களை உடைய ப்ரணவமாய்**
- **ஸ்தூலம், ஸூக்ஷமம், பரம் என்ர மூன்று அர்த்தங்களை உடைய நம: பதமாய்**
- **வேதாந்த விழுப்பொருளான நாராயண சப்தமாய்**
- **ஆன இந்த திருமந்திரம் என்பது**
- **முமுக்ஷுக்களுக்கு ஸம்ஸார வினையைப் போக்குகின்றது**

Thus this mantra

- Consists of one, two and five letters
- Three words
- Essence of vedas
- Explains the tattva, hitha and purushaarta
- Keeps a leading position amongst the three secret mantras and among the three pervasive mantras
- Consists of pranavam which is comprised of akaara, ukaara and makaram
- Consists of namah: which explains the gross manifestation, subtle intricacy and unsurpassed or unequal supremacy
- Consists of Naarayanaa which is the seed of all vedas
- Removes all the sins and releives the chetana from the birth / death cycle.

27-65 **இப்படி எம்பெருமான் என்பவன்**

- **திருவை என்றும் பிரியாத நாராயணன்**
- **அழிவில்லாதவன், ஸர்வ ரக்ஷகன்**
- **எல்லாவற்றிற்கும் காரணம், படைப்பவன்**
- **எல்லா உயிர் இனங்களையும் நல் வழி செலுத்துபவன்**
- **திவ்ய திருமேனியும், அநந்த கல்யாண குணங்களையும் உடையவன்**
- **உபாயமாயும், உபேயமாயும் இருப்பவன்**
- **எல்லாவற்றிற்கும் ஆதாரமாய் இருப்பவன்**
- **எல்லாவற்றிலும் உள் புகுந்து (ப்ரவேசித்து) அந்தர்யாமியாய் இருப்பவன்**

- Thus the Lord is the one who
- Never separated from Sri
- Never dies; the protector for all
- Is the Cause; is the creator
- Drives everyone to the good path
- Has divine body and endless noble qualities
- Is the means andends
- Is the basis and support for everything
- Pierces into everything and dwells inside

27-66 **இப்படி சேதனன் என்பவன்**

- **அறிவாய் உள்ளவன்**
- **ஞானமே குணமாய் கொண்டவன், அணு ஸ்வரூபி**
- **அசித், ஈச்வர தத்வங்களைவிட வேறானவன்**
- **பகவானுக்கும் பிராட்டிக்கும் மட்டுமே அடிமையானவன்**
- **இவனுக்கு அடிமை ஒன்றும் இல்லை**
- **லக்ஷ்மி நாராயணனைச் சார்ந்தே இருப்பவன் (பாரதந்திரியம்)**
- **ஸ்வதந்திரன் இல்லை**
- **லக்ஷ்மி நாராயணனுக்கும் அவன் அடியவருக்கும் எங்கும், எபோதும், எந்நிலையிலும் அடிமையாய், அவர் இட்ட வழக்காய் ப்ரதிபலன் கோராது, எல்லாவிதமான கைங்ர்யங்களையும் செய்து மகிழ்பவன்**

- Thus the chetana is the one
- Full of knowledge

- Atomic in nature
- His character is wisdom
- He is slave only to the Lord and Sri MahaLakshmi
- Nothig else is slave to him
- He is always dependent on the Lord
- He is nto independent
- He serves to Sriman NaaraayaNaa and His devotes – in all time, space and stages; he does everything on their commands; he feels ecstatic in doing all kinds of services to them without expecting anything in return
-

27-67 A
27-68 (tag)

Chapter 28
த்வயாதிகாரம்
The duo mantra

28-1 **த்வயம் என்பது சரணாகதி மந்திரம்; அஷ்டாக்ஷரத்தில் காட்டிய உபாய பலனின் விவரணம்.**

Dvyam, known as saranagathy manthra is the expansion of the concept of `means and ends as specified by ashtaaksharam. மோஷலோகம்

28-2 **ப்ரதமாசாரியனான ஸ்ரீமந்நாராயணன் கடவல்லியில் தனித்தே கிடந்த இரு வரிகளைச் சேர்த்து த்வயம் என பிராட்டிக்கு உபதேசித்தான்.**

Primary guru Lord Sriman NaarayaNaa picked out two sentences lying apart in the Kadavalli upansihad, joined them together and instructed the priatti.

28-3 **ப்ரச்ந ஸம்ஹிதை இந்த த்வய மந்திரத்தை எழுத்து எழுத்தாக (25 அக்ஷரங்கள்) விவரிக்கிறது**

Prasna samhita explains this dvya mantra by parsing letter by letter

28-4 **இது சாஸ்திர வழியில் வந்தது என்பதைக் காட்டிலும் ஆசாரிய அனுஸந்தானம் என்பதால் பெருமை அதிகம். அத்தால் இதை பூர்வாசார்ய வாக்யம் என்பர் ஸம்பிராதாயத்தில்.**

This dvayam has more fame because aacharyas strictly followed this than it is actually derived from sastras. That is why this mantra is called Prceptor's sentence (Poorvaachaarya vaakyam) in our sampradaayam

28-5 **வேதத்தை மூலமாகக் கொண்ட தாந்த்ரிக மந்த்ரமானதாலே இதிலே எவருக்கும், எங்கும் அதிகாரம் உண்டு**

Though this mantra is derived from scriptures (Vedas), but is made as secretive mnemonics (tantra), anyone has the eligibility to pronounce this

anywhere

28-6 **த்வயம் என்றால் இரட்டை. ஆறு, பேறு என்ற இரண்டையும் விளக்குகிறது. இது ஸ்வாமி தேசிகன் உகந்த அர்த்தம்.**

Dvayam means twin and not two. It explains the means and ends and that is why that name. This explanation is what Svami Desika likes.

28-7 **த்வயம் என்பது முதல் வரியில் சரணாகதி வரித்தலான அங்கங்களையும் பின் வரியில் ஆத்ம ஸமர்ப்பண அங்கயையும் சொல்கிறது என்பர்.**

The first line of dvayam explains the various parts of the expression of the surrender and the second line details the the distinctive character of surrendering the soul

28-8 **இந்த த்வய மந்திரம் ஆசார்ய உபதேசமாய் அறிந்து, எம்பெருமான் பிராட்டி இவரிடம் ப்ரப்த்தி செய்ய கரண மந்திரமாய் நின்று, பிரபன்னை க்ருத க்ருத்யனாய் ஆக்கி, பல முறை உச்சரிக்கப்படுவதாய், ஸம்ஸாரம் எனும் காளராத்ரிக்கு விடியற்காலை பொழுது என்னும் தன்மை உடைய பெருமை கொண்டது**

One gets instructed on this mantra thorugh proper Acharyan. This mantra stands as the primary revelation of the prapatti concept. By pronouncing this only once, this mantra makes him to be completed of all the required tasks out of him. After that, this can be pronounced continuously many million times simply as a service to the Lord. This mantra can be compred to the early dawn period before the Sun comes out.

28-9 **ஞானமோ, உச்சரிப்போ குறைந்தாலும் ஒரே முறை உரைப்பதேலேயே சேதனனை உஜ்ஜீவிக்கும்**

This mantra grants the benefits when an individual soul pronounces just once, despite of lack of complete knowledge nor errors in pronounciation.

28-10 **பாகவதனாய் இருப்பவன் இந்த மந்திரத்தின் பொருளை முழுமையாக உணராவிடினும், ஒரு முறை உச்சரிப்பதாலே அவனை உஜ்ஜீவிக்கும்.**

அதாவது உபாய அனுஷ்டானத்தை காட்டி மோக்ஷத்தை அளிக்கும்

Even when a devoted soul did not realize the proper meaning and power of this mantra, by just pronouncing only once, this will put him to a good status and show him the ultimate rewards.

28-11 *யேந கேநாபி ப்ரகாரேண த்வயவக்தா த்வம் கேவலம்"* **என்ற எம்பெருமானின் வாக்கை எம்பெருமானார் கத்யத்தில் அருளியபடி ஏதாவது ஒரு வகையில் த்வயத்தை சொன்னாலேயே மோக்ஷத்திற்கு காரணம் ஆகிறது**

In his gadyam, Srimad Ramanuja revealed the concept as told by Lord Sri Ranganatha – it says even chanting the dvaya mantra only once and that too by any which way (with errors and omissions too) would alone be sufficient for the eligibility to moksham.

28-12 **எம்பெருமானின் சில திருக்கல்யாண குணங்களை மட்டுமே வெளியிடும், சிறியதான சில திருநாமங்களுக்கே மஹத்தான பெருமை எனில் தத்வ ஹித புருஷார்த்தங்களை வெளியிடும் இதன் பெருமையை சொல்லவும் வேணுமோ?**

While other mantras even when they reveal only an iota of some of the noble characters of the Lord, are cherished so highly, one does not have to imagine the greatness of this mantra which releases the essence of the Tattva, hitha pursushartam.

28-13 **இதன் பெருமையை ஸ்ருதி, ஸ்மிருதி, இதிஹாச, புராணங்கள், பாஞ்சராத்ர சாஸ்திரம் வழியிலேயே ஆழ்வார்கள் ஸ்ரீசூக்தியிலும் எம்பெருமானர் கத்யத்திலும் காணலாம்.**

One can observe the prominence of this mantra scattered everywhere in the vedas, smrithis, ithihasa, puranas, pancaratra saastras and also in azhvar's creations and Bhagavad Ramanuja's gadyam.

28-14 **இதன் பெருமையை சந்தேகிப்பது, தர்க்கம் செய்வது தவறு. தேவ, மந்த்ர ரஹஸ்யங்களின் காரணத்தை ஆராய்வது கூடாது என்றது**

மஹாபாரதம்

Doubting or arguing the recognition of this matra is flawed. Mahabaharata says one shoud never doubt the reasoning behind great mantras.

28-15 **சாஸ்திரத்தில் திடஉறுதியுடன் அனுஷ்டித்தால்தான் முழுமையான பலன்**

28-16 **ஆசாரியனை முதலில் வணங்கிய பின்னே இந்த மந்திரோபதேசம்**

28-17 **ஆசாரியனை ப்ரப்ரஹ்மமாகவும், உபாயமாகவும், உபேயமாகவும் நினைக்க வேணும்**

28-18 **இந்த மந்திரோபதேசம் பெற நாள், நக்ஷத்திரம், இடம், ஹோமம், புண்ய தீர்த்த ஸ்நானம் போன்ற விதிமுறைகள் இல்லை**

28-19 **இனி பதம் பதமாக விளக்கம்**

28-20 **ஸ்ரீமந் நாராயண என்பது பிராட்டியைப் பிரியாத நாராயணன்.**

28-21 **லக்ஷ்மீ ஸம்பந்தத்தாலும், நாராயண சப்தத்தாலுமே இவனை பரத்வம் என ப்ரமாணங்கள் ப்ரதிபாதிக்கின்றன**

28-22 **ஸ்ரீ பதம் இரு வரிகளிலும் ஸ்பஷ்டமாக சொல்வது பிராட்டி எம்பெருமானுடன் சேர்ந்து உபாய தெசையிலும், பல தெசையிலும் நிலை மாறாது அருள் செய்கிறாள் என்பதை ஸித்தோபாய சேதானாதிகாரத்தில் பார்த்தோம்**

28-23 **புருஷகாரம் என்றால் ஒரு பலனை அளிப்பவனை அணுக உபாயமாக உள்ள மற்றொருவன்**

28-24 **ஸ்ரீ பதத்திற்கு (புருஷகாரத்வம்) பரிந்து உரைதல் என்பது தனித்து சிறப்பித்து சொல்லப்பட்டது என்றனர் ஆசாரியர்கள்**

28-25 **பிராட்டியின் இப் பரிவுரைக்கு ஆறு ப்ரமாணங்கள். ஸ்வாமி தேசிகன் நிக்ஷேப ரக்ஷகையில் அருளியதை இங்கே விவரிக்கிறார்.**

28-26 **காரணங்கள்**

28-27 **ஸ்ரீ சப்தார்த்தம் 6 பொருள்**
திருமகள் கேட்டு – *ஸ்ருணோதி*
அவனைக் கேட்பித்து – *ஸ்ராவயதி*
தன் அடியார் அடைய – *ஸ்ரீயதே*
தான் அடைந்து – *ஸ்ரயதே*
குறை நீக்கி - *ஸ்ருணாதி*
நிறை ஆக்கி - *ச்ரிணாதி*

28-28 **இப்படி ஸ்ரீ சப்தம் உபாயத்திற்கு வேண்டிய கல்யாண குணங்களைச் சொல்கிறது முதல் வரியில். பின் வரியில் பலனுக்கான குணக்களைச் சொல்லும்.**

28-29 **பிராட்டியும் உபாயம், உபேயம்.**

28-30 **ப்ரமாணங்கள் பிராட்டி புருஷகாரத்வத்தை காட்டுகின்றன**

1. *குடும்ப இயல்பு* - **தாய் கருணையுடன் இருந்து பரிவுரை செய்வது**

2. *முன்னோர் காட்டிய வழி* - **(அனுஷ்டானம்). நரசிம்மாவதாரத்தில் தேவர்கள் முதலில் பிராட்டியை அடைக்கலம் அடைந்தனர் லக்ஷ்மணன் தானும் காட்டிற்கு வர முதலில் சீதையிடம் விண்ணப்பம் செய்தான்**

3. *உலக வழக்கு* - **அரசன் அந்தப்புரத்து பணியாளை லகு தண்டனையுடன் மன்னிப்பது**

4. *முன்னோர் வாக்கு* - **நம்மாழ்வார் உள்பட காட்டிய முறை**

5. *வேத வாக்கு* - **வேத வாக்யங்கள் அறுதியிடுவது**

6. *ஸ்மிருதி வாக்கு* - **ரிஷிகளின் ஸ்மிருதிகள் காட்டுவது**

28-31 **மதுப் பதத்திற்கு பல அர்த்தங்கள் - புகழ்ச்சி, சிறப்பு, தொடச்சி, நித்ய உறவு. இருப்பினும் புருஷகாரத்திற்கு இன்றியமையாத நித்யமான உறவையே இங்கே சொல்லும்.**

28-32 **நாராயணன் சேதனர்களுக்கு உபாயமாகவும் பலனாகவும் ஆகிறான் என்னும்போது அவனை பிரியாத பிராட்டியும் உபாயமாகவும் பலனாகவும் ஆகிறாள். இதை வாமனன் பிரம்மசாரி வேஷம் பூண்டாலும் அவனைப் பிரியாத திருமகளிடமிருந்து கண்டு கொள்ளலாம்**

28-33 **ஸ்ரீமாந் என்னும் பதம் பிராட்டியின் புருஷனான எம்பெருமானையே சொன்னாலும் அதைத் தொடரும் நாராயண பதம் அடைவதற்கான குணங்களைக் காட்டுகிறது.**

28-34 **நாராயண சப்தம் எம்பெருமானின் ஸகல கல்யாண குணங்களையும் காட்டுகிறது. அப்படியிருக்க பிராட்டி புருஷகாரம் அவசியமா? என்னும்படி மிகைத்து உள்ளது**

28-35 **நாராயண பதம் முக்யமான 12 குணங்களைக் காட்டுகிறது**

28-36 **சேதனன் தன் பாபத்தை எண்ணி அஞ்சாதிருக்க அவனிடம் தோஷம் காணாமை** – *வாத்ஸல்யம்*.

28-37 **ரக்ஷகத்தை வேண்டி சரணாகதி செய்வதற்கு ஏற்ற தலைவன்,** *ஸ்வாமித்வம்*

28-38 **தாழ்ந்தவன் தான் என சேதனன் விலகாமைக்கு, தன் உயர்வை நினையாது தானே வலிய வந்து பழகும் நீர்மை (குஹ, சுக்ரீவ நட்பு, பாண்டவருக்கு தூது)** *ஸௌஸீல்யம்*

28-39 **ஸனகர் முதலிய ரிஷிகளுக்கும் புலப்படாத பகவான் அல்ப சேதனனின் ஊனக்கண் கண்டு மகிழ தானே வந்து அவதரிக்கும் எளிமை** *ஸௌலப்யம்*

28-40 **சேதனன் தனக்கு அநிஷ்ட நிவ்ருத்தி, இஷ்ட ப்ராப்தி இவற்றை அருள எம்பெருமான் அறியாதது எதுமில்லை என நம்பிக்கை கொள்ள எல்லா விஷயங்களையும் ஒரே சமயத்தில் அறியும் சாமர்த்யம்** *ஸர்வஜ்ஞத்வம்*

28-41 **ஸம்சாரியான சேதனன் மோக்ஷத்தை விரும்பும்போது, மற்ற எவராலும் சாதிக்க முடியாத காரியத்தை தான் ஒருவனே, நினைத்த மாத்திரத்திலேயே செய்ய சக்தியுடமை** *ஸர்வ சக்தித்வம்*

28-42 **எம்பெருமான தன் வார்த்தையை தானே மீற முடியாது (கீதா சரம் ஸ்லோகம்) என சேதனன் உறுதி கொள்ள** *ஸத்ய ஸங்கல்பத்வம்*

28-43 **பாப வடிவான சேதனனின் ப்ரபத்தி எனும் சிறு வ்யாஜத்தைக் கொண்டே, தன் பலன் நோக்காது காத்து அருள்வது** *பரமகாருணிகத்வம்*

28-44 **எல்லையிலா அபராதங்களையே செய்த சேதனனின் ஒரு சிறு செயலை தனக்கு பரம உபகாரமாய் கருதுவது** *க்ருதஜ்ஞத்வம்*

28-45 **எவ்வளவு நெருங்கியவர் தடுப்பினும் சிறிதும் மனம் தளராது தன்னை அடைந்தவனை ரக்ஷிப்பத்தில் உள்ள திடம்** *ஸ்திரத்வம்*

28-46 **அவாப்த ஸமஸ்த காமனாய் தான் விரும்பும்போது எந்தப் பொருளையும் அடையும் திறமை இருப்பினும், சேதனன் ஸமர்ப்பணத்தில் இகழ்ச்சி காணாது இருக்கை** *பரிபூர்ணத்வம்*

28-47 **சேதனனின் அவல நிலையையும், அவன் செய்யும் அல்ப வ்யாஜத்தையும், அதற்கு தான் அருளும் பரம போக்யத்தையும் பாராது மேலும் தருவதற்கு என்ன உள்ளது என வருந்துவது** *பரம உதாரத்வம்*

28-48 **இப்படி நாராயண சப்தம் மேலும் மேலும் பல கல்யாண குணங்களையும் அவற்றின் தன்மைகளும் சேதனனின் உபாயத்திற்கு முக்யமாக அமைகின்றன**

28-49 **உத்தர வாக்யத்தில் உள்ள** *நாராயண* **சப்தம் சேதனனின்** *கைங்கர்யத்தை ஏற்றுக் கொள்பவன், ஸர்வ சேஷி, ஸகல போக்யங்களும் இவனே* **என்பதைக் காட்டுகிறது.**

28-50 **ஸ்ரீமந் நாராயண சரணௌ என்று கூட்டு வார்த்தையாய், ஸமஸ்த பதமாய் கொண்டால்** *ஸ்ரீமான நாராயணனின் திருவடிகளை* **என பொருள்.**

28-51 **ஸ்ரீமந் நாராயண சரணௌ என்பதை மூன்று பதங்களாய் கொண்டால்,** *ஸ்ரீமானான நாரயணனே (உமது - தவ) திருவடிகளை* **எனப் பொருள்**

28-52 **இந்த இரண்டாவது அர்த்தத்தை அஹிர்புத்ய ஸம்ஹிதை, ஆழ்வார் அருளிச் செயல், ஸ்ரீவிஷ்ணு புராணம், எம்பெருமானாரின் கத்யம் இவை உறுதிப்படுத்துகின்றன.**

28-53 **சரணௌ சப்தம், அந்த ஸ்ரீயுடன் கூடிய எம்பெருமான் திவ்ய மங்கள விக்ரஹம் உடையவன் என்பதைக் காட்டி அதிலும் பற்றுவதற்கு எளிதான இரண்டு திருவடிகளையும் சொல்கிறது**

28-54 **எம்பெருமானின் திவ்ய ஆத்ம ஸ்வரூபத்தை நினைத்து அதை ஸாக்ஷாத்கரிக்க முடியாதவர்கள், நாராயண சப்தத்தில் காட்டிய திருக்குணங்களை அறியாத அல்பர்களும் அடைவதற்காக எம்பெருமானின் திவ்ய ங்கள விக்ரஹத்தைச் சொன்னது.**

28-55 **ஸ்வரூப, ரூப, குண, விபூதி என்ற வரிசையாயினும் எம்பெருமானார் கத்யத்தில் முதலில் திவ்யமான திருமேனியைச் (ரூப) சொன்ன பின்னே திருக்கல்யாண குணங்களைக் காட்டியதால் திருமேனியின் முக்யத்வம் தெரிகிறது.**

28-56 **எம்பெருமானின் திருமேனி ஒன்றே சுபாச்ரயம். சுபம் என்னும் பாபத்தை விலக்குதலும், ஆஸ்ரயிகை என்னும் தியானத்திற்கு சுகமாய் இருப்பது.**

28-57 **பகவானின் திவ்ய ஆத்ம ஸ்வரூபம் – சுபம், ஆஸ்ரயிக்க கடினம். நித்ய, முக்த, பத்த சேதனனின் சரீரம் - தியானிக்கலாம், பாபத்தை போக்காது.**

28-58 **எம்பெருமானின் திருவடிகள் பற்றுவதற்கு எளிதாகவும், தியானிக்க சுலபமாயும், எம்பெருமானுக்கு கருணை பிறக்கவும், ஆழ்வார்கள், ஆசாரியர்கள், மற்றைய ப்ரமாணங்கள் கூறுவதாலும் அதுவே பற்றுதலுக்கு உகந்தது. சரணௌ என்பது திருவடிகளையே எனக் கூறி மற்றவை உபாயம் இல்லை என்கிறது.**

28-59

28-60 **ஆ**

28-61

28-62 (tag)

Chapter 29
சரம ஸ்லோகாதிகாரம்
The Final Sloka

29-1 கண்ணன் கீதையில் சொன்னது
29-2 தகாத இடத்தில் நட்பாலும் தகாததைடத்தில் கருணையாலும்
29-3 ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய 6 பொருள்
29-4 மாம்
29-5 ஏகம் - பொருள்
29-6 சரணம் வ்ரஜ:
29-7 அஹம்
29-8 த்வா
29-9 ஸர்வபாபேப்ய:
29-10 மோக்ஷயிஷ்யாமி
29-11 மாசுச:
29-12
29-13 திரண்ட கருத்து
29-14 (tag)

Chapter 30
ஆசார்ய க்ருத்யாதிகாரம்
The duties of an Acharya

30-1 **இந்த அதிகாரத்திலிருந்து மூன்று அதிகாரங்கள் ஸம்ப்ரதாய ப்ரக்ரியா பாகம் எனப்படும்.**

Three next three chapters starting from here is called "Sampradaya prakriya".

30-2 **ஆசார்யனுக்கு உள்ள கடமைகளை காட்டுவது இந்த அதிகாரம்.**

The duties of the aachryan is explained in this chapter.

30-3 **ஆசாரியன் தகுதியான சிஷ்யனுக்கு உபதேசிப்பதன் மூலம் ஸம்பிரதாய விளக்கை ஏற்றுகிறான்.**

இந்த ஸம்ப்ரதாயம் ஒரு அழகான விளக்கு போன்றது. ஒரு நல்ல பாத்திரத்தில் எண்ணெய் விட்டு, சுத்தமான திரி சேர்த்து அந்த விளக்கை ஏற்றி வைப்பது போல, பரமபதத்தை அடைய விரும்புவன், ஒரு நல்ல சிஷ்யனை தகுந்த சோதனை செய்து, பக்தி என்கிற பாத்திரத்தில் உயர்ந்த ஸம்பிரதாயமான இந்த விஷயங்களை எல்லாம் உபதேசிக்க வேண்டும்.

By teaching to an eligible student, aachrya lights up the "sampradaya" lamp for the benefit of the world.

Our sampradayam is a beautiful lamp. Similar to putting oil into a good bowl, adding a clean wick and lighting it, the aacharyan who wish to ascend to the abode of Sriman Narayana has to select a good disciple through rigouours testing and teach him all these intricacies.

அதி3ஜிக3மிஷு2ராத்3யம் த4ாம தி3வ்யம் த்ரித4ாம்ந:
ஶ்ருத விவித4 பரிக்ஷா ஶோதி4தே க்வாபி பாத்ரே ।
அநக3 கு3ண த3ஶாயாம் ஆஹித ஸ்நேஹமார்ய:
ப்ரதி3ஶதி நிரபாயம் ஸம்ப்ரத3ாய ப்ரதீ3பம் ।।
ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் 69

த்ரித4ாம்ந: திருப்பாற்கடல், ஆதித்த மண்டலம், ஸ்ரீவைகுட்டம் எனும் மூன்று இடங்களை உடைய பகவானுக்கு
ஆத்3யம் தி3வ்யம் த4ாம முதன்மையான சுத்த ஸத்வமான ஸ்ரீவைகுண்ட்டத்தை
அதி3ஜிக3மிஷு2: ஆர்ய: அடைய விரும்பி ஆசாரியர்கள்
ஶ்ருத விவித4 பரிக்ஷா ஶோதி4தே சாஸ்திரங்களில் சொன்ன பல விதமான பரிக்ஷைகளில்
க்வாபி பாத்ரே நன்கு தேர்ச்சி பெற்ற ஒரு அருமையான சிஷ்யனுக்கு,
அநக3 கு3ண த3ஶாயாம் சுத்தமான ஸத்வ குணம் நிரம்பிய நிலையில் (குற்றமில்லாத நூலால் செய்த திரியுடன்) த்தோடு,
ஆஹித ஸ்நேஹம் அதிகமான அன்பு காட்டி
நிரபாயம் ஸம்ப்ரத3ாய ப்ரதீ3பம் ப்ரதி3ஶதி அழிவில்லாத ஸம்ப்ரதாய தீபத்தை கொடுக்கிறான்.

குற்றம் இல்லாத நூல்களே திரி. அன்பே அதற்கு எண்ணெய். ஸம்ப்ரதாயம் என்பதே விளக்கின் ஒளி.

தனிக்கடலே தனிச்சுடரே தனியுலகே என்றென்று
உனக்கு இடமாயிருக்க
என்ற பெரியாழ்வார் ஸாதித்தபடி (பெரி. திருமொழி 5-4-9)

30-4 **ஸ்ரீமந் நாராயணன் தொடங்கிய ஸதாசார்ய ஸம்பிரதாய ரஹஸ்ய அர்த்தங்களை கேட்பவன் தகுதி அறிந்தே உபதேசிக்க வேண்டும். உரியவனுக்கு உபதேசிப்பது ஆசாரியன் கடமை**

ஆசாரியகள் ஸத்ஸம்ப்ரதாய வழியாக தமக்கு கிடைத்த இந்த ரஹஸ்ய த்ரய ஸாரங்களை தாங்கள் நன்கு அனுஸந்திப்பார்கள். பிறகு, ஸத்வ குணம், பக்தி, ஆசார்ய அபிமானம் நிரம்பிய தகுந்த சிஷ்யனை தேர்ந்து எடுத்து அவர்களுக்கு உபதேசிப்பர். உரியவனுக்கு

உபதேசிப்பதும், அல்லாதவனுக்கு உபதேசிக்காமல் விடுவதும் ஆசாரியனது கடமை.

It is essential to understand the qualification of the listener before teaching the great sampradaya lineage which starts from Sriman Narayana. It is the duty of the acharya to to disclose these essentials to the qualified candidates.

Acharyas first enjoy and practice these rahasya threa saara meanings, which they received from the great noble leineage (sath sampradayam). Then the select disciples who are soft in nature, has lots of bhakthi and deep devotion to the acharyan. To those selected candidates the reveal these meanings. It is the duty of the acharya to instruct the proper candidates and refrain from those who are not.

30-5 **கிருஷ்ணன் சரம ஸ்லோகத்தை உபதேசித்த பிறகு, இந்த ரஹஸ்யத்தை யாரிடம் சொல்லக் கூடாது என்று விவரிக்கிறான்.**

இத3ம் தே நாதபஸ்காய நாப4க்தாய கத3ாசந
நசா ஶுஶ்ரூஷவே வாச்யம் நச மாம் யோப்4யஸூயதி
பகவத் கீதை 18 - 67

ய இதம் பரமம் குஹ்யம் மத்3ப4க்தேஷ்வ அபி4த4ாஸ்யதி
ப4க்திம் மயி பராம் க்ருத்வா மாமேவைஷ்யதி அஸம்ஶய:
பகவத் கீதை 18 - 68

"என் உபதேசம் உயர்ந்தது. ரஹஸ்யமானது. இதை ஒருபோதும், தவம் இல்லாதவன், என்னிடம் பக்தி இல்லாதவன், இதை கேட்க ஆசை இல்லாதவன், என்னிடம் குறை காண்பவன் இவர்களிடம் சொல்லாதே."

This secret should never be imparted to those who are not austere, or devoted, or interested in listening , nor to one who finds fault with Me.

என்னிடம் உயர்ந்த பக்தியை செய்து, இந்த உண்மையான, ரஹஸ்யமான அர்த்தத்தை தெளிவாக எவன், என் பக்தனுக்கு எடுத்துச் சொல்கிறானே அவன் என்னையே அடைவான். இதில் சந்தேகம் எதுவும் இல்லை."

For one who has extreme love to Me, and preaches this supreme secret to the devotees, will reach Me. There is no doubt about it.

30-6 **ரஹஸ்யார்த்தங்களை இவர்களுக்கு உபதேசிக்கக் கூடாது. - தவம், பக்தி இல்லாதவன், பணிவிடை செய்யாதவன், பகவானை நிந்திப்பவன், பொய் சொல்பவன், சாஸ்திரத்தை நம்பாதவன், ஏமாற்று வேலை செய்பவன், வஞ்சகன், குறுக்கு புத்தி உள்ளவன், தன்னை பெரிய பண்டிதனாக நினத்திருப்பவன், எல்லோருக்கும் துன்பமே கொடுப்பவன்.**

The intricate meaning of the three rahasyas can't be disclosed to the following – One who does not have bhakthi or tapas; does not do kaimkaryam, always talk low of the Bhagavan doesn't believe the sastras, who always deceives others, cheaters, perverted personality, one who thinks great about himself and one who always harms others.

30-7 **ரஹஸ்யார்த்தங்களை இவர்களுக்கு உபதேசிக்கலாம். பகவானை நம்புவன், நல்ல ஆத்ம குணங்கள் நிரம்பியவன், வேத சாஸ்த்ரங்களை கற்று, அனுஷ்டிக்க ஆசை உடையவன், பக்தியுள்ளவன்.**

The intricate meaning of the three rahasyas can be disclosed to the following -- one who believes and has faith in God, filled with good qualities, has a desire to learn the vedas and to follow them in real life and one has bhakthi towards the Lord.

30-8 **"ப்ரம்மத்தைப் பற்றி உபதேசிக்கவல்ல ஆசாரியனும், தகுந்த சிஷ்யன் கிடைக்காமற் போனால், அந்த வித்தையுடன் இறக்க வேண்டுமே தவிர தகுதி இல்லாதவனுக்கு சொல்லக் கூடாது. எந்த விதமான ஆபத்து வந்தாலும், ஞானமான விதையை உபயோகமற்ற நிலத்தில் விதைக்கக் கூடாது," என்றது மநு ஸ்மிருதி.**

If a deserving disciple could not be found, an acharya who may be qualified to teach the brahma njaanam (knowledge), has to die with that,

rather than to teach to unworthy candidates. The seed of knowledge should not be sow into a barren land under whatever the circumstances may be.

30-9 **"தூர தேஸத்தில் வஸிப்பவர்கள் ஸ்ரீமந் நாராயணனிடத்தில் பக்திகொண்டு ஆசாரியனை அடைந்தால் அவர்களுக்கு நீண்ட பரிசைஷ இல்லாமல் உபதேசிக்கலாம்" என்றது ஸாத்வத ஸம்ஹிதை.**

For those who traveled from distant lands with deep devotion to Lord Sriman Narayana, they can be instructed without difficult examinations, says Sattvika Samhitha.

30-10 **ரஹஸ்யார்த்தங்களை விவரமாக கேட்டு அறிய விஷய ஞானம் இல்லாருக்கு தத்வ ஹித உத்தர க்ருத்யம் என்னும் முக்யமானவற்றை சுருக்கமாக உபதேசிப்பர்.**

For those who do not have enough knowledge to grasp all the intricacies of the three rahasyas, they can be instructed with the essence of tatva, hitha, purushartham, only.

30-11 **அவையாவன** -- இவர்கள் தேஹ-இந்த்ரியாதி-வ்யதிரிக்தனாய் நித்யனாயிருப்பான் ஓர் ஆத்மா உண்டு. இச் சேதாநா சேதநங்கள் இரண்டொழிய இவற்றுக்கு அந்தர்யாமியாய் ஸேஷியாயிருப்பான் ஒரு பரமாத்மா உண்டு. இப்பரமாத்மாவை ஒழிய இவ்வாத்மாவுக்குத் தானும், பிறரும் ரக்ஷகராக மாட்டார் என்று தத்வத்தையும்

தத்துவ சுருக்கம் -- அழியாத ஜீவன் அழியும் சரீத்தைவிட வேறு. இந்த சேதன அசேதனத்தில் எல்லாவற்றுள்ளும் உறைந்து நிற்கும் பகவான் அவற்றை விட வேறானவன். அவன் பரமாத்மா, பரம சேஷி. அவன் ஒருவனே ரக்ஷகன். வேறு யாராலும் ஜீவனை காக்க முடியாது. இதுதான் நம் ஸம்பிரதாய தத்துவம்.

The essence of our philosophy - Indestructible soul is different from destroyable body. Thus the Bhagavan who is present in all sentient and

nonsentient things is different from all of them. He is the supersoul, the final master, and is the only savior and protector for everyone. Briefly, the tattva is represented by divine couple (divya damapathi).

30-12 "அநாதி காலம் அந்தாதியாக ஸம்ஸரித்துப் போந்த அடியேனுக்கு இனி ஒரு கர்மவாஸாதி க்லேசம் வராதபடி திருவடிகளைத் தந்தருள வேண்டும் என்று ஆசாரியன் ப்ரசாதித்த குரு பரம்பரா பூர்வக த்வயத்தாலே ஸ்ரீமான நாராயணனின் திருவடிகளை ஶரணமாகப் பற்றி ஆத்மாத்மியங்களையும் அவற்றைப் பற்றி வரும் சுமைகளையும் அங்கே ஸமர்பிப்பது என்று ஹிதத்தையும்"

ஜீவனின் ஸம்ஸாரம் அநாதியானது, முடிவில்லாமல் தொடர்வது. ஆசார்யன் அருளால், குரு பரம்பரை தியானத்துடன் த்வய உபதேசம் பெறுகிறான். அதன் கருத்தை அறிந்து, கர்பவாஸம் போன்ற கஷ்டங்கள் நேராதவாறு, உம் திருவடிகளைத் தந்து என்னைக் காத்தருள வேண்டும் என்று பிராட்டி மூலமாக எம்பெருமானின் திருவடிகளில் தன்னையும், தன்னைச் சேர்ந்தவற்றையும், அவைகளை பற்றி வரும் பொறுப்புகளையும் ஸமர்பிப்பதே (மோக்ஷோபாயமான ப்ரபத்தி) ஹிதம்.

The essence of means – The bondage of birth and death to the individual soul is timeless. Through the compassion of the acharyas and with the meditation of the acharya lineage, the individual soul gets the instruction of dvaya mantra. After understanding the intricate meaning of this, with Lakshmi's recommendation, he performs tootal unconditional surrender to the Lord's feet as a means to the moksham. Briefly, the hitha is represented by uniquely surrenderable couple (sharanya damapathi).

30-13 ஸதாசாரியன் காட்டிக் கொடுக்கக் கைக்கொண்ட எம்பெருமான் இனி நம்மை ஒரு படிக்கும் கைவிடான் என்ற தேற்றத்தோடே இங்கு இருந்த காலம் அபவர்க பூர்வகரமான நிரபராத அனுகூல வ்ருத்தியோட நடப்பது என்று உத்தரக்ருத்யத்தையும்

உத்தர க்ருத்யம் – பகவானிடம் ஆசாரியன் நம்மை காட்டிக் கொடுத்தபடியால், அதை ஏற்றுக் கொண்ட எம்பெருமான், நம்மை ஒருநாளும் நம்மை கைவிட மாட்டான். இந்த மன உறுதியுடன்,

மோக்ஷத்திற்கு முதல் படியாக, அபராதமிலா பகவத் பாகவத கைங்கர்யங்களை செய்ய வேண்டும்.

The essential actions after prapatti – The God who has accepted us, is the one who has been showed to us by our acharyas. He will never give up on us. With that firmly in our mind, one has to perform flawless service to the Bhagavan and bhagavatas, essentially as the initial step towards moksham. Briefly, the rewards is represented by unique couples who accept our service (seshi damapathi).

30-14 இப்படி ரஹஸ்யாத்ரயத்தைப் பற்றின கீழும் மேலும் உள்ள பாசுரங்கள் எல்லாம், வேதாந்த உதயந ஸம்ப்ரதாயமான மடைப்பள்ளி வார்த்தையை, ஆசாரியன் பக்கலிலே தாம் கேட்டு அருளினபடியே, கடாம்பி அப்புள்ளார் அடியேனைக் கிளியைப் பழக்குமாப்போலே பழக்கி வைக்க, அவர் திருவுள்ளத்தில் இரக்கமடியாகப் பெருமாள் தெளிய ப்ரகாசிப்பித்து, மறவாமற் காத்துப், பிழையறப் பேசுவித்த பாசுரங்கள்.

இந்த கருத்துக்கள் எல்லாம் என்னுடையது (ஸ்வாமி தேசிகன்) அல்ல. திருமடைப்பள்ளி ஆச்சான் உபதேசித்து, அவற்றை என் ஆசார்யரான கிடாம்பி அப்புள்ளார், எனக்கு (ஸ்வாமி தேசிகனுக்கு) ஒரு கிளிப் பிள்ளைப் போல் பழக்கி உள்ளார். அவற்றை எல்லாம் ஹயக்ரீவன் அவர் மனதில் நன்கு ப்ரகாசித்து பிழை ஏதும் இல்லாமல் இந்த கிரந்தத்தை பகவானே பேசுவித்தான்.

The ideas described here are not of my own. They are the instructions of Tirumadaipalli aachan, which as been instructed to me through my acharya Kidambi AppuLLar. He has trained me like a parrot which repeats what has been told to it. All these priceless ideas have been polished in my heart by the Lord Hyagriva and He is the one who wrote all these in this book without any errors or omissions.

30-15 **ஆசாரியன் தகுந்தவனுக்கு உபதேசிப்பதால் அவனை காக்கிறான். பகவான் ஆணையை பின்பற்றுவதால் தன்னையும் தானே காத்துக் கொள்கிறான்.**

By instructing to the proper candidates acharyas protect them and by following the commands of the Lord, they protect themselves, too.

30-16 **தமிழ் பாசுரம்**

**மருள் அற்ற தேசிகர் வான் உகப்பால் இந்த வையமெலாம் *
இருள் அற்று * இறைவர் இணையடி பூண்டு உய எண்ணுதலால் *
தெருள் உற்ற செந்தொழில் * செல்வம் பெருகிச் சிறந்தவர் பால் *
அருள் உற்ற சிந்தையினால் * அழியா விளக்கு ஏற்றினரே.**
அதிகாரசங்கிரகம் 37

- **(மருள் அற்ற தேசிகர் வான் உகப்பால் இந்த வையமெலாம் இருள் அற்று)** அஞ்ஞானமே இல்லாத ஆசாரியர்கள், (தாங்கள்) மோக்ஷம் போக விருப்பத்தாலும், இந்த உலகத்தில் உள்ள அறியாமையை நீங்கி
- **(இறைவர் இணையடி பூண்டு உய எண்ணுதலால்)** பகவானின் இரண்டு திருவடிகளையும் உபாயமாகப் பற்றி நல்ல கதி அடைய வேண்டும் என்பதால்
- **(சிறந்தவர் பால் அருள் உற்ற சிந்தையினால்)** உயர்ந்த சிஷ்யர்களுக்கு கருணையான மனத்துடன்
- **(தெருள் உற்ற செந்தொழில் செல்வம் பெருகிச்)** விவேகத்துடன் கூடிய கைங்கர்ய ஸம்பத்தை வளர்க்கும்
- **(அழியா விளக்கு ஏற்றினரே)** ஸம்ப்ரதாய விஷயங்களை உபதேசித்தனர்,

Acharyas void of any ignorance (ajjaanam), with their great compassion to ascend to the moksham, removes any ignorance that spreads in this word. They know the only way to attain the ultimate bliss (moksham) is the complete total surrender (prapatti) to the two feet of the Lord and grasping them firmly and permanently. To the qualified students. they teach our Srivaishanva philosophical intricacies (sampradaaya saaram) which are the discriminative knowledge that helps one to grow on the wealth of service (kaimkarya sampath)

30-17 **சிறந்த சிஷ்யனுக்கு உபதேசித்து நற்குணங்களை வளர்ப்பதால் அவனை காப்பது மட்டுமின்றி தன்னையும் காத்துக் கொள்கிறார், ஆசாரியன்**

By instructing to the best students and instilling good habits in them, aachryas not only saving them from the bondage, but also himself.

ஆசாரியன் நல்ல சிஷ்யனை தேர்ந்து எடுக்க வேண்டும். அவர்களுக்கு ஞானத்தை போதிக்க வேண்டும். அதற்கு அநுகுணமான குணங்களை வளர்க்க வேண்டும். அப்படி செய்வதன் மூலம் அந்த சிஷ்யனை காத்து அருள்கிறார். ஏன் தன்னயுமே காத்துக் கொள்கிறார்.

Acharya has to choose the best disciples. He has to impart knowledge on them. He has to instill good habits accordingly. By doing that, he is protecting the disciple. He is protecting himself also, for that matter.

30-18 **கடைசியாக,** "சிறந்த கடல் அலைகள் போல் தடையில்லாமல், நல்ல குணங்களை உண்டாக்கும்படியான உபதேசத்தை ஆசாரியன் சிஷ்யனுக்கு அருளுகிறார். அப்படி செய்வதால் அந்த சிஷ்யர்கள் மட்டும் காக்கப் படுவதில்லை, முதல் ஆசாரியனான எம்பெருமானின் ஆணையின் பரம்பரைக்கு கட்டுப் பட்டவனாய் தன்னையே காத்துக் கொள்கிறார்," **என்று சொல்லி இந்த அதிகாரத்தை முடிக்கிறார்.**

In conclusion, svAmi dEesika says " Acharyas teach in an exemplified manner to instil good characters in sishyas, just like the great tides of the ocean. Thus doing so, not only the sishyas are protected, but also protect themsleves too.

Chapter 31
சிஷ்ய க்ருத்யாதிகாரம்
The duties of a disciple

31-1. **சிஷ்யனுக்கு அவசியமான குணங்கள், கடமைகள் பற்றி சொல்வது இந்த அத்யாயம்.**

The essential qualities and the duties of the disciple are dealt in this chapter.

31-2. **ஆசாரிய உபதேசம், நல்லோழுக்கம் இவற்றுடன் எம்பெருமான் என்னும் சேமநிதியை அடைகிறான், சிஷ்யன்.**

அ3ஸ்தி3ல கு3ரு4பக்திஸ் தத் ப்ரஶம்ஸாதி3 ஶீல:
ப்ரசுர ப3ஹு3மதிஸ் தத்3 வஸ்து வாஸ்த்வாதி3 கேபி
கு3ணவதி விநியோக்தும் கே3ாபயந் ஸம்ப்ரத3ாயம்
க்ருதவித3 நக4வ்ருத்தி: கிம் ந விந்தே3ந் நித4ானம்
ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் 71

அ3ஸ்தி3ல கு3ரு4பக்தி குறையில்லாத ஆசார்ய பக்தியும்,
தத் ப்ரஶம்ஸாதி3 ஶீல: ஆசார்யனை புகழ்வதும்,
தத்3 வஸ்து வாஸ்து ஆதேகே3 அபி ஆசாரியனை சேர்ந்த பொருள்கள், இடம் இவைகளில்
ப்ரசுர ப3ஹு3மதி நல்ல உயர்ந்த புத்தியுடனும்,
கு3ணவதி விநியோக்தும் நற்குணனாய் உபதேசிப்பதாற்காக
ஸம்ப்ரத3ாயம் கே3ாபயந் ஸம்ப்ரதாய ரஹஸ்யங்களை காக்கும் ஆசாரியன்
க்ருதவித்3 செய்த உபகாரத்தை நினைத்திருப்பவனும்
அநக4வ்ருத்தி: கைங்கர்யங்களை பிழையற செய்யும் சிஷ்யன்
நித4ானம் எம்பெருமான் ஆகிய சேமநிதியை
கிம் ந விந்தே3ந் ஏன் அடைய மாட்டான்? (அடைந்தே தீர்வான்).

31-3. “இவ் அர்த்தங்களை எல்லாம் மிடியனுக்கு அகத்துக்குள்ளே மஹாநிதியைக் காட்டிக் கொடுக்குமாப்போலே வெளியிடுகையாலே மஹோபகாரனான ஆசார்யன் திறத்தில் சிஷ்யன் க்ருதஜ்ஞனாய் இருக்க வேண்டும்”

இப்படி தத்வ, ஹித, புருஷார்த்த ரஹஸ்யங்களை அர்த்தங்களுடன் விளக்கும் ஆசாரியன், பரம ஏழையாய் இருக்கும் ஒருவனிடம் அவன் வீட்டுக்குள்ளே இருக்கும் புதையலைக் காட்டிக் கொடுப்பது போலே, நல்ல சிஷ்யனுக்கு தெளிவாய் உபதேசிப்பதாலே, அந்த சிஷ்யன் ஆசாரியனிடத்தில் மிகுந்த நின்றியுடன் இருக்க வேண்டும்.

31-4. **சிஷ்யன் ஆசார்யனிடமும், அவரைச் சார்ந்தவரிடமும் பக்தி, ஸ்துதி, நன்றி, பணிவு, அன்பு இவை கொள்ள வேண்டும். இது ப்ரதி உபகாரம் அன்று.**

The disciple should have bhakthi, praise, gratitude towards the acharya. He should also be polite and display affection towards those who are closer to acharya. This not an act of reciprocating gesture.

31-5. **உலகம் இவனை வெறுக்காமலும், தண்டிக்காமலும் இருக்க ஆசாரியர் செய்த பெரும் உபகாரத்திற்கு ப்ரதி உபகாரமே இல்லை.**

For all the wonderful things acharya has bestowed on the disciple, there is nothing he can do reciprocate this.

31-6. **ஆசாரிய தக்ஷிணை முக்யம். அது சிஷ்யனது உடல், பொருள், ஆவி அனைத்தும்.**

ஆசார்ய பக்தியைக் காட்ட, குறைந்த பக்ஷம் செல்வம் அனைத்தோ, பாதியோ, அதில் பாதியோ அல்லது முடிந்தவரை தக்ஷிணை கொடுத்தல் என்பது அவசியம் என்றது ப்ரமாணங்கள்.

Proper dues back to the achraya is essential. A true disciple should offer his body, wealth, soul and everythign to him.

To show the gratitude to the acharya, the least one should offer is his entire wealth, or half of it or whatever which is deemd possible, s osays the saastras.

31-7. **ஆசாரியனை ஸேவிப்பது என்பது பலனுக்காக அல்ல, அது கடமை. ஆசாரியனே ஸாக்ஷாத் பகவான்.**

பகவானிடத்து எப்படி பணிவுடன், அன்புடன், ஆவலுடன் கைங்கர்யம் செய்கிறோமோ அதைப்போலவே ஆசாரியனிடத்தும் செய்ய வேண்டும்.

Prostrating to the acharya is not for anything in return. Its merely his duty. Achraya is the direct form of God.

One has to display affection, obedience and offer enthusiastic service to the achraya just like he would offer to God.

31-8. **ஆசாரியன் உபதேசத்தின்படி நடக்க வேண்டும். தான் உபதேசிப்பதையும் செயலில் காட்ட வேண்டும்.**

One has to abide by the instructions of the acharya. Also one has to practice what he preaches.

31-9. **கற்றதை மற்றவருக்காக மாற்றிச் சொல்வது விலைமாதர் அலங்காரம் போலே.**

தான் கற்றப் பொருள் எல்லாம் ஸம்ப்ரதாய வழியாய் காலம் கடந்து வந்தவை. தனக்கு ஒரு பலனுக்காகவோ, பெருமைக்காகவோ கேட்பவர்கள் ரஸனைக்காகவோ மாற்றக் கூடாது.

If one alters the saastras what he has learned for the convenience of the audience, it is similar to the dressing up act of a prostitute.

What the disciple has learned from the acharya is time-tested and has passed through several generations. One should alter those ideas for self-benefit, fame or for the attraction of the audience.

31-10. **ஆசார்ய உபதேசத்தை ஆசாரமில்லாது அனுஷ்டிப்பது, மண்டை ஓட்டில் வைத்த கங்கை நீரும், நாய்த்தோலில் வைத்த பாலும் போலே.**

If one acts according to accharya's instruction without proper cleanliness (aacharam), it is similar to putting the ganges water in a skull or storing milk ina dog skin.

31-11. **ஆசாரியன் உபதேசங்கள் ஜீவநத்திற்கு இல்லை; தகுதியில்லார்க்கும் இல்லை.**

The information learned from aacharya is not to pursue livlihood from that. It is also not meant to dissipate to unqualified audience.

ஆசாரியன் உபதேசங்கள் வயிறு வளர்க்கும் ஸாதனம் இல்லை. வாழ்க்கையில் ஸம்பாத்யம் வேண்டி அந்த உபதேசங்களை ஒரு தொழிலாகச் செய்யக் கூடாது.

The upadesa from acharya is not a means for livelihood. One should not use them as money-making ideas.

31-12. **தகுயில்லார்க்கு உபதேசிப்பது குரங்கிடம் கொடுத்த பூமாலை போலே.**

Teaching to an unqualified person si similar to give the flower garland to a monky.

31-13. **ரஹஸ்யார்த்தங்களை தராதரமின்றி பொது இடங்களில் வெளியிடுவது பட்டிக்காடு கூட்டத்தில் அவல் பொறியை விசிறினாற்போலே.**

ஸம்பிரதாய கருத்துக்களை ஆழ்ந்து ஆவலுடன் கேட்பவருக்கே சொல்ல வேண்டும். பொதுக் கூட்டங்களில் சொல்வது அவல் பொறியை ஒருவன் கூட்டத்தில் அவிழ்த்து விட்டால், வேண்டியதை ஆவரவர் பொறுக்கிக் கொள்வார்கள். அதுபோலே ஆகும்.

Disclosing the inticacies of the rahasyas without any eligibility criterion in a public place is like throwing rice puffs in an ignorant social meeting.

The details of our Srivaishanva sampradaaya should be revealed only to those who are very eager to listen to them. Disclosing them in a public meeting is like throwing away rice puffs in a public meeting. Each one runs aroudn and grabs whatever thay want.

31-14. **ஆசார்ய உபதேசங்களைக் கற்று அத்தால் வைராக்யம் போன்ற நற்குணங்கள் அடைய வேண்டும். இல்லையெனில் அது காக்கையின் கரைதல் போலே.**

Listening to the teachings of the acharyas is develop noble qulaities like detachment. Without them, ts like a crow's call.

31-15. **தகுந்த முறைகளோடும், ஆசாரிய நினைவோடும், ஆசாரியனை பிரகாசித்துக் கொண்டும் பிறர்க்கு உபதேசிக்க வேண்டும்.**

Following proper guidelines, thinking and meditating about acharya and glorifying the acharya are esential when one instructs these to others.

31-16. **பிறவிக்குருடனை பரமபதத்திற்கு உயர்த்தும்படி, திருத்தி பணி கொண்ட ஆசாரியனின் பெரும் உபகாரத்திற்கு கைம்மாறு, எம்பெருமானும் அறியான்.**

Acharyas correct the diciples who are ignorant like blind fro mbirth, and thus lift them to the highest bliss. For this great bendiction, there is no repayment even the Lord would know.

31-17. **தமிழ் பாசுரம்.**

**ஏற்றி மனத்தெழின் ஞான விளக்கை * இருள் அனைத்தும் *
மாற்றினவர்க்கு ஒரு கைம்மாறு * மாயனும் காணகில்லான் /
போற்றி உகப்பதும் * புந்தியில் கொள்வதும் பொங்கு புகழ் *
சாற்றி வளர்ப்பதும் * சற்று அல்லவோ முன்னம் பெற்றதற்கே.**
அதிகாரசங்கிரகம் 38

- **(ஏற்றி மனத்து எழில் ஞான விளக்கை இருள் அனைத்தும் மாற்றினவர்க்கு)** நம்முடைய மனதிலே ஞானமாகிய தீபத்தை ஏற்றி, அஜ்ஞானத்தை விரட்டி ஒழித்த ஆசாரியர்களுக்கு
- **(ஒரு கைம்மாறு மாயனும் காணகில்லான்)** ப்ரதி உபகாரத்தை எம்பெருமானாலும் கண்டு பிடிக்க முடியவில்லை.
- **(போற்றி உகப்பதும் புந்தியில் கொள்வதும் பொங்கு புகழ் சாற்றி வளர்ப்பதும்)** எனவே, நாம் ஆசாரியனை புகழ்ந்து மகிழ்வதும், மனதில் த்யானம் செய்வதும், அவரது கீர்த்தியை மேன்மேலும் வளர்ப்பதும் ஆகிய காரியங்கள்,
- **(சற்று அல்லவோ முன்னம் பெற்றதற்கே)** நாம் ஆசாரியனிடமிருந்து பெற்ற உதவிக்கு செய்யும் சிறியவை.

சேதனர்கள் ஞானமில்லாமல், பிறவியிலிருந்து ஒருவன் குருடனாய் இருப்பது போலே ஸம்சாரத்தில் தத்தளிக்கின்றனர். ஆசாரியனது பேருபகாரத்தாலே, த்ததுவங்களை அறிந்து, ரஹஸ்யங்களை அறிந்து எம்பெருமானின் திருவடிகளில் சரணம் அடைகின்றனர். இந்த பெரும் பேற்றை நமக்கு வாங்கித் தந்த ஆசாரியனுக்கு நாம் என்ன கைம்மாறு செய்ய முடியும்?

The individual souls are struggling ignorantly in the bondage of birth and death cycle like a person blind from birth. Through the great compassion of the acharyas, they understand the philosophy of our sampradayam, understand the essence of the three rahasyas and then perform prapatti on

the feet of the Lord. What can we do to repay this great benediction poured on us by our acharyas?

31-18. **ஆசாரியர்கள் பல இருப்பினும், மோக்ஷோபாயமான பக்தி, ப்ரபத்திகளை காட்டித் தந்தவனே, ஒருவனுக்கு உயர்ந்த ஆசாரியன்.**

ஒருவனுக்கு பல ஆசாரியர்கள் இருக்கக்கூடும். நல்ல விஷயங்களை சொன்னவன், ஸமாச்ரயணம் செய்தவன், பரந்யாஸம் செய்தவன், பகவானிடமும் பாகவதர்களிடமும் அன்பு உண்டாகியவன் என்று பல. இருந்தாலும், தத்வ, ஹித, புருஷார்த்தங்களை அறிவித்து ப்ரபத்தியிலும், மோக்ஷத்திலும் இச்சை உண்டாக்கியவனே ப்ரதம ஆசாரியன்.

It is possible that one may have several acharyas in their life. But the one who has instructed the knowledge of bhakthi and praptti is the supreme acharya.

It is possible that one may have several acharyas – one instructed good information, one who did the samaasrayanam, one who did the bhara samarpanam, one who instilled affection towards Bhagavan and bhagavatas, etc. Yet, the one who instructed about tattva, hitha, purushaartham and induced the quest towards prapatti and moksham is the primary acharyan.

31-19. **ஆசாரியன் திருவடிகளே சரணம் என்பது இங்கும் அங்கும் நிச்சயம்.**

The feet of the acharya is the refuge here on earth and there on moksham is certain.

31-20. **கடைசியாக,** "நாவின் நுனியில், சிம்மாசனத்தில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீஹயக்ரீவனான ஆசாரியனைக் காட்டிலும் இந்த ஸம்ஸார மண்டலத்தில் வேறு ஒரு தேவதையும் (ஸ்ரீய:பதியைக்கூட) உயர்ந்ததாக நினைக்க மாட்டோம். தன் பெருமை விடாதவனாய் ஸம்ஸார

கடலிருந்து வெளியேற்ற எந்த ஆசாரியன் வடிவவைஅவன் எடுத்துக் கொள்வானோ?" **என்று இந்த அத்யாயத்தை முடிக்கிறார்.**

Chapter 32
நிகமநாதிகாரம்
Summary

32-1. **ஆசாரியனின் அருளால் தத்வங்களை கற்று, மருள் விலகி, மற்றவருக்கும் கற்பித்து, முன்னோர் முறைகளை பற்றி, ரஹஸ்ய அநுஸந்தான அனுபவம் உடைய அதிர்ஷ்டம் செய்த பிரபன்னனை நித்ய ஸூரிகளும் கொண்டாடுவர்.**

By the grace of the acharyas, the prapannas who understand the tattvas, who is void of ignorance, teach for others, follow the foot-steps of the elders, meditate on the these rahasyas will be praised by the eternals (nithyasooris) also.

32-2. **கீழே சொன்ன அதிகாரங்களின் சுருக்கம்.**

1. **இப்படி இந்த ஜீவன் நித்யர்களுக்கு சமமாக எம்பெருமானுக்கு செய்யும் கைங்கர்யத்தை இத்தனை காலமும் இழந்திருப்பதை அறிந்து அந்த அனுபவம் பெற ஆசாரியன் திருவடிகளிலே தத்வ ஹிதங்களை அறியத் தொடங்கினான்** (1. உபோத்காதம்)

2. **தத்வ ஹிதங்களை அறிவிக்கும் ப்ரமாணங்களில் ரஹஸ்யத்ரயம் என்பதே மிகவும் ஸாரமானது** (2. ஸார நிஷ்கர்ஷாதிகாரம்)

3. **இந்த ரஹஸ்யங்களைக் கொண்டு சாரீரக சாஸ்திரத்தை (சரீர ஆத்ம பாவம்) அறிய வேண்டும்** (3.ப்ரதாந ப்ரதிதந்த்ராதிகாரம்)

4. **பூர்வாசாரியர்கள் கூறிய அர்த்த பஞ்சகம் என்பதை அறிய வேண்டும்** (4. அர்த்த பஞ்சகாதிகாரம்)

5. **கீழே சொன்ன ஐந்தில் மூன்று தத்துவங்களை பிரித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும்** (5. தத்வத்ரய சிந்தநாதிகாரம்)

6. **இம்மூன்று தத்வங்களிலும் ஸ்ரீமந் நாராயாணனே பரதேவதை என்பதை ஸாத்விக சாஸ்திரங்கள் கூறியவாறு அறிய வேண்டும்** (6.

பரதேவதா பாரமார்த்திகாதிகாரம்)

7. இவற்றை தெளிந்தவன், மோஷோபாயத்தை செய்ய முயல்வான் (7. முமுக்ஷுத்வாதிகாரம்)

8. உபாயத்தை செய்ய தகுதியானவன் இருவகை (8. அதிகாரி விபாகாதிகாரம்)

9. அவர்களின் உபாயங்களின் வகை இரண்டு (9. உபாய விபாகாதிகாரம்)

10. இந்த உபாயங்களிலும் ப்ரபத்தியை செய்பவனுக்கு உள்ள சிறப்பான தகுதிகளும் (10. ப்ரபத்தியோக்யதா அதிகாரம்)

11. ஒரே தடவையே செய்ய வேண்டிய ப்ரபத்தியின் அங்கங்களின் விவரணம் (11. பரிகரவிபாகாதிகாரம்)

12. முமுக்ஷு அங்கங்களுடன் செய்யும் ப்ரந்யாஸமான அங்கியின் விளக்கம் (12. ஸாங்கப்ப்ரபதநாதிகாரம்)

13. பகவானிடம் சுமையை ஒப்படைத்த ப்ரபந்நன் மோக்ஷ பலனுக்காக செய்ய வேண்டியவை ஒன்றும் இல்லை (13. க்ருதக்ருத்யாதிகாரம்)

14. க்ருதக்ருத்யன் தன்னுடைய நிஷ்டைகளை அறிந்து கொள்ளும் அடையாளங்கள் (14. ஸ்வனிஷ்டாபிஜ்ஞாதிகாரம்)

15. ப்ரபன்னன் சரீரம் சாயும் வரை ஸ்வயம்ப்ரயோஜநமாக செய்ய வேண்டிய பணிகள் (15. உத்தரக்ருத்யாதிகாரம்)

16. பாகவதே கைங்கர்யமே பகவத் கைங்கர்யத்தின் எல்லை நிலம் (16. புருஷார்த்த காஷ்டாதிகாரம்)

17. பிரபன்னன் செய்யும் கைங்கர்யங்கள் சாஸ்த்ர விஹிதமாக இருக்கை (17. சாஸ்திரீய நியமநாதிகாரம்)

18. இப்படி செய்து வரும் கைங்கர்யங்களில் அபராதம் வராமையும், வந்தவை கழியவும் உள்ள முறைகள் (18. அபராதபரிஹாராதிகாரம்)

19. ப்ரபன்னன் கைங்கர்யத்திற்கு உயர்ந்த வாசஸ்தலம், பாகவதர் வாழும் திவ்ய தேஸங்களே. (19. ஸ்தாநவிசேஷாதிகாரம்)

20. கால தேஸ நியமம் இன்றி எம்பெருமான் ஸங்கல்பத்தால் ப்ரபன்னன் ஆத்மா உடலிருந்து வெளிக்கிளம்புகை (20. நிர்யாணாதிகாரம்)

21. அர்ச்சிராதி மார்க்கம் வழியாக பரமபதம் அடையும்வரை உபசாரங்கள் பெறுதல் (21. கதிவிசேஷாதிகாரம்)

22. பரபதம் அடைந்து பரிபூர்ண ப்ரம்மாநுபவத்துடன் கைங்கர்யம் செய்யும் புருஷார்த்த விசேஷம் (22. பரிபூர்ண ப்ரம்மாநுபவாதிகாரம்)

23. இப்படி அறிய வேண்டியதில் முக்கியமான ஸித்தோபாயமான எம்பெருமானைப் பற்றிவரும் கலக்கங்களும், அதன் நிவர்த்தியும் (23. ஸித்தோபாய சோதநாதிகாரம்)

24. செய்ய வேண்டியதில் முக்யமான ஸாத்யோபாயங்களான பக்தி ப்ரபத்திகளில் வரும் கலக்கங்களும், நிவர்த்தியும் (24. ஸாத்யோபாயஸோதநாதிகாரம்)

25. ப்ரபந்நனின் பெருமையை மிகைப்படுத்தி கூறுவதை சரி செய்தல். (25. ப்ரபாவவ்யவஸ்தாதிகாரம்)

26. ப்ரபந்நனின் பெருமையை குறைத்து கூறுவதை சரி செய்தல் (26. ப்ரபாவரக்ஷாதிகாரம்)

27. இவை எல்லாம் அனுஸந்திக்க ரஹஸ்யங்களில் முதலான அஷ்டாக்ஷரத்தின் பதம், வாக்யம் இவற்றின் பொருள் கூறுதல் (27. மூலமந்திராதிகாரம்)

28. த்வய மஹாமந்திரத்தில் வாக்யம், பதம் இவற்றின் பொருள் கூறுதல் (28. த்வயாதிகாரம்)

29. பகவான் கிருஷ்ணன் அருளிய சரம ஸ்லோகத்தின் பதம், வாக்யம் இவற்றின் பொருள் கூறுதல் (29. சரமஸ்லோகாதிகாரம்)

30. **சாஸ்திர முறையாய் ஸம்பிரதாயத்தை வளர்க்கும் ஆசாரியரின் தகுதியை கூறுதல்** (30. ஆசார்யக்ருத்யாதிகாரம்)

31. **பேருதவி செய்த ஆசாரியன் பக்கலில் சிஷ்யன் கைம்மாறு காண முடியாத கடைமையின் விளக்கம்** (31. சிஷ்யக்ருத்யாதிகாரம்)

32. **இவற்றை எல்லாம் ப்ரமாணங்கள், ஸம்பிரதாய முறைகள் கொண்டு ஆசாரிய பரம்பரை வழியாய் வந்த கருத்துக்களை, ஐயம், திரிபு இன்றி ஹயக்ரீவன் அருளாலே விளக்கல்** (32. நிகமநாதிகாரம்)

32-3. **ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தின் நான்கு பகுதிகள் -**

**முன் பெற்ற ஞானமும் * மோகமும் துறக்கலும் மூன்று உரையில் *
தன்பற்று அது அன்மையும் * தாழ்ந்தவர்க்கு ஈயும் தனித்தகவும் /
மன்பற்றி நின்றவகை * உரைக்கின்ற மறையவர்பால் *
சின்பற்றி என் பயன் * சீர் அறிவோற்கு இவை செப்பினரே.**
அதிகாரசங்கிரகம் 39

- **(முன் பெற்ற ஞானமும்)** முன்னோலே ஆசாரியனிடம் போய் அடையும் தத்வ ஹித புருஷார்த்த ஞானம்
- **(மோகம் துறக்கலும்)** விதண்டாவாதங்களை தவிர்த்தலும்
- **(மூன்று உரையில்)** மூன்று ரஹஸ்யங்களில்
- **(தன் பற்று அது அன்மையும்)** தன் தாழ்ந்த தன்மையை
- **(தாழ்ந்தவர்க்கு ஈயும் தனித் தகவும்)** அகிஞ்சனாரான நமக்கு கொடுக்கும் கருணையும்
- **(மன் பற்றி நின்ற வகை)** ராஜாவான எம்பெருமானை உபாயமாக அடைந்திருக்கும் நிலையை
- **(உரைக்கின்ற மறையவர்பால்)** உபதேசம் செய்யும் ஆசாரியனிடத்தில்
- **(சின் பற்றி என்ன பயன்** அல்பமானவைகளை கேட்டுத் தெரிந்து கொள்வதால் என்ன லாபம்?
- **(சீர் அறிவோர்க்கு** ஸத்விஷயங்களை அறிபவர்க்கு
- **இவை செப்பினரே)** இந்த கிரந்ததில் சொன்ன விஷயங்களை சொன்னோம்

இந்த பாசுரத்தில் அற்புதமாக இந்த ரஹஸ்யத்ரய ஸாரத்தின் அதிகாரங்களை ஸாமர்த்யமாக காணலாம்

முன்பெற்ற ஞானம் = முதல் 22 அதிகாரங்கள் [I அர்த்தாநுசாஸந பாகம்]
மோகம் துறக்கல் = மேல் உள்ள 4 அதிகாரங்கள் [II ஸ்திரீகரண பாகம்]
தன்பற்ற தன்மை = மூல மந்திராதிகாரம் [III பதவாக்ய யோஜநா பாகம்]
தாழ்ந்தவர்க்கு ஈயும் தனித் தகவும் = த்வயாதிகாரம் [same]
மன்பற்றி நின்றவகை = சரம ஸ்லோக அதிகாரம் [same]
உரைக்கின்ற மறையவர் = ஆசார்ய க்ருத்யாதிகாரம் [IV ஸம்ப்ரதாய ப்ரக்ரியா பாகம்]
சீர் அறிவோர்க்கு = சிஷ்யக்ருத்யாதிகாரம் [same]
செப்பினரே ≔ நிகமநாதிகாரம் [same]

This words in this paasuram amazingly categorizes the chapters of this book
Knoweldge received in the past = first 22 chapters
Renouncing the lust = Next 4 chapters
Losing the ego = Moola mantra adhikaaram
Compassion of donating to low level people = Dvaya adhikaaram
Following the words of the King = Charmasloka adhikaaram
Instructors who are skilled in vedas = Aacharya kruthya adhikaaram
Those who understand the glory = shishyakrutya adhikaaram
Were told = Nigamana adhikaaram

32-4. **இப்படி கீழே சொன்ன ரஹஸ்யார்த்தங்களை ஸதாசாரியன் திருவடிகளிலே கேட்டு அறிய வேண்டும்.**

கீழே மூப்பது ஒன்று அதிகாரங்களில் தத்வ, ஹித, புருஷார்த்த ரஹஸ்யங்களை திரு மந்திரம், த்வயம், சரம் ஸ்லோகம் மூலமாய் விளக்கியதை ஒருவன் நல்ல ஆசாரியன் அடி பணிந்து கேட்டு தளிய வேண்டும்.

Thus the ideas explained in the previous 31 chapters, one has to hear and understand the intricacies while sitting next to the feet of the acharyan.

Thus, in the previous thirty one chapters below, we have seen the details of tattva, hitha, purushaartham through Tirumantram, dvayam and charama

slokam. One has to prostrate to a great acharya and listen under his feet to illuminate his knowledge on these.

32-5. **இப்படி ஆசாரியனிடம் கற்று அதன் வழி நடப்பவர்கள், மஹரிஷிகள் மனத்திலே துக்கப்படும் நரக வழிகளையும், பஞ்சாக்நி வித்தையில் சொன்ன தூமாதி மார்க்கங்களையும் விலக்கி பகவானின் லீலைக்கு உடந்தையாய் இருக்க மாட்டார்கள். அர்ச்சிராதி வழியாய், பரமபதம் ஏறி திருவுடன் கூடிய எம்பெருமானின் திருவடிகளில் ஸர்வ தேஸ, ஸர்வ கால, ஸர்வ அவஸ்தைகளிலும் கைங்கர்ய வாழ்வு பெறலாம்.**

Thus those who listen to these fom acharyas and act on them, will avoid – what the great sages think and afraid of the path to hell, the smoke path as explained in the panchagni vidhai; they also won't be part of bhagavan's palyful world. Instead they will climb to paramapadham through Archradi direction and perform flawless kaimkaryam to the Lord and Sri in across all time, place and state.

32-6. **எனவே திருநாராணன் திருவடிகளே உபாய காலத்திலும், பல காலத்திலும் கதி.**

Hence, the feet of the Lord Sriman Narayana is the sole solace in both as a means and as ends.

32-7. **மாறன் மறை மகிழம்பூ மணம் பெற்றதுபோலே இங்கே மடைப்பள்ளி மணம் வீசுகிறதே.**

The Tamil vedas of Maran Nammazhvaar gets the fragrance of makizhampuu and so this gets the aroma of madaipaLLi (kitchen)

இங்கு சொல்லப்பட்ட அர்த்தங்கள் எல்லாம் போக்யமானது. வேதாந்த உதயநர் என்று போற்றப்படும் கிடாம்பி ஆச்சான் ஸம்பிரதாயமாக வந்தவை. முன்னொரு காலத்தில் ந்யாய சாஸ்திரத்திற்கு உதயநர் என்பவர் உயர்ந்தவராய் இருந்தார். அதுபோல கிடாம்பி ஆச்சான்

வேதாந்த சாஸ்திரத்திற்கு என்று எம்பெருமானாரே **"வேதாந்த உதயநர்"** என்ற விருதை அளித்தார். இவர் எம்பெருமானாருக்கு மடைப்பள்ளி கைங்கர்யபரர். மடைப்பள்ளி ஆச்சான் என்று பேர். ஸ்வாமி தேசிகன், கிடாம்பி ஆச்சானின் கொள்ளுபேரரான கிடாம்பி அப்புள்ளாரின், மருமகன், சிஷ்யன்.

கிடாம்பி ஆச்சான், எம்பெருமானாருடன் அந்யோந்யமாய். தனித்து பல இடங்களில் கைங்கர்யம் செய்து பல விசேஷ அர்த்தங்களை கேட்டுள்ளார். எம்பெருமானாரின் அனுஷ்டாதிகளை அருகில் இருந்து ஸேவித்து, விசேஷ கடாக்ஷம் பெற்றவர். எம்பெருமானாரின் திருவுள்ளத்தை அப்படியே அறியும் பாக்யம் இவருக்கு இருந்தது.

The information disclosed here are all divine like nectar. They have been descended from Kidambi aachan who is called Vedantha Udayanar. Once there was a well learned person called Udayanar for nyaaya saastra. Here, this MadaipaLLi aachan is similarly skilled in Vedantha saastra. So he was awarded the title "Vedanatha Udayanar" by Bhagavad Ramanuja himself. This aachan performed all the kitchen (madaipaLLi) services exclusively to Ramanuja. Swami Desika is the disciple and nephew of Kidambi AppuLLar who is the great grandson of this Kidambi Achan.

Kidambi Achan served Bhagavad Ramanuja exclusivey, intimately and alone in many instances. He had learned amazing internal meanings by staying closer to Ramanuja while performing this unaccompanied service. He has seen Ramanuja's daily routines directly and has been blessed with special compassion from the acharya. Perhaps, he was the only one who was fortunate enough to know exactly what is in Bhagavad Ramanuja's mind.

32-8. **ஞானத்துக்கு இறைவன் பரிமுகன் மனத்தில் வந்து எழுதியதை வெளிப்படுத்திய இந்த நூலை அமுதம் போல் எல்லோரும் பருகி மகிழுங்கள் என்று சொல்லி முடிக்கிறார்.**

What the God for the words has come into my mind and wrote all these, I have exposed them as a book. Everyone should drink (read) this like nectar.

இதி யதிராஜ மஹாநஸ பரிமள பரிவாஹ வாஸிதாம் பிப$_3$த ।
விபு$_3$த பரிஷந் நிஷேவ்யாம் வேத$_3$ாந்தோத$_3$ய ஸம்ப்ரத$_3$ாய ஸுத$_4$ாம் ।।
ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் 74

- **(இதி யதிராஜ மஹாநஸ)** இப்படி சொன்னவை எல்லாம் எம்பெருமானாருக்கு திருமடைப்பள்ளி கைங்கர்யம் செய்து
- **(பரிமள பரிவாஹ வாஸிதாம்)** அந்த நறுமணம் வீசுகின்ற வாசனை பெற்றதாய்,
- **(விபு$_3$த பரிஷந் நிஷேவ்யாம்)** கற்றோர்கள் எல்லாம் அனுவிக்க உகந்ததாய்,
- **(வேத$_3$ாந்த உத$_3$ய ஸம்ப்ரத$_3$ாய ஸுத$_4$ாம்)** வேதாந்த உதயநராய் (ந்யாய சாஸ்திரத்திற்கு சிகரமாய் விளக்கும் உதயநர் போலே) விளங்கும் திருமடைப்பள்ளி ஆச்சானின் ஸம்ப்ரதாயம் என்னும் அமுதத்தை எல்லோரும்
- **(பிப$_3$த)** பருகி மகிழ்வீர்கள்.

What thus has been told have the fragrance of Sri Kidambi Aachan, who did the private cooking service (madaipaali kaimkaryam) for Bhagavad Ramanuja. These concepts are such that the learned pandits will enjoy them. Eveyrone, please dip into this nectar and benefit from it.

32-9. **கிரந்தத்தின் பெருமை யாராலும், எத்தாலும் குறைவதில்லை**

கலகண்ட$_2$ க$_3$ணாஸ்வாத்$_3$யே காமஸ்யாஸ்த்ரே நிஜாங்குரே ।
நிம்ப$_3$ வ்ருத்திபி$_4$: உத்$_3$கீர்ணே ந சூத: பரிதப்யதே ।।
ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் 75

- (**கலகண்ட$_2$ க$_3$ணாஸ்வாத்$_3$யே**) குயில்கள் நன்று ரசித்து உண்ணக் கூடியது
- **(சூத: நிஜாங்குரே)** மாமரத்தில் உள்ள மாந்தளிர். அது
- **(காமஸ்யாஸ்த்ரே)** மன்மதனுக்கு வெற்றி தரும் ஸாதனமாக உள்ளது. அதன் மேல்
- (**நிம்ப$_3$ வ்ருத்திபி$_4$: உத்$_3$கீர்ணே**) வேப்பிலையைக் கொண்டு வாழும் விலங்குகள் [காக்கா, ஓட்டகம் போல்] எச்சில் உமிழ்ந்தால் அந்த மாமரம்

- **(ந பரிதப்யதே)** வருத்தப் படுவதில்லை.

அதுபோல பரம பாகவதர்கள் அனுபவித்து மகிழக்கூடிய இந்த கிரந்தத்தை, பொறாமையால் சில அற்பமானவர்கள் மட்டப்படுத்தினாலும், இதன் பெருமை சிறிதும் குறைவதில்லை.

Mango tree has got young leaves which are tasted by nightingales. Those leaves also give victory for manmadhan (Cupid angel). But some low level animals which always live out of neem leaves may spit on those mango leaves. By this action, the greatness of the mango leaves will not be hurt. Similarly while this book is written to be enjoyed by the knowledgeable bhagavatas, if the ignorants tried to put it down, the greatness will neer be blemished.

32-10. **தேசிகனின் உன்னதமான வாழ்நாட்கள்.**

நிர்விஷ்டம் யதி ஸார்வ பௌ4ம வசஸாம் ஆவ்ருத்திபி4ர் யௌவநம்
நிர்தூ4தேதர பாரதந்த்ர்ய நிரயா நீதா: ஸு2க2ம் வாஸரா: ।
அங்கீ3க்ருத்ய ஸதாம் ப்ரஸத்தி மஸதாம் க3ர்வோSபி நிர்வாபித:
ஶேஷாயுஷ்யபி ஶேஷி த3ம்பதி தயா தீ3க்ஷாம் உதீ3க்ஷாமஹே ।।
ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் 76

- **(யதி ஸார்வ பௌ4ம வசஸாம் ஆவ்ருத்திபி4ர் யௌவநம் நிர்விஷ்டம்)** எம்பெருமானாரின் திவ்ய ஸூக்திகளின் காலக்ஷேப ஆவ்ருத்திகளால் இளமைப் பருவம் நன்கு அனுபவிக்கப்பட்டது.
- **(நிர்தூ4தேதர பாரதந்த்ர்ய நிரயா வாஸரா: ஸு2க2ம் நீதா:)** மற்றவனுக்கு அடிமையான நரகம் நீங்கிய காலம் எல்லாம் சந்தோஷமாக கழிந்தன.
- **(ஸதாம் ப்ரஸத்தி அங்கீ3க்ருத்ய அஸதாம் க3ர்வோSபி நிர்வாபித:)** நடாதூர் அம்மாள் போன்ற பெரியோர்களின் அருளை ஏற்றுக்கொண்டு தீயவர்களான பிற மதத்தாரின் கர்வமும் ஒடுக்கப்பட்டது.
- **(ஶேஷாயுஷ்யபி ஶேஷி த3ம்பதி தயா தீ3க்ஷாம் உதீ3க்ஷாமஹே)** மீதி வாழ்நாட்களிலும் சேஷிகளான திவ்ய தம்பதிகளின் திருவருளால் ஏற்பட்ட ஸங்கல்பத்தை எதிர் பார்த்து நின்றோம்.

My youth days (Svami Desikan's) were spent cheerfully on studying, teaching and contemplating on Bhagavad Ramanuja's Sribahsyam. My days of hell being slave to others are now an histroy. The egos of the crooked concepts were defeated by the grace of Sri Nadaur Ammal. Rest of the days will be spent happily looking forward to Bhagavan's wishes.

32-11. **ஆசாரியரிடம் ஸம்ப்ரதாய உபதேசம் பெற்றவர்கள், வேதார்த்தங்களில் நம்பிக்கையுடன், நுண்ணறிவு கொண்டு, பொறாமையற்று, ஸாரத்தையே நாடி, ஸம்ஸாரிகளுக்கு கட்டுப்படாது, உலக விஷயங்களில் பற்று இல்லாது, பரம ஸாத்விகர்களாய் இருப்பார்கள். நம் ஆசாரியர்கள் உபதேசித்த இந்த நல்ல வழியைப் பின்பற்றி அவர்கள் மேலும் உகப்பர்.**

Those who has received instructions from acharya, about our sampradaya will have firm faith and sharp knowlesge on vedas and their meaning; they wil lbe void of jealous and seek only the essence; they will not be bounded by common people and will lead a detached life; they exemplify their soft nature. They prosper further by following the words of the acharyas.

32-12. **ப்ரபத்தியின் பெருமையை ஆசாரியன் சிஷ்யனுக்கு உபதேசிக்க வேண்டி இந்த நூலில் தத்வ ஹித புருஷார்த்தங்களின் ஸ்வரூப ஸ்வபாவங்களைச் சொல்லி, மறுப்புக்களுக்கு ப்ரமாணங்களைக் கொண்டு சமாதானம் சொல்லி, மூன்று ரஹஸ்யங்களையும் விளக்கி, ஆழ்ந்த கருத்தாய் ஜீவன் சுதந்திரம் அற்றவன், எம்பெருமானுக்கே அடிமை என்பதை வெளியிட்டு, ஆசார்ய, சிஷ்ய நடைமுறைகளை விளக்கிய இதை அனுபவிக்காது மற்றதால் என்ன பயன்?**

This book is written so that an acharya can teach his disciple. First, tattva, hitha, purashaartham were explained and any argument arise on that were countered with correct pramaaNam (saastra). Then the three rahasyas were explained and the ultimate truth is that the individual soul has no freedom and is slave to the Lord eternally is emphasized. Finally the actiosn need to be pursued by aacharya and the disciple has been dealt. Instead of enjoying this treatise, what is the point of wandering in all the others.

32-13. **இப்பிரபந்தத்தில் கூறிய வழியே சிறந்தது**

The path emphasized in this book is of great importance.

**இது வழி இன்னமுது என்றவர் * இன்புலன் வேறிடுவார் *
இதுவழி ஆமல என்று அறிவார் * எங்கள் தேசிகரே /
இது வழி எய்துக என்று * உகப்பால் எம் பிழை பொறுப்பார் *
இது வழியா மறையோர் அருளால் * யாம் இசைந்தனமே.**
அதிகாரசங்கிரகம் 53

- **(இன்புலன் வேறிடுவார் இது வழி ஆம்)** உலகத்தார் இவை சந்தோஷமானது என்று கருதும் அல்பமான விஷயங்களை நமக்கு தேவை இல்லாதது என பாகுபடுத்தி ப்ரபத்தி என்கிற வ்யாஜத்தால் உண்டான எம்பெருமானின் கருணையே உபாயம்
- **(அ(ல்)ல என்று அறிவார் எங்கள் தேசிகரே)** மற்றவை அவசியமான உபாயம் இல்லை என்று அறிபவர்கள் எங்கள் ஆசாரியர்களே
- **(எம் பிழை பொறுப்பார் இது வழி எய்துக என்று)** எங்களுடைய குற்றங்களை எல்லாம் பொறுத்து, இதில் கூறிய ப்ரபத்தி என்னும் ஸாதனத்தின் மூலம் பலன் அடைவாய் என்பதே
- **(இன்னமுது என்றவர்)** இனிமையான அமிர்தம் போன்றது என்றார்கள் அவர்கள்
- **(மறையோர் அருளால் இது வழியா யாம் இசைந்தனமே)** வைதிகரான எம் ஆசாரியர்களின் கருணையால் இந்த உபாயமே நல்ல உபாயம் என நாங்கள் ஏற்றுக் கொண்டோம்

Lord's limitless compassion is erupting when we do a small token of action called prapatti. Our great acharyas instructed us that this prapatti as the only means and discarded the other cheap worldly pleasures. We surrender to that Lord as advocated by the acharyas as the best means, to forgive all our sins and bless us with the eternal bliss.

32-14. **ரஹஸ்யத்ரய அர்த்தம் அறிந்து கலங்காமல் இருக்கை.**

After understanding the meanings of this three rahasyas, one should be steadfast and not yield to other temptations.

எட்டும் இரண்டும் அறியாத எம்மை * இவை அறிவித்து *

எட்ட ஒண்ணாத இடம் தரும் * எங்கள் அம் மாதவனார் /
முட்ட வினைத் திரள் மாள * முயன்றிடும் அஞ்சல் என்றார் *
கட்டெழில் வாசகத்தால் * கலங்கா நிலை பெற்றனமே.
அதிகாரசங்கிரகம் 54

- **(எட்டும் இரண்டும் அறியாத எம்மை இவை அறிவித்து)** அஷ்டாக்ஷரமும், த்வயமும் [அல்லது எட்டும் இரண்டும் கூட்டினால் பத்து என்று கூட்டத் தெரியாத அல்லது பத்து என்ற பக்தி] தெரியாத எங்களுக்கு இவை எல்லாவற்றையும் ஆசாரியன் மூலமாக உபதேசித்து
- **(எட்ட ஒண்ணாத இடம் தரும் எங்கள் அம் மாதவனார்)** உபாயம் பெரிதாக ஒன்றும் செய்யாமலே அடைய முடியாத வைகுந்தத்தை தருகின்ற என் கண்ணன் என்று கூறும் அந்த திருமாலே
- **(வினைத் திரள் முட்ட மாள முயன்றிடும் அஞ்சல் என்றார்)** கர்மாக்கள் அடியோடு அழிந்து போகும்படியான ப்ரபத்தியில் முயலுவீர்கள், பயப்படாதீர்கள் என்றார்.
- **(கட்டெழில் வாசகத்தால் கலங்கா நிலை பெற்றனமே)** அவருடைய அந்த அழகான, வலிமையான சொற்களால் கவலை இல்லாத நிலை அடைந்தோம்

We are all so ignorant as not even to know that eight plus two is ten (or eight lettered ashtaaksharam and two lined dvayam). To us Lord Krishna has shown the great acharyas and through them the chance to attain the ultimate bliss (Sri Vaikuntam) effortlessly, without any difficult method. He has instructed to the follow the path of total and complete surrender (prapatti) and by which all the sins (papas) will be wiped out compeltely. He has asked not despair. We now live without any worry, after listening to that strong and beautiful words.

32-15. **இப்பிரபந்தத்தின் மூலம் சிறந்த நிஷ்டை அடைதல்**

One learns the best abidence following this book.

**வான் உள் அமர்ந்தவருக்கும் * வருந்த வரு நிலைகள்*
தான் உளனாய் உகக்கும் * தரம் இங்கு நமக்கு உளதே /
கூன் உள நெஞ்சுகளால் * குற்றம் எண்ணி இகழ்ந்திடினும் *
தேன் உள பாத மாலர் * திருமாலுக்குத் தித்திக்குமே.**
அதிகாரசங்கிரகம் 55

- **(வான் உள் அமர்ந்தவருக்கும் வருந்த வரும்)** சொர்கத்தில் இருக்கும் தேவர்களுக்கும், பரமபதத்தில் உள்ள நித்யர்களுக்கும் கூட மிகுந்த ப்ரயாஸத்துடன் கிடைக்கக்கூடிய
- **(நிலைகள் தான் உளனாய் தரம் இங்கு நமக்கு உளதே)** [ஆசார்ய அருளால்] இனிமையான நிஷ்டைகள் தனக்கு இருப்பதாகவும், இவை உடையவரைக் கண்டு மகிழும் பாக்யமும் இந்த கர்ம பூமியில் நமக்கு கிடைத்ததே!
- **(கூன் உள நெஞ்சுகளால் குற்றம் எண்ணி இகழ்ந்திடினும்)** வக்ரித்த மனத்தினால் சிலர், இந்த நூலிலும், அதை எழுதிய என்னிடத்திலும் குற்றம் இருப்பதாய் வெறுத்தாலும்
- **(தேன் உள பாத மாலர் திருமாலுக்குத் தித்திக்குமே)** தேன் பெருகுகின்ற திருவடித்தாமரை உடைய எம்பெருமான் திருமாலின் திருவுள்ளத்திற்கு இது இனிக்கும்.

By the grace of our acharyas, we follow the path of strict abidence (nishtai) and have great admiration to those who have them. Even the eternals (nithyas) and mukthas (liberated) might be jealous of this great opportunity (bhagyam) what we got on this karma bhoomi itself. Still, there are some crooked minds may find fault with this book and with me as the author. It is ok. The Lord Narayna who is always with the consort of Sri and under whose feet nectar is flowing, will take this book so sweetly in his heart.

32-16. **ஸ்ரீஹயக்ரீவனே ஆசாரியனாக இவற்றை எழுதிவித்தார்.**

Sri Hyagreevan Himself stood as the aacharyan and wrote this book.

வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் * விரகால் * அடியோம்
உள்ளத் தெழுதியது ஒலையிட்டனம் * யாம் இதற்கென் *
கொள்ளத் துணியினும் கோது என்று இகழினும் * கூர்மதியீர் *
எள்ளத்தனை உகவாது இகழாது * எம் எழில் மதியே
அதிகாரசங்கிரகம் 56

- **(வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் விரகால்)** வெண்மையான குதிரை முகத்தை உடைய ஹயக்ரீவர் ஆசாரியராய் வந்து உபதேசத்தால்
- **(உள்ளத்து எழுதியது யாம் ஒலையிட்டனம்)** என் மனத்தில் எழுதியதை நான் ஒலைச்சுவடியில் எழுதினேன்

- **(இதற்து என்)** எனவே இதற்கு ஏதும் குறை உண்டா?
- **(கூர்மதியீர் கொள்ளத் துணியினும்)** நல்ல புத்திசாலிகளே நீங்கள் துணிந்து இதை ஏற்றுக் கொண்டாலும்,
- **(எள்ளத்தனை உகவாது கோது என்று கழியினும்)** இல்லை ஒரு எள் அளவு கூட மகிழ்ச்சி அடையாது குற்றமானது எனப் பொறாமையுடன் வெறுத்தாலும்
- **(எள்ளத்தனை இகழாது எம் எழின்மதியே)** ஓர் எள் அளவும் என் மனம் அவர்களை வெறுக்காது.

This ideas of this book is written in my heart by the Lord Hyagreeva who has the beautiful white face of an horse. I have just put them in paper. So, how this could have any deficiency? Whether this book is accepted daringly by the intellectuals or enviously rejected with not even an iota of joy by others, my heart will not show any dislike towards them.

32-17. முடிவுரை

Conclusion

ரஹஸ்யத்ரய ஸாரோயம் வேங்கடேச விபச்சிதா
சரண்ய தம்பதி விதாம் ஸம்மத: ஸமக்ருஹ்யத ।।
ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் 78

- (**ரஹஸ்யத்ரய ஸாரோயம்**) மூன்று ரஹஸ்யங்களின் ஸாரங்களை விளக்குகின்ற இந்த ரஹஸ்யத்ரய ஸாரம் என்ற கிரந்தத்தை,
- **(வேங்கடேச விபச்சிதா)** சீரார் தூப்புல் திருவேங்கட நாதன் என்னும் வித்வானால்
- (**சரண்ய தம்பதி விதாம்**) சரணாகதி செய்ய வேண்டிய திவ்ய தம்பதிகளின் ஸ்வரூப ஸ்வாபவங்களை அறிந்த
- **(ஸம்மத: ஸமக்ருஹ்யத)** பூர்வாசாரியர்களின் கருத்துக்களுக்கு ஒத்து அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படியாக, அடைக்கலமாக எழுதப் பட்டது.

This book, Srimad Rahasya Traya Saaram, explainþí the essence of the three rahasyas, was written by vidvaan Sri. Venkatanathan (Svami Desikan). The ideas presented here are in conformity with poorvaacharyas, who understood the real nature (svabhavam) of the divine couple (Sriman

Narayana), to whom we all surrender (prapatti) our souls.

।। இதி ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் ஸம்பூர்ணம் ।।

|| Thus Sriamd Rahasya Traya Saaram has been completed ||

கவிதார்கிக ஸிம்ஹாய கல்யாண கு3ணாஶாலிநே
ஸ்ரீமதே வேங்கடேஶாய வேத3ாந்த கு3ரவே நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

Srimathe Ramanujaya namah

Appendix – A

Essence of the Three Mantras
(Rahasya threya saaram)

(0) Lineage of preceptors (Guru parampara)

Accesses guru, first * the aspirant for salvation potential *
Bows him and his guru, to immortal * order is sequential *
Convinces Lord is primal * praises His graceful credential *
Devotes, meditates mantras * duty to spread is essential *

(1) Introduction (Upothakaaram)

Trapped in endless cycle * due to both types of deeds *
Forgot right to serve Him * on pleasures that impedes *
Reached guru by His grace * realized the true needs *
Realities and mantras showed * release and its means *

(2) Essence discrimination (Saara nishkarsham)

Schooling adds mere title * but not intellect to measure *
Self soul and body pleasure dealt * vainly in earlier scripts *
Heaven and God on latter * salvation seekers found the code *
Gurus churned essence * fed what is adored higher abode. *

(3) Three Principles (Thathva threyam)

Learn God, soul and matter * the difference and innate nature *
Expel the illusion body is soul * and its independent venture *
Perverse knowledge leads you * me and not Him feature *
Thus gurus unmistakably * nurtured the esoteric picture *

(4) Significant five (Artha panchagam)

Srimun Narayana, the supreme * stands alone with splendor *
Attain through passionate devotion * or by total surrender *

Blessed soul removes hinder * performs service in tender *
Learning and relishing significant five * will do all the wonder *

(5) Cardinal Tenets (Pradhana prathithanthram)

Universe, body to Him * stretched from subtle at creation *
Soul holds your body * but both are body to Almighty *
He supports, controls and possesses * all at His own will *
This relation is inseparable * priceless and eternal *

(6) Lord Narayana's supremacy (Para nirnayam)

Perverts argue against scripts * dignified souls to panic *
Gurus firmed His primacy * demolishing those manics *
All deities are under Him * seeking them is a disgrace *
When all is conferred by * the salvation granter's grace *

(7) Salvation seeker (Mumukshu)

Salvation seeker controls senses, * and is terrified of hell *
Removes ego and sins * knows Lord's supremacy very well *
Yearns to be liberated, go higher * adores forever His grace *
And longs for enduring service * under Lord's lotus base. *

(8) Eligibility Criterion (Adthikari vibhaga)

Devotion slow for deliverance * when salvation is only thought *
Sooner is surrender * done by repeating, for you or self sought *
Antecedents determine the soul's way * though result is same "
No refuge is better than latter * to break the cycle, gurus claim *

(9) Means (Upaaya vibagha)

Action for those who can't control senses * holy scripts say *
But, intellects go with knowledge * yet both needs the next way *
Where one forgets himself in prayer * finds soul and set it free *
And surrender is for those * who can't do any one of the three. *

(10) Qualifications for total surrender (Prapatti yogyadhaa)

Quests for heaven only * holy scripts he learns and adopts*
Incompetent in other routes * desperately all hopes he drops *
Inadequacy in knowledge, * patience, perseverance or caste *
Are credentials for release * a surrenderer needs to be passed *

(11) Accessories (Parikara vibhaga)

Pledges to perform to His pleasure * abstains from others *
Steadfast faith on savior * Eradicates ego and misbehavior *
Stands low on depression * by clear self-effacing confession *
Pleads for goal and protection * in lieu of all other direction *

(12) Preliminaries (Sanga prapadhana)

Submit my innate nature * since You own body and soul *
Entrust my burden * since I have no freedom or control *
Offer all the fruits * since service to You is my only goal *
Guru's grace and mantras * are the prelude to my appeal*

(13) Completion of required tasks (Kritha kritya)

Surrender done only once * no more worry, tension, or load *
No debt to sages, fathers and angels * holy scripts echoed *
Release and salvation secured * Trust His word as He told *
Having done needed tasks * enjoy like sitting on a pot of gold *

(14) Behavior characteristics (Svanishta abhignana)

Even to insulters be grateful and kind * since it's a divine test *
Rid of propensity on other means * trust Lord knows the best *
Be detached on daily chores * not be afraid of death are *
Traits of surrnenderer maturity * in self, means and result *

(15) Actions to be followed (Utthara krithya)

Till end, the surrenderer * must be grateful to gurus and others *

Abandon low desires, self-praise * neither disrespect elders *
Conduct daily rituals, prayer * and recite hymns in accord *
Serve humbly in mind, word and deed, * to devotees and Lord *

(16) Extreme of ultimate goal (Purushaartha kaashta)

Scripts rule all are His servants * and serving Him is the only task *
Devotees ignore flaws but prayers * spellbound when hear stories *
Pray and think of God with no return * stay humble, elders quoted *
Serving the souls of the Lord as stated * satisfy Him the best devoted *

(17) Scriptures imposition (Sastriya niyamana)

When knowledge has shrunk * scripts like moon in the night *
Abide them at your service * follow at least one of the five rights *
Expound Sribashya and southern scripts * serve at a temple
Meditate on sacred couplet * under a devotee lead a life simple*

(18) Offense reparation (Aparatha parikhara)

Sins, unintended will not accrue * others deserve minor penalties *
Heinous is petty deity worship * disrespect to guru and devotees *
Atonement relieves the most * though He directs you out of crisis *
Lord never gives up on release * and so irreversible is His promise *

(19) Location suitability (Sthana visehsa)

Surrenderer resides in places * conducive to prescribed rites *
Holy places extolled by preceptors * idols at many great heights *
On sacred river banks * and where deep devotees always flock *
Lives happily and do service * humbly until he runs out clock *

(20) Soul departure (Niryaana)

Given good to friends and sins to foes * soon he utters mantra *
Soul unites with organs, mind, and life air * churned out extra *
Reaches Lord through bright subtle vein * from heart to skull *

No need for thought of God at end * or curb on place and time *

(21) Enroute (Gathi Visesha)

Soul gets into subtle body from gross * prime guides takes out of world *
Across the river gets divine body * beneath a tree and dips in a pond *
Greeted by five hundred * gets eternal fragrance, flavor and splendor *
Pass the city, tower, seat * with divine fame climbs the throne to Lord *

(22) Ultimate Bliss (Paripoorna brahmaanubhava)

Ascendant enjoys, equivalent to Lord * His sacred body and prosperity *
But not to form, firm and finish the world * neither salvation granting ability*
Ecstatic on his share of eternal service * by guru's blessing at the empire *
Reached once the heaven * never he returns to earth on his own desire *

(23) Existing path (Siddha upaaya sodhana)

Kind and independent, He * on His eternal relation soul entirely depends *
Perform surrender to Them * since together is graceful means and ends *
She act as a compassionate advocate * so bow to Her first is tradition *
By His limitless mercy, he protects * on surrender in place of devotion *

(24) Feasible path (Saadhya upaaya sodhana)

Desires He, a reason how paltry it may be * to select the soul *
Scripts assert to pardon and protect * and show them the goal *
Devotees and surrenderers decide * He is the only viable means *
For His mercy that holds the earth * to grant the highest worth *

(25) Limitations (Prabhaava vyavastha)

Raises his lovers to His level * and sustains all lives by His grace *
Uttered flawless words through His mouth * with an ocean of mercy *
Elders gave the mystic meaning * matched with holy scripts' base *
Gurus funneled in harmony * without absurds attempts to erase *

(26) Vindication of surrender efficacy (Prabhaava rakshaka)

Avarice or absent in one of the five * still love them evenly *
Unwittingly veered from ordained duties * and loyal unevenly *
Offending devotees is sinful * more than insulting the Lord *
Revere all devotees said gurus * till he's proven to be a fraud *

(27) Root mantra (Moola Mantra)

Realize body is not soul * but slave to supreme creator, both are *
Tormented on inability for devotion * frustrated with means, too far *
Beg to serve with eternals * hold protector's lotus feet and adore *
Imploring such, gurus stated * is essence of root mantra's core *

(28) Sacred couplet (Dwayam)

Hymn that links two lines from scripts * gurus taught us in prudence *
To receive the protection of Lord and Sree * need to be uttered once *
Hold His both feet as the only means * to reach the exultant heaven *
Serve them impeccably in all sorts * thought inferred is our haven *

(29) Final Mantra (Charama Sloka)

When you hold in trust * holy feet of the one born as a cow herd boy *
As the only means * other ought to be done with caution is long gone *
Elders enlightened * Lord's solid words dispels all the ignorance *
Vicious sins separated after the act * will never haunt us back *

(30) Guru's duties (Acharya krithya)

To reach Lord's feet * clear ignorance of souls and raise them higher *
Cling the means of surrender * brimming wealthy services to acquire *
Wise gurus with boundless mercy * to deserved disciples devolved *
When prepared for heaven * eternal lamp of tradition to safely guard *

(31) Disciple's duties (Sishya krithya)

Even great magician can't repay gurus * for their actions in kind *

For they light the lamp of intellect * in worthy disciple's mind *
Pray praise and be pleased * place them in mind in all endeavors *
Spread their fame, the least * one should do sincerely forever *

(32) End (Nigamam)

Learned from gurus * insight on the reality, means and goal *
Divorced desires and perverts' haze * and reached inner soul *
He gives Himself as means and ends * noted from three texts *
Why anyone listens to * cheap righteous wealth and desirous effects? *

What elders taught willingly * to souls with good behavior and mind *
Intricacies of scripts Desika told * in simple thirty two verses confined *
On word makeup, meaning and melody * in sweet Tamil elegantly *
Nectar flows while telling * even when knowing the meaning not fully *

Appendix – B

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஆதிவண் ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மிந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக
ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீநாராயண யதீந்த்ர மஹாதேசிகாய நம:

எட்டின் கட்டு

(திருவஷ்டாக்ஷரத்தின் வலிமை)
திருமந்திரத்ததைப் பற்றிய
தமிழ் பாடல்களும் விளக்கமும்

ரஹஸ்யங்கள் விஷயச் சுருக்கம்

இந்த உலகத்தில் பிறந்து ஸம்ஸாரக் கடலில் மூழ்கியிருக்கும் சேதனர்கள் நல்ல கதி அடைய உபாயமாய் விளங்குவது மூன்று ரகசியங்கள். அவை திருமந்திரம், த்வயம், சரமஸ்லோகம் ஆகும்.

ஓது மறை நான்கதனில் ஓங்கும் ஒரு மூன்றினுள்ளே
நீதி நெறி வழுவா நின்றோம்"

என்றார் ஸ்வாமி தேசிகன் அமிருத ரஞ்சனியில் (31). அத்யனம் செய்யப்படும் வேதங்கள் நான்கிலும் சிறப்பித்து சொல்லப்படும் மூன்று ரஹஸ்யங்களை நல்ல முறையில் ஆசாரியன் அருளால் அவர்கள் கற்பித்த முறையிலேயே, தவறாமல் அனுஷ்டித்து உயர்ந்த நிலை பெற்றோம் என்றார்.

மூன்றில் ஒரு மூன்றும் மூவிரண்டும், முந்நான்கும்
தோன்றத் தொலையும் துயர்"

என்று அமிருத ரஞ்சனியில் (4). மூன்று ரஹஸ்யங்களை பதங்களோடு காட்டுகிறார் ஸ்வாமி தேசிகன். மூன்று ரஹஸ்யங்களில் மூன்று பதங்களுடைய திருமந்திரமும் ஆறு பதங்களுடைய த்வயமும், பன்னிரண்டு பதங்கள் உடைய சரமஸ்லோகமும் முறையான கருத்துடன் ஆறியும்போது சேதனர்களின் மனக்கலக்கங்கள் தீரும்.

"என் உயிர் தந்து அளித்தவரைச் சரணம் புக்கு
யான் அடைவே அவர் குருக்கள் நிரை வணங்கி"

என்று ஸ்வாமி தேசிகன் அதிகார ஸங்க்ரஹத்தில் (3) ஸாதித்த முறையில் ஒருவன் தன்னுடைய குலத்து ஆசாரியரை அடைந்து, அவரை அடி பணிந்து, விருப்புடன் வேண்டினால் அவர்கள் தனிமையில் உபதேசிப்பது இந்த மூன்று ரகசியங்களையும்தான்.

அவைகளின் அர்த்தங்களை அறிந்து, தினமும் அனுஸந்தித்தால் பிராட்டியுடன் என்றும் கூடிய ஸ்ரீமந் நாராயணனனுக்கு ஸ்ரீவைகுண்டத்தில் நித்ய கைங்கர்யம் செய்யும் பேறாகிய உயர்ந்த புருஷார்த்தத்தை அடையலாம்.

திருமந்திரம் - விஷயச் சுருக்கம்

திருவஷ்டாக்ஷரம் அதர்வ-நாராயண உபனிஷத்துக்களில் ஒதப்பட்டுள்ளது. இது வேதங்கள், ஸ்மிருதிகள், இதிகாசங்கள், புராணங்கள் இவை அனைத்திலும் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களை தன்னுள்ளே கொண்டுள்ளது. தத்வ ஹித புருஷார்த்தங்களை அறிவிக்கக் கூடியது.

பலன்களை தருவதில் திருமந்திரம் வேறு மந்திரங்களின் உதவியின்றி, தானே அனைத்தையும் அளிக்க வல்லது. ஸர்வ வேத ஸாரம் என்று சொல்லப்படும் ப்ரணவத்தை முன் கொண்டு தனக்கு நிகர் ஒன்றுமில்லை என்று கூறும்படியான திரு மந்திரமாகத் திகழ்கிறது.

திருமந்திரம். எட்டு எழுத்துக்கள் கொண்டது அதனால் திரு அஷ்டாக்ஷரம் என்றே முன்னோர்கள் வழங்கி வந்தனர். வ்யாபக மந்தரங்களில் தலை சிறந்தது என் ஆசாரியர்களால் போற்றப்படுவதும் திருமந்திரம்தான்.

இங்கு திருமந்திரத்தை பதம் பதமாகப் பிரித்து அதில் உள்ள பொருளை சுருக்கி பத்து பாசுரங்களில் சொல்லப் பட்டுள்ளது.

1. **அகாரம்**
2. **அதன் மேல் உள்ள வேற்றுமையுருபு**
3. **உகாரத்தின் முதல் பொருள்**
4. **உகாரம் பிராட்டியைக் குறிக்கும் இரண்டாம் பொருள்**
5. **மகாரம்**
6. **நம: பதம்**
7. **நார பதம்**
8. **அயந பதம்**
9. **ஆய சப்தம்**
10. **பலன்**

என்று பத்து பாசுரங்களில் அஷ்டாக்ஷரத்தின் பொருள்களை சுருக்கமாக காணலாம்.

அகாரத்தின் பொருள்

*அவ்வண்ணம் காக்கும் இறையாய் அனைத்தின் காரணமாய் *
உன்வண்ணம் காட்டும் திருமறையாய் மூலத்தின் முதலாய் *
நின்வண்ணம் ஏற்று வளம்பெறும் வலம்புரிசங்கின் வடிவே *
மெய்வண்ணம் தெரிய தெளிவீர் மூன்றின்முதலின் முதலே*
(1)

அவ் வண்ணம் = அகாரமாகிய எழுத்து
உன் வண்ணம் = பகவானின் குணங்கள்
நின் வண்ணம் = எம்பெருமானின் நிறம்
மெய் வண்ணம் = உண்மை தத்துவம்
வளம் = பெருமை
தெளிவீர் = குழப்பமில்லாமல் அறிவீர்

ப்ரமேயமாகிய பகவானை தெள்ளத் தெளிவாக காட்டக்கூடியவை ப்ரமாணங்களாகிய வேதங்கள் மட்டும்தாம். பகவானின் திருக்கல்யாண குணங்களை கண்ணாடி போல் (like mirror) பிரதிபலிப்பவை அவை. ஸர்வ வேதங்களின் ஸாரம் என்று நம்முடைய ஆசாரியர்கள் கருதுவது திருமந்திரம் என்கிற திருவஷ்டாக்ஷரம்.

அந்த திருமந்திரத்தில் "மூலம்" என்று சொல்வது "ஓம்" என்னும் ப்ரணவம். அது அகார உகார மகாரமாகிய மூன்று எழுத்துக்களைக் கொண்டது. அதில் முதல் எழுத்தான அகாரம் "அவரக்ஷணே" என்கிற தாதுவிலிருந்து வந்தது. வட மொழியில் "அவ்" என்றால் "காத்தல்" என்று பொருள்.

"அக்ஷராணோ அகாரோஸ்மி" என்கிற
ஸர்வ வாசக ஜாத ப்ரக்ருதியான
ப்ரதமாக்ஷரம் ப்ரதாநம்"

என்று ஸ்வாமி தேசிகன் ப்ரதாந ஸதகத்தில் என்று ஸாதித்தார்.

அகாரத்திற்கு முக்கியமாக மூன்று பொருள்கள் என்று ஸ்வாமி தேசிகன் ஸார ஸாரத்தில் கூறுகிறார் (COP).

1. **ஸர்வ காரணத்வம்**
    - **எல்லா வஸ்துக்களுக்கும் மூலப் பொருள். (Cause)**
    - **அனைத்துக் காரணமாய் என்ற பத்தால் இங்கு சொல்லப்பட்டது**

2. **ஸர்வ ஸேஷித்வம்**
    - **எல்லா பொருள்களுக்கும் எஜமானன், (Owner)**
    - **இறை என்ற பத்தால் இங்கு சொல்லப்பட்டது**

3. **ஸர்வ ரக்ஷகத்வம்**
    - **எல்லாவற்றையும் காக்கும் தன்மை (Protector)**
    - **காக்கும் என்ற பத்தால் இங்கு சொல்லப்பட்டது**

ரகசியங்கள் முன்றில் முதலாக இருக்கும் திருமந்திரத்தில் முதல் எழுத்து ப்ரணவம். அது எம்பெருமானின் திருமேனி வண்ணம் பெற்று பெருமை உடைய வலம்புரி சங்கின் வடிவம் போல் இருக்கிறது. வலம்புரி சங்கு வெள்ளையாய் பகவானின் வெள்ளை உள்ளத்தைப்போல் இருக்கிறது.

உண்மை தத்துவத்தை (Truth, or reality) அறிய உதவும் ரகசியங்கள் மூன்று என்பதை தெளிவாக அறிய வேண்டும்.

"இப்ரணவத்தில் பிறந்த தத்வ ஞானம் மோக்ஷோபாய
அதிகாராநுப்ரவிஷ்ட ஞானங்களில் ப்ரதாநம்"

என்று ப்ரதாந ஸதகத்தில் ஸ்வாமி தேசிகன் ஸாதித்தார்.

முத்திக்கு அருள் கூட மூன்றைத் தெளி முன்னம்
இத்திக்கால் ஏற்கும் இதம்"

என்று அமிருத ரஞ்சனியில் (3) ஸ்வாமி தேசிகன் ஸாதித்தார்.

அதாவது மோக்ஷத்திற்கு நேர் காரணம் பகவானின் அருள்தான். இதை ஸித்தோபாயம் என்பார்கள். அந்த அருளை நாம் அடைவதற்கு தத்துவங்களை அறிந்து அதன் மூலம் உபாயத்தை பின்பற்ற வேண்டும். இதை ஸாத்யோபாயம் என்பர்.

முமுக்ஷுவுக்கு அறிய வேண்டிய ரகசியம் மூன்று

என்று முமுக்ஷுப்படியில் (1) பிள்ளைலோகாசாரியரும் இதையே அருளினார்.

திருநாரணன் எனும் தெய்வமும் சித்தும் அசித்தும்
என்று பெரு நான்மறை முடி பேசிய தத்துவம் மூன்று இவை கேட்டு

என்று ஸாதித்தார் ஸ்வாமி தேசிகன் அமிருத ரஞ்சனியில் (10).

ஆக, மூன்று ரஹஸ்யங்களிலும், முதலாவதாக திகழ்வது திருமந்திரம். அந்த ரஹஸ்யத்திலும் முதலாக சொல்வது ஓம் என்னும் ப்ரணவம். அந்த ப்ரணவத்திலும் முதல் எழுத்து "அ" என்று சொல்லப்படும் அகாரம்.

நான்காம் வேற்றுமை உருபு - பொருள்

மருளால் மதியின்றி தானே
*அதிபதியென மகிழும் மாந்தர்காள் **
அருளால் விலையின்றி யாவரும்
*அவனடிமை இனி அறிவீர்காள் **
தொடரும் வலையில் தொலையும்
*துன்பம் அவ்வேற்றுமை உருபால்**
புகலும் புனிதன் பணியில் என்றும்
பொருந்தும் பெருநல் வாழ்வால்

(2)

மருள் = அஞ்ஞானம்
அதிபதி = ஸ்வாமி
புகலும் = அடையும்

இந்த பாசுரம் நான்காம் வேறுமையுருபு, சதுர்த்தீ விபக்தியைச் சொல்லுகிறது.

அஞ்ஞானத்தால் சேதனர்கள் தனக்குத் தானே அதிகாரி. தான் சுதந்திரன் என்று அறிவு இழந்து தங்களுடைய ஆத்ம ஸ்வரூபத்தை ஆறியாமல் உழல்கிறார்கள். ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஜீவாத்மா ஸ்வதந்ர ஆத்ம ப்ரமம், சரீர ஆத்ம ப்ரமம் என்னும் இரண்டு பிரமைகளால் உழல்கிறான் என்று ஸாதித்தார். "*த்வம் மே அஹம் மே*" என்று பட்டர் ஸாதித்த ஸ்லோகத்தில் ஜீவாத்மாவும் பரமத்வாவும் உரையாடுவது போல் அமைந்திருப்பதையும் நினைவு கூற வேண்டும்.

உலகில் உள்ள பொருள்கள் அனைத்தும் பகவானுக்கே அடிமை என்ற உணர்வே உயர்ந்த தத்துவம். அதை, அவனுடைய அருளால், இனியாவது தெரிந்து கொள்ளுங்கள். "*இலது ஒன்றுமிலா எல்லாம் தனது எனும் எந்தையுமாய்*" என்றார் ஸ்வாமி தேசிகன் அதிகார ஸங்கரஹத்தில்.

பிறப்பு இறப்பு என்னும் வலையில் அகப்பட்டு தவிக்கும் சேதனர்கள் அகாரத்தின் மேல் உள்ள நாலாம் வேற்றுமை உருபை அறிந்து கொண்டால் துன்பங்கள் தொலையும். புனிதனான எம்பெருமானுக்கு செய்யும் கைங்கர்யமே சிறந்தது என்று அதிலே ஆழ்ந்தால் பெரும் நல்வாழ்வு அடைவார்கள்.

இங்கு விலையின்றி என்றால் அவனுக்கு செய்யும் பணி காசுக்கு செய்யும் வேலைக்காரர்கள் போல் அன்றி உகப்பினால் செய்யும் காரியம். இங்கு சொல்லப்படும். ஸேஷத்வம் பரோபகாரமாவது. அதாவது தனக்கு ஒரு ப்ரதிபலன் என்று எதிர் பார்க்காமல் செய்வது. *"விலையின்றி நாம் அடியோம் என்னும் வேதியர் மெய்ப்பொருளே"* **என்றார் ஸ்வாமி தேசிகன் அதிகார ஸங்கரஹத்தில்.**

பகவானுக்கு செய்யும் கைங்கர்யம் ஆசையால் வந்தது. காசு கொடுத்து செய்யும் வேலைகளைப் போல் இல்லை என்று ஒரே முகமாக நம் ஸம்பிரதாயத்து ஆசாரியர்கள் அனைவரும் ஸாதித்துள்ளார்கள்.

"ஸேஷத்வம் துக்கரூபமாக அன்றோ நாட்டில் காண்கிறது
என்னில் அந்த நியமம் இல்லை.
உகந்த விஷயத்துக்குக் ஸேஷமாய் இருப்பு சுகமாய் காண்கையாலே"

என்று பிள்ளைலோகாசாரியர் முமுக்ஷுப்படியில் திருமந்த்ர ப்ரகரணத்தில் ஸாதித்தார்.

பகவானும் அடியவரின் பக்தி, ஆசை, அன்பு, காதல் என்பதில்தான் மிகவும் பிரியம் கொள்கிறான் என்பதை இராமனுச நூற்றந்தாதியில் *"கண்ணனுக்கே ஆமது காமம்"* **என்று ஸாதித்தார் திருவரங்கத்தமுதனார்.**

உகாரத்தின் பொருள்

*உணரும் கருத்து உரிமை அவனுக்கே எனக் கொண்டு *
இகழும் தெய்வம் இடையில் மற்றவை மீ து பற்றற்று *
புகழும் பரமன் பண்பே பொங்கும் பரிவு என்றே *
மகிழும் மனத்தில் மலரும் மறுமைப் பயனும் அன்றே* (3)

(உகாரத்திற்கு இரண்டு பொருள்கள். இந்த பாசுரம் முதல் அர்த்தம் சொல்கிறது.)

அகாரத்தில் காண்பிக்கப்பட்ட பகவானுக்கே இந்த சேதனன் சொந்தமானவன் என்று நிருபாதிக ஸேஷத்வத்தை (unconditional service) அறிய வேண்டும். பராசர பட்டர் அஷ்டஸ்லோகியில் "*உகாரஸ்ச ஏவகாரார்த்த:*" - உகாரம் ஏவ என்ற சொல்லின் பொருளைக் கொண்டது என்றார்.

இதனால் மற்றொன்றின் ஸம்பந்தத்தை அடியோடு மறுக்கிறது. முதலில் இதர தெய்வங்களை தொழுவதோ, மற்றைய நிலையற்ற பொருள்களில் ஆசைகளை வைப்பதோ அறவே தவிர்க்க வேண்டும். "*மறந்தும் புறந்தொழா மாந்தர்*" என்ற ஆழ்வாரின் வாக்கின்படி நடக்க வேண்டும்.

பகவானின் கல்யாண குணங்களால்தான் நாம் அவனை அணுக முடிகிறது. நாம் செய்திருக்கும் பாபக்குவியல்களை ஒரு நிமிஷம் நினைத்துப் பார்த்தால் அவை நம்மை அலறச் செய்யும்.

தம்முடைய மனத்தால் எம்பெருமானை எப்பொழுதும் புகழ்ந்து அவனை வாழ்த்தினால் அவன் மனம் மகிழ்ந்து அருள் சுரப்பான். பகவானின் ஸத்குணங்களில் இந்த பரிவே (கருணை, தயை) மிகவும் உயர்ந்தது என்று நம்முடைய ஆசாரியர்கள் எல்லாரும் ஒரே முகமாக ஸாதிக்கிறார்கள்.

"*ப்ரபத்யே தம் கிரிம் ப்ராய*"

என்று தூப்புல் வள்ளலின் வாக்கின்படி பகவானின் தயை என்ற குணத்தை நாடி அவனிடம் சரணாகதி செய்தால் எல்லாவிதமான நல்ல பயன்களும் சேதனனை வந்தடையும் அன்றைக்கே. (மறுமைப் பயன் என்பது மோக்ஷம்)

உகாரத்தின் மற்றொரு பொருள்

*உறவாய் அதன்பின் நின்று அலர்மகள் அவனியை காக்க *
அறிவாய் மூவெழுத்து மறையும் அதையே ஆறாய் சேர்க்க *
பிரியாய் பரிதியும் ஒளியுமென புரியும் அவர்தம் அருளே *
அகவாய் இது ஒன்றேயென அடையும் பரம் பொருளே*

(4)

அவனி = உலகம்;
மூவெழுத்து = ப்ரணவம்,
அகவாய் = தாத்பர்யம்;
பரிதி = சூரியன்

இந்த பாசுரம் உகாரத்திற்கு இரண்டாம் அர்த்தமாகிய லக்ஷ்மி ஸம்பந்தத்தை சொல்கிறது

"அகாரார்த்தோ விஷ்ணு:" **என்கிற அகாரமாகிய எழுத்து எம்பெருமானை சொல்கிறது. .அந்த அகாரதிற்கு பின், பிராட்டி** *"அகலகில்லேன் என்றும்"* **உகாரமாய் நின்று இந்த உலகத்தை எல்லாம் காக்கிறாள். இந்த ஆழ்ந்த கருத்தைத்தான், பகவான், பிராட்டி இருவரும் உபாயம் என்பதை மூன்றெழுத்து மந்திரமாகிய ஓம் என்கிற ப்ரணவமும் சொல்கிறது.**

சூரியனும் ஒளியும் எப்படி என்றும் பிரியாமல் ஒன்று சேர்ந்து இருக்குமோ, அதுபோல் பகவானும், பிராட்டியும் என்கிற இரண்டும் ஒன்றாகிய மிதுனம், அவர்களுடைய அருளே எல்லோராலும் அடைய வேண்டிய பரம் பொருள் என்பது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் தாத்பர்யம்.

நம்மாழ்வார் திருவாய்மொழியில் சாதித்த *"அணைவது அரவணைமேல்"* **என்கிற பாசுரத்தில்** *"இருவர் அவர் முதலும் தானே"* **என்றார்.**

"த்வயத்தில் போலே ஸர்வ ரக்ஷண தீக்ஷிதனான ஸர்வ சேஷியினுடைய ஸஹதர்ம சாரிணீ ஸம்பந்தமும் இங்கே அநுஸந்தேயம்"

என்று ஸ்வாமி தேசிகன் ஸார ஸாரத்தில் உகாரத்திற்கு வியாக்கியானம் செய்தார்.

"ரக்ஷிக்கும்போது பிராட்டி ஸந்நதி வேண்டுகையாலே

இதிலே ஸ்ரீ ஸம்பந்தம் அனுஸந்தேயம்”

என்று பிள்ளைலோகாசாரியர் முமுக்ஷுப்படியில் ஸாதித்தார்.

மகாரத்தின் பொருள்

*மாறாகி நிற்கும் சித்து இருபத்துநாலு தத்துவம் அத்தோடு *
வேராகி வியக்கும் தனிஇறை தரும் மிக்க இன்பத்தோடு *
உனக்கே உயிரெனும் உணர்வால் உயரும் பக்குவத்தோடு *
தனக்கே திகழும் உடலை தவிர்க்கும் தனித் தவத்தோடு*

(5)

இந்த பாசுரம் மகாரத்திற்கு அர்த்தம் சொல்கிறது. "*மகாரம் ஜீவபூதம்து*" என்கிறது ஸ்ருதி.

மொத்தம் 24 அசேதன தத்துவங்கள், அதைத் தவிர 25ஆக இருக்கும் ஜீவாத்மா. பிறகு 26 தத்துவமாக இருக்கும் ஆச்சரியமான பரமாத்மா, மூலமாக, ஆணி வேராக, தனிப் பெரும் ஜோதியாய் இருந்து என்றும் நிறையும் இன்பத்தை அளிக்கிறான். (3 elements - sentinent, nonsentinent and God or God, man and nature)

எப்பொழுது என்றால்? தம் சரீரமே ஆத்மா என்கிற எண்ணத்தை ஒழிக்கும் பெரிய தவத்தை செய்து (தனித்தவம் = பக்தி, ப்ரபத்தி), ஜீவஸ்வரூபனாகிய தன் ஆத்மா எம்பெருமானுக்கே அடிமையானது என்கிற சிறந்த பக்குவமான அறிவை அடைந்து உயர்ந்த நிலையை அடைவார்கள்.

ஆக அகாரத்தினால் சொல்லப்பட்ட ஸ்ரீமந் நாராயணனுக்கே மகாரத்தால் சொல்லப்பட்ட சேதனன் அடிமையாய் இருக்கிறான் என்று பொருள். பகவானின் மகிழ்ச்சியே தனக்கு பலனாக கொண்டவன். சேதனன் அநந்ய ப்ரயோஜனன். அதாவது பகவானுக்கு உண்டாகும் பயன் தவிர தனக்கு ஒருவித பலனும் இல்லை என்பதை காட்டுகிறது.

மந்த்ர ராஜபத ஸ்தோத்திரத்தில் "*தாஸ பூதா: ஸ்வத ஸர்வே:*" என்கிற ஸ்லோகத்தில் ப்ரபஞ்சத்தில் உள்ள ஆத்மாக்கள் எல்லாம் இயற்கையிலேயே உனக்கு அடிமைகள் அல்லவா? என்று துதிக்கிறார். சிவபிரான்.

"*அக்ரத: ப்ரயயௌ ராம:*"

என்கிற ராமாயண ஸ்லோகம் அழகாக அகார, உகார, மகாரத்தைக் காட்டுகிறது

"*அகாரார்த்தாயைவ ஸ்வமஹமத மஹ்யம் ந நிவாஹா*"

என்று பராசர பட்டர் அஷ்டஸ்லோகியில் அருளினார்.

ஆளவந்தாரும் ஸ்தோத்ர ரத்னத்தில் *"மம நாத யதஸ்தி"* **என்ற ஸ்லோகத்தில் அருளினார்.**

நம: எனும் பதத்தின் பொருள்

மயங்கும்நிலை தானேயிறை தனதேயிவையெனும்
*குறுமதியே **
உகக்கும் உடலும் உம்முயிரும் அவ்வுத்தமன் உயிரின்
*உடலே **
விளங்கும் பொருள் அனத்தும் அவனுடையென
*அறிந்தால் **
விதிர்க்கும் வினைகள் விலகும் வணங்கும் நமயென
பதத்தால்

(6)

நம பதம் அநந்ய ப்ரணத்வத்தை குறிக்கிறது என்பர் முன்னோர்.

இந்த பாசுரம் *நம:* எனும் பதத்திற்கு அர்த்தம் சொல்கிறது. ந, ம: என்று இரண்டு பதங்கள். *ந* என்றால் இல்லை, *ம* என்றால் மகாரத்தால் விளக்கிய சேதனன்.

ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் சாதிக்கும்போது இந்த இரண்டின் நடுவில் *கிஞ்சித் அல்லது ஸ்வாதந்த்ர்யம்* என்ற சொல்லை சேர்த்து கொண்டால் அர்த்தம் நன்கு விளங்கும் என்றார். "இல்லை துளிக்கூட என்னுடையது" (Nothing is mine), "இல்லை ஸ்வாதந்த்ர்யம் எனக்கு"(I have no independence) என்பது பொருள்.

அஞ்ஞானத்தால் (ignornance of knowledge) சேதனன் தன் ஸ்வரூப நிலையை (essential nature of the soul) மறந்து இரண்டு மயக்கத்தில் கிடக்கிறான் (1) எல்லாம் தனக்கு ஸேஷமே (2) தான் ஸ்வதந்த்ரன். இந்த இரண்டும் முதல் வரியில் - *தனதே இவை, தானே இறை* என்ற பதங்களால் சொல்லப் பட்டது.

அவ்வாறு சேதனன் அனுபவித்து மகிழும் அவன் உடலும், அதனுள் இருக்கும் அவனுடைய உயிரும் உத்தமனாகிய பரமாத்மாவின் உயிருக்கு உடலாக ஆகின்றன. இதுதான் ப்ரதான ப்ரதி தந்த்ரம் என்று ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஸாதிக்கிறார்.

எப்பொழுது, உண்மையில் எல்லா பொருள்களுக்கும் பகவான்தான் அதிகாரி, அவைகளை உடையவன் எம்பெருமான் என்கிற தத்துவத்தை அறிந்து *நம:* **என்ற பதத்தால் எதுவும் தன்னுடையதில்லை என்று ஸ்ரீமந் நாராயணனை வணங்கினால், நடுநடுங்கி பயமெடுக்கும் பாபங்கள் எல்லாம் விலகும்.**

இங்கு *நம:* **என்பதில் சேதனன் தனக்கு உரியவன் அல்லன், பகவானுக்கே உரியவன் என்று காட்டப் பட்டது. அதனால் பகவான் அவனுக்கு காட்டும் உபாயமாக ஆகிறான். அநந்யசரணன். அதாவது பகவானைத் தவிர மற்றோர் உபாயம் இல்லாதவன் என்பதைச் சொல்லுகிறது.**

ஸ்ரீபாஷ்யம் லகு ஸித்தாந்தத்தில், *"அவித்யை நீங்குவதன்றோ மோக்ஷம்"* **என்கிறது. என்றார்**

> *"இந்த நமஸ்ஸீதான் ப்ரணவத்திற்கும் நாராயண பதத்திற்கும் நடுவே கிடக்கையாலே இரண்டு பதத்திற்கும் அபேக்ஷிதமான விரோதி நிவ்ருத்தியை சொல்லுகிறது."*

என்று பிள்ளலோகாசாரியர் பரந்த படியில் அருளினார். ஸ்வரூப, உபாய, ப்ராப்ய விரோதிகள்

நார சப்தத்தின் பொருள்

*அழியா அத்தன் அருளால் மறையா பல்லுயிர் பகலவன்போல் *
வழுவா மாயக்கூத்தன் மேய்ப்பான் அவனடி தலை சேர்த்தால் *
திருமாலே ஆக்கியளித்து அணைக்கும் உன்திருக் குணத்தாலே *
தருவாயே உய்வு உம்மைநழுவா நார என்னும் திருவாக்காலே*

(7)

அத்தன் = தந்தை
பல்லுயிர் = சேதனங்கள்
பகலவன் = சூரியன்
உய்வு = உஜ்ஜீவனம்

நார **பதத்திற்கு இரண்டு பொருள்கள் என்று முன்னோர் அறிவித்தனர்.**

முதல் விளக்கம். *நர* **என்று இரண்டு எழுத்துக்கள் நார என்ற பதத்தில் உள்ளது.** *ரீ* **என்பதிலிருந்து வந்தது** *ர. ரீ* **என்றால் அழிதல்.** *நர* **என்றால் இல்லை அழிவு என்று பொருள். அதனால்** *நர* **என்றால் அழியாதவன் (imperishable) என்று பொருள். அது விஷ்ணுவை சொல்லும். நரனிடமிருந்து தோன்றியவை எல்லாம் நாரங்கள் எனப்படும். எல்லா சேதன, அசேதன வஸ்துக்களின் கூட்டம் நாரங்கள். அழிவில்லாத ஈசுவரன் அழிவில்லா எல்லா சேதனங்களுக்கும் தந்தையாய் இருந்து அவர்களின் ஆத்ம ஞானத்தை சூரியன் போல் பிரகாசிக்க செய்கிறான். (self-luminous) இந்த முதல் கருத்து ஆரம்ப வரியில் சொல்லப் பட்டது.**

இரண்டாம் விளக்கம். *நர* **என்னும் பதம்** *நிரு* **என்ற வினைப்பகுதியிலிருந்து வருகிறது. எல்லா ஜீவராசிகளையும் நல்ல வழியில் செலுத்துபவன் என்று பொருள். இது இரண்டாம் கருத்து.** *மாயக் கூத்தன் மேய்ப்பான்* **என்று இரண்டாவது வரியில் சொல்லப்பட்டது.**

எம்பெருமானே!, நீ பிராட்டியுடன் கூடி இப்பிரபஞ்சத்திற்கு ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார காரணங்களாக நிற்கிறாய். நாராயண சப்தத்தில் அயனத்தை பிரியாமல் ஒரு பகுதியாய் உள்ள நர பதத்தை அனுஸந்திப்பவர்களுக்கு உன்னுடைய கல்யாண குணங்களால் நல்ல கதியை அளிக்கிறாய்.

"ஜஹ்நுர் நாராயணோ நர:" என்பதால் நர சப்தத்தாலும்,
நாராயணன் தன்னையே சொல்லுகிறது"

ஸ்வாமி தேசிகன் ஸார ஸாரத்தில் ஸாதித்தார்.

"*புருஷகார பலத்தாலே ஸ்வாதந்த்ர்யம் தலை சாய்ந்தால்*
தலை எடுக்கும் குணங்களை சொல்லுவது நாராயண பதம்"
பிள்ளைலோகாச்சாரியர் முமுக்ஷுப்படியில் ஸாதித்தார்.

அயந சப்தத்தின் பொருள்

நெறியாய் அடையும் குறியாய்
அடியுரை கூற்றில் ஆதாரமாய் *
நிலையாய் உள்புகுந்தாய் அமலனாய்
அலகிலா அருங்குணத்தாய் *
இருப்பாய் அவைகளின் அனைத்து
உறவாய் மற்றும் உள்ளுறைவாய் *
நிறைவாய் மறைசுரந்து உரைப்பர்
கழலைப் பணிவோர் விருப்பாய்

(8)

நெறி = உபாயம்,
குறி = புருஷார்த்தம்,
அடியுரை கூற்று = வேதம்
அலகிலா = அளவில்லாத
கழல் = திருவடி

அயநம் என்பது இங்கு பகவானுக்கும் ஜீவனுக்கும் உள்ள தொடர்பை முன்று விதமாக குறிக்கும் என்று ஸ்வாமி தேசிகன் ஸாதித்திருக்கிறார்.

1 **ஆதாரம். (அநந்யதாரன்)**
   - **பகவானைத்தவிர சேதனனுக்கு வேறு ஒரு ஆதாரமும் இல்லை. (Support)**
   - **ஆதாரமாய் என்கிற பதம் இதைச் சொல்லுகிறது.**

2 **பலன், (அநந்ய ப்ரயோஜனன்)**
   - **பகவானுக்கு உண்டாகும் பயன் தவிர தனக்கு ஒருவித பலனும் இல்லை (Use)**
   - **அடையும் குறியாய் எனபது பலனைக் காடுகிறது.**

3 **உபாயம் (அநந்ய ஶரணன்).**
   - **பகவானைத் தவிர மற்றோர் உபாயம் இல்லாதவன். (Means).**
   - **நெறியாய் என்பது இங்கே உபாயங்களைச் சொன்னது.**

நாராயண பதத்திற்கு முக்கியமாக இரண்டு பொருள்களை நம் ஆசாரியர்கள் ஸாதித்தனர்.

1. நாராயண என்பது நாராணாம் அயநம்.
    - இது ஆறாம் வேற்றுமைத் தொகை, தத்புருஷ ஸமாஸம் என்பர்.
    - நாரங்களுக்கு அயநமாய் இருப்பவன். (Narayana is the support or basis for all)
    - நாரமாகிய சேதன சமூகத்திற்கு, எம்பெருமான், தாங்கும் ஆதாரமாய் இருக்கிறான் என்று புலப்படும்.
    - இதனால் சேதனன் அநந்யதாரன் என்பது காட்டப்பட்டது.
    - ப்ரணவத்தில் அநந்ய ப்ரயோஜனத்துவம், நம: பதத்தில் அநந்ய ஶரணத்வம் இவைகளை ஏற்கனவே பார்த்தோம்.

2. நாராயண என்பது நார: அயநம் யஸ்ய: ஸ
    - இது அன்மொழித்தொகை, பஹுவ்ரீஹி ஸமாஸம் என்பர்.
    - நாரங்களை அயனமாக உடையவன், ப்ரவேசிக்கப்படும் பொருளாக கொள்பவன். (Narayana is present inside all entities)
    - இது இரண்டாம் வரியில் சொல்லப்படுகிறது.
    - எப்பொழுதும் சீராக சேதன வஸ்துக்கள் எல்லாவற்றிலும் புகுந்து ஆளவில்லாத ஞானத்துடன், சேதனனுடைய தோஷங்கள் ஒன்றும் ஒட்டாமல் இருக்கிறான்.

அயனம் என்றால் வாசஸ்தலம் என்றும் பொருள்.

1. முதல் ஸமாஸத்தால், சேதன, அசேதன வஸ்துக்களுக்கு (அயனமானவன்) இருப்பிடமானவன் என்பதால் பஹிர் வ்யாப்தி (Narayana pervades and supports everything) சொல்லப் பட்டது.

2. இரண்டாம் ஸமாஸத்தால், சேதனா சேதனங்களை இருப்பிடமாக கொண்டவன் என்ற பொருளில் அந்தர் வ்யாப்தி (Narayana is present inside and owns and controls everything) யைச் சொல்லப்பட்டது.

இந்த இரண்டும் மூன்றாவது வரியில் அவைகளுக்கு இருப்பிடமாகவும், நீ கலந்து அதனுள் இருப்பாய் என்று காண்பிக்கப்பட்டது.

பகவான் நாராயணன்தான் பரப்ரம்மம் (Supreme) என்பதை நம் முன்னோர்கள் வேதங்களை ப்ரமாணமாக (authority) கொண்டு இரண்டு காரணங்களால் நிரூபிக்கிறார்கள்.

1. **அநந்த கல்யாணகுணாகரத்வம்**
   - **கணக்கற்ற திவ்ய மங்களகரமான திருக்கல்யாண குணங்கள்**
   - (infinite divine qualities)
   - *அலகிலா அருங்குணத்தாய்* **என்ற பதத்தால் இது சொல்லப் பட்டது**

2. *அகில ஹேய ப்ரத்யநீகத்வம்*
   - **எல்லாப் பொருள்களிலும் பரந்து வியாபித்து இருந்தாலும் அவைகளின் குறைகள் இவனைச் சாராது இருப்பது**
   - **(present in all animate and inamimate things but not flawed by their impurities).**
   - *அமலனாய்* **என்ற பதத்தால் சொல்லப் பட்டது.**

ஆசாரியர்கள் தம்முடைய திருவடிகளை அடைந்தவர்களுக்கு இப்படி எங்கும் பரந்து நிற்கும் எம்பெருமானை வேதங்களின் தத்துவங்கள் மூலமாக உபதேசிக்கின்றனர். அவர்கள் உபதேசம் பசு தன் கன்றிற்கு பால் சுரப்பதுபோல் உள்ளது.

எம்பெருமானார் வேதார்த்த ஸங்க்ரஹத்தில் *"ப்ருதக் ஸித்தி அநார்ஹ ஆதார ஆதேய பாவா: நியாந்த நியாம்ய பாவா: ஸேஷ ஸேஷி பாவாஞ்ச"* **என்று ஸாதித்ததை பார்க்கவும். (Supports, Contols and Owns)**

ஆய சப்தத்தின் பொருள்

*தீவினையால் திருமாலின் சேவை திறவே மறந்தினரே *
ஊழ்வினையால் சன்மம் பலவென புவியில் உழன்றினரே *
நல்லோர் நல்கிய நாரணன்மேல் நாலாம் வேற்றுமையே *
ஆயகாட்டும் அவன் பணியே தூய நிலை என பற்றினரே.*

(9)

ஆய என்னும் பதம் நாராயண பதத்தின் மேல் நான்காம் வேற்றுமை உருபாய் கைங்கர்யத்தை காட்டுகிறது.

சேதனர்கள் தாங்கள் செய்த பாபங்களால் (sins) பகவானின் சேவையை மறந்து பல ஜன்மங்களாக இந்த பூமியில் துக்கத்தை அனுபவிக்கிறார்கள். ஸகல சாஸ்திரங்களையும் நன்கு கற்றுணர்ந்த ஆசாரியர்கள் இதை நமக்கு காட்டிக் கொடுக்க, நாம் அதை அறிந்து எம்பெருமானின் கைங்கர்யமாகிற பணியையே உயர்ந்த புருஷார்த்தம் என்று உணர்ந்து என்றும் செய்ய வேண்டும். தீவினை, ஊழ்வினை என்கிற பதங்கள் *ஸஞ்சிதம், ப்ராரப்தம்* **என்கிற இருவித பாவக் குவியல்களை காட்டுகிறது.**

"அவிபாகேந த்ருஷ்டத்வாத்"

என்கிற ப்ரம்ம சூத்திரத்தை இங்கு அனுஸந்திக்க வேண்டும். தூய நிலை என்பது - முக்தி அடைந்து ஆவிர்பவித்த ஸ்வரூபத்தை உடைய ஜீவன் தன்னை ப்ரமாத்மாவின் சரீரமாக அனுபவிக்கிறான்

*அநேக ஜந்மநாந்தே ஸம்ஸார சிதே பாபஸ்முச்சயே.
நாக்ஷிணே ஜாயதே பும்ஸாம் கோவிந்தாபிமுகீ ஸ்த்திதி:*

ஸ்வாமி தேசிகன் *விரோதி பரிகாரத்தில்* **காண்பிக்கும் ஸ்லோகம் - (அநேக ஜன்மங்களில் சேர்க்கப் பட்ட பாபங்களின் கூட்டம் நாசம் அடையாமல் இருக்கும்போது சேதனனுக்கு பகவானிடத்தில் மனம் செல்லுவதில்லை). அதிகாரி விசேஷத்தினுடைய துர்லபத்தையை சொல்கிறது என்கிறார்.**

*ஸம்ஸாரிகள் தங்களையும், ஈசுவ்ரனையும் மறந்து
ஈசுவர கைங்கர்யத்தை இழந்து,*

இழந்தோம் என்கிற இழவுமின்றிக்கே
ஸ்மாஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபட”

என்று பிள்ளலோகாசாரியர் முமுக்ஷுப்படியில் திருமந்த்ர ப்ரகரணத்தில் ஸாதித்தார்.

பலன்

*எட்டில் கண்ட கருத்தை எட்ட வொண்ணாத இடத்தை **
*பாட்டில் பாவலர் பகன்ற எட்டும் ஒன்றான மறைநிதியை **
*நம் நிலையில் நிலையை நிலையால் நிலையாக பற்றவே **
தம் நிலையில் நிலையை நிலையால் நிலையாகத் தருவரே
(10)

திருமந்திரம் என்கிற அஷ்டாக்ஷரத்தில் உள்ள நுட்பமான கருத்துக்களை நம்முடைய ஆழ்வார்கள், ஆசாரியர்கள் சுலபமாக பாட்டின் வடிவில் எடுத்துக் காட்டினார்கள்.

எட்டும் ஒன்றும் ஆக ஒன்பது பொருளாக வேதார்த்தங்களின் சாரமாக பெரியோர்கள் தந்தார்கள், மேலே சொன்ன ஒன்பது பாசுரங்களின் பொருள் வழியாக எனக் கொள்ளலாம்.

இங்கு எட்டும் ஒன்றான பொருள் என்பதை எட்டு எழுத்துகளாக அஷ்டாக்ஷரத்தில் சொல்லும் பொருள் ஒன்றே ஒன்று என்றும் கொள்ளலாம்.. அந்த ஒரே பொருள் "நிலை".

அதனால் நம்மால் அடைய முடியாத இடத்தில் இருக்கும் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அடைய

1. **நிலையில் -- இழிந்த நிலைமையில் உள்ள நாம்**
2. **நிலையை -- முதலில் நம் ஸ்வரூபத்தை அறிந்து**
3. **நிலையால் -- நமக்குரிய அனுஷ்டானத்தை பின்பற்றி**
4. **நிலையாக -- பகவானை அடைவதற்கு தகுந்த உபாயம் என்று ஆசாரியர்கள் காட்டிய வழியில் அவைகளைச் செய்ய,**

பகவான் தானும்

1. **நிலையில் -- தன் உயர்ந்த ஸதானத்தில் நின்று**
2. **நிலையை -- நமக்கு அரிய பேறாகிய கைங்கர்யத்தை**
3. **நிலையால் - தம் அளவிடமுடியாத கல்யாண குணங்களால்**
4. **நிலையாக -- உறுதியாகத் தருவார் என்பதே உண்மை.**

நிலை என்றால் ஸ்திரம். (stable, firm, secured, unwavering). பகவத் பக்திதான் ஸ்திரம் என்ற ஒரே கருத்து.

ஸ்ருதி, ஸ்மிருதி, இதிஹாஸங்கள், புராணங்கள், ஆசாரியர்கள் அருளிய ஸ்ரீ சூக்திகள் இவைகளே பகவானை அடைவதற்கு உயர்ந்த வழியாகும். எம்பெருமானை போற்றி புகழ்ந்து வாழ்வதே சிறந்த பலன் என்பது ஸ்திரமான கருத்து.

Appendix – C

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஆதிவண் ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மிந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக
ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீநாராயண யதீந்த்ர மஹாதேசிகாய நம:

உகத்தின் சுகம்

(த்வயம் திவ்யம்)

ஒதுமிரண்டை இணைத்து தன்
பாதம் இரண்டால் அணைத்து
போதுமென மீட்டிக் கடலில்
வாழுமெனருளினான் தம்சேவைக்கே. **1 (தோற்றம்)**

ஆறும் பேறும் வேறின்றி அவ்
வடியவர் அனைவரும் தமரின்றி
விண்ணும் மண்ணும் பணிசெய்ய
பன்னும் இவ்விரண்டும் திண்ணமே. **2 (காரணம்)**

திருவும் அடிகளும் திறம்பட
எட்டும் தட்டும் விட நவின்றிட
அரங்கன் ஏவ தரத்துடன் இயம்ப
வள்ளல் வழியில் விண்ணப்பம் இன்றே. **3 (சிறப்பு)**

சேர்க்குந் திருமகள் சேர்த்தியின் மன்னுதல்
காக்கும் குணங்கள் கருணை அடிகள்
அடையும் புகல் அதுலே பற்றுதல்
இயலா நிலையில் எமக்கின்ற பேறு
ஏற்கும் எல்லைகள் அறுக்கும் களைகள்
முன்னோர் பத்தும் மறையவர் நிதிகள். **4 (பொருள்)**

திருமகள் கேட்டு அவனை கேட்பித்து
தன் அடியாரடைய தான் அடைந்து
குறைநீக்கி நிறையாக்கித் துறையென
பறை நோக்க நம்மிறையின் மறையே. **5 (ஸ்ரீ)**

தன்னிச்சையில் தரித்து ஏவித்தான் முதல்வனாய்
உயர்ந்து உறங்கி உலாவி உறைந்து உகப்பாய்

நம்மிழுக்கால் மன்னியுறையும் மாமலராள் திரு
உரத்தில் அவனைத் தினையளவும் அகலாள். 6 (மத்)

ஆதியாய் உடலில் உயிராய் மாசிலா சோதியாய்
பதியாய் இறையாய் கதியாய் அகலா உறவாய்
அனைத்துக் காரணமாய், காரியமாய் நாம் ஏத்தும்
ஆரணத்தில் திருநாரணன் நற்குணங்கள் பூரணமே 7 (நாரயண)

ஒன்றாய் நாலாய் பத்தாய் நின்றாய்
உள்ளாய் என்னுள் யானும் உனதாய்
எந்தாய் எங்கும் என்றும் மன்னியே
தந்தாய் இணையடிகளெம் இதயத்திலே. 8 (சரணௌ)

உன்னித்து மற்றொரு தெய்வம் தொழும்
தொல்வினை தீர்க்கும் என் இறையே
மன்னித்து அருளும் சீமாதவன் மலரடிகள்
மருவ மற்றொன்று இன்றி நிறைவே. 9 (ஸரணம்)

உறுமதியில் உத்தமனையே உகந்தாரும்
மறுகதியின்றி மாவீரனைத் தொழுதாரும்
அரியென சக்கரத்தானை சார்ந்தாரும்
நெறியென ஒன்றே இன்றே பற்றினரே. 10 (ப்ரபத்)

முயலாத மூன்றில் இனம் மயங்க
இயலாத நிலையுள் மனம் ததும்ப
முத்திக்கு வழி சரண் ஒன்றெனென
தித்திக்கும் முகுந்தன் திண் கழலே. 11 (யே)

ஒட்டாது மாசில் உயிராய் தரிக்கும்
தட்டாது கோதில கோவிந்தனளிக்கும்
தகவாது கழிந்த காலமும் தகர்க்கும் இனி
பிரியாது கேசவன் பணியில் கிடக்கும் 12 (ஸ்ரீமதே நாரயண)

ஆவேனென அறிந்தாரும் மாளா
அடிமை என புகுந்தாரும் ஆவி
அரிமுகனுக்கே தந்து இருந்தாரும்
தேடி அடைவது உகத்தின் சுகமே. 13 (ஆய)

ஒழிந்தது யான் எனது எனக்கே

மகிழ்ந்தது மனம் அதுவும் உமக்கே. 14 (நம:)

நல்வழி ஏற்று அல்வழி துறந்து
துணிவில் நிலைத்து காவலில் வரித்து
அழியா உறவில் புகலின்றி தாளில்
தஞ்சம் இறைஞ்சும் எந்தன் நெஞ்சமே 15 (ப்ரபத்தி முறை)

திருமகள் தனியா நாரணன்
இணையடிகள் சரணென பற்றவே
திருமால் சேவை தமக்கின்றியென
நல்வாழ்ச்சி பெற்றனரே. 16
(தமிழாக்கம்)

பணிந்தே என் உள்ளம் உரை உடலால்
மறைந்தே மறக்கும் பற்பிறவி மறங்கள்
தணிந்தே ஆவியகல மாயனை அத்துன்பம்
விரைந்தே காட்டும் வைகுந்தன் வீட்டின்பம். 17 (பலன்)

Appendix – D

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஆதிவண் ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மிந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக
ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீநாராயண யதீந்த்ர மஹாதேசிகாய நம:

இறுதியின் சுருதி

(சரம ஸ்லோகம்)

விஷயச் சுருக்கம்

பகவான் ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனக்கு சாரதியாய் நின்று பகவத் கீதை மூலமாக கர்ம, ஞான, பக்தி யோகங்களின் ஆழ்ந்த கருத்துக்களையும் மோக்ஷத்திற்கு அவை சாதனமாக அமைவதையும் உபதேசித்தான்.

அதைக் கேட்ட விஜயன் அவற்றை தான் செய்ய இயலா நிலமை உணர்ந்து வருந்தினான். பகவான் அவனை சாக்காக (வ்யாஜமாக) கொண்டு ப்ரபத்தி என்னும் உயர்ந்த உபாயத்தை விளக்குகிறார். ப்ரபத்தி மற்ற யோகங்கபைப் போல் இல்லாமல் சரணடைபவர் எப்பொழுது மோக்ஷம் வேண்டும் என்று கேட்கிறார்களோ அப்பொழுதுதே மோக்ஷம் கிடைக்கும்படி செய்யும் உபாயம்.

இந்த ப்ரபத்தியை விதிக்கும் ஸ்லோகமே சரம ஸ்லோகம். இது பகவத்கீதையின் ஸாரமாகவும், விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தில் சிறப்பித்து சொல்லப்படும் ரகசியங்களில் மூன்றாவதாகவும் அனுஸந்திக்கப்படுகிறது.

பத்து பாசுரங்களால் சரம ஸ்லோகத்தின் பத்து பாகத்திற்கும் (1. ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய, 2. மாம், 3. ஏகம், 4. ஸரணம், 5. வ்ரஜ:, 6. அஹம், 7. த்வா, 8. ஸர்வ பாபேப்யோ, 9. மோக்ஷயிஷ்யாமி, 10. மாசுச:) விளக்கம் சொல்லப்படுள்ளது.

பதினொன்றாவதாக, கடைசி பாசுரம் ப்ரபத்தியின் பெருமையை பேசி பலனைக் கூறி முடிக்கிறது

ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய - பொருள்

இயலா நிலையால் மனமிகழ்ந்து
அத்தால் மற்றை நாடாது
முயலா நெறியை முறித்து
நெஞ்சம் வேறங்கம் தேடாது
மலையாது மற்று பற்றற்று
கலவாது வழிநின்று கலங்காது
அழியாது ஆசிரியன் இயம்பினனே
இகழாது மறையென இவ்வாறு

(1)

பதவுரை

இயலா நிலையால் = தன்னால் ஒரு உபாயமும் செய்ய முடியாத நிலை
அத்தால் = அதனால்
மனமிகழ்ந்து = மனம் வருத்தப்பட்டு
முயலா நெறியை = நிறைவேற்றமுடியாத மற்ற சாதனங்களை
முறித்து = எல்லாம் தகர்த்து எறிந்து
நெஞ்சம் = மனம்
மலையாது = வியந்து, நிலை குலையாமல்
மற்றை நாடாது = வேறு உபாயங்களை பின்பற்றாது
வேறங்கம் = ப்ரபத்திக்கு தேவையான அங்கம தவிர வேறு ஒரு உருப்பு
தேடாது = தேவை என்று தேடிப் பார்க்காமல்
மற்று பற்றற்று = உலக விஷயங்களில் உள்ள பற்றை நீக்கி
கலவாது = சந்தேகப்பட்டு வேறு ஒரு உபாயத்தை இத்துடன் கலக்காமல்
கலங்காது = மனம் அதைரியப்படாமல், மஹா விசுவாசத்துடன்
வழிநின்று என்று = ப்ரபத்தி என்னும் உபாயம் வழி நடப்பாயாக
மறை ஆசிரியன் = கீதாசாரியனான கிருஷ்ணன்
இகழாது = நம்மிடம் உள்ள குறைகளைக் கண்டு வெறுக்காமல்
இவ்வாறு = இவ்விதம்
அழியாது = என்றும் நிலைத்து நிற்கும் கருத்துக்களை
இயம்பினனே = உபதேசித்தான்

விளக்கம்

ஸர்வ தர்மாந் என்ற தொடருக்கு (phrase) எல்லா உபாயங்களையும் விட்டு (discarding all kinds of means) என்று அர்த்தம். தர்மாந் என்று பஹீவசனத்தில் (plural) கூறியது பலவிதமான தர்மங்களை என்று குறிக்கிறது. சாதாரணமாக, உலக வாழ்க்கையில் தர்மம் என்பது ஏதாவது பலனை எண்ணித்தான் செய்கிறோம். இருந்தாலும் இங்கு மோக்ஷ பலனுக்காக செய்யும் தர்மம் என்கிற பக்தி யோகத்தையும் அதன் அங்கங்களையும் சொல்லுகிறது என்பர் முன்னோர்.

ஸ்வாமி தேசிகன் "ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய" என்பதற்கு ஆறு அர்த்தங்கள் என்று ஸாதிக்கிறார் சரமச் சுருக்கு என்னும் தமிழ் பிரபந்தத்தில்.

1. **அநந்ய கதித்வம் - (இயலா நிலையில் மனம் இகழ்ந்து)**
    - **பக்தி யோகம் போன்றவை செய்ய தகுதியில்லாமை**
    - **மற்றைய உபாயங்களின் பலனுக்காக காலம் பொறுக்க முடியாமை**

2. **ஆகிஞ்சன்யம் - (மற்றை நாடாது)**
    - **வேறு உபாயத்தை நாடாது என்கிற ஆகிஞ்சன்யம் (கார்ப்பண்யம்)**
    - **பரப்த்திக்கு முக்கியமான தகுதி - மற்ற சாதனங்களை கைவிடுதல்**

3. **பூர்த்தி - (வேறு அங்கம் தேடாது)**
    - **ப்ரபத்தி ஒன்றே போதும் எல்லா பலன்களையும் தருவதற்கு**
    - **ப்ரபத்திக்கு உரிய அங்கங்கள் தவிர மற்ற ஒன்றும் தேவையில்லை**

4. **வேண்டாத வீண் முயற்சி விடுதல் - (நெஞ்சம் முயலா நெறியை முறித்து)**
    - **முடியாத காரியங்களில் முயற்சியைத் தடுத்தல்**

5. **மற்ற உபாயங்களை விலக்குதல் - (மலையாது வேறு பற்று அற்று)**
    - **முடியாத காரியங்களில் ஆசையை அறவே ஒழித்தல். சரி கொஞ்சம் முயன்று பார்ப்போமே என்று மற்ற யோகங்களில் சிறிது செய்வது என்பது போல்**

6. **மஹா விசுவாசம் ("கலங்காது, கலவாது வழி நின்று)**
    - **சந்தேகத்தால் மற்ற உபாயங்களை கலந்து செய்வதை விட்டு**
    - **ப்ரபத்திக்கு back-up என்று மற்றொன்றை நினப்பது தவறு.**

என்று அழியாத வேதங்களின் ஆதி குருவான பகவான், பார்த்தசாரதி, நம் இயலாத நிலமையைக் கண்டு நம்மேல் வெறுப்பு கொள்ளாமல், இந்த வழியை

(ப்ரபத்தியை) அருளினான். "நரஸ்ய புத்திதௌர்பல்யாத் உபாயந்தரம் இஷ்யதே" என்ற லக்ஷ்மி தந்த்ரம் ஸ்லோகம் இதையே வலியுறுத்துகிறது.

மாம் - பொருள்

திருமால் குறையறியா இறையாய்
திருமதுரையில் தாம் இறங்கி
அருளால் அறங்காக்க தூதனாய்
அவனியின் சுமைக்காக இரங்கி
மருளால் மருண்ட பார்த்தன்தேரில்
பாகனாய் மன்னன் தேற்றி
தருவாய் அடிமைக்கு தாமென்று
திருமேனியைத் தொட்டுக் காட்டி

(2)

பதவுரை

அவனியின்	= பூலோகத்தின்
சுமைக்காக	= பாரத்தைக் கண்டு
இரங்கி	= மனம் வருத்தப்பட்டு
திருமால்	= ஸ்ரீமந் நாராயணன
குறையறியா	= குறை ஒன்றும் இல்லாத
இறையாய்	= ரக்ஷகனாய்
திருமதுரையில்	= வட மதுரையில்
அருளால்	= தம்முடைய திருவருளால்
அறங்காக்க	= தர்மத்தை நிலை நாட்ட
தாம் அவதரித்து	= தானே அவதரித்தான் (ஆவிர்பவித்து)
தூதனாய்	= தூது செல்பவனாய் நடந்து
மருளால்	= அஞ்ஞானத்தால்
மருண்ட	= பீதியடைந்த
பார்த்தன்	= அருச்சுனன்
தேரில்	= ரதத்தில்
பாகனாய்	= அதை ஒட்டும் சாரதியான
மன்னன்	= துவராபதியின் மன்னனான கிருஷ்ணன்
தேற்றி	= துக்கத்திற்கு ஆறுதலையும், அதைப் போக்கும் வழியும்
தாம் என்று	= நான் ஒருவனே என்று
தொட்டுக் காட்டி	= தம் சரீரத்தைத் தொட்டு காண்பித்து
அடிமைக்கு	= அருச்சுனன் போன்ற எல்லா சேதனர்களுக்கு
தருவாய்	= அருள் புரிவாய்

விளக்கம்

பகவத் கீதையை தன் கருணையால் எல்லா ஜீவராசிகளும் உய்விக்க வேண்டும் என்ற உயர்ந்த கருத்துடன் உரைத்த பகவான் சரம ஸ்லோகத்தில் 'மாம்" என்று தன் திருமேனியைத் தொட்டுக் காட்டுகிறான்.

மிக உயர்ந்த இடத்தில் உள்ள பகவானை, மிகவும் தாழ்ந்த இடத்தில் உள்ள நம்மைப் போன்ற சேதனர்கள் அணுகி, அறிந்து அவனையே அனுபவிப்பதற்கு உகந்ததாய் அவனிடம் பொருந்தியிருக்கும் நான்கு முக்கிய குணங்களை அவை கண்பிக்கின்றன..

1. **வாத்ஸல்யம். பசு தன்னுடைய கன்றிடம் எவ்வளவு தோஷங்கள் இருந்தாலும் அதை கவனிக்காது. அதைப்போல் பகவானும் தன்னடியார்களிடம் உள்ள தோஷங்களை பொருட்படுத்த மாட்டாத உயர்ந்த திருக்கல்யாண குணம். இதை "குறை அறியா" என்ற பதம் காண்பிக்கிறது.**

2. **ஸ்வாமித்வம். பகவானைக் காட்டிலும் உயர்ந்தது ஒன்றுமில்லலை என்று சிறந்து இருக்கும் குணம். "இறையாய்" என்ற பதம் இதைக் காண்பிக்கிறது.**

3. **ஸௌசீல்யம். மிக உயர்ந்த இடத்தில் உள்ளவன் அடி மட்டமான கீழ் இடத்தில் உள்ளவனுடன் சரி சமமாக தானே வலிய வந்து பழகுவது. இதை "மன்னன் பாகனாய்" என்ற பதம் காண்பிக்கிறது.**

4. **ஸௌலப்யம் என்பது அடைவதற்கு எளியனாய் இருப்பவன். "தூதனாய்" என்ற பதம் இதைக் காண்பிக்கிறது.**

மாம் என்று சொல்லும்போது எல்லா காலத்திலும், எல்லா இடத்திலும், எல்லா நிலையிலும் (ஸர்வ தேச, ஸர்வ கால, ஸர்வ அவஸ்தைகளிலும்) பிரியாமல் அவனுடன் என்றும் கூடி பொருந்தியிருக்கும் பிராட்டியையும் சேர்த்து என்பதை "திரு" என்ற பதத்தால் சொல்லப்பட்டது

இந்த பாசுரம் எம்பெருமானின் அவதார ரஹஸ்யங்களை சொல்லுகிறது. என்று நம் ஆசாரியர்கள் பணிப்பர்.

பகவானின் அவதாரங்கள்

1. **உண்மையானவை**
    - **மாய ஜால வித்தை போல் அன்று**

- **"தாம் இறங்கி"**

2. **திருக்கல்யாண குணங்கள் நிரம்பியவை**
   - **அவதார நிலையிலும் பகவானின் இயற்கையான (ஸ்வாபாவிகான) தன்மைகள் பிரகாசிக்கும்**
   - **"அருளால், இறையாய்"**

3. **சுத்த ஸத்வமே கொண்டவை**
   - **பகவான் சுத்த ஸத்வம். அல்பமான ரஜஸ், தமோ குணங்கள் கலவாதது**
   - **"குறையறியா"**

4. **ஸங்கல்பத்தால் எழுந்தவை**
   - **பகவான் அவதாரம் செய்வது தன்னுடைய ஸங்கல்பத்தினாலேயே. சேதனர்களைபோல் கர்ம வசத்தால் அல்ல.**
   - **"தாம் இறங்கி"**

5. **அறம் காப்பதற்காகவே**
   - **அதர்மத்தை அழித்து, தர்மத்தை நிலை நாட்ட அவ்வப்போது எடுப்பது அவதாரம்**
   - **"அறங்காக்க"**

6. **அடியவர்களை ரக்ஷிக்க ஏற்பட்டது**
   - **நல்லவர்களை காத்து தீயவர்களை அழிப்பதே அவதார நோக்கம்**
   - **"அவனியின் சுமைக்கு இரங்கி"**

நம்மாழ்வார் திருவாய்மொழியில் "அறிவினால் குறைவில்லா அகல் ஞாலத்தவரறிய நெறியெல்லாம் எடுத்துரைத்த நிறை ஞாலத்து ஒரு மூர்த்தி" என்ற பாசுரத்தில் பகவான் தானே அவதாரம் செய்து உலகில் அஞ்ஞானத்தில் மூழ்கியிருக்கும் மாந்தர்களுக்கு அறிவுரை புகட்டினான் என்கிறார்.

"ஏஷ நாராயண: மொந் க்ஷீரார்ணவ நிகேதந;" என்ற ஹரிவம்ஸ ஸ்லோகத்தில் பாற்கடலில் ஸயனித்துள்ள எம்பெருமானே கண்ணனாக திருமதுரையுள் வந்து அவதரித்தான் என்கிறது.

ஏகம் - பொருள்

துறை அரு, தானும் வேறாய்
ஆறும் பேறும் தாமே ஈந்து
நெறியெல்லாம் பலன் ஒன்றாய்
நம்பரத்தை இனி தான்சுமந்து
மற்றொன்று வேண்டாம் என
மகிழும் திருமகள் நாதனையே
மனமே நீயறிந்தாய் ஏகமெனும்
தனிச் சொல்லாலே இன்று!

(3)

பதவுரை

துறை	= [பகவானுடைய அருளால் சித்திக்கும்] உபாயமும்
அரு	= [அதை அனுஷ்டிக்கும்] ஜீவனும்
தானும் வேறாய்	= அதைவிட மாறாய் பிரிந்திருக்கும் பகவான்
தாமே	= தானே முன்வந்து
ஆறும்	= உபாயமும்
பேறும்	= புருஷார்த்தமும்
ஈந்து	= தானே என்று
நெறி எல்லாம்	= மற்ற உபாயங்கள்
பலன் ஒன்றாய்	= தரும் எல்லா பலன்களையும் சேர்த்து அருளி
இனி	= இன்று முதல்
நம்	= சேதனர்களாகிய நம்மைக்
பரம்	= காத்துக் கொள்ளும் பொறுப்பையும்
தான் சுமந்து	= தானே ஏற்றுக்கொண்டு
மற்று ஒன்று	= ப்ரபத்தி தவிர மற்றறைய உபாயங்கள்
வேண்டா	= அவசியமில்லை என்று
மகிழும்	= அந்த ப்ரபத்தி ஒன்றிலேயே சந்தோஷிக்கும்
திருமகள் நாதனையே	= அந்த ஸ்ரீமந் நாராயணனையே
மனமே	= என்னுடைய மனதே
இன்று	= இன்று
ஏகம் என்னும்	= ஏகம் என்று
தனிச் சொல்லால்	= சிறந்து தனித்து நிற்கும் ஒரு சொல்லால்
நீ அறிந்தாய்	= அறிந்து கொண்டாயே நீ!

விளக்கம்

ஏகம் என்றால் ஒன்று. பகவான் மாம் ஏகம் என்று சொல்லும்போது "என்னை ஒருவனையே" என்பதை வலியுறுத்துகிறான்.

ஏக சப்தத்திற்கு ஆறு அர்த்தங்கள் என்று பூர்வாசாரியர்கள் விளக்கியிருக்கிறார்கள்

1. **உபாயமும் பலனும் எல்லாம் பகவானே (Lord is the means and ends)**
    - **சேதனன் அனுஷ்டிக்கும் உபாயம். பலன் இரண்டும் பகவானே**
    - **"ஆறும், பேறும் தாமே ஈந்து"**

2. **சேதனன் பாரதந்த்ரியன் (sentient things are dependent)**
    - **சுதந்திரம் அற்றவன். உபாயம் என்கிற செயலை செய்தாலும் உண்மையில் பகவான் ஒருவனே அந்த எண்ணத்தையும், அதை நடத்திவிப்பதும், அதற்குறிய பலனைத் தருவதும்.**
    - **"தாம் ஈந்து"**

3. **பகவானின் நல்ல எண்ணமே காரணம் (Lords good intentions are the cause of everything)**
    - **ப்ரபத்தி என்பது ஸாத்யோபாயம். பகவான் ஸித்தோபாயமாய் விளங்குபவன். இரண்டும் வேறானவை.**
    - **பக்தி, ப்ரபத்தி இரண்டும் பகவானுக்கு நம்மேல் இருக்கும் அதிருப்தியை போக்குவதுடன் சரி. நேராக பலன்களை தராது**
    - **பலன் கொடுப்பது எம்பெருமானின் ஸங்கல்பம் மட்டுமே. இயற்கையான கருணையுடன் கூடிய அவன் நல்லெண்ணமே எலாவற்றிற்கும் காரணம்.**
    - **ப்ரபத்தியை செய்தவனுக்கு பகவான் பக்தி மற்றும் கஷ்டமான யோகங்களை செய்தாற்போல் நினைத்து அதன் ஸ்தானத்தில் தான் நின்று பலனை தருகிறான்.**
    - **முறையாக செய்த ப்ரத்தியை ஒன்றையே, ஒரு சாக்காக கொண்டு, பலனைத் தருகிறான்.**
    - **ஆறும் செய்வனும் தானும் வேறாய் அதாவது உபாயமும், அதை செய்த (அனுஷ்ட்டித்த) சேதனனும், பகவானைவிட வேறு, ஜீவாத்மாவும் அவன் செய்யும் ஸித்தோபாயமும் பரமத்மாவாகிற சாத்யோபாயத்தைவிட வேறு.**

4. **பகவான் ரக்ஷகன் (Lord is the savior)**

- பகவான் ப்ரபத்தி செய்த சேதனன் பொறுப்பை ஏற்று சேதனுடைய சுமையை தான் தனித்து தாங்குகிறான்.
- நம் பரத்தை இனித் தாமே சுமந்து

5. பகவான் மற்ற எதுவும் எதிர் பார்ப்பதில்லை (Lord doesn't expect anything in return)
   - பகவான் ப்ரபத்தி செய்தவனிடம் பரபத்திக்கு உரிய அங்கங்கள் தவிர வேறு ஒன்றும் எதிர்பாராமல் தனித்து பலனைத் தருகிறான்
   - "மற்றொன்று வேண்டா"

6. பகவான் எல்லா பலன்களையும் சேர்த்து அருளுகிறான் (Lord bestows all rewards)
   - பகவான் ப்ரபத்தியினால் மகிழ்ந்து, மீதி உபாயங்கள் எல்லாம் தனித்தனியே கொடுக்கும் பலன்களை எல்லாம் ஒன்று சேர்த்து, தானே கொடுக்கிறான்
   - "நெறி எல்லாம் பலனொன்றாய் தந்து"

ஸரணம் - பொருள்

உனக்கு ஏதுசுமை இனியென
தமக்கு இனியவனான என்னை
உமக்கு பணி செய்ய திருத்தி
அருளிய அருங்குணங்களையும்
சுடும்கடலில் சுழன்றமிழ்ந்த எம்மை
மீட்டிக் காட்டிய நல்வழியும்
தனியிறையாய் தன்னையே தந்திடும்
வேராய் ஓர் ஆறாகி நின்றாயே

(4)

பதவுரை

இனியென	= இனிமேல்
உனக்கு ஏது சுமை	= சேதனனாகிய உனக்கு எதற்கு பாரம் என்று
தமக்கு இனியவனான்	= பகவானுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும்
என்னை	= என்னை
எம்மைத் திருத்தி	= என்னை நல்ல வழியில் திருத்தி
ஈந்த குணங்களையும்	= நற்குணங்களை அருளி
உமக்கு பணி செய்ய	= அவனுக்கே கைங்கர்யம் செய்வதற்காகவே
சுடும்கடலில்	= வெந்து போகும்படியான ஸம்ஸாரக் கடலில்
சுழன்றமிழ்ந்த	= தத்தளித்து அமிழ்ந்து கிடக்கும்
எம்மை	= என்னை
மீட்டிக்	= அதிலிருந்து காப்பாற்றி
காட்டிய நல்வழியும்	= நல்ல புருஷார்த்தத்தைக் காண்பித்து
தனியிறையாய் நினைவுறுத்தி	= தான் ஒருவனே ஸர்வ ரக்ஷகன் என்பதை
தன்னையே தந்திடும்	= தனக்கு சொந்தம் என்ற எல்லாவற்றையும் தந்து, மேலும் தன்னையே தந்து
வேராய் உள்ள	= எல்லாவற்றிக்கும் மூல காரணமான வேர் போல் அவன்
ஓர் ஆறு ஆகி	= ஒரு சிறந்த உபாயமாய்
நின்றாயே	= தானே நின்றானே

விளக்கம்

மற்ற உபாயங்களை செய்ய சக்தி இல்லாமல் ப்ரபத்தியை பின்பற்றும் சேதனனுக்கு எம்பெருமான் மற்ற உபாய ஸ்தானங்களில் தானே நின்று பலனைத் தருவதை இங்கு ஸரண சப்தம் காட்டுகிறது

பிறப்பு இறப்பு எனும் வெப்பமான கடலில் நான் சுழன்று மூழ்கி கிடக்க பகவானே, நீ என்னை அதிலிருந்து காப்பற்றி என்னை தீய வழிகளிலிருந்து திருத்தி தூய குணங்களை கொடுத்து நல்ல வழியை காட்டி உமக்கே கைங்கர்யம் செய்ய அருளினாய்.

அருளாதொழிவாய் அருள் செய்து அடியேனை ஒரு
பொருளாக்கி உன் பொன்னடிக்கீழ் புக வைப்பாய்:

என்று நம்மாழ்வாரும் அருளினார், திருவாய்மொழியில்.

ப்ரபத்தி செய்த நான் உனக்கு இனியவனானேன். அதனால் இனி எந்த விதமான பொறுப்பும் இல்லை என்று என்னை இனிமேல் காக்கும் பொறுப்பையும் நீயே தாங்கிறாய்.

இப்படி தனித் தத்துவமாக தன்னையே தரும் ஒரு உபாயமாய், ஸித்தோபாயமாய் எல்லா ஜீவராசிகளுக்கும் ஆணி வேராக திகழ்கிறாய்.

வ்ரஜா - பொருள்

மறத்தால் மறுத்த மறுமைப்
பயனால் மனம் வெறுத்து *
அறத்தால் பிறழாது * அதன்
வழியே நடந்து * உறுதியுடன்
ஒருக்கால் தஞ்சமென உம்
பொருளை உமக்கே தந்துயர்ந்து *
தரத்தால் அடைவிக்கும் அடிகளை
அடைவோமே நாம் உணர்ந்து

(5)

பதவுரை

மறத்தால்	= முன்வினை பாபங்களால்
மறுத்த	= நல்ல கதி மறுக்கப்பட்டு அதனால்
மறுமைப்பயனால்	= பல பிறவிகளை அடைவதைக் கண்டு
மனம் வெறுத்து	= மனம் வெதும்பி
அறத்தால் பிறழாது	= தர்ம சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட
அதன் வழியே நடந்து	= கர்மாக்களை தவறால், பிழையின்றி செய்து
உறுதியுடன்	= மன உறுதியுடன்
ஒருக்கால்	= ஒரே ஒரு முறை
தஞ்சமென	= உம்மை அடைக்கலம் என்று அடைந்து
உம்பொருளை	= உமக்கு சொந்தமான என் ஆத்மாவை
உமக்கே தந்து உயர்ந்து	= உம்மிடம் ஸமர்ப்பித்து அதானல்
தரத்தால்	= பெருமையுடன்
அடைவிக்கும்	= மோஷ ப்ராப்த்தி அளிக்கும்
அடிகளை	= உம் திருவடிகளை
அடைவோமே	= நாம் சரணாக பற்றுவோமே
நாம் உணர்ந்து	= ஆசார்யர்கள் உபதேசத்தின் மூலம் அறிந்து

விளக்கம்

வ்ரஜ சப்தம் ஆத்ம ஸமர்ப்பணத்தை சொல்லுகிறது.

இந்த பாசுரத்தில் பரபத்தியின் ஐந்து அங்கங்களும் ஆறாவது அங்கியான ஆத்ம ஸமர்ப்பணமும் சொல்லப்பட்டது

நாம் அடைய உய்ர்ந்த புருஷார்த்தமான மோக்ஷத்தை பெறாமல் தடுப்பவை நம்முடைய பாபங்கள். இப்பொழுது அதைத் தெரிந்து கொண்டு ப்ரபத்தியை அதற்கு சொல்லப்பட்ட அங்கங்களோடு செய்கிறோம்.

பரபத்தியின் ஆறு அங்கங்கள்

1. **ப்ராதிகூல்ய வர்ஜனம்**
    - **பகவானுக்கு விருப்பமில்லாதை தவிர்ப்பது**
    - **நெடுங்காலம் பிழை செய்து நிலை கழிந்தேன் (அமிருத ஸ்வாதினி - 31) என்பதை உணர்ந்து அவைகளை தவிர்க்க வேண்டும்.**
    - **உகவா அனைத்தும் ஒழிந்து (அடைக்கலப்பத்து)**
    - **"அறத்தால் பிறழாது"**

2. **ஆநுகூல்ய ஸங்கல்பம்**
    - **என்பது பகவானுக்கு உகந்ததை செய்வது**
    - **உன்னருளுக்கு இனிதான நிலை உகந்தேன் (அமிருத ஸ்வாதினி - 31) என்பதினால் பகவானின் திருவுள்ளதிற்கு பாங்காய் எல்லா காரியங்களையும் செய்தல்**
    - **உகக்கும் அவை உகந்து (அடைக்கலப்பத்து)**
    - **"அவ்வழியே நழுவாது"**

3. **கார்ப்பண்யம் என்னும் ஆகிஞ்சன்யம்**
    - **மீதி உபாயங்கள் செய்ய தனக்கு தகுதி அருகதை (eligibility) இல்லாததை நினத்து மனம் வருந்தி பகவானிடம் அஞ்சலி செய்வது**
    - **நின் அருளால் கதி இன்றி மற்று ஒன்று இல்லை (அமிருத ஸ்வாதினி -31)**
    - **புகல் இல்லா தவமறியேன் (அடைக்கலப்பத்து)**
    - **"மனம் வெறுத்து"**

4. **மஹாவிசுவாஸம்**
    - **பகவான் நம்மை காப்பாற்றுவான் என்ற திடமான நம்பிக்கை (unshakeable faith)**

- **உன் சரணே சரண் என்னும் துணிவு பூண்டேன் (அமிருத ஸ்வாதினி -31) என்கிறாற்போல்**
- **மிகத் துணிவு பெற உணர்ந்து (அடைக்கலப்பத்து)**
- **"உறுதியுடன்"**

5. **கோப்த்ருத்வ வர்ணம்**
   - **மீதி உபாயங்கள் செய்ய தனக்கு சக்தி இல்லாதலால் அவ் உபாய ஸ்தானத்தில் இருந்து அருள் புரிய வேண்டும் என விண்ணப்பிப்பது**
   - **மன்னிருளாய் நின்ற நிலை எனக்குத் தீர்த்து வானவர்தம் வாழ்ச்சி தர வரித்தேன் உன்னை (அமிருத ஸ்வாதினி -31)**
   - **காவல் என வரித்து (அடைக்கலப்பத்து)**
   - **"தஞ்சம்"**

6. **ஆத்ம ஸமர்ப்பணம்**
   - **பகவானுக்கு உரிய பொருளை அவனிடமே திருப்பித் தருவது**
   - **"இன்னருளால் இனி எனக்கோர் பரம் ஏற்றாமல் என் திருமால் அடைக்கலம் கொள் என்னை நீயே" (அமிருத ஸ்வாதினி -31)**
   - **நல் அடைக்கலமாய் அடைந்தேனே (அடைக்கலப்பத்து)**
   - **"உம் பொருளை உமக்கே தந்துயர்ந்து"**

இவற்றுடன், பகவானே எல்லாம் நடத்தி வைக்கிறான் என்கிற எண்ணம் (ஸாத்துவிகத் தியாகம்) ~ அடைவிக்கும்

அஹம் - பொருள்

மறைநானே! அருள்சுரை நானே!
காக்கும் இறையும் நானே!
வானவருடன் மானிடனாய் புவியில்
தோன்றும் சுவை நானே!
அறியாருக்கு அறிவு நிதிநானே!
கதிநானே! உமக்குபதி நானே!
நிலைநானே! அறிவாய் தான்
என்றவனும் திருநாரணன் தானே!

(6)

பதவுரை

மறைநானே = வேதங்கள் அனைத்தும் நானே
அருள்சுரை நானே = எல்லா புருஷார்த்தங்களையும் அளிப்பவ நானே
காக்கும் இறையும் நானே = உனக்கு ஸர்வ ரக்ஷகன் என்பதும் நானே
வானவருடன் = நித்ய ஸூரிகளுடன்
மானிடனாய் = மனுஷ்ய ரூபத்தில்
பூமிதனில் = பூலோகத்தில்
தோன்றும் = அவதரித்து
சுவை நானே = எல்லோரும் அனுபவிக்க ச்ய்வதும் நானே
அறியாருக்கு = ஞானம் இல்லாதவர்களுக்கு
அறிவு நிதி நானே = உயர்ந்த அறிவாய் விளங்குவதும் நானே
கதிநானே = உனக்கு உபாயம் நானே
உமக்குபதி நானே = உபாயத்தால் அடையப்படும் பலனும் நானே
நிலைநானே = பலன்களின் எல்லை நிலம் என்பதும் நானே
அறிவாய் = இதை எல்லாம் தெரிந்து கொள்
தான் = இப்படியாக, தான் தான்
என்றவனும் = என்ரு சொல்லி கொள்பவனும்
திருநாரணன் தானே! = அந்த யப்பதி மந நாராயணனே

விளக்கம்

சேதனன் செய்யும் எல்லா பாபங்களிருந்து அவனை காப்பாற்ற பகவானிடத்தில் உள்ள எல்லையற்ற (limitless, அபாரமான) சக்தியை அஹம் என்கிற பதம் இங்கு சொல்லுகிறது.

பகவான் இங்கு கூறுகிறான்.

- **உபய வேதாந்தங்கள் என்றழைக்கப்படும் வடமொழி மறை, திராவிட வேதங்கள் அனத்தும் நானே.**
- **கன்றிற்கு தாய்ப்பசு தானே சுரக்கும் தன்மையைபோல் அவற்றையெல்லாம் அருளுபவன் நானே.**
- **பூமண்டலமும், திரிபாத் விபூதி போற்றப்படும் வான் வெளியும் அனைத்தையும் காப்பதும் நானே.**
- **நித்யசூரியுடன் பூமியில் தோன்றி சேதனர்கள் அனுபவிப்பதற்கு காரணமானவனும் நானே.**
- **அறிவு இல்லாதவருக்கு வேண்டிய அளவு கொடுக்கக்கூடிய நிதி நானே.**
- **சேதன, அசேதன பொருள்களுக்கு ஸ்வாமி நானே.**
- **அடைய வேண்டிய மோக்ஷமும் நானே.**

பகவான் இப்படி கூறியதை என்னுடைய மனமே அறிந்து கொள், "நான், நான்" என்று கீதையில் சொல்லிக்கொள்கிறவன் வேறு யாருமில்லை, அந்த மஹாநாராயணன் ஒருவன்தான்.

த்வா - 6பொருள்

அரணிலாயாம் அடையெனக் காட்டிய
அடிகளை உம்மறிவாலே பற்றி *
துணையிலா பெரு நிலையென
தனிமையின் இனிமை போற்றி
மூலவெழுத்திலும் முடியோன் முன்னிலும்
முன்னமர்ந்த முதல்வா * உன்
சீலமென்ன! சிறியேன் எம்மை
அடைக்கலமாய் ஆக்கி அருளினாயே

(7)

பதவுரை

அரண் இலா	= உபாயம் ஒன்றும் இல்லாதவருக்கு
யாம்	= நானே
அடையெனக்	= சரணாகதி அடையத் தக்கவன்
காட்டிய	= என்பதை நிரூபித்துக் காட்டிய
அடிகளை	= உம்முடைய இரண்டு திருவடிகளையும்
உம்மறிவாலே பற்றி	= நீர் தந்த ஞானத்தினாலேயே
துணையிலா	= வேறு எந்த விதமான உதவியும் அன்றி
பெரு நிலையென	= அடையப்படும் உயர்ந்த புருஷார்த்தமாகவும்
தனிமையின்	= அதை அளிக்கும் சரணாகதி என்னும் தனித்த உபாயமாகவும் பற்றி
இனிமை போற்றி	= அந்த சுகத்தில் மூழ்கினேன்
மூலவெழுத்திலும்	= ஓம் என்னும் ப்ரணவத்திலும்
முடியோன் முன்னிலும்	=அருச்சுனன் முன்னே
முன்னமர்ந்த	= சாரதியாய தேர் தட்டில் அமர்ந்த
முதல்வா	= முதல்வனே
உன் சீலமென்ன	= உன்னுடைய எளிமை என்னும் குணம் என்ன!
சிறியேன்	= மகா அல்பனான
எம்மை	= என்னையும்
அடைக்கலமாய்	= உன்னிடம் ப்ரபத்தி
ஆக்கி	= செய்வித்து
அருளினாயே	= உன் அருளுக்கு பாத்திரமாக்கினாயே!

விளக்கம்

பகவான் தந்த அறிவாலே தத்துவ ஞானம் பெற்று அல்பம், அழிவு போன்ற தோஷங்களை வெறுத்து, இதற்காக மற்ற உபாயங்களை செய்த சக்தி இல்லாதலால் அவற்றை நாடாமல் ப்ரப்த்தி என்ற ஒரு தனி உபாயம் போதும் என்று அந்த உபாயத்தால் மகிழ்ந்து வேறு உபாயம் தேவையில்லை என்று பகவானே நீ காட்டிய உன் திருவடையை அடைகிறேன்.

திருமந்தரத்தில் முதலில் உள்ள மூல எழுத்திலும், அருச்சுனன் தேரிலும் முன் அமர்ந்து பிரபஞ்சம் எல்லாவற்றிக்கும் முதல்வனாய் இருக்கும் இறைவா, நீ மிகச் சிறியவனாய், கீழ்த்தரமாய் உள்ள என்னை உனக்கு உரியவனாக செய்து கொண்டாயே, உன்னுடைய சீலம் என்னும் குணத்தை எப்படி புகழ்வது?

பரபத்தி செய்து பகவானிடத்தில் பொறுப்பை ஸ்மர்ப்பித்த பிறகு அதே பலனுக்காக மறுபடியும் அதே உபாயத்தை செய்ய வேண்டாம். இப்படி நிற்கும் பிரபன்னை த்வா என்ற பதம் சொல்லுகிறது என்று சொல்லுவாரும் உண்டு.

ஸர்வ பாபேப்ய: - பொருள்

காணா இருளோ கவரா பொருளோ
தீரா காடோ தணியா சூடோ *
தாரா நெஞ்சோ தாங்கா நஞ்சோ
தாளா நரகோ மீளா பிறப்போ *
விளம்காது வினையனைத்தும் விலக்கி
வீட்டைக்காட்டி விடுவிக்கும்
தயங்காது நின்தாள்பற்றி அடையும்
சுகமே * எமக்கு என்றும் நிலைக்கும்

(8)

பதவுரை

காணா இருளோ	= என் அஞ்ஞானம் கண்ணுக்கு புலப்படாதது
கவரா பொருளோ	= நான் அடைய விரும்பாத பொருள் இல்லை
தீரா காடோ	= அதனால் ஸம்ஸாரம் என்றும் தொடர்கிறது
தணியா சூடோ	= அந்த காட்டில் வெப்பம் தாங்க முடிய வில்லை
தாரா நெஞ்சோ	= என் மனதோ தானம் என்பதையே அறியாதது
தாங்கா நஞ்சோ	= மற்றவர்களின் நல்வாழ்க்கையை பொறுக்காது
தாளா நரகோ	= வினைப்பயனால் வரும் நரகத்தை நினைக்கவே பயம்
மீளா பிறப்போ	= மீண்டும் செய்யும் பாபங்களால் பல பிறவிகள்
எனக்கு	
விளங்காது	= தாமதமின்றி
வினையனைத்தும்	= என் பாபங்கள் அனைத்தும்
விலக்கி	= எரித்து, பொசுக்கி
வீட்டைக்காட்டி	= மோஷ ஸாம்ராஜ்யத்தை காட்டி
விடுவிக்கும்	= ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுவிக்க
தயங்காது	= துளிக்கூட யோசிக்காது அருளும்
நின்தாள்பற்றி	= உம்முடைய திருவடிகளைப் பற்றி
அடையும் சுகமே	= அதனால் பெறும் இன்பமே
எமக்கு	= எனக்கு
என்றும் நிலைக்கும்	= என்றும் ஸ்திரமாக இருக்கும்

விளக்கம்

ஸர்வ என்பது முன் செய்த பாபங்களும், பின்னால் செய்யப்போகும் பாங்களும் சேர்த்து என்று பொருள். பாபேப்ய: என்று பன்மையில் (plural) சொன்னது பாபங்கள் பலவிதம் என்று ஆகிறது.

பாபக்குவியல்களை சொல்லும்போது உதாரணத்திற்கு ஒன்றிரண்டு சொல்லி (sample) விளக்கியது.

- **காணா இருளோ**
  - **இதுவரை பார்க்காத இருள். அஞ்ஞானம் என்று காண முடியாத இருட்டு**
- **கவரா பொருளோ**
  - **நான் ஆசைப்படாத பொருள் இல்லை**
- **தீராத காடோ**
  - **வாழ்க்கை பயணம் பெருங்காட்டில் செல்வதுபோல். துன்பம் தொடர்கிறது**
- **தணியா சூடோ**
  - **காம க்ரோதங்களால் என் உடலில் ஏற்பட்ட வெப்பம் தணிக்க முடியாதது**
- **தாரா நெஞ்சோ**
  - **இன்னொருத்தனுக்கு தானம் சிறிதும் செய்ய மனமில்லாமல்**
- **தாங்கா நஞ்சோ**
  - **மற்றவன் ஒரு நல்ல ஸ்திதி அடைந்தான் என்பதைக் கேட்கக் கூட பொறுக்கமுடியாத தன்மை**
- **தாளா நரகோ**
  - **செய்த பாபங்களால் நரகத்தில் தள்ளப் பட்டு அந்த கொடூரத்தை தாங்காமல்**
- **மீளா பிறப்போ**
  - **பிறப்பு இறப்பிலிருந்து மீளா முடியாமல்**

செய்த பாபங்களை விளக்க முடியாதவை. அவை அனைத்தும் வேரோடு அழித்து மோக்ஷம் என்கிற வீட்டைக் காட்டி, இந்த உலக பந்தங்களிலிருந்தும், என்னை காக்க வேண்டிய சுமையிலிருந்தும் எனனை விடுவிக்கிறாய்.

எப்பொழுது? துளிக்கூட சஞ்சலம் இல்லாமல் உன்னுடைய திருவடிகளை பற்றி அதுவே சுகம், அதுவே நிலையானது என்று எப்பொழுது ப்ரபத்தி செய்கிறேனோ அன்று.

மோக்ஷயிஷ்யாமி - பொருள்

தருவாய் வினை விடுத்து
வான்வீடு நான் விரும்பும்போது *
விரைவாய் இன்றே இல்லை
நாளை என்று அப்போது *
அளித்து அழைப்பாய் உயரே
உமக்கே குற்றேவல் செய்ய *
களித்திருப்பார் வந்தார் அவரோடு
ஒன்றாய் யானும் உய்ய

(9)

பதவுரை

தருவாய்	= அளிப்பாய்
வினை விடுத்து	= பாபங்களை விலக்கி
வான்வீடு	= மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை
நான் விரும்பும்போது	= என் ஆசையின்படி
விரைவாய்	= சீக்கிரமாக
இன்றே இல்லை	= உடனேவோ இல்லை
நாளை	= இன்னொரு நாளோ
என்று அப்போது	= என்று வேண்டும்போது
அளித்து	= அருளி
அழைப்பாய் உயரே	= உயர்ந்த பரமபதத்திற்கு அழைத்துக் கொள்வாய்
உமக்கே குற்றேவல் செய்ய	= உமக்கு நித்ய கைங்கர்யம் செய்வதற்காகவே
களித்து	= அந்த கைங்கர்ய ருசியில்
இருப்பார் ஸூரிகள்	= என்றும் அங்கேயே இருக்கும் நித்ய
வந்தார்	= இங்கிருந்து மோக்ஷம் அடைந்த முக்தர்கள்
அவரோடு	= அவர்களோடு
ஒன்றாய் யானும்	= நானும் ஒன்றாய் சேர்ந்து
உய்ய	= உஜ்ஜீவிப்பதற்காகவே

விளக்கம்

ப்ரபன்னன் விரும்பும் நேரத்தில் அவனுக்கு மோக்ஷத்தை அளிப்பேன் என்பதே மோக்ஷயிஷ்யாமி என்பதன் பொருள்

பகவானை நாம் சரணாகதி என்று அடைந்து வேண்டுகிறோம். நம்முடைய கர்ம வினைகளிலிருந்து விடுவிக்கிறான். மோக்ஷ ப்ராப்தியை இன்றே வேண்டும் என்றால் விரைந்து இன்றைக்கே (ஆர்த்த ப்ரப்த்தி) இல்லை நிதானமாக நாளைக்கோ பின்னொரு காலத்திலோ (த்ருபத ப்ரப்த்தி) என்று நாம் எப்பொழுது வேண்டும் என்று விரும்புகிறோம் அப்பொழுது அளிக்கிறான்,

பிராட்டியுடன் கூடிய தமக்கு கைங்கர்யம் செய்ய., அர்ச்சிராதி மார்க்கமாக நம்மை உயரே அழைத்து செல்கிறான். அப்படிப்பட்ட மோக்ஷ சாம்ராஜ்யத்தில் நாம் சென்று அங்கேயே இருக்கும் நித்யர், இங்கிருந்து அங்கே சென்ற முக்தர் இவர்களுடன் ஒன்று சேர்ந்து மிகுந்த மகிழ்ச்சியுடன் பிராட்டியுடன் கூடிய பகவானுக்கு கைங்கர்யம் செய்கிறோம்.

மாசுச: - பொருள்

அமிழ்ந்து ஆழ்கடலில் அறிவில்லா
அடிமை இணையடிகள் அடைய *
நெகிழ்ந்து பிறவி வேண்டாவென
பொருந்தி பிரியா உறவுகாட்டி *
வினைதிருத்தி தகவால் காத்து
திண்மதியுடன் துய்யநிலை ஏற்றி *
எமை வருத்தி வாடும் சோகம்
தவிர்த்து வாழ்விப்பாய் வள்ளலே

(10)

பதவுரை

ஆழ்கடலில்	= ஸம்ஸாரம் என்னும் ஆழமான கடலில்
அமிழ்ந்து	= அமிழ்ந்து தத்தளிக்கும்
அறிவில்லா	= ஞானமில்லாத
அடிமை	= சேதனன் நான்
இணையடிகள் அடைய	= உம்முடைய இரண்டு திருவடிகளையும்
நெகிழ்ந்து	= சந்தோஷத்துடன்
பிறவி வேண்டாவென	= மறு இறவி வேண்டாம் என்று அடைவதற்கு
பொருந்தி	= அழகாக அறிவுறுத்தி
பிரியா உறவுகாட்டி	= நமக்கு உள்ள உறவைக் காட்டி
வினைதிருத்தி	= என் பாபங்களை நீக்கி
தகவால் காத்து	= கருணையால் என்னைக் காத்து
திண்மதியுடன்	= மஹா விசுவாசத்துடன் இருக்கும் எனக்கு
துய்யநிலை ஏற்றி	= உயர்ந்த கதியைக் கொடுத்து
எமை வருத்தி	= மற்றைய வாட்டி
வாடும் சோகம்	= வதைக்கும் துக்கங்கள்
தவிர்த்து	= எல்லாவற்றையும் போக்கி
வாழ்விப்பாய்	= உயர்ந்த வாழ்க்கையை அளிக்கிறாயே
வள்ளலே	= வாரி வழக்கும் வள்ளலே! உன்னை எப்படி புகழ்வேன்?

விளக்கம்

சரம ஸ்லோகத்தில் மிகவும் உயர்ந்த பதம் மாசுச:. இது பல அர்த்தங்களை கொண்டு ஸாரமாக (essence) இருப்பது. நம் ஆசாரியர்கள் இதை தங்களுடைய கடைசி காலத்தில், தகுந்த சிஷ்யர்களுக்கு ரகசியமாக உபதேசிப்பார்கள். சேதனன் பலவகையால் துக்கம் அடைகிறான். அவை அனத்தும் விட்டுவிடு என்பதே மாசுச: பொருள்

ஸம்ஸாரம் என்னும் துக்கக் கடலில், ஞானம் இல்லாத நான் அகப்பட்டு அமிழ்ந்து தத்தளிக்கும்போது உம்முடைய திருவடியை பற்றினேன். நான் செய்த ப்ரபத்தியால் நீ மகிழ்ந்து உள்ளம் நெகிழ்ந்து நமக்கு இடையே உள்ள உறவை காட்டி இது அநாதியானது. யாராலும் பிரிக்கமுடியாது என்று உணர்த்தி மறு பிறவி உனக்கு இல்லை என்று எம்மை மீட்டாய்

என்னுடைய கர்ம வினைகளிலிருந்து விடுவித்து, என்னை காத்து எனக்கு ஸ்திரமான புத்தி கொடுத்து உறுதியுடன் நான் உன்னைப் பற்ற, நீ என்னை உயர்ந்த நிலையில் ஏற்றி வைத்து, என்னை வருத்தி வாட்டும் சோகங்கள் எல்லாம் நீக்கி நல்வாழ்க்கையை காட்டுகிறாய், வள்ளலே!

பலன்

பக்திக்கு உறுப்பாம் கருமமும்
ஞானமும் முதலில் சொல்லி *
சக்தியிலா மாந்தருக்கு உயர்த்தி
ப்ரபத்தி மற்ற களை தள்ளி *
தீயில் தூசாய் மாசு நீக்கி
வேண்டுமன்றே வான் அளிக்கும் *
மறை ஈந்த சீ மாதவன் தாளே
சரண் என்றே களிக்கும்.

(11)

பதவுரை

பக்திக்கு	= பக்தியோகத்திற்கு
உறுப்பாம்	= அங்கம் எனப்படும்
கருமமும்	= கர்ம யோகத்தையும்
ஞானமும்	= ஞான யோகத்தையும்
முதலில் சொல்லி	= முதலில் விவரித்து
சக்தியிலா	= அகிஞ்சனான
மாந்தருக்கு	= சேதனர்களுக்கு
உயர்த்தி	= உயர்ந்த
ப்ரபத்தி	= யோகம் ப்ரபத்தி என்று சொல்லி
மற்ற களை தள்ளி	= மற்றைய உபாயங்கள் என்ற களைகளை பிடுங்கி
தீயில் தூசாய்	= நெருப்பில் விழுந்த தூசுகளைப் போல்
மாசு நீக்கி	= பாபங்களை எல்லாம் விலக்கி
வேண்டும் அன்றே	= என்றைக்கு வேண்டும் என்ற விருப்பமோ அன்றைக்கே
வான் அளிக்கும்	= மோக்ஷத்தை அளிக்கிறேன் என்று கூறி
மறை ஈந்த	= பகவத் கீதை, வேதங்களை எல்லாம் தந்தருளிய
சீ மாதவன்தாளே	= ஸ்ரீமந் நாராயணனின் திருவடிகளே
சரண்	= சரணாகதி
என்றே களிக்கும்	= என்றே மனம் மகிழும்

விளக்கம்

கீதாசாரியன் முத்திக்கு வழி மூன்று என முதலில் கர்ம ஞான பக்தி யோகங்களை விளக்காமாக சொன்னான். இந்த யோகங்களை பின்பற்றுவது (அனுஷ்டிப்பது) மிகவும் கடினம். அதை செய்ய இயலாதவர்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். இவருக்கு உயர்ந்த உபாயம் ப்ரபத்தி. மற்றதைப் பற்றி கவலைப்பட வேண்டாம்.

ப்ரபத்தி செய்தவர் பாபங்கள், தீயில் விழுந்த தூசிபோல், ஒரு இமைப்பொழுதில் (க்ஷணத்தில்) இருந்த இடம் தெரியாமல் மறைந்து பொசுங்கி விடுகிறது, ப்ரபத்தி செய்யும்போது பகவானிடம் எப்பொழுது மோக்ஷம் வேண்டும் என்பதை விண்ணப்பிக்க அவரும் அப்படியே அருள் செய்கிறார்.

இப்படி இந்த தத்துங்களை உபதேசித்து ப்ரபத்தியை எமக்கு காட்டிக் கொடுத்த பார்த்தனுக்கு சாரதியாய் உலகிற்கே குருவாய் விளங்கும் கிருஷ்ணனே, நீயே சரண் என்று சொல்லி உன் திருவடிகளை அடைந்து மகிழ்ச்சியடைகிறேன்.

Appendix – E

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஆதிவண் ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மிந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக
ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீநாராயண யதீந்த்ர மஹாதேசிகாய நம:

நெஞ்சில் அஞ்சு

(அர்த்த பஞ்சகத்தைப் பற்றிய தமிழ் பாடல்களும் விளக்கமும்)

விஷயச் சுருக்கம்

மக்கள் எல்லோரும் அடைய விரும்பும் உயர்ந்த பொருள் சுகம். சுகத்தை விரும்பாத மனிதரே இல்லை என்று சொல்லாம். ஆனால் இவ்வுலகில் சுகம் மட்டும் தனித்து கிடைப்பதில்லை. எப்படி இரவும் பகவும் சேர்ந்தே இருக்கின்றவோ அது போல் துக்கமும் கூடவே வருகிறது. ஒவ்வொரு நாளும் சுக துக்கங்களில் மூழ்கி அதிலிருந்து வெளிவரத் தெரியாமல் தத்தளிக்கும் மாந்தர்கள் துக்கமே கலவாத சுகத்தை எண்ணி எங்கே அது கிடக்கும் என்று தேடுகிறார்கள்.

உயர்ந்த புருஷார்த்தம் (பலன்) என சொல்லக்கூடியவை மூன்று. - ஐசுவர்யம் கைவல்யம், மோக்ஷம் என்பார்கள். இவை முறையே தன் உடல், தன் ஆத்மா, பரமாத்மா இவற்றை அனுபவித்தில் உண்டாகும் ஆனந்தம்.

ஐசுவர்யம் என்று சொல்லக்கூடிய நிலம், வீடு, ஆடை, ஆபரணங்கள் என்பவை அழியக்கூடியவை. தன்னுடைய ஆத்மாவையே அனுபவித்து மகிழ்ந்திருக்கும் கைவல்யமும் ஓர் அளவு வரம்பிற்குள்தான்.

மற்ற இன்பத்தைப் போல் அல்லாமல் மோக்ஷம் எனப்படும் ஸ்ரீவைகுண்ட்டத்தில் குறைவு இன்றி. அளவிட முடியாதபடி ஆனந்தம் எப்பொழுதும் கால வரம்பின்றி நீடித்திருக்கும். இந்த மூன்றிலும் மோக்ஷமே அடைவதற்கு மிகச் சிறந்தது என்று முன்னோர்கள் உபதேசிப்பர். சுருக்கமாக பரமபத்தை நித்யமான செல்வம், அந்தமில்லா பேரின்பம் என்று ஆசாரியர்கள் வழங்கி வந்தனர்..

மோக்ஷத்தை அடைந்து அங்கு பகவானும் பிராட்டியும் கூடிய இருவருக்கும் நித்ய கைங்கர்யம் செய்ய விரும்பும் சேதனன், முக்கியமாக மூன்று

பொருள்களை அறிய வேண்டும். அவை (1) தத்வம், (2) ஹிதம், (3) புருஷார்த்தம்.

இம்மூன்றையும் விரித்து ஐந்து பொருள்கள் என்றும் சொல்லுவர்.

- **தத்வம் என்பதில்**
  - **(1)சேதனன் தன்னுடைய ஸ்வரூபத்தையும்**
  - **(2)பகவானின் ஸ்வரூபத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும்.**
- **புருஷார்த்தம் என்பதில்,,**
  - **(3)பகவத் கைங்கர்யம்தான் உயர்ந்த பலன் என்பதையும்**
- **ஹிதம் என்பதில்**
  - **(4)மோஷப் ப்ராப்திக்கான உபாயங்களையும்**
  - **(5)மோக்ஷத்தை அடைய விடாமல் நம்மை தடுக்கும் விரோதிகளைப் பற்றியும் அறிய வேண்டும்.**

மிக்க இறை நிலையும், மெய்யாம் உயிர் நிலையும்
தக்க நெறியும், தடையாகித் தொக்கியலும் - ஊழ்வினையும்
வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன்
யாழின் இசை வேதத்து இயல்

என்று பராசர பட்டர் திருவாய்மொழி தனியனில் அர்த்த பஞ்சகத்தைப் பற்றி சுருக்கமாக ஸாதித்தார்.

பொருள் ஒன்று என நின்ற பூமகள் நாதன் அவனடி சேர்ந்து
அருள் ஒன்றும் அன்பன் அவன் கொள் உபாயம் அமைந்த பயன்
மருள் ஒன்றிய வினை வல் விலங்கு இவை ஐந்தும் அறிவார்
இருள் ஒன்று இலா வகை எம்மனம் தேற இயம்பினரே

என்று ஸ்வாமி தேசிகன் அதிகார ஸங்க்ரஹத்தில் (11) இந்த ஐந்தையும் தெளிவாக காண்பிக்கிறார். (1) பரம புருஷார்த்தமாய் விளங்குபவன் திருவுடன் சேர்ந்த நாராயணன். (2) அவனுடைய திருவடிகளைப் பற்றி அவர்களுக்கே என்றும் பணி செய்ய காத்துக்கிடக்கும் ஜீவர்கள் (3) பக்தி, சரணாகதி என்பதில் ஓர் உபாயத்தைப் பற்றி (4) பேரின்பத்தை அடைய விரும்புகிறார்கள். (5) அதற்கு தடையாய் இருக்கும் பிறப்பு இறப்புகளால் ஏற்படும் கைவிலங்காகிற வினைப்பயன்கள் என்கிற ஐந்தைப் பற்றிய அறிவை நம் ஆசாரியர்கள் தெள்ளத் தெளிவாக நமக்கு உபதேசித்தார்கள்.

சுருக்கமாக ஆங்கிலத்தில் YAHOO என்று கூறலாம்

You (சேதனன்)
Acess (உபாயம்)
Him with an (பகவத் ஸ்வரூபம்)
Objective and with no (புருஷார்த்தம்)
Obstacles (தடை)

இந்த ஐந்தும் முறையே ஒவ்வொன்றிற்கும் இரண்டு பாசுரங்கள் என பத்து பாசுரங்களால் விளக்கப்படுகிறது. கடைசி பாசுரத்தில் பலன் சொல்லப்படுகிறது.

பிரம்ம ஸ்வரூபம்

*அமலன் அலகிலா இன்பன் *
குறைவிலா அறிவுமாறா இறைவன் *
விமலன் மற்றை குணத்துடன் *
மேனியில் திருமகளை அணைவன் *
தரிப்பன் அணியும் ஆயுதமும் *
வானவருடன் தழைத்து இருப்பன் *
அளிப்பன் அடியாருக்கு மாநகர் *
தந்து களிப்பன் நம்அருளாளன்*

(1)

சில குணங்களால் மட்டுமே ஒரு பொருளின் உண்மை ஸ்வரூபத்தை அறிய முடியும். மற்றைய குணங்களைக் கொண்டு அதை அறிய முடியாது. இதை ஸ்வரூப நிரூபக விசேஷணம் என்பர்.

எம்பெருமானின் ஸ்வரூபத்தை ஆறு குணங்களால் அறியலாம்.

1. **ஸத்யம்,**
   a. **ஸ்வரூபத்திலும் ஸ்வபாவத்திலும் மாறாமல் இருக்கும் தன்மை.**
   b. **"மாறா"**

2. **ஜ்ஞானம்,**
   a. **தானே பிரகாசிக்கக் கூடிய தன்மை (knowledge, wisdom).**
   b. **"குறைவிலா அறிவு"**

3. **அநந்தம்,**
   a. **ஒருவிதமான அளவு என்று சொல்ல முடியாமை (limitless, infinite**
   b. **"அலகிலா"**

4. **ஆனந்தம்.**
   a. **எல்லையற்ற மகிழ்ச்சியுடன் இருப்பது (boundless joy)**
   b. **"இன்பமாய்"**

5. **அமலத்வம். (நிர்மலத்வம்)**
   a. **ஒரு விதமான தோஷமும் இல்லாமை (without any flaws).**
   b. **"அமலன்"**

6. **ஸ்ரீயப் பதித்வம்**

a. **பிராட்டியுடன் எபோழுதும் பிரியாமல் கூடியிருக்கும் தன்மை.**
b. **"திருமகளை அணைவன்"**

என்கிற ஆறு குணங்களாலேயே அறிய முடியும்.

இந்த ஆறு குணங்கள் மட்டுமே ப்ரம்மத்தை தனித்து மற்றவைகள விட வேறுபட்டதாக கண்பிக்கும். இவை பகவானின் எல்லா நிலைகளிலும் (ப்ர வ்யூஹ, விபவ, அர்ச்சை, அந்தர்யாமி) பிரகாசிக்கும்..

ஒரு பொருளின் ஸ்வரூபத்தை அறிந்தபின் அதன் பெருமையை காண்பிப்பதற்கு சொல்லும் குணங்களை நிரூபித ஸ்வரூப விசேஷணம் என்பர்.. பகவானின் ஸ்வரூபத்தை அறிந்த பின் அளவற்ற திருகல்யாண குணங்கள் அவன் பெருமையை காட்டுகிறது. வாத்ஸல்யம், ஸௌஸீல்யம், ஸௌலப்யம்,, காருண்யம், போன்றவை. இது "மற்றை குணத்துடன்" என்பதால் சொல்லப் பட்டது. உபலக்ஷணம் என்று சொல்லக்கூடிய இந்த குணங்கள் ஒரு காலத்தில் பிரகாசிக்கும். மற்ற காலங்களில் பிரகாசிக்காமல் போனாலும் போகலாம். ஏடுத்துக்காட்டாய், பரமபத்தில் பகவானின் மிக உயர்ந்த குணமான தயை பிரகாசிக்க தேவையில்லை.

இப்படி ஸ்வரூபத்தை நிர்ணயிக்கும் குணங்களுடன், பெருமையை காட்டும் திருக் கல்யாண குணங்ளும் அடங்கிய எம்பெருமான் தன்னுடைய ஒப்பற்ற திருமேனியால் பிராட்டியை அணைத்த வண்ணம், அழகிய ஆபரணங்கள் பூண்டு, மற்றும் பல திவ்ய ஆயுதங்களை ஏந்தி இருப்பவன். அவனை அடி பணிந்த அடியார்களுக்கு மோக்ஷ சாம்ராஜ்யத்தை அளிக்க காத்திருப்பவன்.. அவ்விதமான எம்பெருமான் பேருருளாளனாக நமக்கு அருகில் நின்று நாம் செய்யும் கைங்கர்யங்களில் மிகவும் சந்தோஷிக்கிறான்.

"ஸம்ஸாரியான சேதனனுக்கு தத்வ ஜ்ஞானம் பிறந்து உஜ்ஜீவிக்கும்போது அர்த்த பஞ்சக ஜ்ஞானம் உண்டாக வேணும்."

என்று பிள்ளைலோகாசாரியர் அர்த்த பஞ்சகத்தில் ஸாதித்தார்.

அமலன் அவியாத சுடர் அளவில்லா ஆர் அமுதம்
அமல உரு குணங்கள் அணி ஆயுதங்கள் அடியவர்க்கு
அமல அழியாத நகர் அழிந்து எழும் காவுடன் எல்லாம்
கமலையுடன் அரசாளும் கரிகிரி மேல் காவலனே

என்று ஸ்வாமி தேசிகன் அருத்த பஞ்சகத்தில் (1) ஸாதித்தார்.

அனைத்தும் எம்பெருமானின் ஸங்கல்பமே

தன் நினைவால் தாரணியில்
பொருள் அனைத்துள் தானுறைந்து
தனிமையில் உள்ளிருந்து தானே
இயல் நிலை கிரிசையில் நிறைந்து
இருள் நீங்கி இறைஞ்சும் அடியவர்
அவருக்கு அலர்மகளுடன் நீ இன்று
அருளும் பேரின்ப பேரருளான்
எனும் பெருந் தெய்வமாய் நின்று

(2)

பகவான் தன் ஸங்கல்பத்தினாலே, எல்லா பொருள்களிளும், (ஸ்தாவர ஜங்கமங்களில்) தான் உள் நின்று அவைகளின் ஸ்வரூபம், ஸ்திதி, ப்ரவருத்தி ஆகிய காரியங்கள செய்கிறான். தன்னை அடையும் அடியவர்களின் குற்றங்கள் நீக்கி அவர்களை தம் வசப்படுத்தி அவர்களின் அஞ்ஞானத்தை போக்குகிறான். தானும் திருமகளுடன் நின்று பேரின்பம் என்று சொல்லும் மோக்ஷ ப்ராப்தியை பொழியும் மேகமாக பேரருளான் என்ற பெருந்தெய்வமாக காட்சி அளிக்கிறான்.

பகவானுடைய ஸங்கல்பத்தை "தன் நினைவால்" என்ற பதத்தாலும், "தான் உள்ளிருந்து இயக்கும்" என்பதால் அந்தர்யாமி நிலையும் சொன்னது. "இயல் நிலை வினை" என்பது ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளை சொல்கிறது "தனிமையில்" என்ற சொல்லால் பகவான் ஒருவனே பரதத்வமாக விளங்குகிறான் என்பது குறிக்கிறது

உள்ள பொருள் அனைத்துக்கும் உருவம் நிலை கருமங்கள்
தெள் இசைவின் வசம் ஆக்கி திகழ்ந்து உயிராய் உறைகின்றான்
நள் இருள் தீர்த்து அடியவர்க்குக் நலம் கொடுக்கும் திருவுடனே
வள்ளல் அருளாளர் எனும் வாரண வெற்பு இறையவனே

என்று ஸ்வாமி தேசிகன் அருத்த பஞ்சகத்தில் (2) ஸாதித்தார்.

ஜீவாத்ம ஸ்வரூபம்

*அடிமையாய் அறிவான அணு வேறாகி *
பூதம் ஐந்தால் சீராகி *
புலன் மனம் காற்று புத்தியுமாய் *
நைந்து அழியும் உடலுமாகி *
உள்ளான் உள்ளின் உள்ளே *
இன்னுயிராய் அகலா அமுதமாகி *
நின்றான் அத்தனின் அத்தன் *
அத்திகிரி அருளாளன் ஓர்நிதியாகி*

(3)

சேதனனின் ஆத்மா எப்பொழுதும் ஸ்வயம் ப்ரகசமான ஞானத்துடன் கூடியது. பஞ்ச பூதங்களால் (பூமி, வருணன், வாயு அக்நி, ஆகாசம்) ஆக்கப்பட்ட இந்த்ரியங்கள், மனஸ், ப்ராண வாயு, புத்தி இவற்றுடன் இருக்கும் அழியக்கூடிய சரீரத்தை விட வேறானது..

இப்படி உடல், மற்ற அவயங்கள் ஆகியவைகளை கொண்ட சேதனனின் ஆத்மாவிற்கு பிரியமான ஆத்மாவாய் அந்த சேதனனை விட்டு பிரியாமல் அவனுக்கு மிகுந்த இன்பத்தை தருபவனாய் பாட்டனார் பிரம்மன் அளித்த சொத்தாக அத்திகிரியில் நிற்கிறான் அருள் வரதன்.

ஆத்மாக்கள் ஸ்வயம்ப்ரகாசகராய், ஆனந்தரூபராய் ஜ்ஞாநந்தங்களுக்கு ஆஸ்ரய பூதராய், நித்யராய் அணுக்களாய் பரிசுத்தராய் பகவத் ஸேஷ பூதராய் இருப்பர்.

என்று பிள்ளைலோகாசாரியர் தத்வ ஸேகரத்தில் ஸாதித்தார்.

பூத உடல் புலன் கண் மனம் புல் ஆவி புந்தி எனும்
யாதும் அலனாய் இலகி யான் எனும் இன் நுண் அறிவாய்ச்
சேதனனாய் அடிமையும் ஆம் உய்ர்க்கு எல்லாம் திண் உயிராய்
தீதல் இன்றி திகழும் சீர் அத்திகிரித் திருமாலே

என்று ஸ்வாமி தேசிகன் அருத்த பஞ்சகத்தில் (3) ஸாதித்தார்.

சேதனர்களின் வினைகள் - எம்பெருமானின் விளையாட்டுகள்

*இரந்து அளித்த குணத்தாலும் *
அவரவர் வினைப் பயனாலும்
பிறந்து உழன்று மறைந்து *
அதுலே சுழலும் உயிரனைத்திலும் *
உறைந்து உயிருக்கு உயிராய் *
உள்ளுள் எல்லாம் இயக்கும் *
சிறந்த திருவருளாளன் அவன் *
உகப்பதும் இவ் விளையாட்டே*

(4)

சேதனர்கள் இந்த உலகத்திலே பிறந்து, துக்கத்தை அனுபவித்து, இறந்து மறுபடியும் இதே மாதிரி பல முறை செய்து (birth/death cycle) சுழன்று கிடக்கிறார்கள். ஜீவாத்மாவிறகு குணங்களை கொடுத்து, அவர்தம் வினைப்பயனுக்கு தக்காவாறு ஸம்ஸார சுழலில் பலனைக் கொடுப்பது ஆகிய காரியங்கள் எல்லாம் அவர்கள் பின் மறைந்து எல்லாவற்றையும் இயக்குவது பகவான்தான்.

ஜீவாத்மாவிற்கு அந்தர்யாமியாய் உள்ள இந்த பரமாத்மா எல்லாவற்றையும் மகாலச்ஷமியுடன் கூடி மகிழ்ச்சியுடன் தானே தன் விளயாட்டு இன்பத்திற்காகவே அத்திகிரி நாதனாக எல்லாம் நடதுகிறான்.

*தான் அடைத்த குணம் கருவி தம் கிரிசை வழி ஒழுக்கி
ஊன் எடுத்து உண்டு உமிழ்ந்து உழலும் உயிர்கெல்லாம் உயிராகி
கான் நடத்தி கமலையுடன் கண்டு உகந்து விளையாடும்
தேன் எடுத்த சோலைகள் சூழ் திரு அத்தி ஊரானே*

என்று ஸ்வாமி தேசிகன் அருத்த பஞ்சகத்தில் (4) ஸாதித்தார்.

மோக்ஷத்திற்கு விரோதி

*உணராமல் உய்யும்வழியை விலக்கி *
*ஊன் இன்பத்தில் மயங்கி *
அறியாமல் தகுதியிலார் தாளில்
*வணங்கி * தத்துவத்தை விலக்கி *
*சிதறாமல் சிறுவுறவை சிந்தித்து *
*உம்மடியார் அவரை நிந்தித்து *
*ஒழியாமல் உழலும் நீர் *
பழியாமல் அருளாளனை அடைவீரே

(5)

சேதனன் தன்னுடைய பிறவித்துன்பத்திலிருந்து விடுபடும் உயர்ந்த உபாயத்தை உணராமல், பகவானுக்கு தனக்குக் உள்ள தொடர்பை அறியாமல் உடல் மயக்கத்தால் கலங்கியிருக்கிறான். அதனால் பகவானிடம் சேர்ப்பிக்கும் ஆசாரியர்களையும் அவர்கள் அறிந்து உபதேசிக்கும் தத்துவத்தையும் விலக்கி மற்றவர்களை அறியாமல் வணங்குகிறான்.

வினைப் பயனால் எப்பொழுதும் இந்த உலகில் உள்ள உடல் சம்பந்தமான அற்ப ஆசைகளில் மனம் வைத்து பகவானிடம் உள்ள உறவை மறக்கிறான். தவிர அவனை புகழ்ந்து அவனுக்கே என்று கிடக்கும் அடியார்களை நிந்தித்து பாகவத அபசாரத்திற்கு ஆளாகிறான்.

தவிர்க்க வேண்டிய இந்த பாபங்களையே செய்யும் மக்களே, நீங்கள் மறக்காமல் அந்த பேரருளாளன் பாதங்களை அடைந்தால் அவன் தவறாமல் உம்மை காப்பான்.

உய்யும் உறவு இசையாதே ஒத்தவர்க்கே அடிமையுமாய்
பொய்யுருவை தமக்கு எற்றி புலன் கொண்ட பயனே கொண்டு
ஐயுறவும் ஆர் இருளும் அல்வழியும் அடைந்தவர்க்கு
மெய் அருள் செய்திடும் திருமால் வேழமலை மேயவனே

என்று ஸ்வாமி தேசிகன் அருத்த பஞ்சகத்தில் (5) ஸாதித்தார்.

வினைப்பயனால் விளையும் துன்பம்

உடலால் வினையும் வினையால்
*உடலுமென * மாறி மாறிக் குவிய **
*அதனால் இரண்டும் அநாதியென **
*அறிந்தவர் தாம் உரைய **
*பாழும் உலகில் வழியறியாது **
*அமரமனித விலங்கு அசையாதென **
*வாழுமென அருள் செய்வான் தம்மை **
அத்திகிரியான் அடைவாரேயென.

(6)

எது முதலில் என்று ஒரு புதிர்(puzzle)! விதையிலிருந்து மரம் வந்ததா? இல்லை மரத்திலிருந்து விதை வந்ததா? அது போல் கர்ம வினையால் மறு பிறவியா? இல்லை செய்யும் கர்மத்தால் மறுபிறவியா? என்று. சாஸ்த்திரம் அறிந்த பெரியோர்கள் இந்த இரண்டும் அநாதியானது, அதாவது ஆரம்பமே இல்லாதது என்று கூறினார்கள்.

நான்கு வகை உடல் என்று வேதங்கள் சொல்கின்றன். தேவர்கள், மனிதர்கள், விலங்குகள் (பறவை, மிருகம், புழு, பூச்சி, கடலில் உள்ள ஜந்துக்கள் என்று), அசையாதவை (மரம், செடி கொடி கல் போன்றவை). இந்த நான்கும் அநாதியான ஸம்ஸார உலகத்தில் கிடந்து வெளிவரத் தெரியாமல் திணற, அவைகளுக்கு வாழும் என்று அருள் செய்வார் நம் அத்திகிரி அருளாளன் அவனையே அடைக்கலம் என்று அடைபவரை

விஷ்ணு புராணம் "தேவ திர்யங் மநுஷ்யேஷு சரீரக்ரஹணாத்மிகா. லீலேயம் ஸர்வ பூதேஷு தவ சேஷ்டோபலக்ஷணா" என்று சொல்கிறது.

விதை முளையின் நியாயத்தால் அடி இல்லா வினை அடைவே
சதை உடல் நால் வகைக்கும் சரணளிப்பான் எனத் திகழ்ந்து
பதவி அறியாது பழம் பாழில் உழ்ல்கின்றார்க்கு
சிதைவு இல் அருள் தரும் திருமால் திருவத்திகிரி நாதனே

என்று ஸ்வாமி தேசிகன் அருத்த பஞ்சகத்தில் (6) ஸாதித்தார்.

பக்தி உபாயம்

*நினைத்துகேட்டு பேச மல்கி *
*பகட்டின்றி துதித்து அன்பு பூண்டு *
*அனத்தும் வேண்டாவென எட்டும் *
*அருளாளன்மேல் பத்தி கொண்டு *
*யம நியம மூச்சடக்கி ஆசனம் திருத்தி *
*திருமேனி விடாது நினைத்து *
*மகிழ்ந்து முடிப்பார் நல் யோகம் *
அடைவார் அனைத்தும் போகமே

(7)

பேருருளாளன் பக்தி யோகங்களயும் அதன் அங்கங்களோடு முடிப்பவர்களுக்கு எல்லாவிதமான சந்தோஷத்தையும் செல்வங்களையும் தந்து மோக்ஷ ப்ராப்தியும் அருளுகிறான்

எட்டு விதமான பக்தி

1. **நினைத்து - பகவானை எப்பொழுதும் தியானிப்பது (த்யானம்)**
2. **கேட்டு - பகவான் சரித்திரங்கள அவன் நாமாக்களை கேட்க வேண்டும் (ச்ரவணம்)**
3. **பேச - பகவானைப் பற்றி எப்பொழுதும் பேசுதல் (ஸ்மரித்தல்)**
4. **மல்கி - பகவான் பெருமையை கேட்டு கண்ணீர் மல்க வேண்டும் (ஆனந்தம்)**
5. **துதித்து - பகவானை முடிந்த முறயில் ஆராதிக்க வேண்டும் (அர்ச்சனம்)**
6. **அன்பு பூண்டு - பகவான் அடியவர்களிடம் அன்பு கொள்ள வேண்டும்**
7. **பகட்டிமின்றி - தாம் செய்ததை டம்பமில்லாமல் இருக்க வேண்டும்**
8. **அனத்தும் வேண்டாது - வேறு ஒன்றையும் யாசிக்காது**

யோகத்தின் எட்டு அங்கங்கள்

1. **யமம் - பிறரை துன்புறுத்தாமை, உண்மை, திருடாமை, ஆசையை அடக்குதல்**
2. **நியமம் - சுத்தி, திருப்தி, வ்ரதம், தவம் போன்றவை**
3. **மூச்சடக்கி - ப்ராணாயாமம்**
4. **ஆசனம் - பத்மாஸநம் போன்ற ஆசனங்கள்**
5. **திருத்தி - ப்ரத்யாஹாரம். உடல் உருப்புகளை நல்ல வழியில் செலுத்துதல்**
6. **திருமேனி நினைத்து - தாரணை. பகவானின் திருமேனியை நினைத்து உகப்பது**
7. **விடா நினைத்து - த்யாநம். பகவானை விடாமல் நினைப்பது**

8. **மகிழும் - ஸமாதி பகவனை நேரில் கண்ட மகிழ்ச்சியை கொள்ளுதல்**

எம நியம ஆசனங்கள் இயல் ஆவி அடக்கம்
தமது அறியும் தாரணைகள் தாரை அறா நினைவு ஒழுக்கம்
சமம் உடைய சமாதி சாதிப்பார்க்கு இலக்கு ஆகும்
அமரர் தொழும் அத்திகிரி அம்புயத்தாள் ஆர் அமுதே

என்று ஸ்வாமி தேசிகன் அருத்த பஞ்சகத்தில் (7) ஸாதித்தார்.

ப்ரபத்தி உபாயம்

*அடியார் அனவரும் புகலின்றி **
*சரணாக தாளில் அடைக்கலமாகி **
*கடுவினை காய்ந்து அங்கு அப்பொழுதே **
*அங்கு அவருக்கு அருள்விளக்கேயாகி **
*பெருந் துணையாய் அவள் வழியே **
*பரிவுரையால் தருவான் அவன் **
*அரும்பேறு என பொழியும் **
பெருந்தேவியுடன் பேரருளாளன்

(8)

அடியவர்கள் எல்லாரும் உபாயம் வேறு இல்லை என்று உன்னுடைய பாதங்களையே சரணாக பற்றுகிறர்கள். ஏன் என்றால் பிராட்டியிடம் செய்த புருஷகார ப்ரபத்தியால் அவள் அவர்களுக்கு பெரும் துணையாய் நின்று தானே உபாயம் என்று பகவானிடம் சேர்ந்து நின்று அவர்களுக்காக பகவானிடம் பரிந்துரை (recommend) செய்கிறாள்.

பகவான் அதற்கு இசைந்து ஜன்ம ஜன்மங்களில் செய்த பாபங்கள் அனைத்தும் தன்னுடைய அருள் என்னும் விளக்கால் இருட்டை விரட்டி அடிப்பதுபோல் நீக்குகிறான். கிடைப்பதற்கு அரிய ப்ராப்தி என்று சொல்லும் எல்லா செல்வங்களையும் அத்துடன் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தையும் தன் பத்னியான பெருந்தேவியுடன் சேர்ந்து மேகங்கள் பொழியும் மழை போல் கொட்டுகிறான், பேரருளாளன்.

புகல் இல்லாது பொன் அருள் கண்டு உற்றவர்க்கும்
அகலகிலா அன்பர்க்கும் அன்றே தன்னருள் கொடுத்து
பகல் அதனால் பழம் கங்குல் விடிவிக்கும் பங்கயத்தாள்
அகலகிலேன் என்று உறையும் அத்திகிரி அருள் முகிலே

என்று ஸ்வாமி தேசிகன் அருத்த பஞ்சகத்தில் (8) ஸாதித்தார்.

மோக்ஷத்தின் இயல்பு

*இருவினை விலக்கி சிறைமீட்டி *
உச்சித் துளைவழி உயிரெடுத்து *
மறுபிறவி தொலைய வான்வழி கண்டு *
ஆவி அமரருடன் கடந்து *
விண் சென்று தன்னியல் அறிந்து *
அகலா அடிமை செய்வதும் *
தன் நிகரில்லா பெருமகள் உறையும் *
அத்திகிரியான் திருவருளாலே*

(9)

பக்தி அல்லது பரப்த்தி யோகத்தை நிறைவற செய்த சேதனர்களின் புண்ணியம், பாபம் என்கிற இரண்டு வினைகளையும் விலக்கி, நாம் அகப்பட்டு கொண்டு இருக்கு சிறையில் இருந்து மீட்டி உச்சிதுளை என்கிற நாடி (மூர்த்தந்ய நாடி) வழியாக ஆத்மாவை வெளியேற்றி, பிறப்பு, இறப்பு சுழலில் இருந்து விடுவித்து அர்ச்சிராதி மார்க்கம் வழியாக தேவர்களுடன் (அக்நி, இந்த்ரன் என்கிற இவர்களுக்கு ஆதிவாஹிகர் என்று பெயர்) சென்று ஸம்ஸார பந்தத்தை கடக்கிறது.

தனக்கே என்று ஒப்பற்ற குணங்களை உடைய பெருமகள் என்னும் பெருந்தெவி தாயார் எபோழுதும் அத்திகிரி அருளாளனின் திருமார்பில் உறைகிறாள். பரமபதத்தை அடைந்து தன்னுடைய ஸ்வரூபத்தை தெரிந்து கொண்டு பகவான் தாயார் இவர்கள் இருவருக்கும் நித்ய கைங்கர்யத்தை செய்வதும் அந்த திரு அத்திகிரியானுடைய திருவருளால்தான்.

*இரு விலங்கு விடுத்து இருந்த சிறை விடுத்து ஓர் நாடியினால்
கரு நிலங்கள் கடக்கும் வழி காவலரால் கடத்துவித்து
பெருநிலங் கண்டு உயிர் உணர்ந்து பிரியாமல் அருள் செய்யும்
உரு நலங் கொண்டு உறும் திருவோடும் உயர் அத்திகிரியானே*

என்று ஸ்வாமி தேசிகன் அருத்த பஞ்சகத்தில் (9) ஸாதித்தார்.

மோக்ஷத்தில் ஸேவை

தனிக்கோலாய் தாமரையாள் இடம்
*கொண்டு * திகழும் திருமாலே **
உமக்கேயாய் அடியாரோடு பணி
*செய்யும் * பேரின்பம் தருவாயே **
*விட்ட பயனை மறந்து மருளில் **
*வீழ்ந்த என்னை மீட்டி ஆளும் **
*கிட்டி வந்து எமக்கு அருளும் **
உம் கருணைக்கடலே என்றும் காக்கும்

(10)

பகவான் நாராயணன் பிராட்டியைத் தன் மார்பில் அணைத்துக் கொண்டு தானே பெரிய அரசனாக தன் ராஜ்யத்தை நடத்துகிறான். அப்படி பேரின்பம் என்று சொல்லக் கூடிய மோக்ஷ ஸாம்ராஜ்யத்தில் நித்யர் முக்தர் இவர்களுடன் நானும் சேர்ந்து நித்ய கைங்கர்யம் செய்யும் பேறை எனக்கு அளிப்பாய்.

உனக்கு அடிமையாய் பணி செய்து வந்ததை எத்தனை காலமாக மறந்து போய் மற்ற சுகங்களில் மூழ்கி விட்டேன். நீ உன் கருணை என்னும் கடலால் என்னை அறிவின்மையில் இருந்து மீட்டி மறுபடியும் எனக்கு அந்த இன்பத்தை திருவத்திகிரியில் நெருங்கி வந்து எனக்கு அளித்தாயே!

"ஸேவா ஸ்வவ்ருத்திராக்யாதா தஸ்மாத் தாம் பரிவர்ஜயேத்"

என்கிறது மனு ஸ்மிருதி. பணி செய்வது நாயின் வேலை என்றார்.

"ஸ்விபூதிக ஸமஸ்த கல்யாண குணாத்மக பரமாத்மயாதாத்ம்ய அநுபவஜநித
ப்ரீதிகாரித கைங்கர்யமே பரம புருஷார்த்தம்"

என்று பிள்ளைலோகாசாரியர் தத்வஸேகரத்தில் புருஷார்த்த ஸ்வரூப நிர்ணய ப்ரகரணத்தில் ஸாதித்தார்.

தம் திருமாதுடனே தாம் தனி அரசாய் உறைகின்ற
அந்தம் இல் பேரின்பத்தில் அடியவரோடு எமை சேர்த்து
முந்தி இழந்தன எல்லாம் முகிழ்க்கத் தந்து ஆட் கொள்ளும்
அந்தம் இலா அருள் ஆழி அத்திகிரித் திருமாலே

என்று ஸ்வாமி தேசிகன் அருத்த பஞ்சகத்தில் (10) ஸாதித்தார்.

பலன்

*திருமால் தனித்துத்தானே பரம்பொருளாய் *
அவனருளால் நிறையும் அடியன் *
பெருநிலையென செய்யும் பத்தி *
மற்றும் இயலதார் கொள்ளும் ப்ரபத்தி *
உயர்ந்த குற்றேவலும் நெடும்பயனாய் *
அதற்குத் தடை இருளாம் இவை ஐந்தும் *
அறிவாய் பேதையின் போதைக்கு
மருந்தென * முன்னோர் மறையும் உரையும்*

(11)

எல்லா சாஸ்திரங்களயும் கற்றுணர்ந்த பெரியோர்கள் அறிய வேண்டிய விஷயம் ஐந்து என்றார்கள்

1. **பரமாத்ம ஸ்வரூபம்**
   - *உயர்ந்த புருஷார்த்தம் என்னும் பிராட்டியுடன் கூடிய பகவத் தத்துவம்*
2. **ஜீவாத்ம ஸ்வரூபம்**
   - *அவன் திருவடி அடைந்து அவன் அருளால் அவன் திருவடிகளிலேயே ஒன்றியிருக்கும் ஜீவன்*
3. **உபாயம்**
   - *பகவான் பிராட்டி இருவருக்கும் பணி செய்ய உபாயம் (பக்தி, ப்ரபத்தி)*
4. **புருஷார்த்தம்**
   - *அந்த உபாயத்தாலே ஜீவனுக்கு கிடைக்கும் பேறு*
5. **தடை**
   - *அந்த பலனை அடைவதற்கு தடையான அவித்யையாகிற இருள்*

இந்த ஐந்தையும் அறிந்தால் வழி தெரியாது தப்பி கிடக்கும் சேதனர்களை உலக சுகமாகிய மயக்கங்களிலிருந்து விடுவிக்கும் மருந்து என்று பெரியோர் கூறினர்

*அயன் பணியும் அத்திகிரி அருளாளர் அடியிணை மேல்
நயங்கள் செறி கச்சி நகர் நான் மறையோர் நல்லருளாள்
பயன்கள் இவை அனைத்தும் எனப் பண்டு உரைத்தார் படி உரைத்த
வியன் கலைகள் ஈரைந்தும் வேதியர்கட்கு இனியவே*

என்று ஸ்வாமி தேசிகன் அருத்த பஞ்சகத்தில் 11) ஸாதித்தார்

Appendix - F

ப்ரபத்தியே மோக்ஷ ஸாதனம் (ப்ரமாண ஸித்தம்)

1. *ஶரணம் த்வாம் ப்ரபந்நா யே த்யாநயோக விவர்ஜிதா: |*
   தேSபி ம்ருத்யுமதிக்ரம்ய யாந்தி தத் வைஷ்ணவம் பதம் ||
   - ப்ரஹ்ம புராணம்

   த்யான யோகம் என்னும் பக்தியாகிற உபாயம் அன்றி உம்மை எவர் ஸரணம் என அடைகிறவர்கள் ஸம்ஸாரத்தை கடந்து விஷ்ணுவின் அந்த பரமபத்தை அடைகிறார்கள்

2. *இத3ம் ஶரணம் அஜ்ஞாநாம் இத3 மேவ விஜாநதாம் |*
   இத3ம் திதீர்ஷதாம் பாரம் இத3ம் ஆநந்த்யமிச்ச2தாம் ||
   லக்ஷ்மீ தந்த்ரம் 17-100

   இந்த ப்ரபத்தி என்பதே ஞானமில்லாதவருக்கு ஸாதனம். நிறைந்த ஞானிக்கும் அதுவே உபாயம். ஸம்ஸார ஸாகரத்தை தாண்ட வேண்டும் என விரும்பும் கைவல்ய யோகிகளுக்கும் இதுவே உபாயம். தன் ஸ்வரூபத்திற்கு ஒத்தாதாய், ஸ்வரூப, ரூப, விபூதிகளால் அளவிலாத ப்ரம்மாநுபவத்தைப் பெறாவிடின் தரிக்காது என இருப்பவருக்கும் இதுவே உபாயம்

3. *தமேவ ஶரணம் க3ச்ச2 ஸர்வப4ாவேந ப4ாரத*
   தத்ப்ரஸாத3ாத் பராம் ஸாந்திம் ஸ்த2ாநம் ப்ராப்யஸி ஶாஶ்வதம்
   பகவத் கீதை 18-62

4. *ஸாயுஜ்யம் பரதிபந்நா யே தீவ்ரபக்தாஸ் தபஸ்விந: |*
   கிங்கரா மம தே நித்யம் பவந்தி நிருபத்ரவா: ||
   பரமஸம்ஹிதை

   எவர்கள் மேலான பக்தி உடையவர்களோ, எவர்கள் ப்ரபத்தியாகிற தபஸ்ஸை செயதவரோ, அவர்களே என்னுடன் ஸாயுஜ்யத்தை அடைந்து, ஸம்ஸாரமாகிற உபத்ரவம் நீங்கப் பெற்றவர்களாய், எப்போதும் எனக்குக் கைங்கர்யம் செய்பவர்கள் ஆகிறார்கள்

5.